# Voluntary National Review

## on the Status of Implementing the Sustainable Development Goals

வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவதற்கான நிலைமை தொடர்பான

# தன்னார்வ தேசிய மீளாய்வு



இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

ஜூன் 2018

Government of the Democratic Socialist Republic of Sri Lanka

June, 2018

வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவதற்கான நிலைமை தொடர்பான

# தன்னார்வ தேசிய மீளாய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு



**வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவதற்கான நிலைமை தொடர்பான இலங்கையின் தன்னார்வ தேசிய மீளாய்வு**

முழுப் பதிப்புரிமையுடையது. மூலநூலினைக் குறிப்பிட்டு, இவ் ஆவணத்தை முழுமையாக அல்லது அரைப்பகுதியை மீளாய்வு செய்வதற்கோ, மேற்கோள் காட்டுவதற்கோ, மீளமைப்பதற்கோ அல்லது மொழிபெயர்ப்பதற்கோ முடியும்.

© வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்தி அபிவிருத்தி அமைச்சு 2018 வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்டது.

வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு,
1090, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை,
ராஜகிரிய,
இலங்கை.

பக்க வடிவமைப்பு அப்துல் பாசித்ய

அட்டை வடிவமைப்பு டில்க் பெரொஸ்

1 வறுமைக்கு முற்றுப்புள்ளி

2 பட்டினி ஒழிப்பு

3 சிறந்த சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு

4 தரமிக்க கல்வி

5 ஆண் பெண் சமத்துவம்

6 சுத்தமான நீர் மற்றும் துப்புரவேற்பாடு

7 தாங்கத்தகு சுத்தமான வலுசக்தி

8 முக்கியத்துவமிக்க தொழில்கள் மற்றும் பொருளாதார விருத்தி

9 கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு

10 குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள்

11 வலுவாதார நகரங்கள் மற்றும் சமூகங்கள்

12 பொறுப்புக்களுடன்கூடிய பயனீட்டளவு மற்றும் உற்பத்தி

13 காலநிலை மாற்றம்

14 நீரின் கீழ் வாழ்வு

15 நிலம் மீதான வாழ்வு

16 சமாதானமும் நீதியும் வலுவானதுமான நிறுவனங்கள்

17 இலக்கை நோக்கிய கூட்டாண்மை

வலுவாதார அபிவிருத்தி இலக்குகள்

SUSTAINABLE DEVELOPMENT GOALS

# சனாதிபதியின்
## வாழ்த்துச் செய்தி



வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு இலங்கையின் தன்னார்வ தேசிய மீளாய்வு தொடர்பாக இவ் வாழ்த்துச் செய்தியை வழங்கக் கிடைத்தமையையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நாடு இயற்கை வனப்புக்கள் நிறைந்து விளங்கும் அபிமானமிக்க கலாச்சாரத்திற்கு உரித்துக் கூறுகின்ற ஒரு தீவு ஆவதுடன், வரலாறு நெடுகிலும் அலுவாதார அபிவிருத்தி கோட்பாடுகளுடன் பின்னிப் பிணைந்து காணப்படுகின்ற ஒரு நாடாகும். ஒரு நாடு என்ற வகையில், இலங்கை எப்போதும் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும், சமூக நியாயப்பாட்டினை மேம்படுத்துவதற்கும், பொருளாதார சுபீட்சத்தை அடைந்து கொள்வதற்கும் உலகளாவிய முயற்சிகளுக்கு அதன் ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு கடமைப்பட்டுள்ளது.

இப் பின்னணியில் 2015 செப்தெம்பர் மாதம் வலுவாதார அபிவிருத்தி குறித்த 2030 நிகழ்ச்சிநிரல் தொடர்பாக செயலாற்றுவதற்கு ஏனைய நாடுகளுடன் ஒருங்கிணைந்து ஒத்துழைப்பு வழங்குகின்றோம். 2017 ஜுலை மாதம் நடைபெற்ற உயர்மட்ட அரசியல் கலந்துரையாடலில் தேசிய மீளாய்வினை சமர்ப்பிப்பதற்கான எமது விருப்பினைத் தெரிவித்தோம். இம் மீளாய்வினை வெற்றிகரமாக மேற்கொண்டு, அனைத்தையும் உள்ளடக்கிய செயன்முறையொன்றின் ஊடாக இவ்வறிக்கையை வழங்கக் கிடைத்தமையையிட்டு நான் உவகையடைகின்றேன்.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் மாத்திரமன்றி அனைவருக்கும் மின்சாரம் வழங்குதல் சம்பந்தமாகவும், இலங்கை பாரிய மேம்பாட்டினை அடைந்துள்ளது. இருப்பினும், மலேரியா நோயை இல்லாதொழித்தமை மற்றும் தாய் மரண விகிதத்தை குறைத்தமை போன்ற சாதனைகளை சுகாதார துறை அடைந்தகொண்ட போதிலும், முதியோர், தொற்றா நோய்கள் போன்ற சவால்களும் மேலெழுந்துள்ளன. நீண்டகால, மத்திய கால மற்றும் குறுகிய கால திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும், அத் திட்டங்களை இற்றைவரைப்படுத்துவது தொடர்பாகவுமான இச் சவால்களை வெற்றி கொள்வதற்கு அரசினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**எந்தவொரு நபரையும் கைவிடாத கோட்பாடு வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் ஆவதுடன். அதன் காரணமாக வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பாக அனைத்தும் உள்ளடங்கிய உரிமைக்கட்டளை தயாரிக்கப்படல் வேண்டும். சுகாதார முறைமை, கல்வி முறைமை மற்றும் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்குகின்ற நலன்புரிக் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகிய அனைத்தும், எந்தவொரு நபரையும் கைவிடாதிருப்பதை உறுப்படுத்துகின்றது. இலங்கையில் 2017 ஆண்டு வறுமை ஒழிப்பு ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டது.**

எமது நாட்டை வலுவாதார மற்றும் நெகிழ்வான சமூகமொன்றாக மாற்றுவதற்கான பொறுப்புக்களை பகிர்ந்து கொள்வதற்கு நானும் எனது சகோதர மக்களுடன் இணைந்து கொள்கின்றேன். அரச துறை, தனியார் துறை மற்றும் சிவில் சமூக அமைப்புக்களால் ஆதரிக்கப்படும் இச் செயற்பாட்டின் பிரதான வகிபாகத்தை வகித்த வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சுக்கு எனது நன்றியறிதழ்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**மைத்திரிபால சிறிசேன**

சனாதிபதி

# பிரதமரின்
## வாழ்த்துச் செய்தி



2015 புத்தாக்க அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகொண்டதனூடாகவும், தேசிய கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை ஒருங்கிணைப்பதனூடாகவும் இலங்கை அதன் தேசிய அபிவிருத்தி இலக்குகளை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளதுடன், அது வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு பேருதவி புரிந்துள்ளன எனலாம். தொலைநோக்கு: செழுமைமிக்க நாடு எனும் போது, அரசின் தொலைநோக்கு தொடர்பான ஆவணமாக அது விளங்குவதுடன், அதில் அரச முதலீட்டுத் திட்டம், நாட்டின் மத்தியகால கொள்கைகள் மற்றும் மூலோபாயங்கள் ஆகியன பற்றிய விவரங்களும் இலங்கையின் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே, இலங்கையில் ஏற்கெனவே 2017 இல. 19 ஐக் கொண்ட இலங்கை வலுவாதார அபிவிருத்தி சட்டம் வலுவாக்கப்பட்டுள்ளதுடன், வலுவாதார அபிவிருத்தி சபையொன்றைத் தாபிப்பது தொடர்பான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயம் விருத்தி செய்யப்பட்டு நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் இடமளிக்கின்றது. அவ்வாறே 2015 ஆண்டில் வலுவாதார அபிவிருத்திக்கான பொறுப்பினை ஒப்படைக்குமுகமாக வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு தாபிக்கப்பட்டது.

2017 ஆண்டில் நடாத்தப்பட்ட உயர்மட்ட அரசியல் கலந்துரையாடலில் அதன் முதலாவது தன்னார்வ தேசிய மீளாய்வினை சமரப்பிப்பது தொடர்பான ஆர்வம் வெளியிடப்பட்டது. தன்னார்வ தேசிய மீளாய்வினை தயாரிக்கும் செயன்முறை தொடர்பாக பல்தரப்பு அணுகுமுறை ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், அதன் போது பிரதான நிறுவனங்களின் அலுவலர்களைக் கொண்ட செயலாற்றப் படையணி ஒன்றின் மூலம் அது நடைமுறைப்படுத்தப்பட்டது.

தன்னார்வ தேசிய மீளாய்வின் தொனிப்பொருள்: ‘வலுவாதார மற்றும் நெகிழ்திறன் கொண்ட சமூகங்களுக்கான மாற்றங்கள்’ அரச அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரதான அம்சமாக கருதப்படுகின்றன. தற்போது இந்நாடு, உயர் வருமானம் பெறுகின்ற அறிவார்ந்த, அதிகூடிய போட்டித்தன்மை மிக்க மற்றும் சமூக சந்தைப் பொருளாதாரத்தை நோக்கிப் பயணிக்கும் போது, அதன் நீண்டகால மூலோபாய மற்றும் கட்டமைக்கப்பட்ட அபிவிருத்தி சவால்களை வெற்றிகொள்ளுமுகமாக அவதானம் செலுத்துகின்றது. கிராமிய அபிவிருத்தி மற்றும் சமூகப் பாதுகாப்பு தொடர்பாக அவதானம் செலுத்தும் போது, எந்தவொரு நபரையும் கைவிடாது அனைவருக்கும் அபிவிருத்தியின் நலன்களை உறுதிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

தன்னார்வ தேசிய மீளாய்வு தயாரிப்பு செயன்முறையில் ஆர்வத்துடன் ஈடுபட்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், தன்னார்வ தேசிய மீளாய்வின் போது அடையாளம் காணப்பட்ட வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் பின்தங்கியுள்ள துறைகளில் தற்போது மற்றும் எதிர்காலத்தில் அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்திசார் எத்தனிப்புக்களுக்கு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றேன்.

எமது எதிர்கால திட்டங்களுக்கு தன்னார்வ தேசிய மீளாய்வு பெருந்துணையாக அமையும் என்பதில் கிஞ்சித்தேனும் சந்தேகமில்லை. அவ்வாறே வலுவாதார அபிவிருத்தி தொடர்பான தன்னார்வ தேசிய மீளாய்வானது, 2018 நியூயோர்க்கில் இவ் உயரிய நோக்கங்களை நடைமுறைச் சாத்தியமான வகையில் மாற்றியமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் என்று நான் நம்புகின்றேன்

ரணில் விக்ரமசிங்க
பிரதமர்



## வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி

# அமைச்சரின்

## வாழ்த்துச் செய்தி

இலங்கையில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதில் பிரதான பணிப்பொறுப்புக்களை முன்னெடுக்கின்ற வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சான எனது அமைச்சுக்கு தன்னார்வ தேசிய மீளாய்வுச் செயற்பாட்டினை வெற்றிகரமான முன்னெடுப்பதற்கும் செல்லுபடியாக்க பட்டறையில் உடன்பாடு கண்டவாறு தேசிய அறிக்கையை தயாரிப்பதற்கு முடிந்தமையையிட்டும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்தும் போது, இலங்கையின் வலுவாதார அபிவிருத்தியுடன் தொடர்புடைய எமது அமைச்சு ஒருங்கிணைப்பாளராகவும், செயலாக்குநராகவும், அறிக்கையாளராகவும் பணியாற்றி வருகின்றது. தேசிய, மாகாண மற்றும் பிராந்திய மட்டத்தில் அரசாங்கத்தின் திட்டங்களுக்கு ஏற்புடையதாக வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் முன்னெடுக்கப்பட்டன. அரச அலுவலர்களுக்கு விழிப்புணர்வூட்டல் மற்றும் அவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இத் தன்னார்வ தேசிய மீளாய்வு அறிக்கையைத் தயாரிப்பதற்கு, அரச துறை மாத்திரமன்றி தனியார் துறை, சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள், வல்லுநர்கள் மற்றும் புத்திஜீவிகள் ஆகியோரை உள்ளடக்கிய பெருமளவிலான பங்காளர்களின் ஒத்துழைப்புக்கள் பேருதவி புரிந்தன எனலாம். செல்லுபடியாக்கப் பயிற்சிப் பட்டறை உட்பட பங்காளர்களை தொடர்புபடுத்துவதற்கான ஐந்து பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டதுடன், அதில் பெருந்தொகையானோர் கலந்து சிறப்பித்தனர். எனது அமைச்சின் கீழ், பிரதான அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் முகவர்களைக் கொண்ட செயலாற்றப் படையணியொன்றின் ஊடாகவே இத் தன்னார்வ தேசிய மீளாய்வு அறிக்கை தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டதுடன், அறிக்கையை எழுதுவது தொடர்பாக ஆலோசகரொருவரினதும் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது.

இவ் அறிக்கையில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் சம்பந்தமான குறிப்பிடத்தக்க வெற்றிகள், சவால்கள் மற்றும் முன்னோக்கிய பாதை என்பன தொடர்பாக விபரிக்கப்பட்டுள்ளன. இவ் அறிக்கையின் ஊடாக வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்தும் போதான இடைவெளிகள், அச் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு பிரதான அரசாங்க நிறுவனங்களினால் எடுக்கபட்ட முன்னெடுப்புக்கள் மற்றும் வலுவாதார அபிவிருத்திக்குரிய நீண்டகால மற்றும் மத்தியகால தேசிய கொள்கைகள் என்பன பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. UNESCAP ஊடாக உதவிகளைப் பெற்று சந்தை அணுகுமுறைகள் தொடர்பாக கையாளப்பட்ட செல்லுபடியாக்க பயிற்சி பட்டறையில், 80% வீதத்திற்கு அதிகமானோர் பிரதான கண்டுபிடிப்புக்களுடனும், 95% வீதமானோர் சவால்களுடனும், 98% வீதமானோர் தன்னார்வ தேசிய மீளாய்வின் முன்னோக்கிய பாதையின் விளைவுகளுடனும் உடன்பட்டனர். வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகொள்ளுமுகமாக ஒத்துழைப்புக்களை மேம்படுத்துவதற்கு இவ் அறிக்கையை எமது அங்கத்துவ நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளக்கிடைத்தமையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். தன்னார்வ தேசிய மீளாய்வுச் செயற்பாட்டினுள் ஏனைய நாடுகளுடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு கிடைத்தமையின் வாயிலாக பங்காளர்கள் தொடர்படுகின்ற செயற்பாடு மற்றும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின் கண்காணிப்புச் செயற்பாட்டினை டிஜிட்டல்மயமாக்குவதற்கு இயலுமாயிற்று.

இதனை வெற்றிகொள்ளுமுகமாக ஒத்துழைப்பு வழங்கிய அதிமேதகு சனாதிபதி அவர்கள், கௌரவ பிரதமர் அவர்கள், வலுவாதார அபிவிருத்தி ஆலோசனைக் குழு, தன்னார்வ தேசிய மீளாய்வு செயலாற்றப் படையணி, IPS பிற நாடுகளின் அங்கத்தவர்கள், தனியார் துறை, புத்திஜீவிகள், சிவில் சமூக அமைப்புக்கள், ஐக்கிய நாடுகள் சபையின் இந்நாட்டுக் குழு, UNESCAP அலுவலர்கள், USAID இன சனநாயக ஆளுகை மற்றும் பொறுப்புடைமை ஆளணியினர் மற்றும் ஏனைய அனைவருக்கும் எனது நன்றியறிதழ்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா**
வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும்
பிராந்திய அபிவிருத்தி அமைச்சர்

# உள்ளடக்கம்


ஆசிச் செய்திகள் 4

சுருக்கப் பதம் 8

உருப்படங்கள் 12

நிறைவேற்றுப் பொழிப்பு

01. அறிமுகம்

02. மீளாய்வு முறையியல் மற்றும் செயன்முறை

03.கொள்கை மற்றும் இயலுமைமிக்க சுற்றாடல்

3.1 வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின் உரித்துரிமையாக்கல் 23

3.2 வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் மற்றும் தேசிய கொள்கைகளுக்கிடையிலான வரிசையாக்கம் 27

3.3 நிறுவகப் பொறிமுறை 36

3.4 எந்தவொரு நபரையும் கைவிடாமை 38

04. இலக்குகள் மற்றும் நோக்கங்கள்

4.1 உயர்மட்ட அரசியல் வட்டம் 2018 ஆழமான மீளாய்வு தொடர்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் 42

இலக்கு 6: சுத்தமான நீர் மற்றும் துப்புரவேற்பாடு 42

இலக்கு 7: தாங்கத்தகு சுத்தமான வலுசக்தி 46

இலக்கு 11: வலுவாதார நகரங்கள் மற்றும் சமூகங்கள் 51

இலக்கு 12: பொறுப்புக்களுடன்கூடிய பயன்பாடு மற்றும் உற்பத்தி 56

இலக்கு 15: நிலம் மீதான வாழ்வு 59

4.2 பிற வலுவாதார இலக்குகள் 65

இலக்கு 1: வறுமைக்கு முற்றுப்புள்ளி 65

இலக்கு 2: பட்டினியொழிப்பு 69

இலக்கு 3: சிறந்த சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு 73

இலக்கு 4: தரமிக்க கல்வி 77

இலக்கு 5: ஆண் பெண் சமத்துவம் 83

இலக்கு 8: முக்கியத்துவமிக்க தொழில்கள் மற்றும் பொருளாதார விருத்தி 85

இலக்கு 9: கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் 88

இலக்கு 10: குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் 91

இலக்கு 13: காலநிலை மாற்றம் 93

இலக்கு 14: நீருக்கடியிலான வாழ்வு 96

இலக்கு 16: அமைதியும் நீதியும் 99

05. அமுலாக்க வழிமுறை

06. முடிவுரை

# சுருக்கப் பதங்கள்

| | |
|---|---|
| 10YFP | வலுவாதார பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களின் 10 ஆண்டுகாலச் சட்டகம் |
| ADB | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| AirMac | வாயு வளங்கள் முகாமைத்துவ நிலையம் |
| ASEAN | தென்கிழக்காசிய நாடுகளின் அமைப்பு |
| BAU | வழமையான வியாபாரம் |
| CBD | உயிர்ப்பல்வகைமை மாநாடு |
| CBSL | இலங்கை மத்திய வங்கி |
| CCS | காலநிலைமாற்ற செயலகம் |
| CEA | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| CEB | இலங்கை மின்சார சபை |
| CKDu | காரணம் கண்டறியப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய் |
| COSTI | விஞ்ஞான, தொழிநுட்ப மற்றும் புத்தாக்கம் தொடர்பான இணைப்புச் செயலகம் |
| CPC | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் |
| CRIP | காலநிலை அதைப்பு மேம்பாட்டுச் செயற்திட்டம் |
| CRIWMP | காலநிலை அதைப்பு ஒருங்கிணைப்பு நீர் முகாமைத்துவ செயற்திட்டம் |
| CSOs | சிவில் சமூக அமைப்புக்கள் |
| CZCRMP | கரையோர வலயம் மற்றும் கரையோர வளங்கள் பற்றிய பிரதான திட்டங்கள் |
| DCS | இலங்கை குடிசன மற்றும் தொகைமதிப்புத் திணைக்களம் |
| DFAR | கடற்றொழில் மற்றும் நீரியல்வள திணைக்களம் |
| DHS | குடித்தொகையியல் மற்றும் சுகாதார மதிப்பீடு |
| DM | வளிமண்டலவியல் திணைக்களம் |
| DMC | அனர்த்த முகாமைத்துவ நிலையம் |
| DPMM | செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம் |
| ECE | முன் குழந்தைப் பருவம் |
| ECOSOC | ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமுதாய கவுன்சில் |
| ETCA | பொருளாதார மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை |
| EEZ | விசேட பொருளாதார வலயம் |
| EU | ஐரோப்பா சங்கம் |
| FBOs | விவசாய மன்ற அமைப்பு |
| FDI | நேரடி வெளிநாட்டு முதலீடுகள் |
| FLFP | தொழிற்படையில் மகளிர் பங்களிப்பு |
| FTA | சுதந்திர வியாபார உடன்படிக்கை |
| G.C.E. | கல்வி பொது சாதாரண தரம் |
| GAP | சிறந்த விவசாய பயன்பாடுகள் |

| | |
|---|---|
| GATT | தீர்வை வரி மற்றும் வர்த்தக உடன்படிக்கை |
| GDP | மொத்த தேசிய உற்பத்தி |
| GII | ஆண் பெண் கால்நிலைச் சமத்துவ சுட்டி |
| GII | உலகளாவிய புத்தாக்க சுட்டி |
| GMPs | சிறந்த உற்பத்திப் பயன்பாடுகள் |
| GNI | மொத்த தேசிய வருமானம் |
| GoSL | இலங்கை அரசாங்கம் |
| GR | கிராம இராச்சியம் |
| GSP | முன்னுரிமை தொடர்பான பொது முறைமை |
| GSTP | உலகளாவிய முன்னுரிமை வர்த்தக முறை |
| HARTI | ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் |
| HCR | ஆளுக்குரிய விகிதாசாரம் |
| HDI | மனித அபிவிருத்தி சுட்டி |
| HFIAS | வீட்டு உணவு பாதுகாப்பின்மையை நோக்கிய அணுகுமுறை அளவீடு |
| HLPF | உயர்மட்ட அரசியல் கலந்துரையாடல் |
| IAP2 | மக்கள் ஒத்துழைப்பு தொடர்பான சர்வதேச சங்கம் |
| IAS | குடிபெயரும் வெளிநாட்டு விலங்கினங்கள் |
| ICT | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| IDB | தொழிநுட்ப அபிவிருத்திச் சபை |
| IFAD | விவசாய அபிவிருத்தி தொடர்பான சர்வதேச நிதியம் |
| ILO | சர்வதேச தொழிலாளர் அமைப்பு |
| IOM | குடிபெயர்வுக்கான சர்வதேச அமைப்பு |
| IPPC | சர்வதேச தாவர பாதுகாப்பு சம்மேளனம் |
| IUÕCN | இயற்கையைப் பாதுகாப்பதற்கான சர்வதேச சங்கம் |
| IUÕU | சட்ட விரோத, அறிக்கையிடப்படாத மற்றும் கண்காணிக்கப்படாதன |
| LFP | தொழிலாளர் படையணியின் பங்களிப்பு |
| LLRC | கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு |
| LRT | மென் ரயில் போக்குவரத்து |
| MCH | தாய் மற்றும் சேய் சுகாதாரம் |
| MDGs | புத்தாக்க அபிவிருத்தி இலக்குகள் |
| MDM | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு |
| MMDE | மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு |
| MOH | சுகாதார அமைச்சு |
| MRG | பல் பங்காளர்களது உசாத்துணைக் குழு |
| MSAPN | போசாக்கு தொடர்பான பல்தரப்பு செயற்பாட்டுத் திட்டம் |
| MSDWRD | வலுவாதார அபிவிருத்திஇ வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு |
| NADeP | தேசிய விவசாய முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் |

| | |
|---|---|
| NAMA | தாக்கங்களைக் குறைப்பதற்குத் தகுந்த தேசிய வழிமுறைகள் |
| NAP | 2016 -2025 இலங்கை காலநிலை மாற்றத் தாக்கம் குறித்த தேசிய சீராக்கற் திட்டம் |
| NAP-CC | காலநிலை மாற்றத் தாக்கம் குறித்த தேசிய சீராக்கற் திட்டம் |
| NAP-LD | இலங்கையில் மண்ணரிப்புக்கு எதிராக போராடும் தேசிய செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் |
| NARA | தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை |
| NASTEC | விஞ்ஞான மற்றும் தொழிநுட்பம் தொடர்பான தேசிய ஆணைக்குழு |
| NBSAP | தேசிய உயிர்ப் பல்வகைமை தொடரட்பான மூலோபாய செயற்பாட்டுத் திட்டம் |
| NCCP | தேசிய காலநிலை மாற்ற கொள்கை |
| NCDs | தொற்றா நோய்கள் |
| NCRE | சம்பிரதாயபூர்வமற்ற மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி |
| NDA | தேசிய பணியமர்த்தப்பட்ட முகவராண்மைகள் |
| NDCs | தேசிய நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு |
| NEDA | தேசிய முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகாரசபை |
| NFP | தேசிய கேந்திர புள்ளி |
| NPD | தேசிய திட்டமிடல் திணைக்களம் |
| NEP | தேசிய மதிப்பீட்டுக் கொள்கை |
| NNC | தேசிய போசாக்கு சபை |
| NPSSD | வலுவாதார அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை |
| NRIFAP | தேசிய REDD+ நிறுவக சட்டகம் மற்றும் செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் |
| NSTP | தேசிய விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப கொள்கை |
| NSWMSC | தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ உதவி நிலையம் |
| NWSDB | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை |
| ODA | உத்தியோகபூர்வ அபிவிருத்தி ஒத்துழைப்பு |
| ODSM | செயற்பாட்டுக் கேள்வித் தரப்பு முகாமைத்துவம் |
| OMP | காணாமற்போனோர் பற்றிய அலுவலகம் |
| PIP | அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் |
| RTS | துரித போக்குவரத்து முறைமை |
| R&D | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி |
| SCP | வலுவாதார பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி |
| SDC | வலுவாதார அபிவிருத்தி சபை |
| SDGs | வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் |
| SDS | வலுவாதார அபிவிருத்தி மூலோபாயங்கள் |
| SEP | பங்காளர்களை ஒருங்கிணைப்பதற்கான திட்டம் |
| SLCDMP | இலங்கை விஸ்தரிக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் |

| | |
|---|---|
| SLCG | இலங்கை கரையோரப் பாதுகாப்பு படையணி |
| SLITA | இலங்கை நெசவு மற்றும் ஆடைகளுக்கான நிறுவகங்கள் |
| SLNDMP | இலங்கை தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் |
| SLSFTA | இலங்கை மற்றும் சிங்கப்பூர் நாடுகளிடையேயான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை |
| SLTB | இலங்கை போக்குவரத்துச் சபை |
| SOE | அரசுக்குச் சொந்தமான முயற்சியாண்மைகள் |
| STIS | விஞ்ஞான, தொழிநுட்ப மற்றும் புத்தாக்க மூலோபாயங்கள் |
| SVPs | துறைசார் பாதிப்பு விவரக்குறிப்பு |
| SWML | திட்டமிடப்பட்ட கழிவு முகாமைத்துவ அனுமதிப்பத்திரம் |
| TB | காசநோய் |
| TNA | தொழிநுட்ப தேவைப்பாட்டுக்கான மதிப்பீடுகள் |
| TNC | காலநிலை மாற்றம் தொடர்பான மூன்றாவது தேசிய தொடர்பாடல் |
| TVET | தொழிநுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி |
| UDA | நகர அபிவிருத்தி அதிகாரசபை |
| UNCLOS | சமுத்திர சட்டம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சமவாயம் |
| UNCTAD | வர்த்தக மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் சம்மேளனம் |
| UNDP | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் |
| UNDESA | ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூகப் பணிகள் தொடர்பான திணைக்களம் |
| UNECC | ஐக்கிய நாடுகளின் இலத்திரனியல் தொடர்பாடல் சமவாயம் |
| UNEP | ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் |
| UNESCAP | ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு |
| UNICEF | ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் |
| UNSDF | ஐக்கிய நாடுகளின் வலுவாதார அபிவிருத்திச் சட்டகம் |
| USA | ஐக்கிய அமெரிக்க குடியரசு |
| VIOs | தன்னார்வ அமைப்புக்கள் |
| VNR | தன்னார்வ தேசிய மீளாய்வு |
| WBB | நலன்புரி நலன்கள் சபை |
| WFP | உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் |
| WHO | உலக சுகாதார அமைப்பு |
| WMA | அனர்த்த முகாமைத்துவ அதிகாரசபை |
| WRMTMP | மேல்மாகாண பிரதேச மாநகர பிரதான போக்குவரத்துத் திட்டம் |
| WTO | உலக வர்த்தக அமைப்பு |

# உருப்படங்களின் பட்டியல்


| | | |
|---|---|---|
| 2.1 உரு | இலங்கை தன்னார்வ தேசிய மீளாய்வு தொடர்பான பல்தரப்பு பங்காளர்களினதும் கருத்துக்கணிப்பு | 20 |
| 3.1 உரு | இலங்கை தேசிய கொள்கை சட்டகத்தின் திட்டம் | 28 |
| 3.2 உரு | வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடனான PIP 2017-2020 முழுமையான வரிசையாக்கம் | 30 |
| 3.3 உரு | வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடனான PIP 2017-2020 முழுமையான மற்றும் அரைவாசி வரிசையாக்கம் | 31 |
| 3.4 உரு | வலுவாதார அபிவிருத்தி இலக்கு துறைகள் மற்றும் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017 – 2020 இடையிலான வரிசையாக்கம் | 32 |
| 4.1 உரு | 2016 ஆண்டில் மாவட்டங்களுக்கு அமைய பாதுகாப்பான குடிநீர் அணுகுமுறைகள் | 43 |
| 4.2 உரு | 2016 ஆண்டின் துப்புரவேற்பாட்டு வசதிகள் | 43 |
| 4.3 உரு | பிரிவுகளுக்கமைய மின்வலுப் பயன்பாடு (ஒப்பீட்டுப் பகுதிகளில் (%): 1970-2016) | 47 |
| 4.4 உரு | அடிப்படை வலுசக்தியின் பிரதான வலுசக்தி மூலப் பகுதிகள்* | 47 |
| 4.5 உரு | அடிப்படை வலுசக்திக் கலப்பின் பல்வேறு மூலங்களின் பகுதிகள் (1976-2016) | 48 |
| 4.6 உரு | பொசில் எரிபொருள் இறக்குமதி (2007-2016) | 49 |
| 4.7 உரு | இலங்கையில் வீடற்ற மற்றும் காணிகளற்ற குடும்பங்களின் எண்ணிக்கை | 52 |
| 4.8 உரு | பொது போக்குவரத்து சேவையைப் பயன்படுத்தும் பிரயாணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு | 52 |
| 4.9 உரு | இலங்கையின் வன உள்ளடக்கத்தினதும் சனத்தொகையிலும் ஏற்பட்ட மாற்றங்கள் | 60 |
| 4.10 உரு | இலங்கையில் காணிப் பயன்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் | 62 |
| 4.11 உரு | இலங்கை வறுமைக் கோட்டு எண்ணிக்கைச் சுட்டியின் வளர்ச்சி | 65 |
| 4.12 உரு | தேசிய வறுமைக்கோட்டு மட்டத்தின் வயது மற்றும் ஆண் பெண் பால்நிலை குழுக்களிடையேயான வறுமை தொடர்பான பொழிப்பு - 2012/13 மற்றும் 2016 | 66 |
| 4.13 உரு | இலங்கையில் தாய் மரண வீதம் : (1995-2015) | 73 |
| 4.14 உரு | பாடசாலைகளில் நுழைவு மற்றும் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்யும் விகிதம் | 77 |
| 5.1 உரு | உத்தியோகபூர்வ அபிவிருத்தி ஒத்துழைப்புக்கள் (மொத்த தேசிய உற்பத்தியின் %) | 104 |
| 5.2 உரு | வருமானம் (மொத்த தேசிய உற்பத்தியின் %) | 104 |
| 5.3 உரு | ஏற்றுமதி ( மொத்த தேசிய உற்பத்தியின்%) | 106 |


# அட்டவணைகளின் பட்டியல்


| | | |
|---|---|---|
| 3.1 அட்டவணை | தன்னார்வ தேசிய மீளாய்வு மற்றும் பின் தன்னார்வ தேசிய மீளாய்வுக் கட்டங்களுக்கு நிச்சயிக்கப்பட்ட கருவிகள் | 24 |
| 3.2 அட்டவணை | வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அரச முதலீட்டின் பிரதான துறைகளுக்கு முகப்புதல் | 29 |
| 3.3 அட்டவணை | வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடன் 2017-2020 அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் வரிசையாக்கற் வீதம் | 31 |
| 3.4 அட்டவணை | வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அரச முதலீட்டின் பிரதான துறைகளுக்கு முகப்புதல் | 33 |
| 3.5 அட்டவணை | வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு ஒருங்கிணைக்கும் மட்டம் | 33 |
| 3.6 அட்டவணை | வலுவாதார அபிவிருத்தியின் பிரதான துறைகள் தொடர்பாக உத்தேச வழிமுறைகள் | 35 |
| 3.7 அட்டவணை | அரச அமைப்புக்களின் வகைகள் | 36 |
| 4.1 அட்டவணை | பிரதான பயனர்களுக்கமைய வலுசக்திக்கான கேள்வி 2016 | 46 |
| 4.2 அட்டவணை | இலங்கையின் பாதுகாப்பு பிரதேசங்கள் மற்றும் அளவு | 59 |
| 4.3 அட்டவணை | இலங்கையின் பிரதான வகைப்படுத்தற் குழுக்களின் ஒருமைப்பாடு | 60 |
| 4.4 அட்டவணை | இலங்கையின் மண்ணரிப்புக்கான பொருளாதார கிரயம் | 62 |
| 5.1 அட்டவணை | இலங்கைக்கான வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுக்கு உரியதான பெறப்படும் தரவுகள் | 109 |

# நிறைவேற்றுப் பொழிப்பு

இலங்கை, குறிப்பாக சுகாதாரம், கல்வி மற்றும் வறுமை ஒழிப்பு ஆகிய துறைகளினூடாக புத்தாக்க அபிவிருத்தி இலக்குகளின் கீழ் உயரிய மட்டத்தில் மனித மேம்பாடு மற்றும் பல வெற்றிகளை ஈட்டிக் கொண்டுள்ளது. 3 தசாப்தங்களாக நிலவிய யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதுடன் சமாதானமும், சுபீட்சமும் நிறைந்த காலப்பகுதியொன்று இந் நாட்டில் உருவாகியுள்ளது. பாரிஸ் காலநிலை உடன்படிக்கை (Paris Climate Agreement) மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான சன்டாய் சட்டகம் (Sendai Framework) உட்பட சுற்றாடல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சர்வதேச உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் என்பன கையொப்பமிடப்பட்டதன் வாயிலாக வலுவாதார அபிவிருத்திக்கான பூகோள ஊக்குவிப்புக்களை வெற்றி கொள்ளும் பொருட்டு இலங்கையினால் ஆற்றப்படுகின்ற அர்ப்பணிப்புடனான சேவைகள் புலனாகின்றன.

வலுவாதார அபிவிருத்தி தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் அங்கீகரிக்கப்பட்டது முதல் அதனை நாட்டில் செயல்படுத்துவதற்கான வசதிகளை வழங்கும் பொருட்டு இலங்கை அரசாங்கம் பல்வேறு அணுகுமுறைகளை கையாண்டு வருகின்றது. வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை செயலுருப்படுத்துவதற்கான தொடர்பாடல், அது தொடர்பான வசதியளித்தல் மற்றும் அது தொடர்பான அறிக்கையிடல் என்பன குறித்த மையப் புள்ளியான வலுவாதார அபிவிருத்தி தொடர்பாக அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்ற அமைச்சொன்றினை தாபித்தல்; வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை செயலுருப்படுத்துவதற்காக அரசியல் ரீதியான தலைமைத்துவம் வழங்குவதற்கு வலுவாதார அபிவிருத்திக்கான பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றினை தாபித்தல்; மற்றும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை செயற்படுத்துவதற்கான சட்ட ரீதியான சட்டகம் ஒன்றை வழங்கும் பொருட்டு 2017 இல. 19 ஐக் கொண்ட வலுவாதார அபிவிருத்திச் சட்டத்தை வலுவூட்டல் ஆகியன இதில் உள்ளடங்குகின்றன.

2030 நிகழ்ச்சி நிரலின் ஏற்பாடுகளுக்கு அமைய, இலங்கை, 2018 ஜுலை மாதம் நடாத்தப்பட்ட உயர் மட்ட அரசியல் வட்டத்தில் (HLPF) தனது தன்னார்வ தேசிய மீளாய்வினை முன்வைப்பதில் ஆர்வம் வெளியிடப்பட்டது. இலங்கையின் தன்னார் தேசிய மீளாய்வுச் செயற்பாடானது பல பங்காளர்களின் தலையீட்டுடனும் ஒத்துழைப்புடனும் அனைத்தையும் உள்ளடக்கியதொரு செயற்பாடாக கருதப்படுகின்றது. இலங்கை தன்னார்வ தேசிய மீளாய்வின் மூலம் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை தனித்துவமிக்க வகையில் அமுல்படுத்துவதற்கான இயலுமையை வழங்குநிற்கும் நாட்டின் கொள்கை மற்றும் வலுமிக்க சுற்றுச்சூழல் என்பவற்றுடன் 17 வலுவாதார அபிவிருத்தி இலக்குகளும் தொடர்பான போக்குகள், வளர்ச்சி, இடைவெளிகள் மற்றும் சவால்கள், முன்னோக்கிச் செல்லும் வழிமுறைகளையும் பகுப்பாய்வு செய்கின்றது.

நாட்டின் தற்போதைய கொள்கைச் சட்டகமானது, வலுவாதார அபிவிருத்தி தொடர்பாக இந் நாடு அர்ப்பணிப்புடன் செயற்படும் உறுதிப்பாட்டை மேலும் பிரதிபலிக்கின்றது. இலங்கையின் நீண்டகால அபிவிருத்தித் திட்டமான 2025 தொலைநோக்கு, அதன் மத்தியகால திட்டமான அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் 2017 – 2020 மற்றும் 2018 ஆம் ஆண்டின் 'நீலப்பசுமை' வரவு செலவுத் திட்டம் போன்றவற்றின் ஊடாக பிரதிபலிக்கின்ற இலங்கையின் மூலோபாய அபிவிருத்திச் சட்டகம் குறிப்பிடத்தக்களவில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக அண்மைக் காலங்களில் காலநிலையை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட அனர்த்தங்கள் உட்பட இந் நாட்டிற்கு முகங்கொடுக்க நேர்ந்த அதிகரித்துச் செல்லும் சுற்றாடல் சவால்களையும் கவனத்திற் கொள்ளும் போது 2018 உயர் மட்டத்திலான அரசியல் வட்டத்தின் கேந்திர மையமாக விளங்கும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளான 6, 7, 11, 12, 15 என்பன இலங்கைக்கு குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன. அவ் வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தன்னார்வ தேசிய மீளாய்வின் ஊடாக விரிவாக மீளாய்வு செய்யப்படுகின்றது.

மீள் ஆற்றல் கொண்ட சமூகம் ஒன்றாக மாற்றமுறும் போது, பாதுகாப்பு மூலங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற நீர் விநியோகம் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை அதிகளவில் உள்ளடக்குதல், அனைவருக்கும் மின்சாரம் வழங்குதல் மற்றும் நிரந்தர வீடுகளில் வசிக்கும் சனத்தொகையை அதிகரித்தல் ஆகியன உள்ளடங்களாக குறிப்பிடத்தக்க மட்டத்தில் இலங்கை சில வெற்றிகளை அடைந்துள்ளது. அவ்வாறே வலுவாதார பயன்பாடுகள் மற்றும் உற்பத்திகள் தொடர்பாக தேசிய மட்டத்திலான ஆர்வம் அதிகரித்துச் செல்கின்றது. இலங்கை பாரிய பல்வகைமைக்கு உரிமை கோரி வருவதுடன், அதன் காரணமாக பூகோள ரீதியாக உயிர் பல்வகைமை மிகுந்து காணப்படுகின்ற 35 கேந்திர நிலையங்களில் இலங்கையும் அடையாளங் காணப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் போக்குவரத்து மற்றும் வலுசக்தி விநியோகம் தொடர்பாக புதைபடிம எரிபொருள் இறக்குமதி மீது அதிகமாக தங்கியிருத்தல், நகர்ப்புற மத்திய நிலையங்களும், மக்களும் அனர்த்தங்களுக்கு இலகுவாக ஆளாகும் நிலை அதிகரித்தல் மற்றும் வனாந்தரங்களும் காணி வளங்களும் சிதைக்கப்படுதல் ஆகியன குறித்து மீள்திறனை அடைவதற்கான இப்பாதை கரடுமுரடானதாக, சவால்கள் நிறைந்து காணப்படுகின்றன.

வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை இலங்கை முன்னெடுத்து வருகின்றது. வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுக்கு நிதியளிக்கும் அடிப்படையில், உள்நாட்டு வருமானங்களை ஒன்று திரட்டும் இயலளவினை மேம்படுத்தும் பொருட்டு அதற்கான தேவைப்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளதுடன், வரி விதிப்பை விரிவுபடுத்தி வரி கட்டமைப்புகளை இலகுபடுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் அதி நவீனமயப்படுத்தப்பட்டதும் அறிவினை அடிப்படையாகக் கொண்டதுமான பொருளாதாரம் ஒன்றினை நோக்கிச் செல்லும் தேவைப்பாட்டினை கண்டறிந்து, இலங்கை தற்போது தொழிநுட்பம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் ஆகிய துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அதற்கு மேலதிகமாக வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை செயற்படுத்துவது ஒரு முழுமையான முயற்சியாகும் என்பதை உறுதிப்படுத்துவதற்கான விழிப்புணர்வினையும், இயலளவினையும் விருத்தி செய்வதற்குரிய முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளது.

# 01

# அறிமுகம்

2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் ஏனைய 192 அங்கத்துவ நாடுகளுடன் இணைந்து இலங்கையும் வலுவாதார அபிவிருத்தி தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் மற்றும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் 17 இனையும் நிறைவேற்றுவது தொடர்பாக உறுதியளித்தது. 2030 நிகழ்ச்சி நிரலானது அபிவிருத்திசார் பொருளாதாரம், சமூக மற்றும் சுற்றாடல் பரிமாணங்களை ஒன்றிணைக்கின்ற அணுகுமுறை ஒன்றினூடாக வலுவாதார அபிவிருத்திக்கான பாதையை சீரமைப்பதற்கு பேருதவி புரிந்துள்ளது.

வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை சிறப்பாக அமுல்படுத்துவது தொடர்பாகவும், அவற்றை நிறைவேற்றுவது தொடர்பாகவும் இலங்கையின் திறன், குறிப்பாக சுகாதாரம், கல்வி வறுமை ஒழிப்பு சம்பந்தமான புத்தாக்க அபிவிருத்தி இலக்குகளின் கீழ் அதன் செயலாற்றத்தைப் பிரதிபலிக்கின்றது. அதற்கு மேலதிகமாக, 2015 ஆண்டில் 0.766 ஆன (73 ஆவது இடம்) மனித அபிவிருத்திச் சுட்டியை பதிவு செய்துள்ளதுடன், இலங்கையானது உயர் மனித அபிவிருத்தியுடன் கூடிய நாடுகளின் வகுதியின் கீழ் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.[1] இது சமூக அபிவிருத்தி குறித்து நாட்டின் வலுவான அடிப்படையினை சுட்டிக்காட்டுகின்றது. இலங்கையின் வலுவாதார அபிவிருத்திக்கான திடமான அத்திவாரத்தை வழங்குகின்ற இன்னுமொரு முக்கிய காரணியாக சமாதானம் மற்றும் சுபீட்சம் நிறைந்த காலப்பகுதியை அதாவது மூன்று தசாப்பங்களாக நிலவிய யுத்தம் 2009 ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதைக் குறிப்பிட முடியும். சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்களுடன் தொடர்பட்ட துறைகள் சார்ந்த கொள்கைகளை விருத்தி செய்வது இன்னுமொரு அவ்வாறான வலு மூலமாக கருதப்படுகின்றது. இலங்கையில் 1980 ஆண்டளவில் தேசிய சுற்றாடல் சட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன், அன்று தொட்டு பல்வேறு சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்களை உள்ளடக்கிய பல்வேறு தேசிய கொள்கைகள் மற்றும் சட்ட முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறே பாரிஸ் காலநிலை ஒப்பந்தம் (Paris Climate Agreement) மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான செண்டாய் சட்டகம் (Sendai Framework) உட்பட சுற்றாடல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பல்வேறு சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. இக் காரணிகள் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவதற்கும் அதனை அடைந்துகொள்வதற்குமான சாதகமான சுற்றாடல் முறைமை ஒன்றிணை இலங்கையில் வடிவமைப்பதற்கு துணைபுரிந்துள்ளது எனலாம்.

2030 நிகழ்ச்சித் திட்டத்திற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட சந்தர்ப்பதில் இருந்து இலங்கை அரசாங்கம் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவதற்கான வசதிகளை வழங்கவுதற்கும் அதனை முன்கொண்டு செல்வதற்குமான பல்வேறு அணுகுமுறைகளை கையாண்டு வருகின்றது. அவ்வாறான ஒரு அணுகுமுறையாக பாராளுமன்ற நடவடிக்கைகளை ஏனைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைத்தல் மற்றும் விசேட ஆலோசனைகளை வழங்குதல் ஆகிய நோக்கங்களை முதன்மையாகக் கொண்டு வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவதற்கான வசதிகளை வழங்கும் பொருட்டு வலுவாதார அபிவிருத்திக்கான பாராளுமன்ற செயற்குழு ஒன்று தாபிக்கப்பட்டது. இது நாட்டின் உயரிய சட்டவாக்க மன்றத்தின் வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான உறுதிப்பாட்டை இது எடுத்துக்காட்டுகின்றது. இதற்கு மேலதிகமாக இலங்கையில் வலுவாதார அபிவிருத்தி விடயம் தொடர்பான பொறுப்பினை வகிக்கும் நிரல் அமைச்சாக வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு 2015 ஆண்டில் தாபிக்கப்பட்டதுடன், 2018 மே மாதத்தில் இருந்து பிராந்திய அபிவிருத்தி சார் பணிகளும் அதில் இணைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், அது தொடர்பான வசதிகள் வழங்குதல் மற்றும் அறிக்கையிடல் தொடர்பான மையப்புள்ளியாக வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி தொடர்பான அமைச்சு பணியாற்றி வருகின்றது. அவ்வாறே 2017 ஆண்டின் 19 ஆம் இலக்கத்தைக் கொண்ட வலுவாதார அபிவிருத்திச் சட்டம் நிறைவேற்றப்பட்டது இன்னுமொரு குறிப்பிடத்தக்க விடயமாகும். அதனூடாக தற்போதுள்ள அரச நிறுவன முறைமைகளை கையாண்டு, வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவது குறித்து சிறந்த நிறுவக பொறிமுறையொன்றை வடிவமைப்பதற்கான அத்திவாரமிடப்பட்டுள்ளது.

இந்நாடு எந்தளவுக்கு வலுவாதார அபிவிருத்தி கோட்பாடுகளை பிரதிபலிக்கின்றது என்பது இலங்கையின் கொள்கைச் சட்டகத்தின் மூலம் நன்கு புலப்படுகின்றது. இலங்கையின் நீண்டகால அபிவிருத்தித் திட்டமான தொலைநோக்கு 2015: வளமிக்க நாடு, மத்திய கால அபிவிருத்தித் திட்டமான அரச முதலீட்டு நிகழ்சித்திட்டம்: 2017 - 2020 மற்றும் குறுகியகாலத் திட்டமான 2018 ஆம் ஆண்டின் "நீலப்பசுமை" வரவுசெலவுத் திட்டம் என்பவற்றினூடாக நாட்டின் தற்போதைய மூலோபாய அபிவிருத்திச் சட்டகம் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுத்தப்படும். வலுவாதார அபிவிருத்திக் கோட்பாடுகளின் மூலம் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் காரணிகளை ஒன்றிணைப்பதற்கான தேவை வலியுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கையின் மூலோபாயக் கண்ணோட்டத்தின் மூலம் இப் பரிமாணங்கள் பல்வேறு மட்டத்தில் இரண்டரக் கலந்து காணப்படுகின்றன: அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் 2017-2020 மூலம் நாட்டின் குறித்த அனைத்து பகுதிகளுக்கும் உத்தேச சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவ்வாறே பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துமுகமாக வசதிகளை வழங்க வேண்டிய தேவைப்பாட்டினை வலியுறுத்தி, சுற்றாடலின் தரத்தை உறுதிப்படுத்தப்படுவதற்கான தகுந்த நடவடிக்கைகள் எடுத்து, சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பான முதன்மை துறையொன்றாகவும் அடையாளங் காணப்பட்டுள்ளது; தொலைநோக்கு 2015 மூலம் இலங்கை அறிவினை அடிப்படையாக கொண்ட, போட்டித்தன்மையுடன் கூடிய சமூக சந்தைப் பொருளாதாரமாக மாற்றியமைக்கும் கண்ணோட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், விவசாயம் மற்றும் வலுவாதார அபிவிருத்தி ஆகிய தொனிப்பொருளின் கீழ் சுற்றாடல், அபிவிருத்தி என்பன முதன்மை விடயங்களாக அடையாளங் காணப்பட்டுள்ளன; 2018 "நீலப்பசுமை" வரவுசெலவுத் திட்டத்தின் மூலம், சுற்றாடல் ரீதியாக வலுவாதார அபிவிருத்தி மூலோபாயங்களைக் கையாண்டு சமுத்திரம் சார் முழுமையான பொருளாதாரத்தினை ஆய்வு செய்வதற்கான அரசின் கண்ணோட்டம் வலியுறுத்தப்படுகின்றது.

2030 நிகழ்ச்சி நிரல் கூற்றின் ஏற்பாடுகளுக்கு அமைய, இலங்கையினால் அதன் முதலாவது தன்னார்வ தேசிய மீளாய்வினை சமர்ப்பிப்பதற்கான ஆர்வம் 2018 ஜூலை மாதம் நடாத்தப்பட்ட உயர் மட்டத்திலான அரசியல் வட்டத்தில் வெளியிடப்பட்டது. இத் தன்னார்வத் தேசிய மீளாய்வுச் செயற்பாடானது, ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளரினால் தன்னார்வத் தேசிய மீளாய்வினைத் வடிவமைப்பதற்காக சமர்பிக்கப்பட்ட செயற்பாட்டு தகுவிதிகளுக்கு ஏற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே தன்னார்வத் தேசிய மீளாய்வு செயற்பாடு முழுவதும் பல்தரப்புப் பங்குதாரர் அணுகுமுறை பின்பற்றப்பட்டது.

1 UNDP (2016), 'மனித அபிவிருத்தி அறிக்கை 2016: மனித அபிவிருத்தி அனைவருக்குமான'. Available at http://hdr.undp.org/sites/default/files/2016_human_development_report.pdf

இத் தன்னார்வத் தேசிய மீளாய்வு அறிக்கையானது, வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் அவற்றின் உரிமையை வடிவமைத்து, வலுவாதார அபிவிருத்தி இலக்குகளைச் அமுல்படுத்துவதற்கான தற்போதைய நிலையை மதிப்பிடுகின்றது. இவ்வறிக்கை ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்பாட்டு தகுவிதிகளின் கீழ் உத்தேசக் கட்டமைப்பு மற்றும் அவற்றினை பெருமளவில் ஒத்ததாக தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2 ஆம் பகுதியின் மூலம் தேசிய தன்னார்வ மீளாய்வினைத் தயாரிக்கும் செயன்முறை மற்றும் செயற்பாடு விபரிக்கப்பட்டுள்ளதுடன், 3 ஆம் பகுதியின் மூலம் நாட்டின் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துகின்ற கொள்கை மற்றும் இயலுமை மிக்க சுற்றாடல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. 4 ஆம் பந்தியின் மூலம் 1 இலிருந்து 16 வரையான வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான அண்ணளவான பகுப்பாய்வு வழங்கப்பட்டுள்ளதுடன், அதனுள் 2018 ஆம் ஆண்டின் உயர்மட்டத்திலான அரசியல் வட்டத்தில் ஆழமாக மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் விசேடமாக வலியுறுத்தப்பட்டுள்ளன. அவ்வாறே 17 ஆம் வலுவாதார அபிவிருத்தி இலக்கு, 5 ஆம் பகுதியில் அமுல்படுத்தும் நடைமுறைப்படுத்தும் வகையின் கீழ் விளக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 6 ஆம் பகுதியின் மூலம் கண்டுபிடிப்புகள் தொடர்பான பொழிப்பொன்று வழங்கப்பட்டுள்ளது.

02

# மீளாய்வு முறையியல் மற்றும் செயன்முறை

வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் எந்தவொரு நபரையும் கைவிடாத கொள்கையை வலியுறுத்துவதுடன், வலுவாதார அபிவிருத்தி தொடர்பான கூட்டு விவரணமொன்றை வழங்குவதை நோக்காக கொண்டு, அனைத்தையும் உள்ளடக்கியதும் பரந்துபட்டதுமான சட்டகமொன்றை முன்வைத்துள்ளது. அதற்கமைய இலங்கையில் தன்னார்வ தேசிய செயன்முறை பின்வரும் விடயங்களைப் பூர்த்தி செய்வதற்கு ஒத்துழைப்புடன் அனைத்தும் உள்ளடங்கிய பயிற்சியாக வடிவமைக்கப்பட்டுள்ளது:

- வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் சம்பந்தமாக இலங்கையின் தற்போதைய நிலைப்பாடு மற்றும் முன்னேற்றம் தொடர்பாகவும் அவற்றை அடைந்து கொள்வதற்கான சிறப்புக்கள் மற்றும் அதன் போது மேலெழுகின்ற சவால்கள் தொடர்பாகவும் விரிவாகவும் முழுமையாகவுமான புரிந்துணர்வை வழங்குதல்.
- இலங்கையில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை பிரதான ஆதாரமாக கொண்டு எடுக்கப்பட்ட முன்னெடுப்புக்களை விவாதித்தல்.
- 2030 நிகழ்ச்சிநிரலை அமுல்படுத்தும் போது நிலவுகின்ற இடைவெளிகள் மற்றும் சவால்களை அடையாளங்காணல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை சுருக்கமாக விளக்குதல்.

தன்னார்வ தேசிய மீளாய்வு செயன்முறையைச் அமுல்படுத்துவது தொடர்பாகவும் தன்னார்வ தேசிய மீளாய்வு அறிக்கை தயாரிப்பது தொடர்பாகவும் பின்வரும் நிறுவனங்களின் முகவர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகளின் இந்நாட்டு அலுவலகம் கண்காணிப்பாளராக செயற்படுகின்றதுமான செயற்பாட்டுப் படையணி ஒன்றினை உருவாக்கியுள்ளது. அந் நிறுவனங்களாவன: சனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள், வெளிநாட்டலுவல்கள், மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல், வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்கள், நிதி ஆணைக்குழு, தேசிய திட்டமிடல் திணைக்களம், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் ஆகியனவாகும். இலங்கை கொள்கைசார் கற்கை நிறுவனத்தினால் தன்னார் தேசிய மீளாய்வினைத் தயாரிப்பதற்கான வசதிகளை வழங்கியது.

இலங்கை தன்னார்வ தேசிய மீளாய்வினை சிறப்பாக தரப்படுத்துவதற்கும், அளவீடு செய்வதற்கும் இடமளிக்கும் பொருட்டு, தகவல்களைத் திரட்டுவதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் போதுமான மற்றும் தரமிக்க முறைகள் கையாளப்பட்டன. அதற்கமைய இரண்டாம் நிலைத் தரவுகளைத் திரட்டும் கருவிகள் (உ-ம்: வெளியீடுகள்/ கொள்கை ஆவண மீளாய்வு) போன்று அடிப்படைத் தரவுகளைத் திரட்டும் கருவிகள் (உ-ம்: பங்காளர்களது கருத்துக் கணிப்பீடு மற்றும் பிரதான தகவல் தருநர்களுடான நேர்காணல்) ஆகிய இரு வகையான தகவல்களை சேகரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டன.

## அ) இரண்டாம்நிலைத் தகவல் மீளாய்வு

மீளாய்வு செய்யப்பட்ட இரண்டாம்நிலைத் தரவுகளில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான தேசிய மற்றும் துறைசார் கொள்கை ஆவணங்கள், புள்ளிவிபரவியல் தரவுகள் மற்றும் பூகோள வெளியீடுகளும் உள்ளடங்குகின்றன. அதன் போது பின்வரும் தேசிய கொள்கை ஆவணங்கள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டன.

- நாட்டில் நீண்டகால அபிவிருத்தி வீசுகோடினை பிரதிபலிக்கும் ‘தொலைநோக்கு 2025’
- இலங்கை அரசின் மத்தியகால முதலீட்டுத் திட்டம் தொடர்பாக விளக்குகின்ற ‘அரச முதலீட்டு திட்டம் 2017 - 2020’
- இலங்கையின் 2018 தேசிய வரவு செலவுத்திட்டமான ‘நீலப் பசுமை வரவுசெலவுத்திட்டம்’

தேசிய கொள்கைச் சுட்டியின் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளான வரிசையாக்கம் மற்றும் தேசிய கொள்கைச் சட்டகத்தினுள் நிலவுகின்ற இடைவெளிகளைப் பகுப்பாய்வு செய்யும் பொருட்டு இவ் ஆவணங்கள் பரசீலனை செய்யப்பட்டன. அதற்கு மேலதிகமாக, எந்தவொரு நபரையும் கைவிடாதிருப்பதை உறுதிப்படுத்துவதுடன், வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் 17 இன் மேம்பாடு மற்றும் தர மதிப்பீடு தொடர்பாக மாத்திரமன்றி வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பான கொள்கைகள் / நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளங்காண்பது தொடர்பாகவும் குறித்த துறைசார் கொள்கை ஆவணங்கள் மற்றும் புள்ளிவிபரவியல் தகவல்களும் மீளாய்வு செய்யப்பட்டன.

## ஆ) பங்காளர்களிடம் கலந்தாலோசித்தல்

இலங்கையில் தன்னார்வ தேசிய மீளாய்வுச் செயன்முறையானது, அரச, தனியார்துறை, கல்வியுடன் தொடர்புடுகின்ற மக்கள், அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் தன்னார்வ அமைப்புக்கள் உட்பட சிவில் சமூக அமைப்புக்கள் போன்றவற்றின் பெருந்தொகையான பங்காளர்களும் தொடர்புபடுகின்றதும், பங்களிப்பு நல்குகின்றதுமான அனைத்தையும் உள்ளடங்கிய செயன்முறையாகும். முதலாவது நடவடிக்கையாக பங்காளர்களை இணைத்துக் கொள்ளும் திட்டமொன்று இரு பிரதான நோக்கங்களுடன் மேம்படுத்தப்பட்டன: i) தன்னார்வ தேசிய மீளாய்வினைத் தயாரிப்பதற்கான உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக மாத்திரமன்றி விழிப்புணர்வினை ஏற்படுத்துமுகமாகவும் நாட்டில் வலுவாதார அபிவிருத்தி இலக்குச் செயன்முறையுடன் தொடர்புபட்டுள்ள அனைத்துப் பங்குதாரர்களுடனும் கலந்தாலோசித்தல்; ii) முன்னைய 2018 தன்னார்வ தேசிய மீளாய்வுக் காலப்பகுதியினுள் பங்குதாரர்கள் இடைவிடாது தொடர்புபடுவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல்; என்பன அந் நோக்கங்களாகும். மக்கள் பங்களிப்பு தொடர்பான சர்வதேச சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட பொதுமக்கள் பங்களிப்பு வீச்செல்லைக்கு இணைங்க பங்குதாரர்களை தொடர்புபடுத்திக் கொள்வதற்கான திட்டம் வகுக்கப்படடது.[2] முதலாவது நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு பெரும்பாலான பங்குதாரர்களுடன் கலந்தாலோசிப்பது தொடர்பாக பல்வேறு செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. அதற்கு மேலதிகமாக வலுவாதார இலக்குகளை அமுல்படுத்தும் போது அனைத்துப் பங்குதாரர்களையும் இணைத்துக் கொள்வது தொடர்பாக நிகழ்நிலைக் களம் அமைக்கபட்டுள்ளது. அதாவது தன்னார்வ மீளாய்வு 2018 இனை விஞ்சியதோர் செயன்முறையாகும்.

2 மேலதிக விபரங்கள் தொடர்பாக 3.1. பகுதியை பார்வையிடவும்.

2.1 உருப்படம் : இலங்கை தன்னார்வ தேசிய மீளாய்வு தொடர்பாக பல்தரப்பு பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்தல்




## i. இலங்கை தன்னார்வ தேசிய மீளாய்வு தொடர்பாக பல்தரப்பு பங்குதாரர்களுடன் கலந்தாலோசிப்பது குறித்த செயலமர்வு

அரசு, தனியார் துறை, கல்வித் துறை மற்றும் சிவில் சமூகத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பங்குதாரர்களை ஒரே மேடையில் ஒன்றிணைத்து இச் செயற்திட்டத்தின் மூலம் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நாட்டில் அமுல்படுத்துவது குறித்த நிலைப்பாடு, அதன் சிறப்புக்கள், அதன் போதான சவால்கள் மற்றும் தொடர்நடவடிக்கைகள் என்பன குறித்தும் கலந்துரையாடப்பட்டன. வலுவாதார அபிவிருத்தி இலக்கு 17 இனை அமுல்படுத்தும் போது அனைத்துத் தரப்பினர்களாலும் எடுக்கப்படுகின்ற பிரதான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை அடையாளங் காண்பதும், ‘எந்தவொரு நபரையும் கைவிடாதிருப்பதற்கான’ கொள்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள வாய்ப்புக்களை அடையாளங் காண்பதும் இச் செயலமர்வின் நோக்கங்களாகும்.

## ii. இலங்கையின் தன்னார்வ தேசிய மீளாய்வு தொடர்பாக பல்தரப்பு பங்குதாரர்களுக்கான கருப்பொருள் சார் செயலமர்வு

உயர் மட்டத்திலான அரசியல் வட்டத்தினால் 2018 இல் ஆழமாக மீளாய்வு செய்வது தொடர்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் குறித்து, ஆழமான பகுப்பாய்வினை மேற் கொள்வதை விசேட நோக்கமாக கொண்டு பல்தரப்பு பங்குதாரர்களுக்கான இரு செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இரண்டாவது செயலமர்வில், நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்து வகையில் அரச அலுவலர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள், கல்வி நிறுவகங்கள் மற்றும் தனியார் துறையின் முகவர்கள் உட்பட 200 இற்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். அதன் போது பின்வரும் இலக்குகள் பற்றி முழுமையாக கலந்துரையாடப்பட்டன.

**இலக்கு 6:** அனைவருக்கும் நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குதலும் அதன் வலுவாதார முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தலும்

**இலக்கு 7:** அனைவருக்கும் விலை குறைந்ததும் நம்பரமானதுமான வலுவாதார மற்றும் நவீன வலு சக்தியை உறுதிப்படுத்தல்.

**இலக்கு 11:** நகர மற்றும் மனித குடியிருப்புக்களை அனைத்தும் உள்ளடங்கியதும், பாதுகாப்பானதும், மீளுருவாக்கத்திறன் கொண்டதுமாக மாற்றியமைத்தல்.

**இலக்கு 12:** வலுவாதார பயன்பாடுகள் மற்றும் உற்பத்திப் பாங்கினை உறுதிப்படுத்தல்

**இலக்கு 15:** பௌதீக சுற்றாடல் முறைமைகளில் வலுவாதார பயன்பாடுகளைப் பேணல், மறுசீரமைத்தல் மற்றும் ஊக்குவித்தல், வனாந்தரங்களை வலுவாதாரமிக்க வகையில் முகாமைப்படுத்தல், பாலைவனமாதலைத் தடுத்தல், உயிர்ப்பல்வகைமை அருகிப் போவதைத் தடுத்தல்.

**இலக்கு 17:** வலுவாதார அபிவிருத்தியை அமுல்படுத்தும் முறையினை வலுப்படுத்தல் மற்றும் அது தொடர்பான பூகோள பங்குடைமையை மீள் புதுப்பித்தல்.

## iii. பல் தரப்பு பங்குதாரர்களிடம் கலந்தாலோசிப்பதற்கான பிரதேச செயலமர்வு

தன்னார்வ தேசிய மீளாய்வுச் செயன்முறையில் எந்தவொரு நபரையும் கைவிடாதிருப்பதை உறுதிப்படுத்துமுகமாக அரசின் மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் மாத்திரமன்றி அடிமட்டத்திலிருந்து தொண்டாற்றுகின்ற சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் முகவர்களை ஒரிடத்தில் ஒன்றிணைப்பது இச் செயலமர்வின் விசேட நோக்கமாகும். இச் செயலமர்வின் மூலம், தொடர்ந்தும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் குறித்து அடிமட்டத்தில் இருந்து விழிப்புணர்வூட்டல் மற்றும் உரிமை குறித்து உணர்த்துதல், உப தேசிய மட்டத்தில் நிறுவகப் பொறிமுறையை இனங்காணல் மற்றும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்தும் போது பலம், குறைபாடு. வாய்ப்புக்கள், பாதிக்கப்பட்ட குழுக்களின் கருத்துக்களைத் திரட்டுதல் ஆகிய விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டன.

## iv. அறிக்கை மீளாய்வு மற்றும் செல்லுபடியாக்கல்

தன்னார்வ தேசிய மீளாய்வுச் செயலாற்றப் படையணியினால் தன்னார்வ தேசிய மீளாய்வு அறிக்கை மீளாய்வுக்குட்படுத்தப்பட்டதுடன், அதன் உள்ளீடுகள் மற்றும் பின்னூட்டல்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பான அறிக்கை வரைவுகள் குறித்த நிரல் அமைச்சுக்கள் மற்றும் பிற குறித்தொதுக்கப்பட்ட அரச நிறுவனங்களிடையே பரப்புரை செய்யப்பட்டன. சில பல்தரப்புக் குழுக்களை (அரச, சிவில் சமூக அமைப்புக்கள், கல்வி துறையுடன் தொடர்புடைய தொகுதி, இளைஞர்கள் மற்றும் தனியார் துறை) உள்ளடக்குகின்ற 150 இற்கும் அதிகமானோர் கலந்து கொண்ட செல்லுபடியாக்கல் செயலமர்வொன்று நடாத்தப்பட்டதுடன், அதன் போது வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் 17 இற்கான பிரதான கண்டுபிடிப்புக்கள், சவால்கள் மற்றும் முன்னோக்கிய நடவடிக்கைகள் அறிக்கையின் இறுதி வரைவின் தொகுப்பு சரிபார்க்கப்பட்டது. இலங்கை தன்னார்வ தேசிய மீளாய்வின் ஒரு அம்சமாக முன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட பல்தரப்பு பங்குதாரர்களுடனான கலந்தாலோசனை செயலமர்வுடன் தொடர்புடைய பலதரப்பினரும் இச் செயலமர்வில் கலந்து சிறப்பித்தனர்.

# 03

# கொள்கை மற்றும் இயலுமை மிக்க சுற்றாடல்

வலுவாதார அபிவிருத்தி தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு, வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான பங்களிப்புக்கள் அவசியமாகின்றன. இச்சந்தர்ப்பத்தை பின்புலமாகக் கொண்டு இலங்கையில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தும் போது நாட்டில் காணப்படுகின்ற கொள்கை ரீதியானதும் இயலுமை மிக்கதுமான சுற்றாடல் இப் பகுதியின் மூலம் விளக்கமாக ஆய்வு செய்யப்படுகின்றது. இவ்வுலகளாவிய நிகழ்ச்சிநிரலை கடைப்பிடிக்கும் போது அனைவரினதும் பங்களிப்புக்களை உறுதி செய்வதற்கு அனைத்து தரப்பினருடனும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளில் உரித்துடைமையை ஏற்படுத்துவதற்கு இந்த நாடு எடுக்கின்ற நடவடிக்கைகள் முதலாவது உப பகுதியின் மூலம் விளக்கப்பட்டுள்ளது. கொள்கை தயாரிப்பு தொடர்பான இரண்டாவது உப பந்தியில் இலங்கையின் தேசிய கொள்கை சட்டகம் வலுவாதார இலக்குகளுடன் எந்தளவுக்கு பொருந்துகின்றது என்பது பற்றி மதிப்பீடு செய்வதுடன் நாட்டின் கொள்கை ரீதியான கண்ணோட்டத்தில் பொருளாதாரம் சமூக மற்றும் சுற்றாடல் அளவீடுகள் ஆராயப்படுகின்றன. அதன் பின்னர் மூன்றாவது உப பகுதியின் மூலம் 2030 நிகழ்ச்சிநிரலை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நாட்டில் நிறுவக ரீதியான சட்டகமொன்றை தயாரிக்க வேண்டிய விதம் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. இறுதி உப பந்தியில் இலங்கையில் எந்தவொரு நபரையும் கைவிடாத கொள்கையை பிரதான ஆதாரமாக கொண்டு மதிப்பிடப்பட்டுள்ளது.

# 3.1

## வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின் உரிமையை உருவாக்குதல்

வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நாட்டில் வசிக்கின்ற அனைத்து பிரஜைகளினதும் பங்களிப்பு இன்றியமையாததாகும். இச் செயற்பாட்டுடன் தொடர்புபடுகின்ற பிரதான பங்காளர்களின் வகுதியில் உள்ளடங்குவன :



பாராளுமன்றம் உட்பட அரசாங்கத்தின் அனைத்து துறைகளும் அனைத்து மட்டங்களும்



சிவில் சமூகம்



தனியார் துறை



புத்திஜீவிகள்

வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகரமாக அடைந்து கொள்வதானது, இப் பங்குதாரர்கள் தங்கள் தேவைகளையும் அபிலாஷைகளையும் எவ்வாறு அடையாளங்காண்கின்றனர் என்பதிலேயே தங்கியுள்ளது. இன்னொரு வகையில் கூறுவதாயின் வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக பங்குதாரர்களுக்கு ஒரு வகையில் உரிமையை உணருதல் வேண்டும். ஆதலால் சில பங்குதாரர்களிடையே வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான உரிமையை உருவாக்குவது என்பது இலங்கையில் அவ்விலக்குகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான ஒரு முக்கிய நிபந்தனையாக கருத முடியும். பல்வேறு பங்குதாரரிடையே உரிமை உணர்வினை உருவாக்கக்கூடிய நம்பகரமான முறையொன்றாக அமைவது அவர்களை பங்களிப்புச் செயன்முறைகளில் ஈடுபடுத்துவதாகும். ஐக்கிய நாடுகள் சபையின் சிபார்சாக அமைவதும், வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான செயற்பாட்டில் அனைத்து பங்குதாரர்களுக்கும் உரிமை தொடர்பான உணர்வினை ஏற்படுத்தக்கூடிய அனைத்தும் உள்ளடங்கிய, பங்களிப்பு செயற்பாடொன்றாக அது அமைய வேண்டுமென்பதாகும். சுருக்கமாக கூறுவதாயின் வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் என்பது எந்தவொரு நபரினாலும் தவிர்க்க முடியாததும் தன்னார்வ பங்களிப்புக்களுக்கு திறந்த பல்தரப்பு பங்குதாரர்களைக் கொண்ட ஒரு முன்னெடுப்பாகும்.

2030 நிகழ்ச்சிநிரலின் பங்குதாரர்களாக இலங்கை அரசாங்கம் வலுவாதார அபிவிருத்தி தேவைப்பாடு மற்றும் முக்கியமான கூறொன்றாக அனைத்தும் உள்ளடங்க வேண்டுமென அவதானம் செலுத்துவதுடன் இந்நோக்கங்களை வெற்றி கொள்வதற்கான பங்களிப்பினை வழங்க வேண்டுமென இனங்காணப்பட்டுள்ளது. ஆதலால் இலங்கை அரசாங்கம் ஆரம்பத்திலிருந்து முழுச் சமூகத்திடமும் பல்தரப்பு பங்காளர்களின் தலையீடுகளை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது. பெருந்தொகையான பங்குதாரர்களுடன் தொடர்பு கொள்ளும் போது, பங்குதாரர்களுக்கு விழிப்புணர்வூட்டல் அவர்களுடன் கலந்தாலோசித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தும்போது அவர்களது அயராத ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வது மாத்திரமன்றி மீளாய்வு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் அவர்களை இணைத்துக் கொள்ளல் மற்றும் இச் செயற்பாடு பூராவும் தமது தேவைப்பாடுகள், அபிலாசைகள், பிரச்சினைகள் குறித்து தொடர்பாடலை மேற்கொள்வதற்கு உரிய அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்குவது ஆகியன மிகவும் முக்கியமானவையாகும்.

வலுவாதார அபிவிருத்தி இலக்குச் செயற்பாடுகளில் உச்ச பங்களிப்பு மட்டத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் உரிமை பற்றிய உணர்வினை உருவாக்குவதற்கும், தன்னார்வ தேசிய மீளாய்வுக் காலப்பகுதியிலும் அதற்கு மேலதிகமாகவும் பங்குதாரர்களின் தலையீடு சம்பந்தமாக வழிகாட்டுதல்களை வழங்கும் பொருட்டு இலங்கையில் 2018 தன்னார்வ தேசிய மீளாய்வினை தயாரிப்பதற்கு உரியதான சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான IAP2 சட்டகத்தை மேம்படுத்தி பங்குதாரரர்களை இணைப்பதற்கான திட்டம் (SEP) வடிவமைக்கப்பட்டது. IAP2 சட்டகமானது ஐந்து மக்கள் பங்களிப்பு மட்டங்களை அறிமுகப்படுத்துகின்றது.- அதாவது விளம்பரம், கலந்தாலோசனை, தொடர்பாடல், பங்களிப்புச் செயற்பாடு மற்றும் வலுவூட்டல் ஆகியனவாகும்- இதன்போது ஒவ்வொரு மட்டத்தினையும் வெற்றிகரமாக அடைந்து கொள்ளும் பொருட்டு குறித்தொதுக்கப்பட்ட மக்கள் பங்களிப்புக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தும் முழுமொத்தச் செயற்பாடுகள் பற்றி கவனம் செலுத்தும் போது, முதல் நான்கு மட்டங்களும் அதிகமாக ஏற்புடையதாவதுடன், பங்குதாரர்களை வலுவூட்டி, முழுமொத்தச் தொடர்பாடல் செயற்பாட்டினதும் இறுதி இலக்காக அவற்றைக் கருத முடியும். தன்னார்வ தேசிய மீளாய்வுக் கட்டம் மற்றும் பிந்திய தன்னார்வ தேசிய மீளாய்வுக் காலஎல்லை தொடர்பாக அடையாளங் காணப்பட்ட பங்குதாரர்களை தொடர்பு கொள்ளக்கூடிய கருவிகள் உத்தேச அட்டவணை 3.1 இல் காண்பிக்கப்பட்டுள்ளன. 2018 தன்னார்வ தேசிய மீளாய்வுக் காலஎல்லையில் வரையறுக்கப்பட்ட கால சட்டகம் மற்றும்

பணி தொடர்பான கலந்தாலோசனைக்கான தேவை கருதி செயலமர்வுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டன. எவ்வாறாயினும் இலங்கை தன்னார்வ தேசிய மீளாய்வுடன் தொடர்புபட்ட மிகவும் அவசரமான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் பல்தரப்பு பங்குதாரர் உசாவுத்துணைக் குழு (MRG) போன்ற பங்குதாரர்களை தொடர்புபடுத்தக்கூடிய நீண்டகால நடவடிக்கைகள் குறித்து தன்னார்வ தேசிய மீளாய்வுச் செயலாற்றுப் படையணியினால் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது

**அட்டவணை 3.1: தன்னார்வ தேசிய மீளாய்வு மற்றும் பிந்திய தன்னார்வ தேசிய மீளாய்வு கட்டத்துடன் தொடர்புபடுகின்ற கருவிகள்**

| தொடர்படுகின்ற மட்டம் | VNR தொடர்பாக பயன்படுத்தப்பட்ட தொடர்படும் கருவிகள் | நீண்ட கால தொடர்படும் கருவிகள | நீண்ட கால தொடர்படுபடுவதற்கான பொறுப்புக்கள் | பங்குதாரர்கள் |
|---|---|---|---|---|
| அறிவித்தல் | • வலைதளங்களுடான தகவல்கள்<br>• மின்னஞ்சல் ஊடாக பிரதான பங்குதாரர்கள் இடையே தொடர்பாடல் ஊடகமொன்றை மேம்படுத்தல் | • வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் பற்றிய வலைதளம் ஒன்றை மேம்படுத்தல் | | • பொது மக்கள் உள்ளடங்கலாக அனைத்துப் பங்குதாரர்களும் |
| கலந்தாலோசனை | • IPS மின்னஞ்சல், வலைதளம் மற்றும் சமூக ஊடக வசதிகளின் ஊடாக அழைப்பு விடுத்தல்<br>• SEP உடன் சந்திப்பதற்கான ஏற்பாடு | • SDG வலைவாசலுடன் தொடர்புடைய நிகழ்நிலை வலுவாதார அபிவிருத்தி இலக்கு வலையமைப்பு ஒன்றை விருத்தி செய்தல் | • MSDWRD, UN இந்நாட்டிற்கான குழு மற்றும் செயலணி / மதியுரைஞர் குழு | • வலைவாசல்: அனைத்துப் பங்குதாரர்களும் திட்டமிடல் சந்திப்பு: MSDWRD,, UN இந்நாட்டிற்கான குழு, IPS,VNR செயலாற்றுப் படையணி பங்குதாரர்கள் |
| ஈடுபாடு | • 3 தேசிய செயலமர்வுகள்<br>• 1 உப தேசிய செயலமர்வு செல்லுபடியாக்கல் செயலமர்வு | • செயலமர்வுகளுக்கான வலைதள விவரக்குறிப்பு அபிவிருத்தி | • செயலமர்வு மற்றும் வலையமைப்பு வடிவமைப்பதற்கு MSDWRD, UN இந்நாட்டுக் குழுவினது தொழிநுட்ப உதவி | • தேசிய செயலமர்வகள்: அரச, தனியார் துறை, CSOs, கல்விசார்<br>• உப தேசிய செயலமர்வுகள்: மாகாண, மாவட்ட மட்டத்தில் அரச முகவராண்மைகள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் ச.இ.ச. தனியார் துறை மற்றும் புத்திஜீவிகள் |
| ஒத்துழைப்பு | | • பல்தரப்பு பங்குதாரர் உசாவுநர் குழு (MRG) | • MSDWRD, செயற்பாட்டுப் படையணி / ஆலோசனைக் குழு UN இந்நாட்டிற்கான குழு | • அனைத்துத் தரப்புக் குழுக்களிடமிருந்தும் முகவர்கள் 8-10 |

இலங்கையின் வலுவாதார அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்புக்கூறும் நிரல் அமைச்சான வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் தன்னார்வ தேசிய மீளாய்வு தொடர்பான முன்னாயத்தச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் 2015 - 2018 காலப்பகுதியினுள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், கலந்தாலோசனைகள் மற்றும் இயலளவு விருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் ஊடாக ஏனைய நிரல் அமைச்சுக்கள் மற்றும் தேசிய, உப தேசிய பங்குதாரர்களை இணைப்பதற்கான பல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டன. இவற்றில் அரசதுறை அலுவலர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூகம், புத்திஜீவிகள் மற்றும் தனியார்துறை போன்றே ஐ.நா. சபை மற்றும் பிற முகவராண்மைகள், ஏனைய துறைகளின் பங்குதாரர்கள் தொடர்பாகவும் திட்டமிடப்பட்ட மற்றும் நடாத்தப்பட்ட செயற்பாடுகளும் உள்ளடங்குகின்றன.

வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் சம்பந்தமான உரித்துரிமையை வடிவமைத்தல் மற்றும் 2030 நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக பல்வேறு பங்குதாரர்களை இணைத்துக்கொள்வதற்காக இந்நாட்டில் எடுக்கப்பட்ட பிரதான நடவடிக்கைகள் கீழே சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளன.

### அ) வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுள் அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களினதும், பிரிவுகளினதும் தலையீடு

வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி தொடர்பான அமைச்சினால் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப் படுத்துவது சம்பந்தமாக பல்வேறு அரச முகவராண்மைகளுடன் அதன் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை அடையாளங்காணல், நிர்வக சட்டகத்தினுள் காணப்படும் தொடர்புகள், மேற்பொருத்தம், இடைவெளிகள் என்பவற்றை இனங்காண்பதற்கான முன்னாயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. பிற நிரல் அமைச்சுக்கள், வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி தொடர்பான அமைச்சு ஆகியவற்றினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய வலுவாதார அபிவிருத்தி தொடர்பான குவியப்புள்ளிகள் உருவாக்கப்பட்டன. நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளில் குவியப்புள்ளிகள் தேசிய மற்றும் உப தேசிய மட்டங்களில் வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி தொடர்பான அமைச்சுடன் தொடர்புபடுகின்றன. இதற்கு மேலதிகமாக இலங்கையில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டில் மக்கள் முகவராண்மைகளை ஒருங்கிணைப்பது சம்பந்தமாக வசதிகளை வழங்குவதற்கு வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி தொடர்பான அமைச்சினால் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன:

- வலுவாதார அபிவிருத்தியுடன் தொடர்புடைய பல்வேறு இலக்குகளை உள்ளடக்கிய அரச சேவையை வழங்கும் மூலோபாயம் ஒன்றை வரைவு செய்துள்ளது.
- 425 நியதிச்சட்ட முகவராண்மைகளின் நியமங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்புக்களைக் குறிக்கும் கையேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- தன்னார்வ தேசிய மீளாய்வு தொடர்பான வழிகாட்டிக் கோவையை வழங்குவதற்கும், ஒத்துழைப்பு வழங்குவதற்கும் அரசின் பிரதான நிறுவனங்களிடையே தன்னார்வ தேசிய மீளாய்வினை வடிவமைப்பதற்காக செயற்பாட்டுப் படையணி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.
- வலுவாதார அபிவிருத்தி இலக்குச் சுட்டி சட்டகமானது மும்மொழிகளிலும் பிரசுரிக்கப் பட்டது.

வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி தொடர்பான அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட இம் முயற்சிகளுக்கு வலுசேர்க்கப்பட்டதுடன், ஏனைய பிரதான முகவராண்மைகளினால் பின்வரும் ஒன்றிணைந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன:

- வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்குதல், வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்குதல் மற்றும் வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி தொடர்பான அமைச்சுடன் இணைந்து துறைசார் கொள்கைகளுடன் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை தேசிய மயப்படுத்தல் (உ-ம்: விவசாயப் பிரிவு) தொடர்பாக NPD மூலம் மேற்கொள்ளப் பட்ட முகப்புப் பயிற்சிகள்.
- இலங்கையின் வலுவாதார இலக்குகளின் மேம் பாட்டினை அளவிடுவதை அடிப்படையாகக் கொண்ட நிரல்களை இனங்காணல் மற்றும் உசிதமான சுட்டிகளை விருத்தி செய்தல். விருத்தி செய்வதற்கு DCS இனால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் DCS இனால் இலங்கையில் வலுவாதார அபிவிருத்தி இலக்குக் சுட்டிகளின் நிலை சம்பந்தமான கண்காட்சி மற்றும் வலுவாதார அபிவிருத்தி இலக்கு சுட்டியின் சட்டகத்துடன் இணையத்தளமொன்று வெளியிடப் பட்டது.
- DPMM, UNUCEF மற்றும் UNDP யினால் மேற்கொள்ளப்பட்ட இலங்கை தொடர்பான விடய ஆய்வில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான மேம்பாட்டினை மதிப்பீடு செய்யும் இயலளவுகள் மற்றும் தேசிய மதிப்பீட்டு முறைமை தொடர்பான வலய மீளாய்வுகளுடன் ஒத்துப்போதல்

இவ் அணுகுமுறைகளுக்கு அமைச்சுக்கள், திணைக் களங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களின் அரச துறைசார் அலுவலர்களும் கலந்து கொண்டதுடன் அதில் பல்தரப்பு பங்குதாரர்களும் இணைந்து பற்றிய வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும், அரச அலுவலர்களிடையே வலுவாதார அபிவிருத்தி செயற்பாடு தொடர்பான உரித்துரிமையை ஏற்படுத்துவதற்கும் இது களமாக அமைந்துள்ளது.

### ஆ) வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்தும் போது பாராளுமன்றத்தின் தலையீடு

மீளாய்வு, ஆலோசனை சேவைகளை வழங்குவதுடன், பாராளுமன்றம் மற்றும் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சுக் களுடன் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதும், வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கி அமுல்படுத்துவது தொடர்பாக வசதிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு ஐக்கிய நாடுகளின் வலுவாதார அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பான பாராளுமன்றச் செயற்குழு தாபிக்கப்பட்டது.[3] இக் குழு 15 பாராளுமன்ற

3 ஐக்கியநாடுகள் வலுவாதார அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல் 2030 தொடர்பாக பாராளுமன்ற செயற்குழுவின் மத்தியகால அறிக்கை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 8வது பாராளுமன்றத்தில் 2017 இன் இலக்கம் 226 ஐக் கொண்ட கோவை (1வது அமர்வு)

உறுப்பினர்களை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. “பின்வருவன தொடர்பாக சிபார்சு செய்தல்: குறித்த நிரல் அமைச்சுக்களுடன் ஒருங்கிணைந்து தேசிய கொள்கைகள் மற்றும் சட்டங்களை வகுத்தல்; போதிய தேசிய வளங்களை ஒதுக்குதல் மற்றும் சர்வதேச நிதியிடல் வளங்களை கண்டறிதல்; அரச செயற்பாட்டு முகவராண்மைகளை ஒருங்கிணைத்தல்; தேசிய, மாகாண மற்றும் பிரதேச மட்டத்திலான வலையமைப்பு செயற்பாடுகளை முன்னெடுத்தல்; அரச தனியார் பங்குடைமை தொடர்பாக ஊக்குவித்தல்; ஐக்கிய நாடுகளின் முகவராண்மைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ளல்; பிராந்திய மற்றும் சர்வதேச மட்டத்தில் நாடுகளிடையே நிபுணத்துவம் மற்றும் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளல்; தனியான தரவு முறைமை ஒன்றை விருத்தி செய்தல் மற்றும் காலத்திற்கு காலம் மேம்பாட்டினை மீளாய்வு செய்தல்; மற்றும் மேற்படி விடயங்கள் சம்பந்தமாக அல்லது இடைநேர் அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் கவனம் செலுத்துதல் ஆகியன தெரிவுக்குழுவின் உரிமைக் கட்டளைகள் ஆகும்.”[4]

## இ) வலுவாதார அபிவிருத்தி இலக்குகளில் சிவில் சமூக அமைப்புக்கள், தனியார்துறை மற்றும் புத்திஜீவிகளின் தலையீடு

வலுவாதார அபிவிருத்தி வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் சிவில் சமூக அமைப்புக்கள், தனியார்துறை மற்றும் புத்திஜீவிகள் போன்ற பல்தரப்பு பங்காளர்களுக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கி கலந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே அரசதுறை, தனியார்துறை, சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் புத்திஜீவிகளின் முகவராண்மைகளையும் கொண்ட வலுவாதார அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைக்குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, தன்னார்வ தேசிய மீளாய்வினைத் தயாரிக்கும் போது அரச சார்பற்ற தரப்பினருடனும் கலந்தாலோசிப்பதற்காக விசேட அவதானம் செலுத்தப்பட்டது. அதன் போது, தன்னார்வ தேசிய மீளாய்வுச் செயற்பாடானது, வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தும் பரந்துபட்ட செயற்பாட்டில் இருந்து ஒதுக்கிவிட முடியாதென்பது புரிந்து கொள்ளப்பட்டது. அதன் காரணமாக பிந்திய 2018 தன்னார்வ தேசிய மீளாய்வு தலையீடு தொடர்பான பரந்துபட்ட களமொன்றை அமைப்பதற்கான அடிப்படை தன்னார்வ தேசிய மீளாய்வுக் கட்டத்தில் இருந்து திட்டமிடப்பட வேண்டும். ஆதலால் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தும் செயற்பாடு பூராக மாத்திரமன்றி 2018 தன்னார்வ தேசிய மீளாய்வு கால எல்லைக்கு மேலதிகமாக முனைப்புடன் அனைத்து தரப்பினர்களையும் உள்ளடக்கியதான தலையீட்டுச் செயற்பாடுகளை உருவாக்கும் போது பங்குதாரர்களை ஒருங்கிணைப்பதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. அது இரண்டு பிரதான நோக்கங்களைக் கொண்டுள்ளது. அவையாவன:

1. இலங்கையில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடன் தொடர்புபடுகின்ற அனைத்து பங்குதாரர்களினதும் கருத்துக்களை தன்னார்வ தேசிய மீளாய்வினை தயாரிப்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளல் மற்றும் விழிப்பூட்டல் தொடர்பாக அனைத்து பங்குதாரர்களுடனும் கலந்தாலோசித்தல்.
2. பிந்திய 2018 தன்னார்வ தேசிய மீளாய்வுக் காலப்பகுதியில் அனைத்து பங்குதாரர்களினதும் தொடர்ந்தேச்சையான தலையீடுகள் தொடர்பாக களமொன்றினை உருவாக்குதல்

தன்னார்வ தேசிய மீளாய்வுக் காலப்பகுதியினுள் பங்குதாரர்களின் தலையீடுகளை உறுதிப்படுத்துவது தொடர்பாக திட்டமிடப்பட்ட பிரதான கருவியாக அமைந்தது செயலமர்வுகளாகும். தேசிய மட்டத்திலான மூன்று செயலமர்வுகள் மற்றும் பிராந்திய செயலமர்வுகளின் பின்னர் அடிமட்டத்தில் இருந்து செயற்படுகின்ற சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களினூடாக பிராந்திய ஆலோசனை செயலமர்வுகளுள் எல்லைநிலைக்குட்பட்ட மக்களை பிரதிநிதித்துவப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. தன்னார்வ தேசிய மீளாய்வு செயற்பாட்டில் அனைவரையும் உள்ளடக்கியதான பங்களிப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு திறந்த அடிப்படையில் அழைப்பு விடுத்தலின் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் ஊடகம், சமூக ஊடகம் மற்றும் பிரதான இணையத்தளங்கள் ஊடாகவும் அவை பிரசுரிக்கப்பட்டன.

வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப் படுத்தும் செயற்பாடு பூராகவும் அனைத்து பங்குதாரர்களினதும் தலையீடுகளை உறுதிப்படுத்து முகமாக நிகழ்நிலை ஊடாக தொடர்புகொள்வதற்கான கருவிகளை தாபிப்பதற்கும், பங்குதாரர்களை இணைத்து கொள்வதற்கான திட்டத்தின் மூலம் பிரேரிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய நீண்டகால பங்குதாரர்களை இணைத்துக் கொள்வதற்கான ஒரு களமாக வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை வலைவாசல் மூலம் விருத்தி செய்வதற்கு இலங்கை தற்போது நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. பங்குதாரர்களின் ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்ச்சியான ஒத்துழைப்புகளை மேம்படுத்தும் நடவடிக்கையாக பங்குதாரர்களை இணைத்துக் கொள்வதற்கான திட்டத்தில் பல்தரப்பு பங்குதாரர் குழுக்களும் முன்மொழியப்பட்டுள்ளதுடன் அதனூடாக பிந்திய தன்னார்வ தேசிய மீளாய்வினை நடைமுறைப்படுத்தும் காலப் பகுதியினுள் வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக உத்தேச வலைவாசல் சம்பந்தமான உள்ளீடுகள் வழங்கப்படும்.

## ஈ) ஐக்கிய நாடுகளின் தலையீடு

ஐக்கிய நாடுகளின் இந்நாட்டுக்குழு மற்றும் ஆசிய பசுபிக் வலய ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவினால் (ESCAP), இலங்கையில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பெறுமதிமிக்க ஒத்துழைப்புகள் வழங்கப்படுவதுடன் நாட்டின் அரச துறை மாத்திரமன்றி சிவில் சமூக அமைப்புக்களுடனும் வலுவான தொடர்புகளை வைத்திருக்கின்றது. ஐக்கிய நாடுகளின் இந்நாட்டுக் குழு, ஆசியா பசுபிக் வலய ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமூக ஆணைக்குழு மற்றும் மக்கள் ஒத்துழைப்புக்கான சர்வதேச சங்கத்துடன் இணைந்து தொழிநுட்ப நிதியுதவியினூடாக இலங்கை அரசினால் ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் ஒத்துழைப்புடன் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன:

- 2017-2020 நாட்டில் பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான இலக்குகளை பகுப்பாய்வு செய்து துரித மதிப்பீடுகளை மேற்கொள்வதன் ஊடாக வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை தேசிய கொள்கைகளில் ஒன்றிணைத்தல் மற்றும் கொள்கை வடிவமைப்பு தொடர்பாக தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

4 Ibid, p 43

- தன்னார்வ தேசிய மீளாய்வு தயாரிப்பது தொடர்பாக நிதியுதவிகளை வழங்குதல் மற்றும் அரசின் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பாக அனுசரணைகளை வழங்குதல்.

- தேசிய ஆலோசனை செயற்பாட்டின் பங்களிப்பு மற்றும் உதவிகளை வழங்குவது தொடர்பாக சர்வதேச அனுபவங்களைப் பரிமாற்றிக் கொள்ளல்.

- பயனுறுதி மிக்க பல்தரப்பு பங்களிப்பு தொடர்பான சிபாரிசுகளை வழங்கும் பொருட்டு வலுவாதார அபிவிருத்தி செயற்பாட்டில் பங்குதாரர்களின் பங்களிப்பினை உறுதிப்படுத்து வதற்கான மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

- தேசிய தன்னார்வ மீளாய்வினை தயாரிப்பது தொடர்பாக பங்குதாரர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை திட்டமிடலும் ஒழுங்கமைத்தலும்.

- 2030 நிகழ்ச்சிநிரலை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நிகழ்நிலை பங்களிப்புகளுக்கு களம் அமைப்பது தொடர்பான தொழில்நுட்ப ஒத்துழைப்பினை வழங்குதல்

ஐக்கியநாடுகள் சபையினால் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து 2018 மார்ச் மாதம் வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான தகவல்கள் குறித்த முதலாவது தேசிய சிம்போசியம் (#SDGDataLK) நடத்தப்பட்டது. இது இரு நாட்கள் பூராவும் நடத்தப்பட்டதுடன், இலங்கையின் வலுவாதார அபிவிருத்தி இலக்கு சுட்டிகளின் தற்போதைய நிலை பற்றிக் கலந்துரையாடுவதற்கும் மேம்படுத்தப்பட்ட தரவுகள், அறிவு முகாமைத்துவம் மற்றும் சான்றுகளை அடிப்படையாக கொண்ட கொள்கைகளை திட்டமிடுவதன் ஊடாக முன்னோக்கிய… மூலோபாயங்களை தெரிவு செய்யும் பொருட்டு பல்தரப்புப் பங்குதாரர்களுக்கான களம் (அரச முகவராண்மைகள் ஐக்கிய நாடுகளின் முகவராண்மைகள், புத்திஜீவிகள், சிவில் சமூகம்,தரவுகள் மற்றும் ஆய்வுகள் தொடர்பான அமைப்புக்களின் முகவராண்மையும் உள்ளடங்கிய) அமைக்கப்படும். .

# 3.2

## வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் மற்றும் தேசிய கொள்கைகளுக்கு இடையிலான வரிசையாக்கம்

2030 நிகழ்ச்சிநிரலை வெற்றிகொள்வதற்கு இந்நாடு உரிய வழிவகைகளை மேற்கொண்டுள்ளதா என்பது பற்றி அறிந்து கொள்ளும் ஆரம்பகட்ட நடவடிக்கையாக வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நாட்டின் கொள்கைகளுக்கு இடையிலான சீராக்கங்களை பகுப்பாய்வு செய்தல் தற்போதுள்ள கொள்கைகளை ஆழமாக ஆராய்ந்து அதனை வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றியும் அவற்றில் தீர்க்கப்பட வேண்டிய இடைவெளிகள் பற்றியும் ஆராயப்படும். அத்துடன் இப்பகுதியின் மூலம் பிரதான தேசிய மூன்று கொள்கை ஆவணங்கள் பகுப்பாய்வு செய்கின்றது. அதாவது - 2025 தொலைநோக்கு, 2017 – 2020 [5] அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் 2018 வரவு செலவுத்திட்டம் என்பனவாகும்.

அவை வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடன் வரிசையாக்கம் செய்யப்படும் விதம் தொடர்பாக முன்னர் மேற்கொண்ட ஆய்வுகளுடன் பகுப்பாய்வு செய்யப்படும். அதற்கு மேலதிகமாக இப்பிரதான கொள்கை அறிக்கையில் வலுவாதார அபிவிருத்தியின் மூன்று அளவீடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றியும் இப் பகுதியின் ஊடாக ஆராயப்படும்.

## தற்போதைய தேசிய கொள்கை சட்டகம்

2025 தொலைநோக்கு: ஒரு வளமான நாட்டில் அனைத்து பிரஜைகளும் உயர் வருமானம் பெறக்கூடிய வகையில் நாட்டின் அறிவினை அடிப்படையாகக் கொண்ட உயர் போட்டித்தன்மையுடன் கூடிய சமூக சந்தைப் பொருளாதார நடவடிக்கைகளின் ஊடாக மிகச் சிறந்த வாழ்வாதாரத்தை வழங்கக்கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்குவதுடன் 2025 ஆம் ஆண்டளவில் இலங்கையை வளம் மிக்க நாடாக மாற்றியமைக்கும் அரசின் தொலை நோக்கினை வலியுறுத்தல்.[6]

2025 தொலைநோக்கில் உயர் வலுவாதார அபிவிருத்திகள் தொடர்பான நீண்டகால நோக்கினை அடைந்து கொள்வதற்கு மத்தியகால அபிவிருத்தி முன்னுரிமைகளிடையே வள ஒதுக்கீடு தொடர்பான விஸ்தீரணமான அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக வரையறுக்கப்பட்ட பிஸ்கல் (fiscal) இடவசதிகளுள் அரச முதலீடுகளை உரியவாறு முகாமைத்துவப்படுத்துவதன் ஊடாகவே அடைந்து கொள்ள முடியும். அது தொடர்பாக தற்போது முன்னெடுத்து வருகின்ற வருடாந்த முதிர்ச்சியடைந்த மற்றும் எதிர்கால ஆயிரத்திற்கு அதிகமான செயற்திட்டங்களை விபரிக்கின்ற விரிவான அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (PIP) 2017-2020 இலங்கை அரசாங்கத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்டது. (PIP) 2017-2020, பரந்துபட்ட வீச்செல்லையில் கொள்கை ஆவணங்கள் தேர்தல் வெளியீடுகள் மற்றும் மிக முக்கியமாக வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடிப்படையாகக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது. (உரு. 3.1)

5 அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (PIP) 2017-2025, தேசிய திட்டமிடல் திணைக்களம் t http://www.mnpea.gov.lk/web/ index.php/en/news-events/2-uncategorised/181-public-investment-programme.html மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

6 2025 தொலைநோக்கு : வளமான நாடு http://www.pmoffice.gov.lk/download/press/D00000000061_EN.pdfமூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**உரு 3.1: இலங்கை தேசிய கொள்கை சட்டகத் திட்டமிடல்**




அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டமானது, 'ஐந்து திட்டம்: 60 மாதங்களில் புதிய அரசாங்கம்'', ''மைத்திரி ஆட்சி: ஸ்திரத்தன்மை வாய்ந்த நாடு'' மற்றும் ''எதிர்காலத்திற்கான உத்தரவாதம்'' என மக்கள் முன் வைக்கப்பட்ட அரசின் முழுமொத்த அபிவிருத்தி திட்டங்களை தொலைநோக்காக கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளது. கொள்கைப் பிரகடனத்தில் ஐந்து அபிவிருத்தி இலக்குகளில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள; (1) ஒரு மில்லியன் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்; (2) வருமான மட்டத்தை அதிகரித்தல்; (3) கிராமியப் பொருளாதார அபிவிருத்தி; (4) கிராமிய, தோட்ட, மத்தியவகுப்பு மற்றும் அரச அலுவலகர்களுக்கு காணி உரித்தினை உறுதிப்படுத்தல் மற்றும் (5) பரந்துபட்ட மற்றும் வலுவான மத்திய வகுப்பொன்றை உருவாக்குதல் ஆகியனவாகும். PIP 2017-2020 பிரதானமாக முன்னெடுக்கப்பட்ட காலப்பகுதியினுள் முதலீடு செய்யக்கூடிய வளங்களின் அளவுகளை மதிப்பீடு செய்வதை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. அவ் வளங்கள் பல்வேறு பிரிவுகள் உப பிரிவுகள் மற்றும் பல்வேறு அரச முகவராண்மைகளிடையே ஒதுக்கப்பட வேண்டிய விதம் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளன. அது அரசின் குறுகிய கால (வருடாந்த) நிதி ஒதுக்கீட்டில் காண்பிக்கப்பட்டுள்ள 2018 வரவு செலவுத் திட்டத்தையொட்டியதாக காணப்படுகின்றது.

2018 வரவுசெலவுத்திட்டமானது ''நீலப்பசுமை வரவுசெலவுத்திட்டம்'' எனும் தொனிப்பொருளைக் கொண்டுள்ளதுடன் இலங்கையில் குறைவாக பயன்படுத்தப்படும் சமுத்திர வளங்களை பயன்படுத்தி சுற்றாடலுக்குகந்த வலுவாதார பொருளாதார விருத்தியை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் புதிய வலுவாதார தொழில்நுட்பப் பயன்பாட்டின் ஊடாக பொருளாதார பல்வகைமைப்படுத்தலை இது அடிப்படையாக கொண்டுள்ளது. வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் குறிப்பாக அரச வருமானம் குறைவடைதல், அரச கடன் அதிகரித்தல் கொடுப்பனவு நிலுவைப் பிரச்சினை மற்றும் இயற்கை அனர்த்தங்கள் அதிகரித்தல் ஆகியன தொடர்பான குறுகியகால சவால்களுக்கு முகம்கொடுப்பது பற்றி விசேடமாக அவதானம் செலுத்தப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக 2018 வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் தனிநபர் வருமானம் அதிகரிப்பு, தொழில்வாய்ப்பு, நேரடி வெளிநாட்டு வளங்கள், ஏற்றுமதிகளை அதிகரித்தல் போன்ற மத்திய கால இலக்குகளை அடைந்து கொள்ளும் பல அணுகுமுறை களும் இனங்காணப்பட்டுள்ளன.

வலுவாதார அபிவிருத்தி இலக்கு 17 தொடர்பாக சுயாதீனமாக நடவடிக்கைகளை எடுப்பது முக்கியமான அம்சமாக அரசினால் இனங்காணப்பட்டுள்ளது. ஒவ்வொரு இலக்குகள் தொடர்பாகவும் வெவ்வேறான தேசிய கொள்கைகள் காணப்படுவதுடன், இவ்வனைத்து இலக்குகளையும் அடைந்து கொள்வது தொடர்பாக ஒத்துழைப்பு வழங்குவதற்கு தன்னார்வத்துடன் செயற்படுவது குறித்து தேசிய கொள்கை ஒன்று முக்கியத்துவம் பெறுவதுடன், அது அத்தியாவசியமானதாகவும் கருதப்படுகின்றது.

## வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுக்குப் பொருத்தமான கொள்கைகள் பற்றிய மதிப்பீடு

நாட்டின் கொள்கை சட்டகம் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடன் எந்தளவு தூரம் வரிசையாக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதை இனங்காண்பதற்கு தேசிய தொலைநோக்கு மூலோபாயம், தேசிய அபிவிருத்தித் திட்டம், துறைசார் திட்டங்கள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல் போன்ற குறுகியகால மத்தியகால மற்றும் நீண்டகால கொள்கை ஆவணங்களுக்கமைய தேசிய உப தேசிய முன்னுரிமைகளுடன் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பது மிகப் பிரதானமாகும். இவற்றுக்கு இடையேயுள்ள இடைவெளிகளை இனங்காணக் கிடைப்பதுடன் அதனூடாக மிகச் சிறந்த தேசிய கொள்கை சட்டகத்தினுள் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை மிகச் சரியாக இனங்காண்பது இலகுவானதாகும். எவ்வாறாயினும் அவ்வாறான ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியாமை மற்றும் அவை சிக்கலாக உள்ளமையின் காரணமாக வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடன் கொள்கைகளை ஒப்பீடு செய்து, ஆராய்வது சிரமமாக உள்ளது. பெரும்பாலும் நாடுகளிடையே பிரதான தேசிய கொள்கை ஆவணங்களுடன் மாத்திரம் இப் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினால் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடன் வரிசையாக்கம் செய்யப்பட்டு மதிப்பீடு செய்வதற்கு அது சம்பந்தமாக நீண்டகால மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாகவும் அமைச்சின் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பொருளாதார அபிவிருத்தி இலக்குகள் மற்றும் தேசிய கொள்கை சட்டகத்திற்கு இடையேயான இடைவெளிகளை ஆராய்வதற்கும் பிரிதாக மேலதிக பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. அப்பகுப்பாய்வின் ஊடாக கண்டறியப் பட்ட விடயங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### அ) அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017- 2020 தொடர்பான நீண்டகால மதிப்பாய்வு

வரிசையாக்கப் பணிகளுடன் முன்னோக்கிச் செல்வதற்கும் இலங்கையின் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின் புறவரையை விருத்தி செய்வதற்கும், அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017-2020 இல் உள்ள இலக்குகளுக்கு ஏற்புடையதாக 3.2 மூலம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு வலுவாதார இலக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன. துரித மதிப்பாய்வுகளின் ஊடாக 169 இலக்குகளில் நாட்டின் கொள்கை அபிவிருத்திக்கு உரியதல்லாத அல்லது நிர்வாகப் பிரச்சினைகளுக்குரிய, பிராந்திய அல்லது பூகோள மட்டத்தில் தீர்க்கப்பட வேண்டிய 16 (9%) இலக்குகள் இனங்காணப்பட்டுள்ளன. அவ்வாறே இலங்கைக்குரியதான போதிலும் வரிசையாக்கம் செய்யப்படாத 44 இலக்குகளும் இனங்காணப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.2: வலுவாதார அபிவிருத்தி இலக்குகளால் அரச முதலீட்டின் பிரதான துறைகளை குறித்துக்காட்டல்**

| இலக்கு | வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் | இலக்குகளின் எண்ணிக்கை | | | வரிசையாக்கப் பட்ட % |
|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | ஏற்புடையன | வரிசையாக்கப் பட்ட | |
| 1 | வறுமை ஒழிப்பு | 7 | 6 | 6 | 86% |
| 2 | பட்டினி ஒழிப்பு | 8 | 7 | 5 | 63% |
| 3 | சிறந்த சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு | 13 | 13 | 9 | 69% |
| 4 | தரம் மிக்க கல்வி | 10 | 10 | 10 | 100% |
| 5 | பால்நிலை சமத்துவம் | 9 | 9 | 6 | 67% |
| 6 | குடிநீர் மற்றும் துப்புரவேற்பாடு | 8 | 8 | 7 | 88% |
| 7 | இயலுமைமிக்க வலு சக்தி | 5 | 5 | 5 | 100% |
| 8 | முக்கியமான தொழில்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி | 12 | 11 | 10 | 83% |
| 9 | கைத்தொழில், நவீனமயப்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் | 8 | 8 | 8 | 100% |
| 10 | குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் | 10 | 7 | 6 | 60% |
| 11 | வலுவாதார நகரங்கள் மற்றும் சமூகங்கள் | 10 | 9 | 9 | 90% |
| 12 | பொறுப்புக்கூற வேண்டிய பயன்பாடுகள் மற்றும் தயாரிப்பு | 11 | 10 | 7 | 64% |
| 13 | காலநிலை நடவடிக்கைகள் | 5 | 4 | 4 | 80% |
| 14 | நீரின் கீழ் வாழ்வு | 10 | 9 | 3 | 30% |
| 15 | நிலம் மீதான வாழ்வு | 12 | 12 | 4 | 33% |
| 16 | சமாதானம், நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள் | 12 | 12 | 5 | 42% |
| 17 | இலக்குகள் தொடர்பான பங்குடைமை | 19 | 13 | 5 | 26% |
| | | 169 | 153 | 109 | 64% |

மூலம் : இலங்கையில் SDG நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற MAPS, இலங்கை அரச மற்றும் இலங்கையின் ஐக்கிய நாடுகள் குழு சனவரி 2018

எந்தளவு தூரம் வரிசையாக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதை (பகுதியளவில் அல்லது முழுமையாக) இனங்காண்பதற்கு வரிசையாக்க இலக்குகள் மேன்மேலும் பகுப்பாய்வு செய்யப்படல் வேண்டும். வரிசையாக்கம் செய்யப்பட்டுள்ள இலக்குகள் 109 இடையே, 64 இலக்குகள் பூரணமாக வரிசையாக்கம் செய்யப்பட்டுள்ளனவா என இனங்காணப்பட்டுள்ளது. (முழு இலக்குகளின் 38 %) முழுமையான வரிசையாக்கம் என்பது தேசிய திட்டமிடல் ஆவணங்களில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடன் பதத்தினால் மாத்திரமன்றி விடயத்துறை மற்றும் அபிலாசைகளும் உள்ளடங்குகின்ற இலக்காகும். சில சந்தர்ப்பங்களில் அவற்றின் மேம்பாட்டினை அளவீடு செய்வதற்கு சுட்டிகள் வரை அல்லது / வள ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 45 இலக்குகள் அரைவாசியாக ஒழுங்கமைவுக்கு உட்படுவதாக (முழு இலக்குகளின் 27%) இனங்காணப்பட்டுள்ளன

**உரு 3.2: வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடன் பூரணமான வரிசையாக்கம் PIP 2017-2020**




மூலம்: இலங்கையில் SDG அமுல்படுத்துவதற்கு ஒத்துழைப்பு நல்குகின்ற MAPS, இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கையின் ஐக்கிய நாடுகளின் குழு, சனவரி 2018

உரு 3.2 மற்றும் 3.3 மூலம் அரச முதலீட்டு செயற்திட்டங்களில் உள்ள அரச நிதிச் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடன் வரிசையாக்கம் செய்யப்படும் விதம் பற்றி மேலும் விபரிக்கின்றது. உரு. 3.2 இல் காட்டப்பட்டுள்ளவாறு பூரணமாக வரிசையாக்கத்திற்கு உட்படும் நீர் மற்றும் துப்பரவேற்பாடு வலுவாதார அபிவிருத்தி இலக்கு 6 தவிர ஏனைய அனைத்து வலுவாதார இலக்குகளில் 80% இனை விட குறைவாக வரிசையாக்கம் செய்யப்பட்டுள்ளது. வலுவாதார அபிவிருத்தி இலக்கு (1) (வறுமை), வலுவாதார அபிவிருத்தி இலக்கு (4) (வலுசக்தி) மற்றும் வலுவாதார அபிவிருத்தி இலக்கு 7 (வலுசக்தி), மற்றும் வலுவாதார அபிவிருத்தி இலக்கு 11 (வலுவாதார நகரங்கள்) ஆகியவற்றில் 60% - 80% வரையான வரிசையாக்கத்தினைக் காணக்கூடியதாக உள்ளது. 40% - 60% வரை பூரண வரிசையாக்கத்துடனான இலக்குகள் (வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் 3,8,9,10 மற்றும் 12) தொடர்பாக வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடன் மிக அதிகமான வரிசையாக்கம் தேவைப்படுகின்றது. பூரணமாக ஒழுங்கமைவு 40% ஐ விடக் குறைந்த ஏனைய இலக்குகள் சம்பந்தமாக அடுத்து வரும் அரச முதலீட்டுத் திட்டத்தில் அதிக அவதானம் செலுத்தப்படுவது முக்கியமாகும். உரு 3.2 ஐ நோக்கும் போது இலங்கையில் 2030 நிகழ்ச்சி நிரலை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கு அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கொள்கை முன்னெடுப்புக்கள் மற்றும் அரசநிதி திட்டமிடலில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடனான வரிசையாக்கத்தினை தொடர்ந்தும் மேம்படுத்த வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் உரு 3.3 இல் உள்ளவாறு பூரணமான மற்றும் அரைவாசி அளவினைக் கொண்ட வரிசையாக்கங்களில் கல்வியின் மூலம் தெரிய வருவது அதாவது. மொத்தமாக நோக்கும்போது வலுவாதார அபிவிருத்தி 12 இலக்கு 80% இனை விட அதிகமாக உள்ளதாகவும் எவ்வித வலுவாதார அபிவிருத்தி இலக்கின் வரிசையாக்கம் 40% விட குறைவடைளவில்லை.

---

7 இலங்கையில் SDG நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற MAPS, இலங்கை அரச மற்றும் இலங்கையின் ஐக்கிய நாடுகள் குழு சனவரி 2018

**உரு 3.3: வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடனான பூரண வரிசையாக்கம் PIP 2017-2020**




மூலம் இலங்கையில் SDG நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற MAPS, இலங்கை அரச மற்றும் இலங்கையின் ஐக்கிய நாடுகள் குழு சனவரி 2018

துரித தொகை மதிப்பீட்டின் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொனிப்பொருட்களுடன் தொடர்புடைய அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் 2017-2020 களில் கொள்கை ரீதியான முன்னெடுப்புக்கள் மற்றும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளிடையே உள்ள அசாதாரண வரிசையாக்கம் புலனாகின்றது: சுபீட்சம், மக்கள், உலகம், சமாதானம் மற்றும் பங்குடைமை ஆகியனவாகும். மேற்படி பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு, அதிகமாக வரிசையாக்கம் செய்யப்பட்டுள்ள தொனிப்பொருளாக சுபீட்சம் (95%) ஆவதுடன், அதற்குப் பின்னர் மக்கள் (80%) ஆவர். உலகம் தொனிப்பொருள் நடுத்தர மட்டத்திலும் (58%), பங்குடமை மற்றும் சமாதானம் (50%) ஐ விட குறைந்த வரிசையாக்கத்தினையும் கொண்டுள்ளது. (அட்டவணை 3.3 மற்றும் 3.4)

**அட்டவணை 3.3 : வலுவாதார அபிவிருத்தி காரணிகளுடன் 2017-2020 PIP அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்ட வரிசையாக்கற் சதவீதம்**

| | இலக்குகளின் எண்ணிக்கை | | % வரிசையாக்கப்பட்ட வீதம் |
|---|---|---|---|
| | ஏற்புடையன | வரிசையாக்கப்பட்ட | |
| மக்கள் | 45 | 36 | 80 |
| உலகம் | 43 | 25 | 58 |
| சுபீட்சம் | 40 | 38 | 95 |
| சமாதானம் | 12 | 5 | 42 |
| பங்குடைமை | 13 | 5 | 38 |
| | 153 | 109 | 71 |

மூலம் இலங்கையில் SDG நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற MAPS, இலங்கை அரச மற்றும் இலங்கையின் ஐக்கிய நாடுகள் குழு சனவரி 2018

அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017 - 2020 இற்கான வழிகாட்டலில், பொருளாதாரத்திற்கு அதிக முன்னுரிமையளிக்கும் தற்போதைய அரசின் கொள்கைகளை இது ஒரு குறிப்பிட்டளவுக்கு விளக்குகிறது. பொருளாதாரம் (சுபீட்சம்) மற்றும் கிராமிய அபிவிருத்திக்கு (மக்கள்) முன்னுரிமையளிக்கும் தற்போதைய அரசின் கொள்கைகள் விளக்கப்பட்டுள்ளதுடன், அதன் சமுக பொருளாதார தொலைநோக்கு மற்றும் மூலோபாயங்களையும் பிரதிபலிக்கின்றது. தற்போதைய பொதுக் கொள்கையின் நோக்கம், நாடு முழுவதும் போட்டி ரீதியான சந்தை எண்ணக்கருவின் கீழ் நிதி, சுபீட்சம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான வாய்ப்பை அனைவருக்கும் வழங்கும் பொருட்டு, நடுத்தர வருமான நிலையை அதிகரித்து, பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதாகும்.

**உரு 3.4: வலுவாதார அபிவிருத்தி இலக்குத்துறைகள் மற்றும் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017-2020 இடையேயான வரிசையாக்கம்**




மூலம் இலங்கையில் SDG நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற MAPS, இலங்கை அரச மற்றும் இலங்கையின் ஐக்கிய நாடுகள் குழு சனவரி 2018

அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017- 2020 இன் பிரதான துறைகளுள் அதாவது மனிதவள அபிவிருத்தி, விவசாயம் கைத்தொழில், முதலீடு, வியாபாரம் மற்றும் சுற்றுலாத்துறை, உட்கட்டமைப்பு வசதிகள், நல்லாட்சி, சுற்றாடல் முகாமைத்துவம், சமூக பாதுகாப்பு மற்றும் பிராந்திய அபிவிருத்தி மற்றும் மக்களுக்கு மிகவும் ஏற்புடையதான துறைகள் என்பனவும் சுட்டிக்காட்டப்படுகின்றன. எவ்வாறாயினும் 2030 வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் போது தொனிப்பொருட்களை சீர்தூக்கிக் பார்ப்பது மிகவும் முக்கியமானதாகும்.

## ஆ) அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017-2020 வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடன் ஒப்பிடல்

தேசிய திட்டமிடல் திணைக்களமும் இதற்கு சமமான பகுப்பாய்வொன்றினை மேற்கொண்ட போதிலும் தேசிய கொள்கைகள் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடன் வரிசையாக்கம் செய்யப்படுவதை புரிந்து கொள்ளுமுகமாக அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017 – 2020 இனை அடிப்படை ஆவணமாக கொண்டு வேறுபட்ட செயன்முறை ஒன்று பயன்படுத்தப்படுகின்றது. அட்டவணை 3.4 இன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, நாட்டின் வலுவாதார அபிவிருத்தி விவரக் குறிப்புக்கள் தொடர்பாக பரந்துபட்ட மீளாய்வினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு, அரச முதலீடுகளின் பிரதான துறைகள் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட கண்ணோட்டத்தை வழங்குகின்றன. அட்டவணை 3.4 இன் மூலம் குறிப்பிடப்பட்டவாறு 17 வலுவாதார இலக்குகளும் ஆகக் குறைந்தது அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் ஏதேனும் ஒரு துறையையேனும் உள்ளடக்கியுள்ளதுடன் அதனூடாக அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017-2020 வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை சிறந்த முறையில் உள்ளடக்கியுள்ளமையும் தெளிவாகின்றது.

இரண்டாவது, அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினால் பல்வேறு வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை உள்ளடக்கியுள்ளதை இனங்காண்பதற்கும், அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னுரிமைகளை வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடன் வரிசையாக்கம் செய்யும் மட்டத்தினை இனங்காண்பதற்கும் மேற்படி வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை ஒப்பிடுதல் தொடர்ந்தும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இப் பகுப்பாய்வினை அடிப்படையாகக் கொண்டு வலுவாதார அபிவிருத்தி இலக்குகளில் 35% பூரணமாக வரிசையாக்கம் செய்யப் பட்டுள்ளதுடன் 53% இலக்குகளில் சராசரியாக (38%) அல்லது ஓரளவில் வரிசையாக்கம் செய்யப்பட்டுள்ளமையும் இனங்காணப்பட்டுள்ளது. (அட்டவணை 3.5) வலுவாதார அபிவிருத்தி இலக்குகளில் 11% வீதமானவை நாட்டின் நிலைமைகளுக்கேற்ப வரிசையாக்கம் செய்யப்படாமல் இருந்தமையும் இனங்காணப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.4 வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் அரச முதலீட்டின் பிரதான துறைகளை ஒத்திருத்தல்**

| இலக்கு | வலுவாதார அபிவிருத்தி இலக்கு | அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள பிரிவு / தொனிப்பொருள் |
|---|---|---|
| 1 | வறுமை ஒழிப்பு | அனைத்து பொருளாதார மற்றும் சமூக பிரிவுகள் |
| 2 | பட்டினி ஒழிப்பு | விவசாயம் மற்றும் சுகாதாரம் |
| 3 | சிறந்த சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு | சுகாதாரம் |
| 4 | தரமிக்க கல்வி | கல்வி |
| 5 | பால்நிலை சமத்துவம் | சமூக பாதுகாப்பு |
| 6 | குடிநீர் மற்றும் துப்புரவேற்பாடு | துப்புரவேற்பாடு, நீர்ப்பாசனம் |
| 7 | தாங்கக்கூடிய வலு சக்தி | வலு சக்தி |
| 8 | முக்கியமான தொழில்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி | அனைத்து பொருளாதார சமூக பிரிவுகளும் |
| 9 | கைத்தொழில், நவீனமயப்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் | கைத்தொழில் தொழிலாளர் தொழில்நுட்பம் மற்றும் ஆய்வு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் |
| 10 | குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள | தொழிலாளர் மற்றும் சமூக பாதுகாப்பு |
| 11 | வலுவாதார நகரங்கள் மற்றும் சமூகங்கள் | நகர அபிவிருத்தி, வீடமைப்பு,கலாசாரம், சமயம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு போக்குவரத்து வீதி |
| 12 | பொறுப்புக்கூற வேண்டிய பயன்பாடுகள் மற்றும் தயாரிப்பு | விவசாயம், சுற்றாடல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் சுற்றுலா |
| 13 | காலநிலை நடவடிக்கைகள் | சுற்றாடல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் |
| 14 | நீரின் கீழ் வாழ்வு | சுற்றாடல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் கடற்றொழில் |
| 15 | நிலம் மீதான வாழ்வு | சுற்றாடல் அனர்த்த முகாமைத்துவம் நீப்பாசனம் |
| 16 | சமாதானம், நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள் | அரச முகாமைத்துவம் / ஆளுகை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| 17 | இலக்குகள் தொடர்பான பங்குடைமை | அனைத்து பொருளாதார மற்றும் சமூக தொடர்புகள் |

Source: Department of National Planning (NPD)

**அட்டவணை 3.5: வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலுடன் ஒருங்கிணைக்கப்படும் மட்டம்**




மூலம்: தேசிய திட்டமிடல் திணைக்களம் (NPD)

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சிதித்திட்டம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட இவ்விரு பகுப்பாய்வுகளும், வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தும் திட்டங்களை மூலோபாயங்களினூடாக முன்கொண்டு செல்லக்கூடிய அளவீட்டினை பரிசோதிப்பது தொடர்பாக பயன்படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும் இவ்விரு பகுப்பாய்வுகளையும் கவனத்திற் கொண்டு அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017-2020 ஆவணப்படுத்தப்படுவதன் காரணமாக வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இவ் விடயப்பரப்பில் காணப்படுகின்ற விஸ்தீரணம் போன்றே அதனூடாக எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கு மூலதன வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் வழங்கப்படுதல் எனும் விடயம் காரணமாக அரச முதலீட்டு நடைமுறைத்திட்டம் 2017-2020 ஒரு சிறந்த ஆரம்பமொன்றை வழங்குகின்றது. அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் தயாரிப்பது பொதுவாக ஒவ்வொரு ஆண்டினதும் இறுதியில் செயலாற்றுகை மீளாய்வு செய்யப்படும் புறள்வுத்திட்ட அணுகுமுறை கையாளப்பட்டு, வருடாந்தம் முன்னெடுக்கப்படுகின்ற மத்தியகால கண்ணோட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடல் காலப்பகுதி ஓராண்டினால் நீடிக்கப்படும். இதனூடாக ஆரம்ப இலக்குகளைவிட்டு நீங்காது திட்டத்திற்கு அவசியமான சீராக்கங்கள் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் அரசின் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் ஒரு ஆவணமாக அன்றி பல்திறன் வாய்ந்த கருவியாக பயன்படுத்தப்படுகின்றது.

வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின் வரிசையாக்கம் சம்பந்தமாக ஒரு சிறந்த தொலைநோக்கினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு ஏனைய அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் கொள்கை சட்டகங்கள் உள்வாங்கப்படுவது அவசியமாகும். அவை தவிர்க்கப்பட்டு மேற்கொள்ளப் படுகின்ற பகுப்பாய்வுகளின் ஊடாக வரிசையாக்கம் பற்றிய குறை மதிப்பீடுகள் ஏற்பட வாய்ப்புள்ளதுடன், தேசிய கொள்கை சட்டகத்தினுள் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை ஒருங்கிணைப்பது தொடர்பாக பிழையான கருதுகோள்கள் முன்வைக்கப்படலாம். உதாரணமாக உலகம் மற்றும் சமாதானம் போன்ற தொனிப்பொருள்களுடன் தொடர்புடைய தேசியக் கொள்கைகள் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளில் குறைவான வரிசையாக்கத்தினை சுட்டிக்காட்டிய போதிலும், அரசின் நீண்டகால கொள்கைகளுடன் 2025 தொலைநோக்கினுள் “விவசாயம் மற்றும் வலுவாதார அபிவிருத்தி” மற்றும் “ஆளுகையும் பொறுப்புக்கூறலும்” ஆகியன உயர் முன்னுரிமையுடன் கூடிய துறைகளாக இனங்காணப்பட்டுள்ளன. அவ்வாறே அரசின் குறுகிய கால அபிவிருத்தி திட்டமான 2018 வரவு செலவுத்திட்டம், நீலப்பசுமை வரவுசெலவு திட்டமாக அழைக்கப்படுவதுடன், உலகம் எனும் தொனிப்பொருள் குறித்தும் குறிப்பிடத்தக்களவு தொடர்பினை வலியுறுத்துகின்றது.

இதற்கு மேலதிகமாக விவசாய அமைச்சினூடாக மேற்கொள்ளப்படுகின்ற விவசாய துறைசார் நவீனமய செயற்திட்டம்; போசாக்கு தொடர்பான பல்துறை செயற்பாட்டுத்திட்டம் (MSAPN) மற்றும் சமாதானம், நல்லிணக்கம் என்பவற்றை நீண்டகாலத்திற்கு பேணிச் செல்வதை உறுதிப்படுத்துவதற்கு அரசினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் மூலோபாயங்கள் உட்பட குறித்த வலுவாதார இலக்குகளுடன் வரிசையாக்கப்படும் பல துறைசார் திட்டங்கள் காணப்படுகின்றன.

## பொருளாதார சமூக மற்றும் சுற்றாடல் அளவீடுகளை ஒருங்கிணைத்தல்

பொருளாதார அபிவிருத்தி, சமூக ஒன்றிணைப்பு, சுற்றாடல் உறுதிப்பாடு ஆகிய பிரதான அளவீடுகள் ஊடாக இலக்குகளை நோக்கிக் செல்லும் அர்ப்பணிப்புக்கள் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவதற்கு அடிப்படையாக அமைகின்றன. ஆதலால் நாட்டின் கொள்கை சட்டகத்தினுள் இப்பிரதான வலுவாதார அளவீடுகளை ஒன்றிணைக்குமுகமாக அவற்றைப் பரிசோதிப்பது மிகவும் முக்கியமானதாகும். இச் சந்தர்ப்பத்தில் பொருளாதார அபிவிருத்தி, சமூக ஒன்றிணைப்பு மற்றும் சுற்றாடல் உறுதிப்பாடும் நல்லாட்சியும் ஆகிய மூன்று விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தி அபிவிருத்தியை ஊக்குவிக்கின்ற கொள்கை ரீதியான அணுகுமுறைகள் சமர்ப்பிக்கப்படும்.

2017[8] காலப்பகுதியில் மொத்த தேசிய உற்பத்தி 4,066 அமெரிக்க டொலருடன் இலங்கை உயர் மத்திய வருமான நிலையை அடைந்துள்ளது. எவ்வாறாயினும் உயர் வருமானம் பெறும் நாடொன்றில் தனிநபர் மொத்த தேசிய உற்பத்தி 12,235 அமெரிக்க டொலர் உயர் வருமானத்தைப் பெறுவதுடன், அது இலங்கையில் தனிநபர் மொத்த தேசிய வருமானத்தை (அமெரிக்க டொலர் 3,956) விட வருமானத்தை விட மும்மடங்கு அதிகமாகும்.[9] துரித பொருளாதார அபிவிருத்திக்கான இடைவெளி நிரப்பப்பட வேண்டிய தேவையை இது பிரதிபலிக்கின்றது. உயர் வருமானம் பெறும் நாடுகளின் வேகத்திற்கு நிகராக செயற்படுவதற்கு, இலங்கை உயர் தொழில்நுட்ப தீர்வுகளை மேம்படுத்தி உற்பத்தித்திறனை அதிகரித்தல், பெறுமதிசேர் பொருளாதார நடவடிக்கை தொடர்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட வளங்களை ஈடுபடுத்தல், பெறுமானச் சங்கிலி ஊக்குவிப்பு ஆகிய கொள்கைகளின் துணையுடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் பொருளாதார அபிவிருத்தியை பேணிச் செல்வது தொடர்பாக அதன் வளங்களை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்தேர்ச்சியான விஸ்தரிப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

2025 தொலைநோக்கு – வளமான நாடு, அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017-2020 மற்றும் 2018 வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கையின் தற்போதைய மூலோபாய அபிவிருத்தி சட்டகம் வலுவாதார அபிவிருத்தியின் பிரதான அளவீடுகளான சமூக சுற்றாடல் அளவீடுகளுடன் போதியளவில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017-2020 தயாரிக்கப் பட்டுள்ளது எவ்வாறெனில், “ஐவகைத் திட்டங்கள்: 60 மாதங்களில் புதிய நாடொன்று”, எனும் முழுமொத்த அபிவிருத்தி தொலைநோக்கினை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன், அதன் பொருளாதாரத்தை வலுவூட்டல் முதலீடினை ஊக்குவித்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்து இந்நாட்டினை துரித கதியில் நடுத்தர பொருளாதார நிலைமைக்கு கொண்டு வருவது தொடர்பான பிரதான வழிவகைகளாக இவை குறிப்பிடப்படுகின்றன. இவ் அபிவிருத்தி சட்டகத்தினுள் பொருளாதார அளவீடுகளை ஒருங்கிணைப்பதற்கு அவதானம் செலுத்தப்படுகின்றது. அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசின் முழுமொத்த கொள்கைகளிலும் மக்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு நல்கும் வகையில் அவர்களை வலுவூட்டுவதற்கும், சமூகத்தின் அனைத்து அத்தியாவசியமான துறைகள் தொடர்பாகவும் குறித்தொதுக்கப்பட்ட சமூக பாதுகாப்பு முறைமைகளை நடைமுறைப்படுத்துவது அரசின் முழுமொத்த கொள்கையிலும் உள்ளடங்கப்படல் வேண்டும்; இது சமூக அளவீடுகளை ஒருங்கிணைப்பதைப் பிரதிபலிக்கின்றது. சுற்றாடல் அளவீடுகளை ஒருங்கிணைப்பது சம்பந்தமாக நோக்கும் போது, வலுவாதார அபிவிருத்தியை நோக்கி செல்லும் போது சுற்றாடலின் தரம் உறுதிப்படுத்தப்படுவதுடன், உரிய முதலீடுகளினூடாக பொருளாதார விருத்தி தொடர்பான வசதிகளை வழங்கும் பொருட்டு அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் பிரதான முன்னுரிமையுடன் துறைசார் சுற்றாடல் முகாமைத்துவத்தினை இனங்கண்டுள்ளது.

8 CBSL (2018). ஆண்டறிக்கை 2017 இலங்கை மத்திய வங்கி
9 உலக வங்கியின் நாடுகள் மற்றும் கடன்வழங்கும் குழுக்களின் வகைப்படுத்தல் https://datahelpdesk.worldbank.org/knowledgebase/articles/906519-world-bank-country-and-lending-groups

2025 தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ள அரசின் தொலைநோக்குக்கு அமைய 2025 ஆம் ஆண்டளவில் நாடு இந்து சமுத்திரத்தின் அறிவார்ந்த உயர் போட்டித்தன்மையுடன் கூடிய சமூக சந்தை பொருளாதாரத்திற்கு உரித்துக்கூறும் மத்திய நிலைமையாக திகழச் செய்வதற்காக நாட்டை வளமிக்கதாக மாற்றியமைத்தல் வேண்டும். இதற்கமைய 2025 தொலைநோக்கு பொருளாதார அளவீடுகள் மற்றும் சமூக அளவீடுகள் தொடர்பாக உயர் முன்னுரிமையை வழங்கிய போதிலும் அது சுற்றாடல் அளவீடுகளை, விவசாய மற்றும் வலுவாதார அபிவிருத்தி ஆகிய இது பிரதான துறைகளுடனேயே ஒருங்கிணைத்துள்ளது. 2018 வரவு செலவுத்திட்டம் இம் மூன்று அளவீடுகளையும் சமமாக ஒருங்கிணைத்துள்ளதுடன் சுற்றாடல் அளவீடு தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் கூறியவாறு 2018 வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது, அதன் "நீல" நிறமானது, ஒட்டுமொத்த அபிவிருத்தி மூலோபாயத்தை வடிவமைப்பதில் கடல் சார்ந்த நடவடிக்கைகள் குறித்த முழுப் பொருளாதார திறனையும் ஒருங்கிணைப்பதைக் குறிக்கின்றது. அத்துடன் அதன் "பசுமை" நிறமானது, அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை, சுற்றாடல் சார்ந்த வலுவாதாரமிக்க அபிவிருத்தி மூலோபாய அடிப்படையில் கட்டியெழுப்ப முனைவதை குறிக்கின்றது.

பசுமை பொருளாதாரத்தின் பிரதான பண்புகளாக வலுவாதார அபிவிருத்தியில் சமூக சுற்றாடல் மற்றும் பொருளாதார அளவீடுகளை சமநிலைப்படுத்தும் குறைந்த காபன், வளங்களின் செயற்திறன் மற்றும் சமூகமயமாக்கல் ஆகியன உள்ளடங்குகின்ற அபிவிருத்தியாகும். பசுமை பொருளாதாரத்தில் வருமானம், தொழில்விருத்தி, வளங்களின் வரையறைகள் மற்றும் காலநிலை மாற்றங்கள் என்பன தொடர்பாக தீர்வுகள் கிட்டும்; அதன் அடிப்படையில் புகை வெளியேற்றம் குறைவடைதல், தூய வலுசக்தி, வளங்களின் செயற்திறன், வலுவாதார மற்றும் அனைத்தும் உள்ளடங்குகின்ற வாழ்வாதார ஒத்துழைப்புகளை வழங்குகின்ற நலன்பயக்கும் சுற்றாடல் முறைமையொன்று தொடர்பாக முதலீடுகளை மேற்கொள்வதாகும். நீலப் பொருளாதார எண்ணக்கருவானது, பரந்துபட்ட பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் ஒருங்கிணைப்பு மதிப்பீடுகளுடன் கடல்சார் மற்றும் கரையோர சுற்றாடல் முறைமைகளின் வலுவாதார அபிவிருத்திக்கு இன்றியமையாத அங்கமாக இனங்காணப்பட்டு, பசுமை பொருளாதார சட்டகத்தினை பூரணப்படுத்தி அதற்கான குறைநிரப்புகின்ற ஒரு நடவடிக்கையாகும்.

**அட்டவணை 3.6: வலுவாதார அபிவிருத்தியின் பிரதான துறைகளுக்கான உத்தேச நடவடிக்கைகள்**

| பொருளாதார வலுவாதார நிலை | சமூக வலுவாதார நிலை | சுற்றாடல் வலுவாதார நிலை |
|---|---|---|
| **விவசாயம்** | • தொழிற்படையணியில் மகளிர் பங்களிப்பு | • கழிவு முகாமைத்துவம் |
| • அறுவடைக்குப் பிந்திய இழப்புக்கள் குறைக்கப்படும் | • அங்கவீனமுற்றோருக்கு தொழில் படையணியில் அதிகளவிலான வாய்ப்புக்கள் | • கார்பன் உழிழ்வினைக் கட்டுப்படுத்தல் |
| • போட்டித்திறனைப் பேணல் | | • நீர் முகாமைத்ததுவ முறைமை |
| • உற்பத்தித்திறன் மேம்பாடு | • உற்பத்தித்திறன்மிக்க நகரமயமாக்கலுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான நிதிமுறைமையை விருத்தி செய்தல் | • அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அதிக பௌதீக மற்றும் நிதி மீளாற்றல் |
| **கைத்தொழில்** | | |
| • கொத்தணி அடிப்படையில் தொழிநுட்ப வலயங்களை நிறுவுதல் | | • சுட்டிகளை அடிப்படையாக கொண்ட காப்புறுதி |
| • சிறிய மற்றும் நடுத்தரளவிலான முயற்சியாண்மைகளை ஊக்குவித்தல் | | • சேதன விவசாய மேம்பாடு |
| • ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | | |
| • அரச தனியார் கூட்டாண்மை | | |
| **சேவைகள்** | | |
| • போக்குவரத்துறைசார் அபிவிருத்தி | | |
| • நிதிச் சேவைகளை மேம்படுத்தல் | | |
| • அபிவிருத்திக்கான வலுவாதார சுற்றுலா தொழில் | | |

மூலம்: தேசிய திட்டமிடல் திணைக்களம் (NPD)

# 3.3

## நிறுவகப் பொறிமுறை

இப்பிரிவினூடாக 2030 நிகழ்ச்சிநிரலினை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக நாட்டின் நிறுவகச் சட்டகமொன்றை தயாரித்துக் கொள்வது தொடர்பாக விவாதிக்கப்படுகின்றது. இதில் தற்போதுள்ள நிறுவகப் பொறிமுறை மற்றும் 2030 நிகழ்ச்சிநிரலினை நடைமுறைப்படுத்துவதற்கான கட்டமைப்புக்களை இணைத்துக் கொள்வது சம்பந்தமாக வசதியளிக்கும் 2017 இலக்கம் 19ஐக் கொண்ட வலுவாதார அபிவிருத்திச் சட்டம் தொடர்பான மீளாய்வும் உள்ளடக்கப் பட்டுள்ளது. இதன் பிற்பாடு இந் நிறுவனப் பொறிமுறைகள் வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக நிதியளிப்பதற்கு மாத்திரமன்றி குறித்த கண்காணிப்புகள் மற்றும் மதிப்பீடுகளை நோக்கமாகக் கொண்டு பயன்படுத்தக் கூடிய விதம் குறித்த மீளாய்வொன்றும் இதில் உள்ளடக்கப் பட்டுள்ளது. தற்போதுள்ள நிறுவகப் பொறிமுறையின் கட்டமைப்பு பின்வருமாறு:

## தற்போதுள்ள நிறுவகப் பொறிமுறையின் கட்டமைப்பு

இலங்கையின் நிறுவகப் பொறிமுறையானது மூன்று நிறுவனங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. அதாவது தேசிய அரச நிறுவனங்கள், மாகாண உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பிராந்திய உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகியனவாகும். தேசிய அரசாங்கத்தின் நிறுவனங்கள் அமைச்சுக்களில் இருந்து கிராம அலுவலகர்கள் வரையிலான ஒழுங்கமைப்பு முறையொன்றைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. நிறுவனப் படிநிலையில் பரந்துபட்ட தேசிய தலைப்புக்களுடன் தொடர்புபட்ட கொள்கைசார் தீர்மானங் களை எடுக்கின்ற நிரல் அமைச்சுக்களே அதில் உயர் பீடங்களில் இருக்கின்றன.. ஒவ்வொரு அமைச்சுக்களின் கீழ் பல நிரல் முகவராண்மை நிலையங்கள் உள்ளதுடன் அவை அமைச்சின் விடயப் பரப்பெல்லைக்குள் அடங்குகின்ற விசேட துறைகள் சம்பந்தமான நடவடிக்கைகளை முன்னெடுக் கின்றது. அமைச்சினுள் உள்ள நிரல் நிறுவனங்கள் அரச திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள், கூட்டுத்தாபனங்கள் போன்ற அரசாங்கத்திற்கு சொந்தமான முயற்சியாண்மைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான கம்பனி களும் உள்ளடங்குகின்றன.

அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றுக்கு ஒதுக்கப்படுகின்ற செலவினங்களை திறைசேரியின் ஊடாக நேரடியாக கட்டுப்படுத்தப்படுவதுடன், அரசாங்கத்திற்குச் சொந்தமான முயற்சியாண்மைகளுக்கு தமது நிதிசார் நடவடிக்கைகளை கையாள்வது தொடர்பாக சுயாதீனமாக செயற்பட முடியும். மத்திய அரசாங்கத்திற்கு பல்வேறு நிரல் நிறுவனங்களின் பிராந்திய / பிராந்திய கிளைகள் ஊடான பிரதேச முகவராண்மைகள் காணப்படுவதுடன், மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளுடன் ஒன்றிணைந்த மாவட்ட நிர்வாக முறைமையொன்று காணப்படுகின்றது. இவற்றின் கீழுள்ள மத்திய அரச அமைச்சுக்கள் மற்றும் நிரல் முகவராண்மைகள் ஒன்றிணைந்து பரந்துபட்ட விடயப் பரப்பினை உள்ளடக்குவதுடன், அவற்றுக்கு கொள்கைகள் சம்பந்தமான தீர்மானங்கள் எடுப்பது தொட்டு கிராம மட்டத்தில் சேவைகளை வழங்குது வரை வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் அனைத்தும் உள்ளடங்குகின்றன. நிறுவனங்களின் விடயப்பரப்புடன் இணைந்த ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக நிரல் அமைச்சுக்களில் அறிக்கையிடப்படாத 22 விடேச செலவு அலகுகள் காணப்படுகின்றன. அவையாவன சனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம், சபை முதல்வர் அலுவலகம், எதிர்கட்சி தலைவர் அலுவலகம், உயர் நீதிமன்றம் மற்றும் பாராளுமன்றத்திற்கு நேரடியாக அறிக்கையிடப்படும் பல்வேறு ஆணைக்குழுக்கள் மற்றும் திணைக்களங்கள். (உ-மாக - கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம், தேர்தல்கள் திணைக்களம்).

மத்திய அரசாங்கத்திற்கு கீழ் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் இயங்குகின்றன. (மாநகர சபை, நகர சபை, மற்றும் பிரதேச சபை) அவை பொது மக்களினால் பிரதேச சபைக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களினால் நிர்வகிக்கப்படுகின்றன. இப் பிரதேச நிறுவனங்கள் 1987 மாகாண சபைகள் சட்டம் மற்றும் உள்ளூராட்சி சபை தொடர்பான மூன்று சட்டங்களின் கீழ் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் குறித்த அலகுகளில் குறித்தொதுக்கப்பட்ட பூகோள வரையறைகளினுள் விடயப்பரப்புக்கள் சம்பந்தமான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன. நிதி ஆணைக்குழு மற்றும் உள்ளூராட்சி பிரதேச நிர்வாக அமைச்சுக்களின் உப தேசிய முகவராண்மைகளுக்கு நிதி ஒதுக்குவதற்கு விசேட ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அட்டவணை 3.7 அரசசார் அமைப்புக்களின் வகைகள் குறித்த சுருக்கமொன்று வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.7 : அரசசார் அமைப்புக்களின் வகைகள்**

| அமைப்புக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை |
|---|---|
| அமைச்சுக்கள் | 43 |
| திணைக்களங்கள் | 121 |
| அரசிற்கு உரித்தான முயற்சியாண்மைகள் | 272 |
| விசேட செலவின அலகுகள் | 22 |
| மாகாண சபைகள் | 9 |
| பிரதேச நிறுவனங்கள் (மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை ) | 335 |

மூலம் : முகாமைத்துவ சேவைத்திணைக்களம்

## வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின் முக்கியத்துவம்

பொதுவாக நோக்கும்போது இலங்கை அரசாங்கத்திற்கு தேசிய மட்டத்திலிருந்து அடிமட்டம் வரையிலான பல்வேறு விடயங்களை உள்ளடக்குகின்ற பாதுகாப்பான அரச நிறுவன முறைமையொன்று காணப்படுகின்றது. தற்போதைய அரச நிறுவன முறைமையின் உள்ளடக்கும் மற்றும் வலுவினை இனங்கண்டு வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அவற்றை நிறுவன திட்டங்களில் முக்கியத்துமிக்கமாக கருதி அந் நிறுவன பொறிமுறையை பயன்படுத்துவதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது. வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அவர்களது நிறுவக மூலோபாய திட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாக திகழச் செய்வதற்கு அரச நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

## வலுவாதார அபிவிருத்தி சட்டம்

2017 ஒக்டோபர் மாதம் அதிகாரபூர்வமாக்கப்பட்ட 2017 இலக்கம் 19 ஐக் கொண்ட வலுவாதார அபிவிருத்தி சட்டம் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக வலுவாதார அபிவிருத்தி சபை நடுநிலைமையான தொடர்பாடல் வகிபாகத்தினை வகிக்கின்ற மையமாகக் கருதும் கொள்கைகளை ஏற்புடையதாகக் கொண்டு தற்போதுள்ள அரச நிறுவனங்களை பயன்படுத்தி சட்டரீதியான சட்டகமொன்றை வழங்குகின்றது. வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக தேசிய ஒருங்கிணைப்பு நிறுவனமாக வலுவாதார அபிவிருத்திச் சபையொன்றை தாபிப்பதற்கு அது முன்மொழிவினை முன்வைத்துள்ளது. வலுவாதார அபிவிருத்தி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு அறிக்கையிடப்படும் வலுவாதார அபிவிருத்திச்சபை சனாதிபதியினால் நியமிக்கப்படும் 12 உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன், அதில் நான்கு பேர் பதவியினாலேயே நியமிக்கப்படுவதுடன் மாகாண சபைகளை பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு மூன்று பேர் உள்ளடங்கலாக 8 பேர் நியமிக்கப்படுகின்றனர். வலுவாதார அபிவிருத்திச் சபைக்கு சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு பணிப்பாளர் நாயகம் (அமைப்பின் பிரதான நிறைவேற்று அலுவலர்) ஒருவரின் தலைமையில் நிலையான பணியாட்டொகுதி ஒன்றுள்ளது. இலங்கை இச்சந்தர்ப்பத்தில் வலுவாதார அபிவிருத்தி சபையினை தாபிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன், 2018 ஏப்ரல் மாதத்தில் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

.

## நிறுவகப் பொறிமுறை

வலுவாதார அபிவிருத்தி சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிறுவனப் பொறிமுறை பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

- வலுவாதார அபிவிருத்தி சபையினால் வலுதாவார அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயங்கள் வழங்கப்படுவதுடன் அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்படும்.

- பாராளுமன்றத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் வலுவாதார அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயங்கள் நடைமுறைப்படுத்தப்படும். அதன் பின்னர் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து வலுவாதார அபிவிருத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகள் தொடர்பாக சட்டரீதியாக அதிகாரமளிக்கப்பட்ட சட்டகமொன்றை வழங்கி வழிகாட்டுதல்களும் வழங்கப்படும்.

- புதிய அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பாக வலுவாதார அபிவிருத்தி வழிகாட்டிக் கோவைகள் வழங்கப்படுவதுடன் சபையினால் வலுவாதார அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டிற்கான வசதியை வழங்குதல், பொறிமுறையை கண்காணித்தல் மற்றும் மேம்பாட்டு மீளாய்வு செயற்பாடுகள் தொடர்பான ஒருங்கிணைப்புக்கள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

- பாராளுமன்றத்தினால் வலுவாதார அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அனைத்து விடயப் பொறுப்பு அமைச்சுக்கள், நிரல் முயற்சியாண்மைகள் மற்றும் உப தேசிய நிறுவனங்களினால் தமது விடயப்பரப்பிற்கும் வலுவாதார அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயத்திற்குமுரியதான வலுவாதார அபிவிருத்தி மூலோபாயங்கள் வடிவமைக்கப்படல் வேண்டும். இது வலுவாதார அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு ஓராண்டிற்கு இடைப்பட்ட காலத்திலேயே மேற்கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

- வலுவாதார அபிவிருத்தி மூலோபாயங்கள் வடிவமைக்கப்பட்டு அனைத்து அரசு நிறுவனங்களும் தமது விடயப் பரப்பினில் வலுவாதார அபிவிருத்தி மூலோபாய நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டும். அவர்கள் பின்வரும் பொறுப்புக்களை பூரணப்படுத்துதல் வேண்டும்.

  - வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் குறித்தொதுக்கப்பட்ட காலப்பகுதியினுள் வலுவாதார அபிவிருத்தி மூலோபாயம் தொடர்பான மேம்பாட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

  - சுற்றாடல் மற்றும் சமூக பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு புதிய அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பான சுற்றாடல் மற்றும் சமூக கணக்காய்வுகளை மேற்கொள்ளல்.

  - வருடாந்த அறிக்கைகளில் தமது அனைத்து பணிகளும் வலுவாதார அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கையை ஒத்திருக்கின்றது என்பது பற்றிய கூற்றொன்றினை உள்ளடக்குதல்.

மேலே குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுடன் தேசிய மற்றும் உப தேசிய மட்டங்களிலுள்ள அரச நிறுவனங்களில் இலங்கையின் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக நன்கு திட்டமிடப்பட்ட நிறுவக பொறிமுறையொன்று வடிவமைக்கப்படும்.

## வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக நிதியளித்தல்

முக்கியத்துவ அணுகுமுறையாக விளங்குகின்ற அரச நிதியானது, (வரவு செலவு திட்ட) பயன்பாடு மற்றும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு நடைமுறைகளை பயன்படுத்துவதற்கான வசதிகளை வழங்குகின்றது. இலங்கையில் வரவு செலவு திட்டமிடல், பாராளுமன்ற அங்கீகாரம், நடைமுறைப்படுத்தல் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய நான்கு நடவடிக்கைகளை உள்ளடக்கிய நன்கு தயாரிக்கப்பட்ட வரவு செலவு திட்ட செயன்முறையொன்று காணப்படுகின்றது. வரவு செலவு திட்டமிடல் நடவடிக்கையிலிருந்து கணக்காய்வாளர் திணைக்களத்தினால் கணக்குகளை கணக்காய்வு செய்வது வரையான அனைத்து நடவடிக்கைகளும் நிதியமைச்சு

மற்றும் முகவராண்மைகளுக்கிடையான நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்துகின்றன. தேசிய திட்டமிடல் திணைக்களம், வெளிநாட்டு வளங்கல் திணைக்களம், தேசிய வரவு செலவுதிட்டத் திணைக்களம், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம் மற்றும் அரச கணக்குகள் திணைக்களம் போன்ற திறைசேரியின் பல திணைக்களங்கள் திறைசேரி வட்டத்திற்குள் தொடர்புபடுகின்றன.

அனைத்து திறைசேரி செயற்பாடுகளும் ஓராண்டு கால சட்டகத்தினுள் மேற்கொள்ளப்படுகின்றன. வரவு செலவு திட்ட நிதியிடல் மூலங்களாக, அரச வரி மற்றும் வரி அல்லாத வருமானம் மாத்திரமன்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களும் காணப்படுகின்றன. இச் செயற்பாட்டிற்கு அரச முகவராண்மைகள் (நிரல் அமைச்சுகள் மற்றும் நிரல் முகவராண்மைகள்) மாவட்ட நிர்வாக அலகுகள் (மாவட்ட நிர்வாக பிரிவு) தொடர்பான மீண்டுவரும் மற்றும் மூலதன நிதி ஒதுக்கீடு போன்றே குறித்தொதுக்கப்பட்ட நிரல் அமைச்சுக்கள் மற்றும் நிதி ஆணைக்குழுவின் தலையீட்டுடன் உப தேசிய அரச அலகுகள் (மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள்) ஆகியனவற்றுக்கு மேலதிக நிதி வழங்கும் நடைமுறைகள் என்பன உள்ளடங்குகின்றன. வலுவாதார அபிவிருத்தி சபையின் தொடர்பாடலுடன் மேற்கொள்ளப்படும் முக்கியத்துவமிக்க அணுகுமுறை மூலம் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை இலங்கையில் அமுல்படுத்தப்படும் போது இந்த நிலையான மற்றும் தற்போதுள்ள நிதியிடல் செயன்முறையை பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. நிதி அமைச்சினால் மத்திய கால வரவு செலவு திட்ட சட்டகத்தினுள் அமைச்சுகளின் வருடாந்த வரவு செலவு திட்ட நிதியிடலிற்கு தயாராகும் படி நிரல் அமைச்சுகளுக்கு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. தத்தமது அமைச்சுக்களுக்குரியதான வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான செயற்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் படி நிரல் அமைச்சுக்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. “நீலப் பசுமை” எனும் தொனிப்பொருளின் கீழ் 2018 தேசிய வரவு செலவு திட்டத்தை சமரப்பிப்பதன் ஊடாக வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய அரசின் அர்ப்பணிப்பு புலனாகின்றது.

## கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு

செயற்றிட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களம், குறித்த செயற்திட்ட பணிப்பாளர்கள் மற்றும் நிரல் அமைச்சுக்களினூடாக அனைத்து அபிவிருத்தி செயற்திட்டங்களினாலும் இற்றைவரைப்படுத்தல்களை பெற்றுக் கொள்வதற்கு உரிய கண்காணிப்பு பொறிமுறையொன்று நிறுவப்பட்டுள்ளது. நிகழ்நிலை அறிக்கையிடல் மற்றும் மீளாய்வு தொடர்பான வசதிகளை வழங்கும் போது இணையத் தளங்களை அடிப்படையாக கொண்ட கண்காணிப்பு தகவல் முறைமையொன்றை தாபித்து செயற்திட்ட முகாமைத்துவம் கண்காணிப்பு திணைக்களத்தின் கீழ் இச் செயற்றிட்டத்தை வலுவூட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம் இலங்கைக்கான தேசிய மதிப்பாய்வு கொள்கைகளை வடிவமைத்து மதிப்பீட்டினை பிரதானமாக கொண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், அது அதிக காலமாக தேவையாகவிருந்த ஒரு கொள்கை சார் அணுகுமுறையாகும். தற்போது தேசிய மதிப்பாய்வு கொள்கையின் இறுதி வரைபு பங்குதாரர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, பரந்துபட்ட செயற்பாடொன்றின் மூலம் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன், அது சம்பந்தமாக பொது மக்களின் கருத்துகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (http//www.pmm.gov.lk) மற்றும் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. தேசிய மதிப்பீட்டு கொள்கை 2019 இலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். தேசிய மதிப்பீட்டு கொள்கை அபிவிருத்தி செயற்திட்டங்களினதும், நிகழ்ச்சித்திட்டங்களினதும் பெறுகளைக் கொண்டு, வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கு இணங்க எதிர்கால திட்டமிடப்பட்ட அபிவிருத்தி தொடர்பான படிப்பினைகளை வழங்கும் மூன்றாண்டு கால திட்டமொன்றாக அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

செயற்றிட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தினால் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கையாளக்கூடிய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நடைமுறைகளை வலுவூட்டுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் திணைக்களத்தினால் பின்வரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தேசிய திட்டமிடல் திணைக்களம் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் தத்தமக்குரிய விடயப்பரப்பினுள் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை இணங்காணும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

- இலங்கை கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம், அனைத்து அரச நிறுவனங்களும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடன் தொடர்புடைய விதம் தொடர்புபடும் விதத்தை ஆராயும் வினாக்கொத்தொன்றை அனுப்பி வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் அரச கணக்காய்வாளர் கணக்காய்வு செயற்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

- குறித்த வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின் கீழ் நிதி ஆணைக்குழுவினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட மத்திய அரசாங்க நிதியை பயன்படுத்தி மாகாண சபைகளினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளை அறிக்கையிடுவது தொடர்பாக நிதி ஆணைக்குழுவினால் கட்டமைக்கப்பட்ட சட்டகமொன்றினுள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

# 3.4

## எந்த ஒரு நபரையும் கைவிடலாகாது

வலுவாதார அபிவிருத்தி தொடர்பான 2030 நிகழ்ச்சிநிரலின் பிரதான விடயம் யாதெனில் அனைவரையும் வலுவூட்டுகின்றதும் எந்தவொரு நபரையும் தவிர்க்க முடியாதவாறு அனைவரையும் உள்ளடக்குவதையும் குறிக்கின்றது. எந்தவொரு நபரையும் தவிர்க்காது இருத்தல் எனும் கோட்பாடு வலுவாதார அபிவிருத்தி இலக்குகளில் முக்கியமாக அமைவதுடன், அதன் காரணமாக வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பாக அனைவரும் உள்ளடங்குகின்ற நியமங்கள் வடிவமைக்கப்படல் வேண்டும். இது தொடர்பாக இலங்கை அரசினால் கவனம் செலுத்தப்பட்ட, பல நடவடிக்கைகள், கட்டளைச் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் காணப்படுகின்றன.

அனைவரையும் உள்ளடக்குவது தொடர்பாக இந்நாட்டில் அடிப்படையாக அமைவது, அனைத்து பிரஜைகளினதும் அடிப்படை உரிமைகள் அதாவது; சிந்தனையாற்றல், தர்க்கம் மற்றும் மதத்தினைக் கடைப்பிடிப்பதற்கான சுதந்திரம், தடுத்து வைத்தல், தண்டனைகளுக்கு உட்படாதிருப்பதற்கான உரிமை, சமநிலை தொடர்பான உரிமை, தற்றுணிபின் பேரில் கைது செய்யப்படாமலும், தடுத்து வைக்காமலும், தண்டனைக்கு உட்படாமலும் இருப்பதற்கான சுதந்திரம், கடந்த காலத்தில் தாக்கம் செலுத்திய குற்றவியல் சட்டங்களை இரத்துச் செய்தல், உரையாடலின் கூட்டத்தில் கம்பனியின் உள்ளீடுகள்; உரையாடல், கூட்டம், சங்கம் ஆகியவற்றில் ஈடுபடவதற்கும், தொழில் மற்றும் நடமாடுவதற்கும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளமை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பில் காணப்படுகின்றது.

நாட்டில் நீண்டகாலமாக நிலவி வந்த நலன்புரி கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் எந்தவொரு நபரையும் தவிர்க்காதிருப்பதனை உறுதி செய்தல். இதனுள் நாட்டின் சுகாதாரத்திட்டம், கல்வித்திட்டம் மற்றும் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

## கல்வி:

சுதந்திர கல்விக்கொள்கை நடைமுறைப்படுத்தப் பட்ட (1945 இலிருந்து) ஆரம்ப மட்டத்தில் இருந்து மூன்றாம் நிலைக்கல்வி வரை பணம் செலுத்தாது பெறப்படும் கல்விக்கான அணுகு முறைகள் எந்தவொரு பிள்ளையையும் விட்டு வைப்பதில்லை. அவ்வாறே குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வாய்ப்புக்களை அதிகரிப்பது தொடர்பாக வேறு பல நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன: அரசாங்கப் பாடசாலைகளில் 1-11 ஆம் தரம் வரை மாணவர்களுக்கு இலவசமாக பாடநூல்களை வழங்குதல், அரசாங்க பாடசாலைகளில் மாணவர்களுக்கு இலவசமாக சீருடைகளை வழங்குதல், உயர் கல்வி பெறும் மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்களுக்கும் சலுகை ரீதியான பொது போக்குவரத்து சேவைகளை வழங்குதல்; குறைந்த வருமானம் பெறும் பின்புலத்தில் இருந்து வருகின்ற மாணவர்களுக்கு புலமை பரிசில் வழங்கும் பரீட்சையொன்றை அறிமுகப்படுத்தல்; மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் 1-5 ஆம் தரத்தை சேர்ந்த பிள்ளைகளுக்கு மதிய போசனம் வழங்குதல்.

கல்விசார் வெளியீடுகளில் பிரதேச ரீதியான முரண்பாடுகளை தீர்ப்பது தொடர்பாக எடுக்கப் பட்ட முக்கிய நடவடிக்கையாக (குறைந்த அசாதாரண நிலைகள் தொடர்பான வலுவாதார அபிவிருத்தி இலக்கு 10 இன் கீழ் மேலதிக விபரங்கள் குறிக்கப்பட்டுள்ளன) 2016-2020 மத்தியகால மூலோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் ''கிட்டிய பாடசாலை, சிறந்த பாடசாலை'' எனும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் கருதப்படுகின்றது. இவ்வணுகுமுறையின் மூலம் அதன் நோக்கமாக அமைவது ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகள் மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளங்களினூடாக விசேடமான பாடசாலையாக அதனை மாற்றியமைப்பதாகும். அதற்கு மேலதிகமாக உத்தேச 13 வருடங்கள் கட்டாயக் கல்வி அணுகுமுறை மூலம் நாட்டில் எந்தவொரு நபரும் தவிர்க்கமுடியாதவாறு கல்வித்திட்டத்தினை மேம்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. இதன்கீழ் குறைந்த செயலாற்றுகையை சுட்டிக்காட்டுகின்ற மாணவர்களுக்கு தொழிற்கல்வியை பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப் படுவதுடன் அவர் களின் தொழில் செய்யக்கூடிய மற்றும் நிதியீட்டக் கூடிய இயலளவு அதிகரித்துள்ளது.

## சுகாதாரம்:

அனைவருக்கும் இலவசமாக சுகாதார வசதிகளை வழங்கும் கொள்கையின் மூலம் எவ்வித கட்டணங்களும் செலுத்தாது அனைத்து பிரஜைகளுக்கும் சுகாதார சேவைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய இயலுமை வழங்கப்பட்டுள்ளதுடன் சுகாதார அணுகுமுறைகள் அனைவருக்கும் சமமான முறையில் அதன் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுகின்றது. இது அனைத்து நோயாளர்களுக்கும் சமமான சேவைகளை வழங்குவதும் அனைத்து நோயாளர்களுக்குமான அணுகுமுறைகள், தரமான சேவை மற்றும் நிதிப் பாதுகாப்பு என்பனவற்றை வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்குடன் 2016-2025 தேசிய சுகாதார மூலோபாய பிரதான திட்டத்தின் ஊடாக பிரதிபலிக்கின்றது.[10] இந்நாட்டிற்கு உள்வருகின்ற, வெளியேறுகின்ற உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் மற்றும் அவர்களது குடும்பங்களின் சுகாதார பிரச்சினைகளை தீர்க்கும் நோக்குடன் இலங்கை தேசிய இடம்பெயர்ந்தோர் சுகாதார கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக இடம்பெயர்ந்தோருக்கான நலன்புரி வசதிகளை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.[11] இதற்கு மேலதிகமாக கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கும் பல்வேறு அமைச்சுக்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற போசாக்கு நிகழ்ச்சித் திட்டங்களும் உள்ளடங்குகின்றன.

## சமூகப் பாதுகாப்பு:

வறியமக்கள், வயது முதிர்ந்தோர், அங்கவீனர்கள் உள்நாட்டில் அகதிகளாக ஆக்கப்பட்டோர் ஆகிய அவதானம் செலுத்த வேண்டிய குழுக்களை இலக்காகக் கொண்டு அரச நிறுவனங்களினால் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன. இதில் வறுமை ஒழிப்பு குறித்த பிரதான நிகழ்ச்சித்திட்டமான சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம், முதியோருக்கு உதவி புரியும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அங்கவீனர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் என்பன உள்ளடங்குகின்றன. இது 2016 ஆம் ஆண்டில் நலன்புரி சபை தாபிக்க வேண்டியதன் தேவைப்பாடுடைய குழுக்களிடையே சமூகப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது தொடர்பாக எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாகும். நலன்புரி சபையிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு, சமூக ஆவணமொன்றுடன் ஒன்றுகலந்த சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்றை தாபித்தல் மற்றும் ஒவ்வொரு சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாகவும் தகுந்த தெரிவு தகுவிதிகளை ஏற்படுத்துவதாகும்; இவ் அணுகுமுறைகளின் மூலம் இலக்காக கருதப்பட்ட குறைபாடுகளை தவிர்ப்பதற்கும் நாட்டின் அதிக அவதானம் செலுத்தப்படவேண்டிய மக்களுக்கு சமூக பாதுகாப்பினை வழங்குவதற்கும் எதிர் பார்க்கப்படுகின்றது.

---

10 MOH (2016), 'சுகாதார சேவை அபிவிருத்திக்கான தேசிய மூலோபாய சட்டகம் 2016 – 2025, சுகாதார அமைச்சு http://www.health.gov.lk/enWeb/HMP2016-2025/National%20%20Strategic%20%20Framework%20%20.pdf இனால் பெற்றுக் கொள்ள முடியும்.

11 MOH (2012), ''சுகாதார சேவை அபிவிருத்திக்கான தேசிய மூலோபாய சட்டகம் 2016 – 2025, சுகாதார அமைச்சு https://www.unescogym.org/wp-content/uploads/2017/05/SRI-LANKA-HEALTH-POLICY-2012.pdf இனால் பெற்றுக் கொள்ள முடியும்.

ஐக்கிய நாடுகள் சபையினால் உயரிய மனித அபிவிருத்தியுடன் கூடிய நாடுகளின் வகையில் இலங்கையையும் இணைத்துக் கொண்டதன் மூலம் இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அணுகுமுறைகளின் முக்கியத்துவம் தெளிவாகின்றது. எனினும் வறுமை நிலவுகின்ற பிரதேசங்களில் புலப்படுகின்ற வருமான முரண்பாடுகள், சேவைகள் சந்தர்ப்பங்கள் என்பவற்றினை அணுகுவதில் சில முரண்பாடுகள் நிலவுகின்றன. வேறுபட்ட குழுக்கள் மற்றும் பின்னடைந்த பிரதேசங்களின் தேவைகள் தொடர்பாக அவதானம் செலுத்துவதற்கான சிறந்த முன்னாயத்தமாக இலங்கை அரசாங்கம் வறிய மற்றும் அவதானம் செலுத்தப்பட வேண்டியோரின் வாழ்க்கை மட்டத்தினை மேம்படுத்துவதற்கு பல நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்திட்டங்களையும் முன்னெடுத்துள்ளன.

இதற்கு மேலதிகமாக அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017-2020 மூலம் பிரதானமாக அவதானம் செலுத்தப்பட வேண்டிய குழுக்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அக் குழுக்களை கைவிட்டுவிடாதிருப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. அரசியலில் பெண்களின் பங்களிப்பு குறைவாக உள்ளதன் காரணமாக அரசியல் நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான சதவிகிதம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளதனால் பெண்களை வலுவூட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.[12] இதற்கு மேலதிகமாக அவதானம் செலுத்தப்பட வேண்டிய பெண்களை இலக்காகக் கொண்டு வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.[13] பிள்ளைகளுக்கான நலனோம்பல் வசதிகளை மேம்படுத்துவதற்கும், ஊட்டச்சத்தின்மையைக் குறைப்பது தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதுடன் பிள்ளைகளுக்கெதிராக மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைகள் அதிகரித்து காணப்படும் ஒரு நிலைமையில் சிறுவர் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.[14] துரிதமாக அதிகரித்து செல்கின்ற சனத்தொகை தொடர்பான சவால்களும் இலங்கையில் இனங்காணப்பட்டுள்ளதுடன் அவதானம் செலுத்தப்படவேண்டிய வயது முதிர்ந்த மக்களுக்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது தொடர்பாக புதிய முதியோர் காப்புறுதி திட்டங்கள் விருத்தி செய்யப்பட்டுள்ளன.[15] அங்கவீனர்களுக்கான நலன்களை விருத்தி செய்வது தொடர்பாக வறிய மற்றும் அங்கவீனர்கள் தொடர்பான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களும், சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பதனூடாக வாழ்வாதார அபிவிருத்தி தொடர்பான பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எந்தவொரு நபரையும் கைவிடலாகாது எனும் கோட்பாடு நாட்டின் கொள்கை மற்றும் கொள்கை சட்டகங்களில் நன்கு பதியப்பட்டுள்ளது. இது இலங்கையின் அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் பிரதான பண்பாகும். அதன் காரணமாக 2030 நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடத்தக்களவு மேம்பாட்டினை அடைந்து கொள்வதற்கு தேவையான அடிப்படை வடிவமைக்கப்பட்டுள்ளது. அரசாங்க கொள்கை வகுப்பின் போதும், மாகாண மற்றும் தேசிய மட்டத்திலான திட்டமிடலின் போதும், குழுக்களை உள்ளடக்குவது தொடர்பாக அரசு தொடர்தேர்ச்சியாக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. இதற்கு மேலதிகமாக பொதுமக்கள் மற்றும் விசேடமாக அவதானம் செலுத்தப்பட வேண்டிய மற்றும் எல்லைநிலையிலுள்ள சமுதாயம் உட்பட அனைத்து தரப்பினர்களிடையேயும்[17] விழிப்புணர்வினை ஏற்படுத்துவதும் இன்றியமையாததாகும். அவ்வாறே, எந்தவொரு நபரையும் கைவிட்டு விடாதிருப்பதை உறுதிப்படுத்தும் முகமாக சான்றினை அடிப்படையாக கொண்ட கொள்கையை வடிவமைப்பதற்கான தரவுகள் குறித்த தேவைகளும் காணப்படுகின்றன. உதாரணமாக ஆண் பெண் சமத்துவம் அங்கவீன நிலை இடப்பெயர்வுகள் போன்றன.

---

12 UN (2018), '"இலங்கையில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தும் MAPS அணுகுமுறை
13 PIP 2017-2020
14 Ibid
15 Ibid
16 Ibid
17 Ibid

04

# இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள்

இவ் அத்தியாயத்தின் மூலம் இலங்கையில் ஒவ்வொரு வலுவாதார இலக்குகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வளர்ச்சி மற்றும் தற்போதைய நிலை சிறப்புக்கள், இடைவெளிகள் மற்றும் சவால்கள் எதிர்கால முன்னெடுப்புக்கள் தொடர்பாக மதிப்பாய்வு செய்கின்றது. இவ்வத்தியாயத்தின் இரு உப பகுதிகளிலும் உயர் மட்டத்திலான அரசியல் வட்டத்தினால் 2018 ஆம் ஆண்டில் ஆழமான மீளாய்வுக்கு உட்படுத்தப்படுத்துவதற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இரண்டாவது உப பகுதியின் மூலம் எஞ்சிய வலுவாதார இலக்குகள் தொடர்பாக விவாதிக்கப்படுகின்றது

# 4.1

## உயர் மட்டத்திலான அரசியல் வட்டத்தினால் 2018 ஆண்டில் ஆழமான மீளாய்வு தொடர்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட வலுவாதார அபிவிருத்தி இலக்குகள்

இப் பகுதியில் 2018 உயரிய மட்டத்திலான அரசியல் வட்டத்தினால் ஆழமாக மீளாய்வுக்கு உட்படுத்துமுகமாக தேர்ந்தெடுக்கப்பட்ட வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் உள்ளடங்கும் விடயங்க ளாவன :

,

**இலக்கு 6:** நீர் மற்றும் துப்பரவேற்பாட்டினை அனைவருக்கும் வழங்குவதனை உறுதிப் படுத்தல் மற்றும் வலுவாதார முகாமைத்துவம்

**இலக்கு 7:** அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளக் கூடியதும் நம்பகரமானதுமான வலுவாதார மற்றும் நவீன வலுசக்திக்கு அணுகுவதை உறுதிப்படுத்தல்

**இலக்கு 11:** நகர மற்றும் மனித குடியிருப்புகளில் பாதுகாப்பு மற்றும் வலுப்படுத்தல்

**இலக்கு 12:** வலுவாதார பயன்பாடுகள் மற்றும் உற்பத்தியை இலகுபடுத்தல்

**இலக்கு 15:** பௌதீக சுற்றாடல் முறைமைகளை நிலைபேறாக பயன்படுத்தும் பொருட்டு பாதுகாத்தல் மறுசீரமைத்தல் மற்றும் மேம்படுத்தல். வனாந்தரங்களை நிலைபேறாக முகாமைத்துவப்படுத்தல் பெண்கள் மயமாக்கலுக்கு எதிராக போராடுதல் மற்றும் மறுசீரமைத்தல் மற்றும் உயிர் பல்வகைமை இழப்புக்களை நிறுத்துதல்

தற்போது இலங்கையில் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சிச்சித்திட்டத்தில் மிகப் பிரதானமான இரு ஆக்கக் கூறுகளாக வலுவாதாரம் மற்றும் மீளுருவாக்கம் என்பன கருதப்படுகின்றன. அபிவிருத்தியின் காரணமாக சுற்றாடல் விரயமாவதை தடுப்பது தொடர்பாகவும் நமது இயற்கை வளங்களை நீடு நிலைத்த வகையில் முகாமைத்துவப் படுத்துவது தொடர்பாகவும் இலங்கை தொடர்ந்தேர்ச்சியாக அவதானம் செலுத்தி வருகின்றது. அவ்வாறே காலநிலை மற்றும் இயற்கை அனர்த்தங்கள் போன்ற பல்வேறு அழுத்தங்கள் தொடர்பாகவும் தற்போது அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது. ஆதலால் 2018 ஆண்டு தொடர்பான உயர்மட்டத்திலான அரசியல் குழுவொன்றின் கருப்பொருள் மற்றும் அதன் போது ஆழமான மீளாய்வுக்கு உட்படுத்துவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகள் தேசிய ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்றன. இவ் இலக்குகள் மீளாய்வு, தற்போதைய நிலை மற்றும் சாதனைகள், இடைவெளிகள் மற்றும் எதிர்காலக் கொள்கை ஆகிய வீச்செல்லைகளை புரிந்து கொள்வதற்கு துணை புரிகின்றன எனலாம்.

## 6 சுத்தமான நீர் மற்றும் துப்புரவேற்பாடு

### தற்போதைய நிலை மற்றும் போக்கு

பல ஆண்டுகளாக தூய குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கான அணுகுமுறைகள் சம்பந்தமாக இலங்கை சிறந்த முன்னேற்றத்தினை அடைந்துள்ளது 2016 ஆம் ஆண்டளவில் ஒரு வீட்டு அலகு தொடர்பாக 88.8% ஆக தூய குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கான அணுகுமுறைகள் உள்ளன. (6.1). வளவிலுள்ள பாதுகாப்பான கிணறுகள், வளவிற்கு வெளியேயுள்ள பாதுகாப்பான கிணறுகள் வீட்டின் நீர்க்குழாய், அலகு/ வளாகத்திலுள்ள நீர்குழாய் (பிரதான நீர் விநியோக) கிராமங்களிலுள்ள நீர் செயற்திட்டங்கள், குழாய் கிணறுகள், பௌசர் மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் என்பன நீரைப்பெற்றுக்கொள்ளும் மூலங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. அனைத்து மாவட்டங்களிலும் 50%ற்கு அதிகமான வீடுகளுக்கு தூய குடிநீர் வழங்கப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. தூய குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கான அணுமுறைகள் குறைந்த மட்டத்தில் நுவரெலியா மாவட்டத்திலேயே காணப்படுவதுடன் (54%) எதிர்கால தலைமுறையினரில் அதற்கு முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும். நுவரெலியா பிரதேசத்தில் குறிப்பிடத்தக்க அளவில் மக்கள் தோட்டங்களில் வாழ்ந்து வருவதனால் அவர்கள் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் நீர்மூலங்களை பாதுகாப்பான நீர்மூலங்களாக வகைப்படுத்த முடியாமற் போயுள்ளது.

**உரு 4.1 – 2016 ஆம் ஆண்டில் மாவட்டங்களுக்கமைய தூய குடிநீருக்கான அணுகுமுறைகள்**




Source: Household Income and Expenditure Survey 2016, Department of Census and Statistics.

துப்புரவேற்பாட்டு வசதிகளை நோக்கும் போது சனத்தொகையில் 80% மானோருக்கு தமது இடங்களிலேயே துப்பரவேற்பாட்டு வசதிகள் காணப்படுவதுடன் அது குறிப்பிடத்தக்க அளவிலான ஒரு சாதனையாகவும் கருதப்படுகின்றது. (உருப்படம் 4.2) (இலக்கு 6.2). எவ்வாறாயினும் கழிவுநீரினை அப்புறப்படுத்துவது சம்பந்தமாக நோக்கும்போது கழிவுநீரினை வெளியேற்றும் இணைப்புகளைக் கொண்ட வீடுகள் 2% வீதமே காணப்படு கின்றன. ஏனைய வீடுகளில் கழிவுநீரானது தத்தமது வளவுகளில் அமைக்கப்பட்டுள்ள குழிகளுக்கே வெளியேற்றப்படுகின்றன. அதனூடாக பல்வேறு சுற்றாடல் மற்றும் சுகாதார பிரச்சினை களுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது. இங்கு விசேடமாக நிலத்தடி நீர் மாசடைவதும் பிரதான காரணமாகும். மக்களின் அதிகமாக செறிந்து வாழ்கின்ற நகர மற்றும் உப நகரப் பிரதேசங்களில் இந்நிலை அதிகரித்துக் காணப்படுகின்றது.




**உரு 4.2 – 2016 ஆம் ஆண்டின் துப்பரவேற்பாட்டு வசதிகள்**

மூலம் : நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

கொழும்பு, ஏக்கலை, ஜாஎல, மொரட்டுவ மற்றும் இரத்மலானை பிரதேசங்களில் பிரதான வடிகாலமைப்பு வசதிகள் காணப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக சிலாபம் மன்னார் புத்தளம் மற்றும் வவுனியா உட்பட பல நகரங்களில் மூடியிடப்பட்ட சுத்திகரிப்பு முறைமைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டளவில் அனைத்து பாரிய மூலோபாய நகரங்கள் தொடர்பாகவும் மைய வடிகாலமைப்பு முறைமையொன்றினை அமைப்பதை அரசு இலக்காக கொண்டுள்ளது.

நீர் துறை மற்றும் நாட்டின் பிற சுற்றாடல் உப துறைகளிலும், தேசிய மட்டத்திலான முன்னுரிமைக்கமைய நீர் பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் அதனை அண்டிய சுற்றாடல் முறைமைகளிலும் வலுவாதார முகாமைத்துவம் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. தற்போது இலங்கையில் நீர் கிடைக்கப்பெறும் அனைத்து முறைகளிலும் உள்ளடக்கப்படுகின்ற நீர் பயன்பாட்டு வினைத்திறன் தொடர்பான பரந்துபட்ட மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படவில்லை. (இலக்கு 6.4) எவ்வாறாயினும் நீர் பயன்பாட்டு வினைத்திறன் தொடர்பாக மதிப்பீடு செய்வதற்கு குறித்தொதுக்கப்பட்ட இடங்களில் நீர்ப்பாசன நீரினை பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறே தேசிய சுற்றாடல் சட்டத்தில், சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் ஊடாக நீர்மூலங்களில் நீர் மாசடைவதை கண்காணிப்பதற்குரிய ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனினும் வெளியேற்றப்படுகின்ற கழிவுநீர் தொடர்பான தகவல்கள் குறைவாகவே காணப்படுகின்றன.

இலங்கையில் குடிநீர் மற்றும் துப்புரவேற்பாடு குறித்த பிரச்சினைகள் சம்பந்தமான நடவடிக்கைகளை எடுக்கும் பிரதான அரச முகவராண்மையாக நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சே விளங்குகின்றது. அது தமது நிரல் நிறுவனமான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் என்பவற்றினூடாக பணிகளை முன்னெடுத்து வருகிறது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் குழாய்நீர் வழங்குவதற்கு முன்னுரிமையளிக்கும் போது குடிநீர் அல்லது துப்புரவேற்பாடு வசதிகள் காணப்படாமையினால் சுகாதார பாதிப்புக்களுக்காளாகக் கூடிய ஆபத்தான பிரதேசங்கள் மற்றும் ஆட்கள் இனங்காணப்படும். தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களம், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் உள்ளடக்கப்படாத பிரதேசங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. உப தேசிய மட்டத்தில் நோக்கும் போது பிரதேச அதிகார சபைகள், சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள், பெருந்தோட்டக் கம்பெனிகள் மற்றும் தனியார்துறைசார் நிறுவனங்கள் நீர்வழங்கலுடன் இணைந்து பணியாற்றி வருகின்றன. இலங்கையில் நீர் மற்றும் துப்பரவேற்பாட்டு துறையில் குறித்தொதுக்கப்பட்ட பிரிவுகள், உப பிரிவுகளை உள்ளடக்கும் பொருட்டு தேசிய குடிநீர் கொள்கை 2008, துப்புரவேற்பாடு தொடர்பான தேசிய கொள்கை, கிராமிய நீர் விநியோகம் மற்றும் துப்புரவேற்பாட்டு கொள்கை மற்றும் மழைநீர் சேகரிப்புக் கொள்கை ஆகிய திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. தன்னார்வ தேசிய மீளாய்வு தொடர்பான கருத்துக் கணிப்பீட்டின் போது பங்குதாரர்களினால் இலங்கையில் நீர் முகாமைத்துவம் தொடர்பான கொள்கை சட்டகமொன்றை தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியம் இலக்கு (6.5) வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாற்றமடைந்து வரும் காலநிலை காரணமாக இலங்கையில் குடிநீர் பெற்றுக் கொள்ளும் போது குறிப்பிடத்தக்க சவால்கள் காணப்படுகின்றன. அதனால் இலங்கையில் காலநிலை பாதிப்புகள் தொடர்பான காலநிலை சீராக்கல் திட்டமானது 2016 - 2025 காலநிலை சீராக்க செயற்பாடுகள், தொடர்பான நீர்த்துறையின் பிரதான கருப்பொருளாக இனங்காணப்பட்டுள்ளது.

நீர்த்துறை தொடர்பாக தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புக்கள் (NDCs) மூலமும், காலநிலை மாற்றத்தினால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி நீர் பற்றாக்குறை அதிகரிப்பிற்கான தீர்வுகளை வழங்குவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நீர்த்துறையில் காலநிலை மாற்றங்கள் குறித்த பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பாக உத்தேச பிரதான சீராக்கல் நடவடிக்கைகள் உள்ளடக்கப்படுகின்றன அவையாவன; நீர் பற்றாக்குறை நிலவும் பிரதேசங்களில் புதிய நீர் விநியோக செயற்றிட்டங்கள் மற்றும் உத்தேச திட்டங்கள், மாசடைதல் மற்றும் காலநிலை காரணமான பாதிப்புக்களை வெற்றிகொள்வதற்கு முழு நாட்டிற்கும் உரியதான நீர் பாதுகாப்பு முகாமைத்துவ திட்டங்கள், நீர்மூல பிரதேசங்களை பாதுகாத்தல் மற்றும் பேணல், நீர் வளங்களிடையே பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடமாடும் ஆய்வு கூடங்கள், கோடை காலங்களில் குடிநீரில் உவர்நீர் கலப்பினை கண்காணித்தல், அறிக்கையிடல் மற்றும் மக்களுக்கு விழிப்பூட்டுல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நீர் விநியோக திட்டங்களை மையமாகக் கொண்ட புதிய முகாமைத்துவ முறைமைகளை அறிமுகப்படுத்தல்.

## இடைவெளிகள் மற்றும் சவால்கள்

தேசிய மட்டத்தில் நோக்கும் போது உள்ளடக்கப்பட்டுள்ள வீதம் திருப்திகரமாக இருந்தபோதிலும் குடிநீர் விநியோகம் மற்றும் துப்புரவேற்பாடு தொடர்பான அணுகுமுறைகள் பிரதேச ரீதியான முரண்பாடுகளை காட்டுகின்றன. குடிநீர் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகள் தொடர்பாக வறிய மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு எதிர்கால தலையீடுகளின் போது விசேட அவதானம் செலுத்தப்படல் வேண்டும்

நாட்டில் சில பகுதிகளில் பாதுகாப்பான குடிநீரின் தரம்பற்றி சில பிரச்சினைகள் எழுந்துள்ளன. வடமத்திய மற்றும் வடக்கு மாகாணங்களின் விவசாய பிரதேசங்களில் அருந்துவதற்கு உகந்ததல்லாத நீர் ஏற்படுவதற்கான பிரதான காரணங்களாக உலோகம் மற்றும் விவசாய இரசாயனப் பதார்த்தங்கள் நீருடன் கலந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதன் விளைவாக கண்டறியப்படாத காரணங்களினால் ஏற்படுகின்ற நாட்பட்ட சிறுநீரக நோய் அதிகரித்து காணப்படுவதாக அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளன. நீரின் தரத்தினை கண்காணிக்கும் இயலுமை சம்பந்தமாகவும் இடைவெளிகள் காணப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக ஏனைய பெருந்தொகையான துறைகளுக்கு சமமாக நிறுவனத் தொடர்பாடல்களும் போதியதாக அமையாமையும் நீர்த்துறை முகம் கொடுக்க நேர்ந்துள்ள சவாலாக விளங்குகின்றது. குடிநீர் மற்றும் வடிகாலமைப்பு வசதிகளை வழங்குவதுடன் தொடர்புபடுகின்ற பிரதான தேசிய மற்றும் உபதேசிய நிறுவனங்கள் காணப்படுகின்றன. தேசிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அவற்றுக்கிடையே திறந்த தொடர்பாடல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

# முன்னோக்கிய வழி…

பாதுகாப்பான குடிநீர் தொடர்பான தேசிய மட்டத்திலான இலக்குகளுள் அத்துறையின் பிரச்சினைகள் மற்றும் பெரும்பாலான சவால்களை உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அவற்றின் இலக்காவது 2020 ஆம் ஆண்டளவில் அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீரை வழங்க வேண்டுமென்பதாகும். இதற்கு 2020 ஆம் ஆண்டளவில் 60% வரை குழாய் நீர் விநியோகத்தை அதிகரித்தல், சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுள்ள பிரதேசங்களுக்கு குழாய்நீர் வசதிகளை வழங்குதல் 1005 இனால் குடிநீரின் தரத்தினைப் பேணல், தொழிற்சாலைகளின் நீர்த் தேவைப்பாட்டினை 100% வழங்குதல் மற்றும் குடிநீர் வசதிகளை வழங்கும் நிறுவக கட்டமைப்பினுள் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், காரணம் கண்டறியப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய் காணப்படுகின்ற பிரதேசங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்குவது தொடர்பாக எதிர்ப் பிரசாரண பொறித்தொகுதியொன்றைத் தாபிப்பது முக்கியத்துவமிக்க ஒரு தலையீடாக விளங்குகின்றது.

இலக்கின் சுட்டிகள், இலங்கையின் தூய குடிநீர் மற்றும் துப்புரவேற்பாடு சம்பந்தமாக நோக்கும் போது, தேசிய கொள்கை முன்னுரிமைகளுடன் நன்கு ஏற்புடையனவாக விளங்குகின்றன. குறிக்கோள்களின் இலக்குகள் மற்றும் துறைசார் கொள்கைகளுக்கிடையே பல தொடர்புகள் காணப்படுகின்றன; இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பாக இதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் இணைத்து கொள்வது அவசியமாகும். பிரதேச முரண்பாடுகளை களையும் பொருட்டு, பாதுகாப்பான குடிநீர் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகள் குறைவாக காணப்படுகின்ற பிரதேசங்களுக்கு முன்னுரிமையளிப்பதற்கு இவ்வணுகுமுறைகள் ஊடாக அவதானம் செலுத்துதல் வேண்டும்.

துப்புரவேற்பாட்டு பிரிவின் மூலோபாயங்கள் ஊடாக குறிப்பாக கிராமிய மற்றும் தோட்டப் பிரிவுகளில் துப்புரவேற்பாட்டு வசதிகளின் பயன்பாட்டினை அதிகரித்தல், துப்புரவேற்பாடு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், பிரதான நகரங்களில் வடிகாலமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் செயற்திறனை அதிகரிப்பது தொடர்பான செயற்பாடுகளை மறுசீரமைத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டளவில் நாடு பூராகவும் 100% பாதுகாப்பான துப்புரவேற்பாட்டு வசதிகளை உறுதிப்படுத்துவது அதன் நோக்கமாகும். அவ்வாறே 2020 ஆம் ஆண்டளவில் 3.3% நகர்புற மக்களுக்கு குழாய்வழி மல வடிகாலமைப்புத் திட்டமொன்றினை வழங்குவதும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. வருமானமீட்டாத நீர் (நுகர்வோரினை சென்றடையாது வீண் விரயமாக்கப்படும் நீர்) குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவத்தினை அதிகரிப்பது தொடர்பான முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் இதற்கானதோர் சிறந்த உதாரணமாகும்.

தற்போது மதிப்பிடப்படாதுள்ள இலக்குகள் தொடர்பான அடிப்படையில் நிரல் சுட்டிகளை வடிவமைக்க வேண்டியது முக்கியமாகும். ஆய்வுகளினூடாக குறித்த பிரச்சினைகள் எழுப்பப்பட்ட போதிலும் மேம்பாட்டு அளவீடுகளை பெற்றுக் கொள்வது தொடர்பாக உரியவாறு செயற்படுகின்ற பொறிமுறை ஒன்று காணப்படுவதில்லை. சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் குறித்த சுட்டிகளை தேசிய தரவுப் புள்ளிவிபரவியல் முறைமையில் உள்ளடக்கப்பட வேண்டியதும் மிகப் பிரதானமாகும்.

நீர் மற்றும் துப்புரவேற்பாடு தொடர்பான பிரிவுகளினால் திட்டமிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முகவராண்மைகளிடையேயான ஒத்துழைப்புக்கள் அவசியமாகின்றன. அவ்வாறே முகாமைத்துவ, தொழிநுட்ப மற்றும் நிதிசார் திறன்கள் சம்பந்தமாக நோக்கும் போதும் மாகாண மற்றும் பிரதேச நிறுவனங்களின் வினைத்திறன் அதிகரிக்கப்பட வேண்டியதும் அத்தியாவசியமானதாகும்.

# 7 தாங்கத்தகு சுத்தமான வலுசக்தி

## தற்போதைய நிலை மற்றும் போக்கு

இலங்கையின் வலுவாதார அபிவிருத்தி சம்பந்தமான வலுசக்திப் பிரிவானது முக்கியமான வகிபாகமொன்றை வகிக்கின்றது. இப்பிரிவின் செயலாற்றமானது, சாதனைகள் மற்றும் சவால்கள் நிறைந்ததாக காணப்படுகின்றது. வலுசக்தி துறையின் பிரதான சாதனையாக அமைவது, அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டு, அதில் 100% வீதம் விநியோகிக்க முடிந்தமையாகும். (இலக்கு 7.1) வலுசக்தி உருவாக்கம் மற்றும் விநியோகம் சம்பந்தமாக பொறுப்பு வகிக்கும் அரசாங்கத்திற்கு சொந்தமான முயற்சியாண்மை ஒன்றாக விளங்கும் இலங்கையின் மின்சார சபையின் கிராமிய இலத்திரனியல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாகவும், அரசின் அயராத முயற்சியின் பயனாகவுமே இச் சாதனையை அடைய முடிந்தது.

வீடு, தொழில்நுட்ப, வணிக, போக்குவரத்து மற்றும் விவசாய பிரிவுகளின் வலுசக்தி தேவைப்பாட்டினை நிரப்பும் பொருட்டு பெரும்பாலான வலுசக்தி வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அட்டவணை 4.1 இன் மூலம் பிரதான பயனர் வகைகளுக்கமைய வலுசக்தி கூறுகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. சமையலுக்காக பயன்படுத்தப்படுகின்ற பிரதான வலுசக்தி மூலமாக விறகு அமைந்துள்ளதுடன் விசேடமாக கிராம பிரதேசங்களில் வீடுகளுக்கான வலுசக்தி தேவைப்பாடுகள் இன்று வரை பூர்த்தி செய்யப்படுவது உயிர்த்திரள் எரிபொருள் மூலமாகும். குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்சாலைகளில் தொழில்நுட்ப வலுசக்தி தேவைப்பாடுகள் கொதிகலன்கள், உலர்த்திகள், உலைகள் தொடர்பாக பயன்படுத்துகின்ற விறகு மூலமே பூர்த்தி செய்யப்படுகின்றன. மின்சாரம் சம்பந்தமாக நோக்கும் போது அதன் பிரதானமான பயனராக முழு வலுசக்தி உற்பத்தியினதும் 38% வீதம் வீடுகளிலேயே பயன்படுத்தப்படுகின்றன. பெற்றோல் பயன்படுத்தப்படும் பிரதான துறையாக அமைவது போக்குவரத்து துறையாகும். பிரதான நீர்மின் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது படிப்படியாக அசௌகரியமாக இருந்ததனால் அதன் பின்னர் 1990 இன் நடுப்பகுதியில் மின்சார உருவாக்கத்தின் பிரதான மூலமாக அனல் மின்சக்தி விளங்கியதுடன், அது நீர்மின் வலுவினை விஞ்சிய வகையில் பெற்றோல் தேவைப்பாடு அதிகரித்தது எனலாம். மின்வலு தொடர்பாக அதிகரித்து காணப்படும் கேள்வி மற்றும் நிலக்கரி விலை அதிகரித்தல் காரணமாக 2010 ஆம் ஆண்டிலிருந்து இன்னும் புதைபடிம வலுசக்தியொன்றான அனல் மின்சக்தி உருவாக்கத்திற்கு மாவட்டத்தின் நுரைச்சோலை பிரதேசத்தில் முதலாவது நிலையம் நிர்மாணிக்கப்பட்டது.

அனைத்து துறைகளிலும் மின்சாரம் தொடர்பான கேள்வி அதிகரித்து காணப்படுகின்றது. ஏனைய பிரிவுகளை விட வீடுகளில் இது சம்பந்தமாக அதிக கேள்வி நிலவுவதுடன் தொழில்நுட்ப பிரிவிற்கான கேள்வியும் இரண்டாவது இடத்தில் உள்ளது. (உரு. 4.4) வீடு மற்றும் வணிகத்துறைகளில் எழுகின்ற கேள்வி நிலையாக அதிகரித்து செல்வதுடன் தொழில்நுட்பத் துறையின் கேள்வி காலத்திற்கேற்ற ஏற்ற இறக்கங்களை சுட்டிக்காட்டப்படுகின்றன. அதன் விளைவாக தொழில்நுட்பப் பிரிவில் இருந்து எழுகின்ற ஒப்பீட்டளவிலான மின்சாரக் கேள்விகள் காலப் போக்கில் குறைவடைந்துள்ள போதிலும் உள்ளபடியான பயன்பாடுகள் அதிகரித்து காணப்படுகின்றன (உரு.4.3 ஆ).

**அட்டவணை 4.1 பிரதான பரிசீலனைகளுக்கு அமைய வலுசக்தி தொடர்பான கேள்வி 2016**

| கேள்விக்கான மூலம் | கவனம் செலுத்தப்பட்ட | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மின்சாரம் | LPG | பெற்றோல் | மண்ணெண்ணெய் | டீசல் | எரிபொருள் | நிலக்கரி | (பேகேஸ்) (Bagasse | எரிபொருள் (Fuel Wood) | மொத்தம் |
| வீடு வணிக மற்றும் பிற | 736.7 | 301.9 | N/A | 175.1 | N/A | N/A | N/A | N/A | 2829.5 | 4043.1 |
| கைத்தொழில் | 356.8 | 74.4 | N/A | 6.0 | 22.7 | 368.1 | 49.1 | 96.4 | 1714.0 | 2687.4 |
| போக்குவரத்து | N/A | 1.1 | 1594.7 | N/A | 2088.7 | N/A | N/A | N/A | N/A | 3,687.5 |
| விவசாயம் | N/A | N/A | N/A | N/A | 0.6 | 0.2 | N/A | N/A | N/A | 0.8 |
| மொத்தம் வலுசக்தி பயன்பாடு | 1093.5 | 377.4 | 1594.7 | 181.0 | 2112.0 | 368.3 | 49.1 | 96.4 | 4543.4 | 10418.0 |

மூலம் : வலுவாதார வலுசக்தி அதிகாரசபை (2017)

**உரு 4.3 : பிரிவுகளுக்கமைய மின்சாரப் பயன்பாடு (ஒப்பீட்டளவிலான பகுதிகளிலிருந்து (%):(1970-2016)**




மூலம் : வலுவாதார வலுசக்தி அதிகாரசபை (2017)

போக்குவரத்து மற்றும் வலுசக்தி உருவாக்கப் பிரிவுகளினால் அதிகரித்து காணப்படும் கேள்வியின் காரணமாக புதைபடிம வலுசக்தி மூலங்களின் மீது தங்கியிருக்கும் நிலை அதிகரித்துள்ளது. எனினும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களும் நாட்டின் மொத்த வலுசக்தி விநியோகத்தில் பிரதான வகிபாகத்தினை வகிக்கின்றது. பிரதான விநியோக மட்டத்தின் போதும் புதுப்பிக்கத்தக்க மற்றும் தேசிய மூலங்களிலிருந்து குறிப்பிடத்தக்க அளவு வலுசக்தி பகுதிகள் கிடைக்கப் பெறுகின்றன. (உரு.4.4) மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு அடிப்படை விநியோகம் 36% உயர்த்திரள் எரிபொருள் மூலங்களிலிருந்து கிடைக்கின்றன. நீர் மின்சாரம் (6%) மற்றும் மரபு ரீதியற்ற வலுசக்தி (2%) இவற்றுடன் சேர்த்து நோக்கும் போது முழு வலுசக்தி வளங்களின் 44% தொடர்பாக புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பயன்படுத்தப்படுகின்றது. (இலக்கு 7.2)[18] புதைபடிம எரிபொருள் மூலங்கள் 56% வீத பங்களிப்பினை வழங்குகின்றன. வீடு மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் பரந்துபட்டளவில் பயன்படுத்தப் படுகின்ற உயிர்த்திரள் எரிபொருளாக விறகு காணப்படுவதுடன் அடுத்ததாக சிரட்டைக் கரி பேர்கேஸ் என்பனவும் மட்டுப்படுத்தப்பட்ட பணியை ஆற்றி வருகின்றது.




உரு 4.4:

அடிப்படை வலுசக்தி விநியோகத்தின் பிரதான வலுசக்தி மூலங்களின் பகுதி (%)

மூலம் : வலுவாதார வலுசக்தி அதிகாரசபை (2017)

புதுப்பிக்கதக்க வலுசத்தி அமைச்சினால் வீடு. சமயஸ்தலங்கள், ஹோட்டல்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் சாலைகளின் கூரையின் மேல் பொருத்தப்படுகின்ற சிறிய சூரிய வலுசக்தியினை ஊக்கு விக்கும் பொருட்டு இலங்கை வலுவாதார வலுசக்தி அதிகாரசபை இலங்கையின் மின்சார சபை மற்றும் இலங்கை இலத்திரனியல் கம்பெனியுடன் இணைந்து சூரியவலு பெயர்வு எனும் புதிய சமுதாய அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதனூடாக 2020 ஆம் ஆண்டளவில் 200mw சூரிய வலுசக்தி 2015 ஆம் ஆண்டளவில் 1000mw வாக தேசிய வலையமைப்பிற்கு சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர்கள் தமது வளவினுள் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய வகையிலும் உற்பத்தி செய்வதற்கு மட்டும் பயன்படுத்துவதற்கு முடிகின்றது. அவர்கள் தாம் உருவாக்குகின்ற மேலதிகமான மின்சாரத்தை தேசிய வலையமைப்பிற்கு விற்பனை செய்வதை அல்லது பின்னர் பயன்படுத்துவதற்காக சேமித்து வைக்க முடியும். மின்சார பயன்பாட்டிற்கு அமைய வாடிக்கை யாளர்கள் மூன்று முறைகளினூடாக தாம் விரும்புகின்ற மாற்றீடுகளை தெரிவு செய்து கொள்ள முடியும். மேலதிக வலுசக்தியை களஞ்சியப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்படும் மேலதிக வலுசக்தியை விற்பனை செய்தல் அல்லது தாம் அதிகமாக பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கு நிதி செலுத்துதல் மற்றும் நுண் சூரிய வலுசக்தி உருவாக்கம்

இன்னுமொரு முக்கிய பிரதேசமாக வலுசக்தி செயற்பாட்டினை அதிகரித்தல் வேண்டும். கேள்விகளை முகாமைத்துவம் படுத்தும் நடவடிக்கைகளின் ஊடாக வலுசக்தியின் வினைத்திறனை அதிகரிப்பது தொடர்பாக முக்கிய பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (இலக்கு 7.3) மின்சாரத்திற்கான கட்டணம் அறவிடப்படுவது அதிகரித்து செல்லும் வகுதிகளின் அடிப்படையில் ஆகும். மின்சாரப் பயன்பாட்டின் விஞ்சிய அளவினை குறைப்பதற்கும், வகுதிகளின் வரையறைகளைத் தாண்டி பாரியளவில் பயன்படுத்தப் படுத்துவோரிடம் அதிகரித்த அலகுகளின் அடிப்படையில் கட்டணம் அறவிடக்கூடிய வகையிலேயே வகுதிக் கட்டமைப்பு திட்டமிடப்பட்டுள்ளது. ஆதலால் விலைக் கட்டமைப்பின் மூலம் மின்சாரப் பாவனையை பேணுதலாக பயன்படுத்துவோருக்கு சலுகைகள் கிட்டுகின்றன.

---

18 வலுவாதார வலுசக்தி அதிகாரசபை (2017) வலுசக்தி சமநிலை தரவு

அதன் காரணமாக CFL மின்குமிழ் LED மற்றும் சூரிய வலுசக்தியை களஞ்சியப்படுத்தல் போன்ற வலுசக்தி பேணல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது அதிகரித்து காணப்படுகின்றது. அவ்வாறே இக் கட்டமைப்பின் மூலம் சிறியளவிலான பயனர்களுக்கு குறிப்பாக குறைந்த வருமானம் பெறுவோருக்கு ஒப்பீட்டளவில் குறைந்த மட்டத்தில் மின்சாரப் பட்டியல்களை முகாமைத்துவப் படுத்துவதற்கு இது துணை புரிகின்றது.

அரசாங்கத்தினால் உயர்த்திரள் எரிபொருள் வினைத்திறனுடன் கூடிய வாகனங்களை அதிகரிப்பது தொடர்பாக வரி கட்டமைப்பு விதிக்கப்பட்டு,போக்குவரத்து துறையினுள் 'பிஸ்கல்' கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு எஞ்சினின் இயலளவை அடிப்படையாகக் கொண்ட வரி அறவிடல் (அதிக எஞ்சின் இயலளவைக் கொண்ட வாகனங்கள் தொடர்பாக உயர் அதிக வரி / ஜப்பான்3) உற்பத்தி செய்யப்பட்ட நாளிலிருந்து வாகனத்தின் காலத்தை அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி வரையறைகளை (3 ஆண்டுகளை விட குறைவாக இருத்தல் வேண்டும்) மற்றும் மிகக்குறைந்த வீதத்தில் கலப்பு மற்றும் இலத்திரனியல் மோட்டார் வாகனங்களுக்கான வரி அறவிடலும் இதில் உள்ளடங்குகின்றன. அதன் விளைவாக 2012 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட கலப்பு மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கையில் அதிகரித்த போக்கினைக் காணக்கூடியதாக இருந்தது.

## இடைவெளிகள் மற்றும் சவால்கள்

வலுசக்தி பிரிவின் நீடுநிலைத்த எதிர்காலத்திற்கான சவால்களாக நிலவுகின்ற பல இடைவெளிகள், கொள்கைகள், ஆவணங்கள் என்பன பங்காளர்களினால் இனங்காணப் பட்டுள்ளன.

விரிவாக நோக்கும் போது அவையனைத்தும் 3 பிரதான சவால்களுடன் தொடர்புபடுவதாக விளங்குகின்றது: புதைபடிம எரிபொருள் வலுசக்தி வழங்கலை அடிப்படையாகக் கொண்ட வலுசக்தி உருவாக்கத்தில் அதிகமாக தங்கியிருத்தல்; வலுசக்தியினை வினைத்திறன் வாய்ந்த வகையில் பயன்படுவதற்கு வரையறைகளை விதிக்கின்ற வீடு போக்குவரத்து மற்றும் நிர்மாணிப்புக்கள் ஆகிய பிரதான துறைகளில் வலுசக்தி பயன்பாட்டுடன் தொடர்புடைய சவால்கள்; பாரியளவில் அரசாங்கத்திற்கு சொந்தமான முயற்சியாண்மைகளின் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற மின்சாரம் மற்றும் பெற்றோல் என்பற்றின் தேசிய வலுசக்தி பெறுமான சங்கிலி மற்றும் அதுசார்ந்த செயற்பாடின்மை.

மின்சாரத்திற்கான அதிகரித்து வரும் கேள்வி மற்றும் எதிர்பாரா மழைவீழ்ச்சியின் காரணமாக அக்கேள்வியை வழங்குவதற்கு பிரதானமான நீர்மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் வசதிகள் வரையறுக்கப்பட்டதன் காரணமாக 1990 இல் இருந்து அனல் மின்சக்தி உருவாக்குவதற்கு நேர்ந்துள்ளது. அதன் விளைவாக அனல் மின் உருவாக்கம் 50% ஐ விட அதிகரித்துள்ளதுடன் அது வருடாந்தம் மென்மேலும் அதிகரிக்கும் என புலப்படுகிறது. உரு. 4.5 இன் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு மொத்த வலுசக்தியுடன் கலப்பு பெற்றோல் மூலம் கையப்படுத்தப்பட்ட அளவு 1990 இன் நடுப்பகுதியிலிருந்து அதிகரிக்கப்பட்டதென்பதும், புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் அளவு படிப்படியாக குறைந்துள்ளது என்பதும் புலப்படுகின்றது.

**உரு 4.5: பிரதான வலுசக்தியுடன் கலந்த பல்வேறு நீர்மூலங்களின் பகுதிகள் (1976-2016)**




மூலம் : வலுவாதார வலுசக்தி அதிகாரசபை (2017)

ஏற்கக்கூடிய தூய வலுசக்தி சம்பந்தமான இடைவெளிகள் மற்றும் சவால்கள் மின்சாரம் மற்றும் மின்வலு துறைகளது வரையறைகளை தாண்டிச் செல்வதாக பங்குதாரர்கள் வலியுறுத்தியுள்ளனர். முழுமொத்தச் சுட்டியினுள் போக்குவரத்துத்துறை மின்வலுத் துறையை விட முக்கியமானதாக கருதப்படுகின்றது. இலங்கையில் வாகனங்களின் எண்ணிக்கை துரிதகதியில் அதிகரித்து காணப்படுவதுடன் 2000 ஆம் ஆண்டினை விட தற்போது மூன்று மடங்கினால் வாகனங்கள் அதிகரித்து காணப்படுகின்றன. ஆதலால் போக்குவரத்து துறையில் பெற்றோல் தொடர்பாக பாரிய கேள்வி நிலவுகின்றது. சில ஆண்டுகளில் வருடாந்த அதிகரிப்பு 12% ஆக இருந்துள்ளது. தகவல்களின் ஊடாக, தனியார் வாகனங்களே அவ்வாறு அதிகரித்துள்ளமை பற்றி அறியக் கிடைத்துள்ளது. பொதுப் போக்குவரத்து முறைமையில் காணப்படுகின்ற செயற்திறனின்மை, புகையிரதம் போன்ற மாற்றீட்டு வகைகளை வரையறைகளுடன் அபிவிருத்தி செய்தல் மற்றும் நகரப் பிரதேசங்களில் அதிகரித்து காணப்படும் வாகன நெருக்கடி என்பனவும் இந்நிலைமைக்கான காரணங்களாக கண்டறியப்பட்டுள்ளன.

எண்ணெய் மற்றும் வாயு வகுப்பாய்வுகள் தொடர்பான தொடர் முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் பெற்றோல் மற்றும் நிலக்கரி தொடர்பாக அதிகரித்துள்ள கேள்வியின் மத்தியில் நாடு முழுமையாக தங்கியிருப்பது இறக்குமதிகளை அடிப்படையாக கொண்டேயாகும். புதைபடிம எரிபொருள் வலுசக்தி மூலங்களின் அடிப்படையில் அதிகமாக தங்கியிருப்பது பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்களவு சுமையாக இருப்பதுடன் நித்திய அடிப்படையில் கொடுப்பனவு மீதிகள் அமுக்கத்தினையும் ஏற்படுத்துகின்றது. புதைபடிம எரிபொருள் அளவு அதிகரிப்பதன் காரணமாக இறக்குமதிகள் தொடர்பாக அதிகரித்துச் செல்கின்ற செலவுகள் போன்றே விலை அதிகரிப்பும் பொருளாதாரத்தின் கொடுப்பனவு மீதிகளில் அமுக்கத்தினை ஏற்படுத்துகின்றது. உரு 4.6 இன் மூலம் சுட்டிக்காட்டப்படுவது 2007-2016 காலப்பகுதியினுள் புதைபடிம எரிபொருள் இறக்குமதிகள் பற்றியதாகும். புதைபடிம எரிபொருள் இறக்குமதி செய்வது தொடர்பான செலவு வருடாந்த இறக்குமதிக் கிரயத்தின் 20% ஆகும். முழு இறக்குமதி ஈட்டல்களினதும் ஒரு பகுதியாக புதைபடிம எரிபொருள் இறக்குமதி தொடர்பான கிரயம் சில ஆண்டுகளாக ஏற்றுமதி ஈட்டல்களின் 50% கிட்டியதாக உள்ளதுடன், அதனூடாக வெளிநாட்டு வருமதிகளின் அரைவாசி செலவிடப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**உரு 4.6: புதைபடிம எரிபொருள் இறக்குமதி (2007-2016)**




Source: Sustainable Energy Authority (2017)

ஒட்டுமொத்தமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் தூய்மை போன்ற இரு தரங்களும் குறிப்பாக வலுசக்தி உற்பத்தி பிரிவின் அடைவுகளை அடைந்து கொள்வது இலங்கையில் சவால்கள் நிறைந்ததாக காணப்படுகின்றது. இவ் இடைவெளி மற்றும் சவால்களை வெற்றி கொள்வதற்கு போக்குவரத்து மற்றும் நிர்மாணிப்பு துறைகளையும் உள்ளடக்கிய, மற்றும் கிட்டிய வேறு பிரிவுகளும் உள்ளடக்கிய பரந்துபட்ட மூலோபாயங்கள் அவசியப்படுகின்றன.

# முன்னோக்கிய பாதை ...

2008 ஆம் ஆண்டில் இலங்கையில் தேசிய வலுசக்தி கொள்கை தயாரிக்கப்பட்டதுடன் புதிய பரிணாமங்களைக் கொண்டதாக அது தற்போது இற்றைவரைப்படுத்தப்பட்டு வருகின்றது. இலங்கையின் வலுசக்தித்துறை வலுவாதார அபிவிருத்தி இலக்கு 7 உடன் ஒப்பிடுவது தொடர்பாக இக்கொள்கை வரவு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள சில மூலோபாயங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இத் தேசிய கொள்கையின் மூலம் வலுசக்தி பாதுகாப்பு, வலுசக்தி அணுகுமுறைகள், வலுசக்தி வினைத்திறன் மற்றும் பேணல், சுற்றாடல் பாதுகாப்பு, வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பாக பிரதான வகையில் பங்களிப்பு நல்கக்கூடிய புதுப்பிக்கத்தக்க பொருட்களை ஊக்குவித்தல் ஆகியன தொடர்பான பல பரந்துபட்ட துறைகளின் கொள்கைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஓட்டுமொத்தமாக நோக்கும் போது வலுசக்தி துறை வலுவாதார வழிவகையொன்றைக் கையாள்வது தொடர்பாக அரச மற்றும் தனியார் ஆகிய இரு துறைகளினதும் பங்குதாரர்களினால் ஆரோக்கியமானதும், நடைமுறைச் சாத்தியமானதுமான சில நடவடிக்கைகள் காணப்படுகின்றன. அரசினால் எடுக்கப்பட்டுள்ள அணுகுமுறைகளில் பின்வருவம் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன: சம்பிரதாயபூர்வமற்ற புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வளங்களை ஊக்குவித்தல் மற்றும் அவற்றுக்கு உரிய வசதிகளை வழங்குவது தொடர்பாக நிலைபேறான வலுசக்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகள்; பாரிய அரச முகவராண்மைகளினால் நிர்வகிக்கப்படும் மின்சாரம் மற்றும் பெற்றோல் உற்பத்திகளது சந்தை கண்காணிப்புகள் ஊடாக மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் செய்யப்படுகின்ற தலையீடுகள்; இலங்கை மின்சார சபையின் வலுசக்தியுடன் கலந்து சம்பிரதாயபூர்வமற்ற புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை திரட்டுகின்ற பங்களிப்பின் மந்தகதி, எனினும் படிப்படியாக விரிவடைதல்; விநியோக செயற்பாடுகளை அதிகரித்தல், வீண்விரயத்தை தவிர்த்தல் தொடர்பான தேசிய வலுசக்தி உருவாக்கம் மற்றும் விநியோக வசதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்; தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் (உதாரணமாக செயற்பாட்டு கேள்விகளுக்கான முகாமைத்துவம்) வலுசக்தி பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரிக்குமுகமான கேள்விகளுக்குரிய முகாமைத்துவ நடவடிக்கைகளை எடுத்தல்; நாட்டில் துரிதமாக பிரசித்தி பெற்று விளங்கும் ஹைபிரிட் மற்றும் மின்சாரத்தினால் இயங்குகின்ற வாகனங்கள் போன்ற சிக்கன எரிபொருள் வாகனங்கள் தொடர்பாக சலுகைகடன் வழங்கல் மற்றும் வெளிச்சத்தினை வழங்குகின்ற வலுச்சக்தி உபகரணங்கள் மற்றும் கூரையில் பொருத்தப்பட்டுள்ள (உதாரணமாக சூரிய மேலதிக வலுசக்தி களஞ்சியப்படுத்தல்) போன்ற புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்கான தீர்வுகளைப் கையாளல் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் அது தொடர்பாக வசதிகளை வழங்குதல் தொடர்பாக கொள்கைசார் நடவடிக்கைகளை எடுத்தல்

பல்வேறு நடவடிக்கைகளின் ஊடாக வீடுகளில் சூரிய வலு மற்றும் காற்றாடி வலுசக்தி போன்ற சம்பிரதாயபூர்வமற்ற புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மேம்பாடு தற்போதைய மூலோபாய வலுவாதார வலுசக்தியை நோக்காகக் கொண்டு பங்களிப்பு செய்கின்றது. அதற்கு மேலதிகமாக வினைத்திறன் மிக்க வீட்டு உபகரணங்களை ஊக்குவித்தல், தரநியமங்களுடன் இசைவாக்கமடைதல், பிரமாணங்களை அறிமுகப்படுத்தல், வலுசக்தி பெயரிடல் மற்றும் பசுமை கட்டிடங்கள் போன்ற நடவடிக்கைள் ஊடாக 2020 இல் 1985 கிகா வோல்ட் சேமித்து கொள்வதற்கான செயற்பாட்டு கேள்வி முகாமைத்துவம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டமொன்று அரசினால் முன்னெடுக்கப்பட்டது.

இறக்குமதி செய்தல் மற்றும் தேசிய ரீதியாக வலுசக்தி சிக்கன உற்பத்திகளை அறிமுகப்படுத்தல் (உதாரணமாக பிரகாசமான வலுசக்தி சிக்கன உபகரணங்கள், வீடுகளிலான சூரிய வலுசக்தி முறைமை) மற்றும் சம்பிரதாயபூர்வமற்ற புதுப்பிக்கத்தக்க வலுசக்திகளை தயாரிக்கும் (உதாரணமாக சூரிய வலுசக்தி சிறியளவிலான நீர்மின்வலு முறைமைகள்) வசதிகளை அடிப்படையாகக் கொண்டு முதலீடு செய்வது தொடர்பாக தனியார் துறையின் முயற்சிகளில் மேற்படி பாரியளவிலான தொகைக்கு நிரப்பப்பட்டுள்ளது.. சில அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் இவ் வலுவாதார வலுசக்தி பயன்பாட்டின் பெறுமதி தொடர்பாக குரல் எழுப்புவதற்கு முன்வந்துள்ளனர். இவ்வாறான அணுகுமுறைகளினால் பாரியளவு மாற்றங்களை ஏற்படுத்த முடியாத போதிலும், வலுவாதார அபிவிருத்தி இலக்கு 7 இனை வெற்றிகொள்வது தொடர்பாக அவற்றுக்கு திருப்திகரமான மட்டத்திலான பங்களிப்பினை நல்குகின்றது.

இவ்வாறான சாதகமான நடவடிக்கைகள் நிலவிய போதிலும், இதுவரை ஒட்டுமொத்த வளர்ச்சியும் புதைபடிம எரிபொருளிலேயே தங்கியுள்ளது. பிரதானமாக போக்குவரத்து துறையினால் எழும் கேள்வியே அதற்கான காரணமாகும். வலுவாதார அபிவிருத்தி இலக்கு 7 இனை அடைந்துகொள்வது தொடர்பாக போக்குவரத்துத் துறையினுள் வலுக்தி வினைத்திறனை அதிகரிக்க வேண்டியது இன்றியமையாததாகும். தேசிய போக்குவரத்து கொள்கை வரைவினுள் கொள்கைசார் ஐந்து கோட்பாடுகளினுள் ஒன்றான வலுசக்தி வினைத்திறன் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. "…நீடு நிலைத்த மற்றும் சுற்றாடலுக்கு விளைவிக்கப்படும் பாதிப்புக்களைக் குறைக்கும் வகையில் அனைத்து போக்குவரத்து ஊடகங்களையும் வினைத்திறன்மிக்கதாகவும், கிரய சிக்கன வலுசக்தி மிக்கதாகவுமான கொள்கையொன்றினை நோக்கி செயற்படுத்தல் வேண்டும்". அரசினால் 2016 ஆம் ஆண்டில் மேல் மாகாண மாநகர போக்குவரத்து அலுவல்கள் தொடர்பான பிரதான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. குறைபாடுகள் காணப்படுகின்ற பொதுப் போக்குவரத்து வசதிகள் காரணமாக பயணிகளுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களை தவிர்க்குமுகமாக துரித போக்குவரத்து

முறைமையொன்றை தாபிப்பதற்கு அதன் ஊடாக உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், மத்திய சுற்றாடல் பிரதேசங்கள் நகர்புற பிரதேசங்களை இணைக்கப்படுகின்ற மென் புகையிரத சேவை வலையமைப்பும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் இலங்கை குறித்த எரிபொருளின் தரம் தொடர்பான திட்ட வரைபுகளை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 4 யூரோ தரநியமங்களுக்கு ஏற்றவாறு இலங்கையின் எரிபொருளின் தரம் தொடர்பாக தரநியமங்களை அதிகரிப்பதற்கு அதனூடாக முன்மொழியப்பட்டுள்ளது. வலுவாதார வலுசக்தி நோக்கங்களை வெற்றிகொள்ளும் மூலோபாய ரீதியாக திட்டமிடப்பட்டிருப்பினும் பொது போக்குவரத்து சேவை துறையில் செய்யப்படுகின்ற அவ்வாறான முதலீடுகளின் மூலம் திணைக்களதிற்கு சாதகமான தீர்வுகள் கிடைக்கப் பெறும்.

பசுமை கட்டிடங்கள் என்பது மூலோபாய ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்றன இன்னுமொரு துறையாகும். நகர அபிவிருத்தி சபையினால் அண்மைக்காலமாக பசுமை கட்டிடங்கள் தொடர்பான தகுவிதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அரசாங்க கட்டிடங்களின் அபிவிருத்தி பணிகளின் போது பசுமை கட்டிட எண்ணக்கருவினை கையாள வேண்டுமென அரசினால் வெளியிடப்பட்டுள்ளது. ஓட்டு மொத்தமாக நோக்கும் போது வலுவாதார வலுசக்தி மூலோபாயங்களை கையாள்கின்ற சில மூலோபாய கூறுகளை படிப்படியாக செயலுருப்படுத்தும் நிலை தற்போது காணப்படுகின்றது. இதன்போது மேலெழுகின்ற சவால்களாக விளங்குவது வலுசக்தி துறையிலே உண்மையிலேயே வலுவாதார மாற்றமொன்றினை எற்படுத்தக்கூடிய வகையில் அவ்வாறான அனைத்து மூலோபாய செயற்பாடுகளினதும் வலுவினை விருத்தி செய்வதாகும்




## தற்போதைய நிலை மற்றும் போக்கு

உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களுக்கமைய இலங்கையில் நகரமயப்படுத்தல் ஒரு மந்த அளவிலேயே மேற்கொள்ளப்படுகின்றது.[19] எவ்வாறாயினும் தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் 2050 திட்டம் (வரைவின் மூலம்) ஊடாக சமர்ப்பிக்கப்படும் கருத்து, இலங்கையில் நகரமயமாக்கல் அதற்கே உரித்தான வகையில் மேற்கொள்ளப்படும் எனவும் நகரப் பிரதேசங்களாக குறித்தொதுக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து தூரத்தில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் நகர வாழ்க்கைக்கு தம்மை பழக்கிக் கொண்டுள்ளனர் என்பதாகும். தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் 2050 திட்டத்தில் (வரைவு) மதிப்பீட்டிற்கமைய நாட்டின் சனத்தொகையில் அரைவாசி பேர் 60% வீதமானோர் நகரமயமாக்கலுக்கு உட்பட்டுள்ளதுடன் மொத்த நிலப்பகுதியில் பத்தில் ஒரு பிரதேசத்தில் ஒன்றிணைந்துள்ளனர்.[20]

முன் அனுமானங்களுக்கமைய 2030 ஆம் ஆண்டளவில் சனத்தொகையில் 80% வீதமானோரில் 80 % இனை விட அதிகமான அளவிற்கு நகரமயமாக்கலை எதிர்பார்க்கின்றனர். (இலக்கு 11.3) ஏனைய பெரும்பாலான நாடுகளில் போன்று இலங்கையிலும் நகரமயமாக்கல் காரணமாக பிரதானமாக வீட்டு வசதிகளை வழங்குதல் போக்குவரத்து மற்றும் சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் அதனை அண்டிய சவால்களும் மேலெழுந்துள்ளன.

அரசாங்கம் மற்றும் தனியார்துறையினால் அமுல்படுத்தப்படுகின்ற வீடமைப்பு வசதிகளை வழங்கும் செயற்திட்டங்கள் காரணமாக நிரந்தர வீடுகளில் வசிக்கும் மக்களின் சதவீதத்தை நோக்கும் போது இலங்கை சிறந்த மேம்பாட்டினை அடைந்துள்ளது. புள்ளிவிபரங்களுக்கமைய இச் சதவீதம் 1981 இல் 42% இலிருந்து 2012 ஆம் ஆண்டில் 81% ஆக அதிகரித்து சென்றுள்ளது. 2012 ஆம் ஆண்டில் குடிசன மற்றும் வீடமைப்பு புள்ளிவிபரங்களுக்கமைய சனத்தொகையில் 17.8% மற்றும் 0.8% மானோர் அரைவாசியளவு நிரந்தர அல்லது தற்காலிக பொருட்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் வசிக்கின்றனர்.[22] 11.1 இலக்குக்கமைய முடுக்கு வீடுகளில் வசிப்போரின் எண்ணிக்கை 0.8% மாத்திரமாகும்.

அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட வீட்டு தேவைகளின் மதிப்பீடுகள் மற்றும் தரவுக் கணிப்பீடுகள் மூலம் தற்காலிக வீடமைப்புகளின் எண்ணிக்கை (80,615) உயர் மதிப்பீடு கொழும்பு மாவட்டத்திலே காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக காணி உரித்துரிமை அற்ற, வீடுகளற்ற குடும்பங்களின் எண்ணிக்கையும் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகரித்துள்ளதுள்ளதுடன், கம்பஹா மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்கள் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளன. (குறிப்பு 4.7)

---

19 Ellis, Peter; Roberts, Mark. 2016. Leveraging Urbanization in South Asia: Managing Spatial Transformation for Prosperity and Livability. Washington, DC: World Bank

20 இற்றைவரைப்படுத்தப்பட்ட தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் 2050 (வரைவு), தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம், 2018 பெப்ரவரி

21 இற்றைவரைப்படுத்தப்பட்ட தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் 2050 (வரைவு), தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம், 2018 பெப்ரவரி

22 இலங்கை வலுவாதார இலக்குச் சுட்டிகளின் நிலை 2017, தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

23 வீடுமைப்பு மற்றும் நிர்மாணிப்புத்துறை அமைச்சசு (2016), வீடமைப்புத் தேவைக்கான மதிப்பீடு மற்றும் தரவுக் கணிப்பீடு 2016

நகரப் பிரதேசங்களில் வீடுகள் தொடர்பாக நிலவுகின்ற உயர் மட்டத்திலான கேள்வியினை பூர்த்தி செய்யும் வகையில் 2016 ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளில் அடிமட்டத்திலிருந்து நடுத்தர அளவிலான வருமானம் பெறுகின்ற குழுக்களுக்கு 50,000 வீட்டு அலகுகளை வழங்குவது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் செயற்திட்டமொன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் 6,953 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கமைய 2018 ஆண்டில் மேலும் 5,680 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கான திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதன்கீழ் சில வீட்டு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் அரச அலுவலர்கள் தொடர்பான உத்தேச வீடமைப்பு திட்டங்கமும் அதில் ஒன்றாகும்.

**உரு 4.7: இலங்கையில் வீடுகளற்ற மற்றும் காணிகளற்ற குடும்பங்களின் எண்ணிக்கை**




மூலம் : வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு

போக்குவரத்து என்பது உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவை வழங்கல் ஆகிய இரு பிரிவுகளையும் பாரியளவில் மேம்படுத்தப்பட வேண்டியுள்ள மிகவும் முக்கியத்துவம் பெறுகின்ற ஒரு துறையாகும். ஒட்டுமொத்த மோட்டார் போக்குவரத்துக்களில் 47% இற்கு அதிகளவில் (இலக்கு 11.2) மோட்டார் பஸ் வண்டிகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற போக்குவரத்து நடவடிக்கைகள் 8.4% வீத பங்களிப்பை வழங்குகின்றது. இலங்கை போக்குவரத்து சபையினால் நாட்டின் அரச பஸ் வண்டிகளின் மூலம் தொடரும் போக்குவரத்து நடவடிக்கைகள் கையாளப் படுகின்றன. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை ஆகியவற்றினால் தனியார் பஸ் சேவை தொடர்பான கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த சில வருடங்களாக பொது போக்குவரத்து சேவையை பயன்படுத்துகின்ற பிரயாணிகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதுடன் அது சம்பந்தமாக புள்ளிவிபரங்களும் இங்கு தரப்பட்டுள்ளது. (குறிப்பு 4.8)

**உரு 4.8: பொது போக்குவரத்து சேவையை பயன்படுத்துகின்ற பிரயாணிகளின் எண்ணிக்கையின் அதிகரிப்பு**




Source: National Transport Statistics 2016

மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சினால் வீதிப் போக்குவரத்து நெரிசல், வீடமைப்பு வசதிகள், பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் பொது வசதிகள் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் நகர பொருளாதாரத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஆகியனவற்றை குறுகியகால அடிப்படையில் தீர்ப்பது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். மேல்மாகாணத்தில் மூலோபாய ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்ற 21 நகர்ப்புறங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக மாநகர மற்றும் மேல் மாகாண அமைச்சினால் 'சுகித்த புறவர' நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது நாடு பூராவும் மேலும் நகர் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக அந்நிகழ்ச்சித்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்து சேவையை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும் பொது போக்குவரத்து சேவைகளின் தரத்தில் நிலவுகின்ற குறைபாடுகள் தற்போதைய திட்டத்தில் காணப்படும் பல்வேறு அசௌகரியங்களுக்கான காரணமாக பங்குதாரர்களுடான கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டப்பட்டது. போக்குவரத்து சேவைகளின் தரம் குன்றிய அளவில் காணப்படல், நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களை தனியார் போக்குவரத்து மூலகங்களைப் பயன்படுத்துவதற்குத் தள்ளப்படுவதற்கான பிரதான காரணமாகுமென பங்குதாரர்கள் குறிப்பிட்டனர். இதன் விளைவாக நகரங்களும் போக்குவரத்து சம்பந்தமான பெரும்பாலான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வந்துள்ளதுடன், 2000 ஆண்டில் இருந்து நாட்டில் வாகனங்களின் எண்ணிக்கை மும்மடங்காக அதிகரித்துள்ளது. இந்நிலைமையை அடையாளங் கண்ட இலங்கை போக்குவரத்து சபையினால் சமூகத்தின் பல்வேறு பகுதியினருக்கும் நம்பகரமான போக்குவரத்து சேவையை வழங்குமுகமாக சில நிகழ்ச்சித் திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டவாறு முன்னெடுக்கப் பட்டுள்ளன.

i. ***கெமி செரிய*** செயற்திட்டம்: 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்திட்டத்தின் நோக்கம் கிராமிய பிரதேசங்களில் போக்குவரத்து வசதிகள் அற்ற மக்களுக்கு நம்பகரமானதும் இலாபகரமானதுமான போக்குவரத்து சேவையை வழங்குவதேயாகும்.

ii. ***நிசி செரிய*** செயற்திட்டம்: இரவு காலங்களில் நம்பகரமானதும், தொடரந்தேச்சையானதுமான பஸ்வண்டி சேவைகளை வழங்குவது இதன் நோக்கமாகும்.

iii. ***சிசு செரிய:*** பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப் படுகின்ற இந்த சிசு செரிய செயற்திட்டத்தின் மூலம் நம்பரகரமானதும் சலுகை அடிப்படையிலும் பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்த எதிர்பார்க்கப் படுகின்றது

மேலும் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதைகளில் பெரும்பாலும் நெரிசல் நிலவுகின்ற நேரங்களில் பஸ்வண்டிகளுக்கு முன்னுரிமைப் பாதை நிரல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இயற்கை அனர்த்தங்கள் அடிக்கடி நிகழுதல் மற்றும் அவற்றின் வலிமை அதிகரிப்பதும் நாட்டின் பெரும்பாலான பொருளாதார பிரிவுகள் முகம்கொடுக்கின்ற பிரதான பிரச்சினையாகும். உதாரணமாக 2016 ஆம் ஆண்டு மே மாத நடுப்பகுதியில் இலங்கையில் பெய்த பெருமழையினால் 25 மாவட்டங்களுள் 24 மாவட்டங்கள் பாதிப்புக்குட்பட்டன. 2016 மே மாதம் இடம்பெற்ற அனர்த்தம் சம்பந்தமாக அனர்த்தத்திற்குப் பின்னரான தேவைகளது மதிப்பீட்டிற்கமைய நாட்டிற்கு ஏற்பட்ட முழுமொத்த இழப்புக்களும் முறையே ரூபா 87,027 மில்லியன் மற்றும் ரூபா 12,816 மில்லியனுக்கு அதிகமாகும். பௌதீக வளங்களுக்கு ஏற்பட்ட மற்றும் உற்பத்தி துறைகளின் நட்டமாக அளவீடு செய்யப்பட்ட பொருளாதார பாதிப்புகள் 2015 ஆம் ஆண்டின் மொத்த தேசிய உற்பத்தியின் 0.11% மற்றும் 0.78% மானதென மதிப்பிடப்பட்டுள்ளது. நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் சமூக துறைகளிலே அதிகூடியவில் காணக்கூடியதாக இருந்தன. இதன் போது 93 மரணங்களும் 117 தனிநபரகள் காணாமற்போயுள்ளனர். (இலக்கு 11.5)[24] மனித செயற்பாடுகள் மற்றும் செறிவூட்டப்பட்ட சூழல் அதிகப்படுத்தப்பட்டதன் காரணமாக, காலநிலை மாற்றங்கள் வாயிலாக ஏற்படுகின்ற அனர்த்தங்களில் நகர புறங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய அனர்த்தங்கள் மூலம் மனிதஉயிர்கள் மற்றும் பொருளாதார சொத்துக்களுக்கு பாரியளவில் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. மெட்ரோ கொழும்பு நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சினால் கொழும்பு நீர் வடிநிலத்தில் வெள்ளம் மற்றும் வடிகாலமைப்பு முகாமைத்துவத்தை மேம்படுத்துவது தொடர்பாக முன்னுரிமையளித்து செயற்படுகின்றது.

வளி மாசடைதலானது, இலங்கையில் கொழும்பு மற்றும் கண்டி போன்ற நகர் பிரதேசங்களில் சுற்றாடல் பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் சில வளித்தர நிலை முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக, சில சுட்டிகளை நோக்கும்போது வளித்தரம் மேம்படுத்தப்பட்டு வருகின்ற நிலை காணப்படுகின்றது. 2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வாகன புகை பரிசீலனை நிகழ்ச்சித் திட்டம் வளியின் PM 10 உள்ளடக்கத்தினை 62-65 µg/m3.[25] வரை குறைப்பதற்கு துணைபுரிந்தது. தற்போது இலங்கையில் அளவீடு செய்யப்படுவது PM 10 மட்டம் மாத்திரமாவதுடன், அளவீடுகள் கொழும்பு நகரத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது. உரிய உபகரணங்கள் இல்லாத காரணத்தினால் தற்போது PM 2.5 அளவிடப்படுவதில்லை.

தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களின் சுற்றுப்புற வளித்தர நிலை (PM 10 மற்றும் 2.5 ஆகிய இரண்டும் உள்ளடங்கிய) அளவீடு செய்வது தொடர்பாக நடமாடும் கண்காணிப்பு நிலையமொன்று காணப்படுகின்ற போதிலும் வளி மாசடைதல் தொடர்பான முறைசார்ந்த தரவுகளை உருவாக்கும் பொருட்டு அது போதுமானதாக அமையவில்லை. இவ்வாறு அவசியமான உபகரணங்கள் இல்லாமையின் காரணமாகவும் இலங்கையில் நகர வாயு நிலையினை அளவீடு செய்வது பாரியளவில் வரையறுக்கப்பட்டுள்ளது. (இலக்கு 11.6) வளி மாசடைதலை வீழ்ச்சியடைய செய்யும் பொருட்டு சுத்தமான வளியினை 2025 செயற்பாட்டு திட்டம் மகாவலி அபிவிருத்தி அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சினால் தயாரிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இச்செயற்பாட்டு திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு வளி வள முகாமைத்துவ நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நகர கழிவு முகாமைத்துவம் இலங்கையில் பாரிய சுற்றாடல் பிரச்சினையாக மேலெழுந்துள்ளது. அதிக சனத்தொகை காணப்படுகின்ற நகரப் பிரதேசங்களில் திண்மக் கழிவுகள் பாரியளவிலும் துரிதமாகவும் உருவாக்கப்படுவதுடன் இப்பெருந்தொகையான கழிவுகளை வெளியேற்றுவது நாடு பூராவும் அனைத்து நகரங்கள் மற்றும் மாநகர பிரதேசங் களுக்கு பெரிய சுமையாக விளங்குகின்றது. இலங்கையில் வெளியிடப்படுகின்ற கழிவின் அளவு 1999 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 6400 தொன் ஆக இருந்து 2009 ஆம் ஆண்டில் இருந்து அது நாளொன்றுக்கு 10786 ஆக அதிகரித்துள்ளது. நாட்டில் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளின் அதிகளவு (33%) மேல் மாகாணத்திலிருந்தே கிடைக்கப்பெறுகின்றது. அம் மாகாணத்தில் கழிவுகளை சேகரிக்கும் வேகம் 51% மாக அறியப்பட்டுள்ளது (இலக்கு 11.6)[26] மெட்ரோ கொழும்பு வலயம், நகரை அண்டியுள்ள பிரதேங்கள் மற்றும் புத்தளம் மாவட்டத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளை இறுதியாக வெளியேற்றும் வசதிகளை வழங்கும் பொருட்டு மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சினால் திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்றிட்டம் அருவக்கல்லில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

## இடைவெளிகள் மற்றும் சவால்கள்

திட்டத்திற்கமைய இடம்பெறாத நகர அபிவிருத்தி பணிகள், இலங்கையில் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் ஏற்படுவதற்குரிய காரணங்களாக அமைகின்றன. தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் 2050 திட்டத்தில் தற்போது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அபிவிருத்திச் செயற்பாடுகளை திட்டமிடல் மற்றும் செயற்படுத்துவது தொடர்பாக தேசிய மட்டத்தில் பரந்துபட்ட வழிகாட்டல்களை அனைத்து அபிவிருத்தி முகவராண்மைகளுக்கும் வழங்குவது இக் கொள்கையின் நோக்கமாகும். அனர்த்த ஆபத்தினை வீழ்ச்சியடைச் செய்யும் பொருட்டு நகர திட்டமிடல் கொள்கை காலநிலை மாற்றம் தொடர்பான கொள்கை மற்றும் அனர்த்த ஆபத்து முகாமைத்துவ கொள்கை ஆகிய கொள்கைகளில் காலநிலை மாற்றம் தொடர்பாக அவதானம் செலுத்துவது குறித்தும் உள்ளடக்குவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

---

24 இலங்கை அனர்த்தத்திற்குப் பின்னரான மதிப்பீடு, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு, கொழும்பு.

25 தூய வளி 2025: வளித்தர நிலை முகாமைத்துவம் தொடர்பான செயற்பாட்டுத் திட்டம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சசு, 2016 மே.

26 ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (2016), இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய தரவு சேகரிப்பு கணிப்பீட்டின் இறுதி அறிக்கை

வீட்டு வசதிகளை வழங்கும் பிரிவினை நோக்கும் போது, வீடுகளை மக்களுக்கு கொள்வனவு செய்யக்கூடியவாறு நியாயமான விலைகளிலும், தரமான வீடுகள் என உறுதிப்படுத்தப்படுவதுடன் துரித நகரமயம் மற்றும் வளர்ச்சியடையும் நடுத்தர வகுப்புக் காரணமாக எழுகின்ற கேள்விகளை பூர்த்தி செய்தல் அப்பிரிவின் பிரதான சவாலாக மாறியுள்ளது. மேலும் தகுந்த தரத்திலுள்ள காணிகள் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல், பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் பற்றாக்குறை மற்றும் வீடு நிர்மாணிப்பு தொடர்பாக செலவிடப்படும் அதிக கிரயம் ஆகிய பிரச்சினைகளும் அதனுடன் தொடர்புபட்டு காணப்படுகின்றன. மேல்மாகாண மாநகர அபிவிருத்தி செயற்திட்டம், மூலோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நகர புதுப்பிக்கத்தக்க நிகழ்ச்சித்திட்டம் ஆகியன நகரமயமாக்கல் மற்றும் அதனை அண்டிய பெரும்பாலான பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்கும் நோக்குடன் அமுல்படுத்தப்படுகின்ற முக்கியமான செயற்திட்டங்களாகும்.

நகரப் பிரதேசங்களில் நிலவுகின்ற வாகன நெரிசல், பொது போக்குவரத்து சேவையினை ஊக்குகுவித்தல் வீதி விபத்துக்களை குறைப்பதனூடாக வீதி பாதுகாப்பினை மேம்படுத்தல், நாட்டில் அதிகரித்து செல்லும் வாகனங்களின் எண்ணிக்கையை முகாமைத்துவப்படுத்தல் மற்றும் போக்குவரத்து புகை பரிசோதனையினை வீழ்ச்சியுறச் செய்தல் போன்றன போக்குவரத்து துறைக்குரியதாக நிலவுகின்ற பிரதான சவால்களாகும். இலங்கை தேசிய போக்குவரத்து கொள்கை வரைவின் (2018 ஜனவரி) இலக்குகளில் 11.2 இலக்கும் ஏற்புடையதாகும். அவ்வாறே போக்குவரத்து துறையில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது காலநிலை மற்றும் அனர்த்தங்களின் பின்னர் யதார்த்த நிலைமையை மீளுருவாக்குவது தொடர்பான விடயங்களும் இக்கொள்கையின் மூலம் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கு மேலதிகமாக, செயற்பாட்டு வேகத்தினை அதிகரித்தல், புதிய புகையிரத வீதிகளை நிர்மாணித்தல் ஆகிய திட்டங்களின் மூலம் புகையிரத போக்குவரத்து துறையினையும் மேம்படுத்துவது தொடர்பாக அமுல்படுத்தப்படுகின்ற சில செயற்திட்டங்கள் காணப்படுகின்றன. வீதிப் பாதுகாப்பானது இலங்கையின் போக்குவரத்து துறையில் இன்னுமின்னும் பிரதானமாக கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும். 2013 ஆம் ஆண்டில் இலங்கையில் மதிப்பிடப்பட்ட வீதி வாகன விபத்துக்களினால் ஏற்பட்ட மரணங்களின் விகிதாசாரம் (சனத்தொகை 100,000 பேருக்கு) 17.4 ஆக இருந்ததுடன் அதற்கமைய 179 நாடுகளிடையே இலங்கை 90 ஆவது இடத்திலுள்ளது. 2015 ஆம் ஆண்டில் 38,107 அவசர வீதி விபத்துக்கள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், அதில் 2,600 பாரிய விபத்துக்களாகும்.

கழிவு முகாமைத்துவம் சம்பந்தமாக நோக்கும் போது, பெரும்பாலான பிரதேச அதிகார சபைகளினால் கையாளப்படுகின்ற அப்புறப்படுத்தும் சாதாரண திட்டம் “திறந்த வெளியில் கழிவுகளை கொட்டுதல்” ஆக காணப்படுகின்றது. கழிவுகளை அவ்வாறு திறந்த வெளியில் கொட்டுவதன் காரணமாக ஏற்படும் சுற்றாடல் மற்றும் துப்பரவேற்பாட்டு தொந்தரவுகள் மற்றும் நகர எல்லையினுள் அதிக சனத்தொகையின் காரணமாக கழிவுகளை வெளியேற்றுவதற்கு தகுந்த பிரதேசங்களை கண்டு கொள்வதிலுள்ள சிக்கல் என்பனவும் இதன் போது மேலெழுகின்ற குறிப்பிடத்தக்க மட்டத்திலுள்ள பிரச்சினைகளாகும். இவ்வாறு நகரவாசிகளினால் முறையற்ற விதத்தில் கழிவுகள் வெளியேற்றப்படுவதன் காரணமாக நீர்ப்படுக்கைகள் மற்றும் பிற சுற்றாடல் ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்ற வாசஸ்தலங்களும் மாசடைகின்றன. தமது பிரதேசத்தின் கழிவு முகாமைத்துவத்தினை மேற்கொள்வது தொடர்பாக பிரதேச அதிகாரபீடங்களை வலுவூட்ட வேண்டிய தேவை இதற்கமைய மேலெழுந்துள்ளது எனலாம்.

## முன்னோக்கிய பாதை...

இலங்கையின் நகரங்களின் வலுவாதார நிலையை மேம்படுத்துவது தொடர்பாக ஒன்றிணைந்த அணுகுமுறையொன்றினூடாக தீர்வுகாண வேண்டிய பல துறைகள் காணப்படுகின்றன. அவை மேம்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறான அணுகுமுறையொன்றின் முக்கிய கூறுகளாக அமைய வேண்டியவை, பௌதீக திட்டமிடல் செயற்பாட்டினை முன்னெடுத்தல், பொது போக்குவரத்து துறையில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளின் தரத்தினை அபிவிருத்தி செய்தல், அனர்த்தமொன்றிக்கு பின்னர் யதார்த்த நிலைமையை மீளுருவாக்குவதற்கான இயலுமையை அதிகரித்தல் மற்றும் கழிவு முகாமைத்துவம் போன்ற நகர சேவைகளை மேம்படுத்தல் என்பனவாகும்.

பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் தேசிய பௌதீக் திட்டமிடல் கொள்கை மற்றும் 2050 திட்டம் தற்போது இற்றைவரைப்படுத்தப்பட்டு வருகின்றது. அவை உத்தியோகபூர்வமாக பயன்படுத்தப்படும் போது நாட்டில் அனைத்து அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பான ஒட்டுமொத்த செயற்பாட்டு தகு விதிகள் அவற்றின் மூலம் வழங்கப்படும். பிரதேச மற்றும் துறைசார் எதிர்கால திட்டங்கள் அனைத்தும் தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கைக்கமைய அபிவிருத்தி செய்யப்படுவதுடன், தற்போதுள்ளவை அதற்கமைய மீண்டும் வடிவமைக்கப்படும். அனைத்து அபிவிருத்தி முகவராண்மைகளினதும் திட்டங்கள் மற்றும் கொள்கைகளில் காண்பிக்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும். திட்டமிடல் செயற்பாட்டினை வலுப்படுத்துமுகமாக குறித்த முகவராண்மைகளுக்கு அவசியமான வகையில் இயலளவு விருத்தி செய்யப்படல் வேண்டும்.

பொது போக்குவரத்து முறைமையில் கவனம் செலுத்தி, முறைமையினுள் நிலவுகின்ற தற்போதைய செயற்திறனின்மைகளை கட்டுப்பாட்டிற்கு கொண்டு வருவது அத்தியாவசியமாகும். இது கொள்கை வகுப்பாளர்களினதும் பொது மக்களினதும் அவதானத்திற்குட்பட்டவொரு துறையாகும். அதன் விளைவாக கடந்த தசாப்தத்தில் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு பாரியளவில் அரச முதலீடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், நாட்டில் போக்குவரத்து, வீதி, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி ஆகிய துறைகள் சம்பந்தமாக பொறுப்பு வகிக்கும் அமைச்சுக்கள் மற்றும் நிரல் முகவராண்மைகளினால் சில திட்டங்கள் / செயற்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

போக்குவரத்து சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் சிறியளவிலே காணப்படுகின்றன. ஆதலால், பொதுப் போக்குவரத்து முறைமையின் ஒட்டுமொத்த வினைத்திறனையும் அதிகரிப்பது தொடர்பாகவும் சுற்றாடல் பாதிப்புக்கள் போன்ற தீங்குபயக்கும் தாக்கங்களை வீழ்ச்சியுறச் செய்வது தொடர்பாகவும், தற்போது எடுக்கப்பட்டு வரும் முன்னாயத்தங்களை சிறந்த முறையில் ஒருங்கிணைப்பது அவசியமாகும். மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சினால் கொட்டாவ நகரில் பன்முக மாதிரிப் போக்குவரத்து நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், இன்னும் பல நகரங்களிலும் அவ்வாறான சில நிலையங்களை தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், நான்கு மென் புகையிரத பாதைகளும், நாட்டில் சில உள்ளக நீர் போக்குவரத்து முறைமைகளும், கொழும்பின் பெருநகர் பகுதியில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

நகர திட்டமிடல் கொள்கையினுள் அனர்த்த முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றத் தாக்கங்கள் என்பனவும் உள்ளடக்கப்படல் வேண்டும். இதில் எல்லா மட்டங்களில் இருந்தும் நகரத் திட்டமிடலில் காலநிலை மாற்றம் பற்றிய கருத்தாய்வுகளை ஒன்றிணைப்பது அவசியமாகும். தேசிய பங்குதாரர்கள் தொட்டு பிரதேச அதிகாரிகள் வரை பிரதேச மட்டத்திலான காலநிலை மாற்றங்களுக்கு பதிலளிக்கத்தக்க அளவில் இயலளவினை வலுவூட்டுதல் வேண்டும். அனர்த்தங்களை அண்டிய நட்டங்கள் மற்றும் இழப்புக்களை மட்டுப்படுத்தக்கூடிய வகையில் அனர்த்தங்களுக்கு முகங்கொடுப்பதற்குரிய முன்னாயத்த இயலளவு மேம்படுத்தப்படல் வேண்டும். அனைத்துவித உட்கட்டமைப்பு வசதிகளது அபிவிருத்திச் செயற்பாடுகளின் போதும், அனர்த்திற்குப் பின்னரான மீளுருவாக்கத் திறன் தொடர்பாக கவனஞ் செலுத்தப்பட வேண்டியதுடன், அது அனர்த்தங்கள் குறித்த பொருளாதார இழப்புக்களைக் குறைப்பதற்கும் வழிவகுக்கும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தேசிய அனர்தத முகாமைத்துவ திட்டம் 2018 – 2030 தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அது அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும். அத் திட்டமானது நான்கு விடயப்பரப்புக்களை அடிப்படையாக கொண்டுள்ளது. ஆவையாவன, (1) அனர்த்த ஆபத்தினை புரிந்துகொள்ளல் (2) அனர்த்த ஆபத்தினை முகாமைப்படுத்தல் (3) அனர்த்தின் பின்னரான மீளுருவாக்கம் தொடர்பான அனர்த்த ஆபத்து குறித்து முதலீடு செய்தல் (4) “மிகச் சிறந்ததாக மீளக் கட்டியெழுப்புதல்”, மீள் நிர்மாணித்தல் மற்றும் புனரமைப்பு சம்பந்தமாக பயனுறுதிமிக்க வகையில் பதிலளித்தக்கவாறு அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய முன்னாயத்தங்களை மேம்படுத்தல்.

தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் 2050 திட்டத்தின் மூலம் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும் செயற்பாட்டுத் தகுவிதிகள் வழங்கப்படுவதுடன் அனைத்து அபிவிருத்தி முகவராண்மைகளும் அதற்கமைய செயற்படல் வேண்டும். அவ்வாறே, குறித்த முகவராண்மைகளிலுமுள்ள அனைத்து அலுவலர்களதும் இயலளவு விருத்தி செய்யப்பட வேண்டும்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு நில அளவையியல் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து நகர மத்திய நிலையங்கள் தொடர்பாக 1: 5000 அளவில் டிஜிட்டல் வரைபடங்களைத் தயாரித்துள்ளது. நகர மத்திய நிலையங்களில் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும் போது அனர்த்த விபரங்களையும் அதில் உள்ளடக்குவது தொடர்பாக இவ் வரைபடங்களைப் பயன்படுத்த முடியும்.

இலங்கையில் நகர கழிவு முகாமைத்துவத்தினை கையாள்வதற்கு பல்வகை மூலோபாய அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன. அதன் போது கழிவு முகாமைத்துவம் தொடர்பான சட்ட ரீதியான சட்டகம், நிறுவக உத்தியோகபூர்வ கட்டளைகள் மற்றும் தொழிநுட்ப தரநியமங்கள் என்பன தாபிக்கப்படுவது அவசியமாகின்றன. உருவாகும் இடங்களில் இருந்தே கழிவுகளை முறையாக கையாள்வதை குறுகியகால மூலோபாயமாக கொள்ளமுடியும். துப்புரவேற்பாடு குறித்தும், கழிவுகளை இட்டு காணிகளை நிரப்புதல், கழிவுகளிலிருந்து வேறு பொருட்களை உருவாக்குவதற்கான அணுகுமுறைகள் மற்றும் வலுவுறுதிமிக்க வகையிலான பயன்பாடு தொடர்பான நடத்தைசார் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்தும் மத்தியகால மற்றும் நீண்டகால கொள்கைகள் குறித்தும் அவதானஞ் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

# 12 பொறுப்புக்களுடன்கூடிய பயனீட்டளவு மற்றும் உற்பத்தி

## தற்போதைய நிலை மற்றும் போக்கு

வலுவாதார பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி என்பன பொருளாதார, சமூக வாழ்வில் பெரும்பாலான துறைகளில் பரந்துபட்டுக் காணப்படுகின்றன. ஆதலால் வலுவாதாரப் பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி என்பனவற்றை தனி அமைச்சு ஒன்று அல்லது நிரல் முகவராண்மை ஒன்றின் தலையீடுகளின் மூலம் மாத்திரம் அடைந்து கொள்ள முடியாது. அனைத்து பொருளாதார துறைகளிலும், வலுவாதார பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி சம்பந்தமான ஒட்டுமொத்த வழிகாட்டல்களையும் வழங்குகின்ற, வலுவாதார பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி தொடர்பான தேசிய கொள்கை வரைவு தயாரிக்கும் பணியை மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு தலைமைப் பொறுப்பேற்று முன்னெடுகின்றது. இதன் கீழ் குறித்த 46 தேசிய கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் இடைவெளிகளும் இனங்காணப்பட்டுள்ளன.[27] கொள்கை வரைவானது பிரதான 12 விடயப் பரப்புக்களை உள்ளடக்குகின்றது; அவையாவன, காற்று, நீர், உணவு, நலன் பயக்கும் சுற்றாடல், வலுசக்தி, சுகாதாரம், போக்குவரத்து, கல்வி தொடர்பாடல், விஞ்ஞானம் தொழில்நுட்பம், கைத்தொழில் சுற்றுலாத்துறை மற்றும் கழிவு முகாமைத்துவம் என்பனவாகும். வலுவாதார அபிவிருத்தி இலக்கு 12 இன் கீழ் இனங்காணப்பட்டுள்ள பல பிரிவுகள் இக் கொள்கை வரைவின் மூலம் உள்ளடக்கப்படுகின்றன. அதற்கமைய ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வலுவாதார பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களில் (இலக்கு 12.1 மற்றும் 12.2) பத்தாண்டு கால சட்டகத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கேந்திர மையமாக அமைச்சு பணியாற்றி வருகின்றது.

வலுவாதார அபிவிருத்தி மற்றும் உற்பத்தி தொடர்பான செயற்திட்டம் ஒன்றான *SWITCH Asia* ஒத்துழைப்புடன் இலங்கைக்கான தேசிய கொள்கை கூறுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. வலுவாதார பயன்பாடுகள் மற்றும் உற்பத்திகளை மேம்படுத்துவது தொடர்பாக தகுந்த பொருளாதார மற்றும் கண்காணிப்பு கொள்கைகளை தேர்ந்தெடுத்தல், அவற்றினை கையாளுதல், நடைமுறைப்படுத்துதல் என்பவற்றின் போது, இலங்கை அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதும் அதனூடாக பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி முறைகளின் நீண்டகால வலுவாதார நிலையை விருத்தி செய்வது இச் செயற்திட்டத்தின் நோக்கமாகும். இலங்கையில் வலுவாதாரப் பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி சம்மந்தமாக ஒருங்கிணைப்புடனும் வினைத்திறனுடனுமான ஊக்குவிப்புக்களை உறுதிப்படுத்தி நிறுவனக் கொள்கை சட்டகத்தினை வலுவூட்டுவது இதன் ஒட்டுமொத்த நோக்கமுமாகும்.

தேசிய உற்பத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கையில் 11 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. வலுவாதார பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி தொடர்பான வள ஆதாரமானது, பல்கலைக்கழகங்களுக்கும் மூன்றாம் நிலை பிரிவுகளுக்கும் மொடியூல் / கடன் அல்லது நோக்குநிலை நிகழ்ச்சித்திட்டங்களாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக செயற்பாட்டுடன் கூடிய ஆரோக்கியமான வாழ்க்கை முறை தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் முன்பள்ளிப் பிள்ளைகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களிடையேயும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவ் அணுகுமுறைகளின் மூலம் வலுவாதார பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி தொடர்பாக நாட்டு மக்களுக்கு விளக்கமளித்து, அதனூடாக ஆக்கபூர்வமான நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (இலக்கு 12.8)

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் மூலம் பசுமை அறிக்கையிடல் முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப் பசுமை அறிக்கையிடல் முறைமை 50 சுட்டிகளுடன் பணியாற்றுவதுடன் அது பொருளாதார சுட்டிகள் 6, சமூக சுட்டிகள் 20 மற்றும் சுற்றாடல் சுட்டிகள் 24 இனைக் கொண்டுள்ளது. முதலாவது பொருளாதார சுட்டியின் மூலம் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அமைப்பினால் உருவாக்கப்படும் நேரடி பொருளாதார மதிப்பீட்டின் மூலமேயாகும். (இலக்கு 12.6).

அறுவடைக்குப் பிந்திய இழப்பீடுகள் சம்பந்தமாக இலங்கையினால் இதுவரை உணவுகள் தொடர்பான பாதிப்புச் சுட்டி தயாரிக்கப்படவில்லை. எவ்வாறாயினும் அறுவடைக்குப் பிந்திய நட்டங்கள் பெரும்பாலும் விவசாய சந்தை பொருட்கள் தொடர்பாக தாக்கம் செலுத்துகின்ற பாரிய பிரச்சினையாக அறியப்படுகின்றது. அறுவடைக்குப் பிந்திய நட்டங்கள், நீண்ட காலத்திற்கு வைத்திருக்க முடியாத சில விவசாய உற்பத்தி முடிவுப் பொருட்களின் 40% வீத அளவு உயர் பெறுமானமிக்கதென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஏனைய பொருட்களான மரக்கறி, பழ வகைகள், மீன் என்பன அறுவடைக்குப் பிந்திய நட்டங்களில் இலகுவாக அடங்குகின்ற உணவு வகைகளாகும். ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் வருடாந்த அடிப்படையில் இலங்கையில் முக்கியமான உணவுப் பொருட்கள் அனைத்தினதும் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்கள் தொடர்பான தரவு முறைமையொன்று பேணப்பட்டு வருகின்றது. இலங்கையில் சுட்டியொன்றாக, அறுவடைக்குப் பிந்திய இழப்புக்கள் மற்றும் அது தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத போதிலும், எதிர்காலத்தில் அவ்வாறான சுட்டிகளை மேம்படுத்துவது தொடர்பாக தரவுகள் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் அதனூடாக அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களை குறைப்பது தொடர்பாகவும் கண்காணிக்க முடியும். எவ்வாறாயினும் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளன. இலங்கையை பொறுத்த வரையில் கிடைக்கப்பெறும் தரவுகளுக்கு அமைவாக அறுவடைக்குப் பிந்திய உணவு இழப்புச் சுட்டி ஒன்றை மேம்படுத்துவதற்கான இயலுமை காணப்படுகின்றது. (இலக்கு 12.3).

இலங்கையில் தீங்குபயக்கும் கழிவுப் பொருட்கள், அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள கழிவுகளாக வகைப்படுத்தப்படுவதுடன் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள கழிவு முகாமைத்துவம் தொடர்பான செயற்பாட்டு தகுதிவிதிகளின் மூலம் கண்காணிக்கப்படுகின்றன. அட்டவணைப்படுத்தப்பட்ட கழிவுகளினால் கழிவு உருவாக்குநர்களினால் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள கழிவு முகாமைத்துவ அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள கழிவுகளை உருவாக்குகின்ற கம்பெனிகளின் கண்காணிப்பின் மூலம் இலக்காக கொள்ளப்படுவது அவ்வாறு அட்டவணைப் படுத்தப்பட்ட கழிவு முகாமைத்துவ அனுமதியுடனான கம்பனிகள் மாத்திரமேயாகும். அக் கம்பனிகளினால் அவர்களினால் அட்டவணைப்படுத்தப்படும் கழிவு வகைகள் மற்றும் போதிய அளவீடு தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அறிக்கையிடப்படல் வேண்டும்.

27 பங்குதாரர்களின் ஆலோசனைகளுக்கமைவான உள்ளீடுகள்
28 மேற்படி

2016 ஆம் ஆண்டளவில் சுமார் 350 அட்டவணைப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. 2003ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட கழிவுகளின் அளவு 53,000 தொன் ஆகும். (இலக்கு12.4).[29] இலங்கை அரசாங்கம் 2005 ஆம் ஆண்டில் நீடித்த சேதன மாசுகள் தொடர்பான Stockholm ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. அதன் கீழ் திருத்தப்பட்ட தேசிய திட்டம் ஒன்று 2015ம் ஆண்டிலிருந்து இலங்கையில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

பசுமை அரச பெறுகை கொள்கையொன்று இலங்கையில் வரைவு செய்யப்பட்டு வருவதுடன், அதனூடாக பசுமை அரச பெறுகையானது இலங்கையில் தேசிய ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்ற ஓர் அம்சமாக விளங்குகின்றது. பசுமை இலங்கை நிகழ்ச்சித் திட்டத்திற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தில் கைத்தொழில் பசுமை மயமாக்கல் தொடர்பான அதன் 9 ஆவது இலக்கின் கீழ் அரச கொள்கைக்கு உரியதான இரண்டு உருப்படிகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன; (அ) சுற்றாடல் நலன் பயக்கும் மூலப் பொருட்களை தெரிவு செய்தல் மற்றும் பெறுகை தொடர்பாக கைத்தொழில்களுக்கு வசதிகளை வழங்குவதற்கான செயற்பாட்டு தகுவிதிகளை விருத்தி செய்தல் மற்றும் (ஆ)பசுமை உற்பத்திகளைக் கொள்வனவு செய்தலை ஊக்குவித்தல் என்பனவாகும். செயற்பாட்டு திட்டத்தின் மூலம் இரு பணிகளினதும் மேற்பார்வை தொடர்பாக இரு சுட்டிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அவை முறையே செயற்பாட்டு தகுவிதி பயன்பாடு மற்றும் பசுமை உற்பத்தி கொள்வனவு வலையமைப்பின் பயன்பாடு என்பனவாகும். (இலக்கு 12.7)

இலங்கையின் கழிவு முகாமைத்துவம் பிரதானமாக உள்ளூராட்சி முகவராண்மைகளின் பொறுப்பிலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் மத்திய அரசாங்கத்தின் பல முகவராண்மைகளினால் உள்ளூராட்சி முகவராண்மைகளின் இயலளவு விருத்திக்கான உதவி வழங்குவதன் ஊடாகவும் மாற்றீட்டு கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவும் கழிவு முகாமைத்துவத்திற்கான வசதிகள் வழங்கப்படுகின்றன. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு, சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ துணை மத்திய நிலையம் மற்றும் பிரதேசத்தில் வசிக்கின்ற குடியிருப்பாளர்களினால் உருவாக்கப்படுகின்ற கழிவுகளை திரட்டுதல் மற்றும் அவற்றை வெளியேற்றுதல் தொடர்பான பொறுப்பு வகிக்கும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிராந்திய அதிகாரசபைகள் அதில் உள்ளடங்குகின்றன. நிறுவனங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. மேல் மாகாணத்தில் மாத்திரம் மேல் மாகாண சபையின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள கழிவு முகாமைத்துவ அதிகார சபையினூடாக கூட்டிணைந்த கழிவு முகாமைத்துவ முறைமையொன்று செயற்படுத்தப்படுகின்றது. மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட 2015 - 2020 தொடர்பான ஐந்தாண்டு செயற்பாட்டுத் திட்டத்தின் மூலம் மீள் சுழற்சி வீதத்தை 2015 ஆம் ஆண்டில் 17% வீதத்திலிருந்து 2020 ஆம் ஆண்டில் 38% வரை அதிகரிப்பதே நோக்கமாகும். (இலக்கு 12.5)

இலங்கைக்கு வருகை தருகின்ற சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையின் காரணமாக சுற்றுலா கைத்தொழில் துறைகளின் நீடு நிலைத்த தன்மையினை மேம்படுத்தல் தொடர்பாக அண்மைக்காலமாக அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது. அதன்போது சில பசுமை எண்ணக்கருக்களை உள்ளடக்குவது தொடர்பாக நட்சத்திர மதிப்பீடு திட்டம் அண்மையில் திருத்தி அமைக்கப்பட்டது. நீடு நிலைத்த சுற்றுலாக் கைத்தொழிலினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இலங்கையில் சுற்றுலாக் கைத்தொழில் தொடர்பான மூலோபாய திட்டம் 2017 - 2020 தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மூலோபாயங்கள் தொடர்பான செயற்பாடுகள், பொறுப்புக்களை வசிக்கின்ற முகவராண்மைகள், காலச் சட்டகம் மற்றும் விளைவுகள் என்பன இனங்காணப்பட்டுள்ளன.

மொத்த தேசிய உற்பத்தியின் ஒரு சதவீதமாக மொத்த புதைபடிம எரிபொருள் மானிய திட்டத்தின் அளவு சம்பந்தமாக இற்றைவரைப்படுத்தப்பட்ட தகவல்கள் இலங்கையில் காணப்படுவதில்லை. எவ்வாறாயினும் 2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு ஒன்றின் மூலம் வெளியிடப்பட்ட மானியங்கள் தொடர்பாக 0.8 சதவீதமும் வெளியிடப்படாத மானியங்கள் தொடர்பாக 1.0 சதவீதமும் ஆக அமைந்திருந்தது. [30]

நிபுணத்துவ ஆலோசனைகளுக்கு அமைய, சில உற்பத்திகள் தொடர்பாக சுற்றாடல் குறியிடலை அறிமுகப்படுத்துவதற்கு கொள்கைசார் சில அணுகுமுறைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. (உதாரணமாக CFL மின்குமிழ்களின் வலுசக்தி செயற்பாட்டு மட்டத்தின் அடிப்படையில் )

“சிறந்த விவசாய பயன்பாடுகளின் ஊடாக தேசிய மற்றும் ஏற்றுமதி சந்தைக்கு வழங்கப்படுகின்ற விவசாய வர்த்தக பொருட்களின் தரம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது தொடர்பான பொறிமுறை ஒன்றை தாபித்தல்” எனும் செயற்றிட்டம் விவசாய திணைக்களத்தின் விவசாய வர்த்தக ஆலோசனை பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கமைய பயிர்களை அடிப்படையாகக் கொண்ட மரக்கறிகள் மற்றும் பழங்கள் தொடர்பாக சிறந்த விவசாய பயன்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## இடைவெளிகள் மற்றும் சவால்கள்

வலுவாதார பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி மேம்பாட்டின் போது தன்னார்வத்துடன் பணியாற்றுவதை அடிப்படையாகக் கொண்ட தூண்டல்களை ஏற்படுத்துகின்ற கொள்கைகளை அதிகமாக கையாளப்படுவதுடன், சில பிரிவுகள் தொடர்பாக உத்தியோகபூர்வ கட்டளைகள் மூலம் தலையீடுகள் இடம்பெறுகின்றன. (உதாரணமாக அட்டவணைப்படுத்தப்பட்ட கழிவுகள்) தன்னார்வத்துடன் பணியாற்றும் போது பிரதான சவாலாக விளங்குவது அது மந்தகதியில் மேற்கொள்ளப்படுவதாகும். அது வலுவாதாரப் பயன்பாடுகள் மற்றும் உற்பத்தியின் நலன்கள் தொடர்பாக பங்காளர்களது அறிவு மற்றும் விழிப்புணர்வு மட்டத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது. வலுவாதார பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி தொடர்பான சில அணுகுமுறைகள் ஊடாக அவற்றில் கலந்து கொள்வோருக்கு வர்த்தக நலன்கள் கிட்டுவதுடன் (உதாரணமாக சுற்றாடல் குறியிடுதல், சிறந்த விவசாய பயன்பாடுகள்) அதன் போது அதனை கடை பிடிப்பது தொடர்பாக பங்காளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். ஏனைய சந்தர்ப்பங்களில் எடுக்கக்கூடிய பிரதான நடவடிக்கையாக, விழிப்புணர்வினை மேம்படுத்தல் மற்றும் அதனை கடைபிடித்தல் தொடர்பான ஊக்குவிப்புக் கட்டமைப்புக்கள் உருவாக்கப்படுவதைக் குறிப்பிடலாம்.

29 ஜப்பான் சர்வதேச பங்களிப்பு முகவராண்மை (2016, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தரவுகளைச் சேகரிக்கும் மீளாய்வின் இறுதி அறிக்கை

30 Baig, T., A. Mati, D. Coady, and J. Ntamatungiro (2007), Fiscal Affairs Department Domestic Petroleum Product Prices and Subsidies: Recent Developments and Reform Strategies, IMF Working Paper, International Monetary Fund

உதாரணமாக இலங்கையில் பசுமை அறிக்கையிடல் முறைமை தன்னார்வ அடிப்படையில் செயற்படுத்தப்படுகின்றது. அதற்கமைய அமைப்புக்களினால் இணக்கத்துடன் பணியாற்றுவதற்கு விரும்புகின்ற அறிக்கையிடல் மட்டத்திலான ஐந்து நடவடிக்கைகளின் கீழ் இது மேற்கொள்ளப்படும். முதலாவது நிரலின் கீழ் இரண்டு ஆண்டுகள் செல்லும்வரை அறிக்கையிடல் கட்டாயமாக அமையாது. இரண்டாம் நிரல் தொடர்பான அறிக்கையிடல் தன்னார்வத்துடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். மூன்றாவது நிரலில் இருந்து ஐந்தாவது நிரல் வரை அறிக்கையிடல் கட்டாயமாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

கட்டாயமாக மேற்கொள்ள வேண்டும் என கட்டளையிடப் படும்போது, இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதே பிரதான சவாலாக விளங்குகின்றது. இலங்கையில் அமுல்படுத்தும் அதிகாரிகளின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை இயலளவு குறைந்த மட்டத்தில் காணப்படுவதும் இதன்போது தடையாக கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் வலுவாதாரப் பயன்பாடுகள் மற்றும் உற்பத்திகள் சம்பந்தமாக பயனுறுதி மிக்க தீர்மானங்களை மேற்கொள்ளும் போது தகவல்கள் போதியளவில் இல்லாதிருத்தல் குறிப்பிடத்தக்கதோர் பிரச்சினையாகும். தீங்கு விளைவிக்கின்ற கழிவு முகாமைத்துவம் சம்பந்தமாக நோக்கும்போது உருவாக்கப்படுகின்ற கழிவுகளின் அளவு தொடர்பான புள்ளிவிவரங்கள் காணப்படாதமையினால் தீங்குவிளைவிக்கும் கழிவு முகாமைத்துவத்தில் அது பல பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன.

குறைந்த கிரயத்தின் கீழான கொள்வனவினை நோக்கமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட அரச பெறுகைச் செயற்பாடுகள் முற்றிலும் நீடு நிலைத்ததாக காணப்படுவதில்லை. சில சந்தர்ப்பங்களில் அவை பசுமை பெறுகையின் நோக்கங்களுடன் இணங்குவதில்லை. ஆதலால் குறுகியகால பொருளாதார நலன்கள் போன்று நீண்டகால வலுவாதார அபிவிருத்தி நோக்கங்களின் சமநிலைப்படுத்துகின்ற மூலோபாய பெறுகைக் கொள்கை தயாரிக்க வேண்டியது அவசியமாகும்..[31]

## முன்னோக்கிய பாதை...

வலுவாதாரப் பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி கொள்கை என்பனவற்றை பயனுறுதி மிக்க வகையில் செயல்படுத்தும் பொருட்டு அவை அனைத்து தேசிய கொள்கைகள் மற்றும் திட்டங்களுக்கு உரியவாறு ஒருங்கிணைக்கப்படல் வேண்டும். மேலும் அனைத்து பங்காளர்களுக்கும் அது தொடர்பான அறிவினை வழங்குவதும் அவர்களுக்கு விழிப்பூட்டல்கள் உரியவாறு வழங்கப்பட்டு, அது தொடர்பாக ஒத்துழைப்பு வழங்கப்படுதல் முடியும். மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் வெளிவாரி உதவிகளுடன் அது தொடர்பாக தற்போது ஆரம்ப அடி எடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் வலுவாதார பயன்பாடுகள் மற்றும் உற்பத்தியை மத்திய கால மற்றும் நீண்டகாலத்திற்கு ஊக்குவிக்கும் போது அவ்வாறான முயற்சிகள் தொடர்ந்தேர்ச்சியாக இடம்பெற வேண்டியதும் முக்கியமாகும்.

உத்தியோகபூர்வ கட்டளைகளின் மூலமான தலையீடுகளின்போது அமுல்படுத்தும் அதிகாரிகளின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை இயலளவினை அபிவிருத்தி செய்வதும் அத்தியாவசியமாகும். துரித கதியில் இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துதல் தொடர்பான தரவுகளின் மூலம் பயனுறுதி மிக்க ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்ளல் வேண்டும். ஆதலால் தரவு முகாமைத்துவ முறைமைகளை தாபிப்பது மேலும் முக்கியமாகும்.

வலுவாதாரப் பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி ஊக்குவிப்பின் போது தனியார் துறையினாலும் முக்கியமான பணிகள் நிறைவேற்றப்பட உள்ளன. அதன்போது தனியார்துறையுடன் தொடர்புகளை ஏற்படுத்தல் மற்றும் அவற்றை தொடர்ந்தேர்ச்சையாக பேணிச் செல்லல் தொடர்பாக உரிய வழிவகைகள் ஏற்படுத்தப்படல் வேண்டும். மக்களுக்கு இது சம்பந்தமான அறிவினை வழங்குவது மற்றும் அவர்களை விழிப்பூட்டல், வலுவாதாரப் பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி ஊக்குவித்தல் என்பன மேம்பாடு தொடர்பான நீண்டகால அணுகுமுறைகளின் புராதான சிறப்பியல்புகளாக அமைகின்றன.

31 தன்னார்வ தேசிய மீளாய்வு செல்லுபடியாக்கம் செயலமர்வின் போது பங்குதாரர்களிடையே சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்

# 15 நிலம் மீதான வாழ்வு

## சமகால நிலைமைகளும் போக்குகளும்

உலகத்திலுள்ள 35 உயிரினப் பல்வகைமை பகுதிகளுள் ஒன்றாக இலங்கை (இந்தியாவிலுள்ள கேரள காட்டு அரணையுடன் சேர்த்து) இனங்காணப்பட்டுள்ளது. இலங்கையின் வனப்பகுதி ஏறத்தாழ 1,951,472 ஹெக்டயர்களாகும்.[32] இது, 2016 ஆம் ஆண்டில் மொத்த நிலப்பகுதியின் 29.7% ஆக இருந்ததுடன், இக்கணிப்பீடு 2010 ஆம் ஆண்டின் காட்டுப்பரப்பு மதிப்பீட்டின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பரப்பு 1.44 மில்லியன் ஹெக்டயர்களைக் கொண்ட மூடிய விதான (Closed canopy)காடுகளையும் 0.44 மில்லியன் ஹெக்டயர்களைக்கொண்ட ஐதான (Sparse) காடுகளையும் உள்ளடக்குகின்றது.[33] தென்மேற்கு காற்பங்கிலுள்ள காடுகளுக்கு உயர் உயிர்ப் பல்லினத்தன்மையுள்ளது. இது உலக மரபுரிமை காப்பகங்களின் 49,098 ஹெக்டயர்களையும் உயிர்க்கோள காப்பகங்களின் 41,823 ஹெக்டயர்களையும் உள்ளடக்கியுள்ளது. இலங்கையில் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தின் பரப்பு சுமார் 2.3 மில்லியன் ஹெக்டயர்களாகும் (அட்டவணை 4.2). ஏறத்தாழ 35% ஆன நிலப்பரப்பு பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களின் கீழேயே உள்ளது. (இலக்கு 15.1)

இலங்கையிலுள்ள இயற்கை சூழற் தொகுதிகள் பல்வேறு சிறப்பினங்களுக்கு இடமளித்துள்ளதுடன் இங்கு மிக அதிகமான பாகுபாட்டுக்குரிய குழுக்களில் உயர்நிலை பரவுதலினங்களை அவதானிக்க முடியும் (அட்டவணை 4.3). என்றாலும், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சிறப்பினங்கள் இலங்கையில் அருகிவரும் இனங்கள் என இனங்காணப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டில் நிலைமையை மதிப்பிடுவதற்காக இயற்கையை பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியத்தின் (IUCN) ஒத்துழைப்புடன் MMDE இனால் தேசிய சிவப்புப் பட்டியல் அவ்வப்போது தயாரிக்கப்பட்டது (இலக்கு 15.5). தேசிய சிவப்பு பட்டியலின் படி, 44% ஆன பூக்கும் தாவரங்கள், அனைத்து வகையான இருமயக்குழல் தாவரங்கள் மற்றும் நிலத்தில் வாழும் முதுகெலும்புடையவை - நன்னீர் மீன்கள் (50%), நிலத்திலும் நீரிலும் வாழ்வன (65%), ஊர்வன (50%), வீட்டுக்குருவிகள் (27%) மற்றும் முலையூட்டிகள் (55%) என்பன அச்சுறுத்தல் நிலையிலுள்ளன.

**அட்டவணை 4.2 பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களும் இலங்கையிலுள்ள நிலப்பரப்பும்**

| Protected Area Category | Extent (ha) | Percentage out of Total Land Extent | Percentage out of Protected Area Extent |
|---|---|---|---|
| **Department of Wildlife Conservation** | | | |
| Strict Nature Reserve | **31,574** | **0.5** | 1 |
| National Parks (Land) | **685,979** | **10** | **30** |
| National Parks (Marine) | **19,563** | **0.3** | 1 |
| Nature Reserve | **65,485** | 1 | **3** |
| Sanctuary | **262,911** | **4** | 11 |
| Jungle Corridor | **8,777** | **0.1** | **0** |
| **Total** | **1,074,290** | **16** | **47** |
| **Forest Department** | | | |
| Conservation Forests | **137,307** | **2** | **6** |
| Reserved Forests | **1,092,700** | **17** | **47** |
| **Total** | **1,227,007** | **19** | **53** |

Source: National Biodiversity Strategic Action Plan 2016 - 2022

32 Department of Census and Statistics (2016), Statistical Abstract

33 Stakeholder input from the VNR Validation Workshop: Stakeholder expressed concerns that the real forest cover may vary from reported forest cover due to the inclusion of plantations as well

**Table 4.3: Endemicity in Some of the Main Taxonomic Groups in Sri Lanka**

| Taxonomic Group | Endemicity (%) |
|---|---|
| Birds | **06.83** |
| Butterflies | **10.57** |
| Mammals | **19.44** |
| Flowering plants | **21.21** |
| Dragonflies | **38.40** |
| Freshwater fish | **64.22** |
| Reptiles | **59.45** |
| Land snails | **79.92** |
| Amphibians | **87.39** |
| Freshwater crabs | **98.04** |

Source: National Biodiversity Strategic Action Plan 2016 – 2022.

இலங்கையில் உயிரினப் பல்வகைமை இழப்புக்கு காடழிப்பு பிரதான காரணமென இனங்காணப்பட்டுள்ளது. இலங்கையில் காடழிப்புக்கும் காடுகளின் தரம் குன்றுவதற்கும் ஈர வலயத்தில் ஏற்றுமதி நோக்கிலான பெருந்தோட்டப் பொருளாதாரம், வர்த்தக நோக்கில் தளபாடங்களை பிரித்தெடுப்பது தொடர்பான குடியேற்றக்கொள்கை, குடியேற்றத்திட்டங்கள் மற்றும் உலர் வலயத்தில் அமுல்படுத்துகின்ற நீர்ப்பாசன அபிவிருத்தி மற்றும் விவசாய விரிவாக்கங்கள் போன்ற பல முக்கிய அம்சங்கள் வழிவகுத்துள்ளன.[34] உரு 4.9 இல் காட்டப்பட்டுள்ளவாறு சனத்தொகை வளர்ச்சிக்கும் காடழிப்பு வீதத்துக்கும் இடையில் தெளிவானதொரு தொடர்பிருக்கின்றது.

**படம் 4.9: காட்டுப்பரப்பின் மாற்றமும் இலங்கை சனத்தொகையும்**




Source: UN-REDD Programme (2014), Drivers of Deforestation and Forest Degradation in Sri Lanka: Assessment of Key Policies and Measures.

இலங்கையில் வன வளங்கள் வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகிய இரு அரச முகவர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. இலங்கை உயிரியல் உயிரினப் பல்வகைமை தொடர்பான சமவாயம் (CBD), சர்வதேச செடிகள் பாதுகாப்பு சமவாயம் (IPPC) மற்றும் கப்பல்களிலிருந்து ஏற்படும் மாசுபடுதலை தடுப்பதற்கான சமவாயம் (MARPOL 73/78) என்பவற்றில் கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கையில் வனங்கள் மற்றும் வன ஜீவராசிகளின் வளங்களை நிர்வகிப்பதற்கு வன கட்டளைச்சட்டம், தேசிய வனக்கொள்கை, தாவரங்கள் உயிரினங்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம், மனிதன் மற்றும் உயிர்க்கோள நிகழ்ச்சித்திட்டம், தேசிய மரபுரிமை வனப்பாதுகாப்புச்சட்டம் மற்றும் வனஜீவராசிகளைப் பாதுகாப்பதற்கான தேசிய கொள்கைகள் போன்ற பல்வேறு கொள்கைகளும் சட்டங்களும் காணப்படுகின்றன. தேசிய உரினப் பல்வகைமை மூலோபாய செயல்பாட்டுத் திட்டமானது (2016 – 2022) தேசிய இலக்குகள், மூலோபாய குறிக்கோள்கள், அமுல்படுத்தல் திட்டம் (ஆற்றல் விருத்தி, தொடர்பாடல் மற்றும் எல்லை, வளங்களைத்திரட்டுதல்), இணைப்புப் பொறிமுறை, கண்காணிப்பு முறை மற்றும் உயிரின பல்வகைமையின் பெறுமதியை முறையாக மேம்படுத்தும் மூலோபாயம் என்பவற்றை முக்கியத்துவப்படுத்தி காட்டுகின்றன (இலக்கு 15.2). குறித்த திட்டமானது சூழலியலமைப்பு அணுகுமுறையின் அடிப்படையில் அமைந்துள்ளதுடன் எய்ச்சி (Aichi) இலக்குகள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் வழிநின்று தயாரிக்கப்பட்டுள்ளது (இலக்கு 15.9).

வனத்துறை கொள்கைகளுக்கு ஏனைய துறைவாரியான கொள்கைகளுடன் ஒன்றுடன் ஒன்று இணைந்த தொடர்புகள் காணப்படுகின்றன. இலங்கையிலுள்ள வன வளங்கள் மீது குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்துகின்ற கொள்கை ஆவணங்களாக தேசிய பௌதீக திட்டம் மற்றும் கொள்கை (2011-2030), நீண்டகால தலைமுறை விரிவாக்கல் திட்டம் (2013-2032), உல்லாச அபிவிருத்தி மூலோபாயம் (2011-2016) மற்றும் தேசிய வீதிப் பெருந்திட்டம் (2007-2017) என்பவற்றை அடையாளப்படுத்தலாம். தேசிய REDD+ முதலீட்டு சட்டகம் மற்றும் செயல்திட்டமானது(NRIFAP) REDD+ இனால் இனங்காணப்பட்ட REDD+ நிகழ்ச்சித்திட்டத்தின் விரிவான இலக்குகளை அமுல்படுத்துவதற்கு தேவைப்படுகின்ற பொறிமுறைகள் மற்றும் செயன்முறைகளை நிறுவுவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கும் அக்கறையுடன் செயற்படுகின்ற முக்கிய முகவர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதனை இலக்காககொண்டுள்ளது.

புனருத்தய (தேசிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் 2016-2018) நிகழ்ச்சித்திட்டத்தில் உயிரியல் வளங்களின் பாதுகாப்பானது பிரதான மூலோபாய நிகழ்ச்சித்திட்டங்களுள் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது. குறித்த நிகழ்ச்சித்திட்டமானது அச்சுறுத்தல் நிலையிலுள்ள சிறப்பினங்களின் பாதுகாப்பு மற்றும் உயிரியல் திருட்டினை தடுப்பதன் தேவை என்பவற்றை இனங்கண்டுள்ளது. அது உயிரியல் திருட்டினைத் தடுப்பதற்கு ஒரு சட்ட வரைவுத்திட்டத்தைத் தயாரிப்பதற்கு முன்மொழிந்துள்ளதுடன் உயிரினப் பல்வகைமை ஆய்வுக்காக நிறுவன ரீதியான சட்டகத்தை தயாரிப்பதற்கு ஆரம்பித்துள்ளது.

ஊடுறுவும் அந்நிய இனங்கள் (IAS) உயிரியில் பல்வகைமை மற்றும் விவசாயம் உள்ளடங்கலாக பல்வேறு பொருளாதார துறைகளில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. 2016 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஊடுறுவும் அந்நிய இனங்களின் ஆபத்து தொடர்பான மதிப்பீட்டின் படி இலங்கையில் தற்போது ஊடுறுவும் அந்நிய இன முன்னுரிமைப்படுத்தல்களாக 32 தாவர இனங்களும் ஏழு விலங்கினங்களும் இனங்காணப்பட்டுள்ளன. இலங்கையில் ஊடுறுவும் அந்நிய இனங்கள், மூலோபாயங்கள் மற்றும் செயல் திட்டம் தொடர்பான தேசிய கொள்கை 2016 ஆம் ஆண்டில் MMDE இனால் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கொள்கை ஊடுறுவும் அந்நிய இனங்களின் கட்டுப்பாட்டுக்காக வேண்டுமென்றோ அல்லது தற்செயலாகவோ ஊடுறுவும் அந்நிய இனங்கள் அறிமுகப்படுத்தப்படுவதை தடுத்தல், புதிய ஊடுறுவல்களை முன்னரே கண்டறிந்து அவற்றுக்கு உடனடியாக துலங்கல்களைக் காண்பித்தல், ஊடுறுவிய மற்றும் பரவுகின்ற ஊடுறுவல் இனங்களை கட்டுப்படுத்தலும் நிர்வகித்தலும் மற்றும் ஊடுறுவும் அந்நிய இனங்களின் தாக்கங்களினால் பாதிப்புக்குள்ளான சூழற்தொகுதிகளை சீரமைத்தல் என நான்கு தலையீட்டு பகுதிகளை இனங்கண்டுள்ளது. (இலக்கு 15.8)

விவசாய எல்லைகளின் விரிவாக்கம் மற்றும் மனித குடியேற்றங்களின் விளைவாக நாட்டின் பல பிரதேசங்களில் மனிதர்களுக்கும் வனஜீவராசிகளுக்கும் இடையில் தீவிர மோதல்கள் இடம்பெறுகின்றன. ஏனையவற்றுக்கு மத்தியில் மனிதனுக்கும் யானைக்கும் இடையிலான மோதல் மிகவும் தீவிர பிரச்சினையாக மாறியுள்ளது.[35] இம்மேதலானது 2014 – 2016 ஆண்டுகளில் 212 மனித உயிர்களை காவுகொண்டுள்ளதுடன் 4070 சொத்து சேத நிகழ்வுகளும், அவற்றின் பெறுபேறாக 715 யானைகளின் மரணங்களும் பதிவாகியுள்ளன. உயர் எண்ணிக்கையிலான நிகழ்வுகள் வட மேல் மாகாணத்திலும் மஹாவெலி பிராந்தியத்திலும் நிகழ்ந்துள்ளன. வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு சூறையாடும் யானைகளை பிடித்தல் மற்றும் அவற்றை இடம்மாற்றல் உள்ளடங்கலாக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

---

34 UN-REDD Programme (2014), Drivers of Deforestation and Forest Degradation in Sri Lanka: Assessment of Key Policies and Measures

35 Stakeholder input from the VNR Validation Workshop

36 Department of Wildlife Conservation (2016) Annual Performance Report

## உரு 4:10 இலங்கையில் நிலப்பயன்பாட்டு மாற்றங்கள்




Source: Land Use Policy Planning Department.

நாட்டில் நில வளங்கள் விவசாயம், வனவியல், நீர்ப்பாசனம் மற்றும் பெருந்தோட்டத் தொழிற்துறைகள் போன்ற பல்வேறு பொருளாதார துறைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையில் தனிநபருக்கான நிலத்தின் கிடைப்பனவு குறைந்துகொண்டிருப்பதுடன் நிலப்பற்றாக்குறை குறிப்பிடத்தக்க பிரச்சினையாக மாறிவருகின்றது.

இலங்கையில் நிலத்தின் தரம் குன்றுவதை எதிர்த்துப் போராடுவதற்கான தேசிய செயல்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் (2015 2024) படி தனிநபருக்கான நிலவளங்களின் கிடைப்பனவு 1900 ஆண்டில் 1.8 ஹெக்டயர்களாக இருந்து 2010 ஆண்டில் 0.3 ஹெக்டயர்களாக குறைந்துள்ளன. நிலத்தின் மீதான அதிக அழுத்தம் நிலத்தின் தரம் குன்றுவதற்கும் உற்பத்தித்திறன் இழப்புக்கும் வழிவகுத்துள்ளது. நிலத்தின் தரம் குன்றுவதன் தாக்கங்களுள் மண் அரிப்பும் மண்ணின் செழுமை குறைவடைவதும் பிரதானமானவை.

இலங்கையில் நிலத்தின் தரம் குன்றுவது குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் பிரச்சினையாக மாறியுள்ளதுடன் அதனுடன் இணைந்து காடழிப்பும் இடம்பெறுகின்றது. குறிப்பாக மலைநாடு, மிகைச்சரிவுள்ள பிரதேசங்கள், உயர் வீத மழைவீழ்ச்சி மற்றும் பொருத்தமற்ற நிலப்பயன்பாட்டு நடைமுறைகள் போன்ற உணர்ச்சியுள்ள பகுதிகளில் இடம்பெறும் பிரச்சினை நிலத்தின் தரம் அதிகளவில் குன்றுவதற்கு வித்திடும். நாட்டின் பல பாகங்களில் நிலைபேறற்ற நிலப்பயன்பாடு நிலத்தின் தரம் குன்றும் பிரச்சினையை தீவிரப்படுத்தியுள்ளது. சாய்வு நிலங்களில் முறையான மண் முகாமைத்துவ நடவடிக்கைகளின்றி மேற்கொள்ளப்படும் கிழங்கு, புகையிலை, மரக்கறிகள் மற்றும் தேயிலை போன்றவற்றின் விளைச்சல் கடுமையான நிலத்தின் தரம் குன்றும் பிரச்சினைகளுக்கு வழிவகுத்துள்ளது.[37] நிலப்பயன்பாட்டு போக்குகளில் (உரு 4.10) ஏற்படுத்தும் மாற்றங்கள் நிலத்தின் தரம் குன்றும் மட்டத்தினை பாதிக்கின்றது.

மண்வளம் இழப்பே நிலத்தின் தரம் குன்றுவதற்கு நேரடி விளைவாக இருப்பதுடன் அது விவசாய உற்பத்தித்திறனில் கருத்திற்கொள்ளத்தக்க பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. மண் அரிப்பானது குறிப்பிடத்தக்களவு தள செலவுகளுக்கும் தளத்துக்கு அப்பாற்பட்ட செலவுகளுக்கும் காரணமாக அமைந்துள்ளது (அட்டவணை 4.4). இப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு நிலப்பயன்பாட்டு கொள்கைத்திட்டமிடல் திணைக்களத்தினால் 2007 ஆம் ஆண்டில் தேசிய நிலப்பயன்பாட்டு கொள்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நிலத்தின் தரம் குன்றுவதனை எதிர்த்துப் போராடுவதற்காக MMDE தேசிய செயல்திட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயாரித்துள்ளது. அது 25 நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளப்படுத்தியுள்ளதுடன் அவை குறித்த கொள்கை ஆவணங்களில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. (இலக்கு 15.3)

நாட்டில் நில வளங்கள் விவசாயம், வனவியல், நீர்ப்பாசனம், பெருந்தோட்டத் தொழிற்துறை போன்ற பல்வேறு பொருளாதார துறைகளால் பயன்படுத்தப்படுகின்றன. போதிய சட்டத் தலையீடுகள் இல்லாமையினால் நிலம் நிலைபேறற்ற விதத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

### Table 4.4: Economic Cost of Soil Erosion in Sri Lanka

| Cost Category | Cost |
|---|---|
| Onsite Costs | |
| Value of loss of productivity | **Rs. 3529 ha/yr** |
| Value of loss of nutrients | **Rs.5068 ha/y** |
| Estimated cost due to nutrient loss in Upper Mahaweli watershed | **Rs. 953.0 million** |
| Off-site cost | |
| Based on value of loss of productivity | **Rs. 3952 ha/yr** |
| Based on value of loss of nutrient | **Rs. 5481 ha/yr** |
| Estimated loss in hydro-power production and irrigation from the Upper Mahaweli Watershed | **Rs. 15.0 million per annum** |

Source: National Report on Desertification/Land Degradation in Sri Lanka.

## இடைவெளிகளும் சவால்களும்

மனித நடவடிக்கைகளின் காரணமாக துரித கதியில் தரங்குன்றுகின்ற போது பல்வேறு சூழற்தொகுதி சேவைகளை வழங்குகின்ற சிக்கலான சூழற்தொகுதிகள் காணப்படுகின்றன. இவற்றின் முக்கியத்துவம் கருதி ரம்சார் சமவாயம் இனங்கண்ட 41 ஈரநிலங்கள் உள்ளடங்கலாக சுமார் 274,000 ஹெக்டயர் பரப்பினைக்கொண்ட[38] உள்நாட்டு மற்றும் கரையோர ஈரநிலங்களை இங்கு உதாரணமாக கூறலாம். மேலும், நகர மற்றும் தொழிற்துறை வசதிகள், உட்கட்டுமானம் மற்றும் உல்லாசத்துறை அபிவிருத்தி, குப்பை அகற்றல், இறால் பண்ணை மற்றும் சுவீகரிப்பு போன்றவற்றின் மாசுபடுத்தலினால் ஈரநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.[39]

இலங்கையில் வன முகாமைத்துவத்தில் ஆணையிடல் மற்றும் கட்டுப்படுத்தல் அணுகுமுறை பின்பற்றப்படுவதுடன் இங்கு சனசமூகத்தின் பங்கேற்பானது வரையறுக்கப்பட்ட அளவிலேயே உள்ளது. சனசமூக ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்கு ஒருசில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை குறிப்பிடத்தக்களவில் வெற்றியடையவில்லை. இதன் பெறுபேறாக, வனப்பாதுகாப்பானது அதிகளவில் சட்ட நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது. பொருத்தமான சட்டங்களின் செயலாக்கத்துக்கான இயலுமை வரையறுக்கப்பட்டிருப்பது இலங்கையில் காடுகளின் நிலைபேறான முகாமைக்கு பெரும் சவாலாகும். வரையறுக்கப்பட்ட செயலாக்க இயலுமையானது பிரதானமாக ஆளணி பற்றாக்குறை, நிரல் முகவர்களுக்கு மத்தியில் போதிய ஒத்துழைப்பும் ஒருங்கிணைப்பும் இல்லாமை மற்றும் உரிய தகவல்களின் பற்றாக்குறை என்பவற்றினாலேயே ஏற்படுகின்றது.[40]

இலங்கையில் நிலத்தின் தரங்குன்றும் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு பல்வேறு சட்டவாக்கங்கள் இருந்தாலும் அவை உரிய முறையில் அமுல்படுத்தப்படாமையினால் இச்சட்டவாக்கங்கள் தோல்வி கண்டுள்ளன. நில மேலாண்மையின் சிக்கலான இயல்பின் காரணமாக இக்கொள்கைகளின் வினைதிறன்மிக்க அமுல்படுத்தலில் சவால்களுள்ளன. ஏனையவற்றுள் மேல் நீர்ப்படுகை மற்றும் நீர்நிலை நீரேந்து ஆகிய இரண்டினதும் அழிவு மிக முக்கியமான சவால்களாகும். மத்திய மலைநாட்டுப் பிரதேசங்களிலுள்ள தாவரப் பரப்பும் (மேல் நீர்ப்படுகை) நீர்த்தேக்க நீரேந்து பிரதேசங்களும் (எல்லங்காவ முறைகள்) பல்வேறு சூழற்தொகுதி சேவைகளை வழங்குகின்றன. தேயிலை, புகையிலை, கிழங்கு மற்றும் மரக்கறி போன்றவற்றுக்காக விவசாய நிலப்பயன்பாடுகளின் விரிவாக்கமானது இத்தொகுதிகளின் தரங்குறைவினை துரிதப்படுத்தும்.

நிலப்பயன்பாடு தொடர்பாக முறையான தகவல்களின்மை மற்றுமொரு பிரச்சினையாகும். முறையான தகவல்களின்மை கொள்கைகளின் வினைதிறன்மிக்க அமுல்படுத்தலுக்கு தடையேற்படுத்துவதுடன் அழிவேற்படுத்தும் மனித நடவடிக்கைகளையும் ஊக்குவிப்பதாக அமைகின்றது. தகவல்களில் காணப்படுகின்ற வரையறைகளை மேலே கலந்துரையாடப்பட்ட அனைத்து சவால்களையும் தீவிரப்படுத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பிரச்சினையாக கருதமுடியும்.

---

37 UN-REDD Programme (2014), Drivers of Deforestation and Forest Degradation in Sri Lanka: Assessment of Key Policies and Measures

38 Central Environment Authority (2007) Wetland Directory of Sri Lanka

39 Stakeholder input from the VNR Validation

40 National Biodiversity Strategic Action Plan 2016 – 2022

# முன்னோக்கிய பாதை...

இலங்கையில் இயற்கை வளங்களின் மேலாண்மையுடன் தொடர்புடைய அதிகமான பிரச்சினைகளுக்கு தீர்வகாண்பதற்கு மேம்படுத்தப்பட்ட நிலப்பயன்பாட்டுத் திட்டமிடல் செயன்முறை முக்கியமானதாகும். இங்கு தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டத்தின் (2050) முறையான அமுல்படுத்துகை மிகவும் முக்கியமானது. நிலைபேறான வள மேலாண்மையின் அத்தியாவசிய படிமுறைகள் வலயமாக்கல் மற்றும் வள மதிப்பீட்டுப்படம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன.

வனத்தின் தரங்குன்றுதல் மற்றும் காடழிப்பினை முடிந்தளவில் குறைப்பதற்கு தொடர்புடைய சட்டங்களின் முறையான செயலாக்கம் முக்கியமானது. இதற்கு காடுகளின் எல்லைகள் தொடர்பாக எல்லை வரையறுத்தல், வன மேலாண்மை முகவர்களின் (வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்) இயற்றிறன் விருத்தி மற்றும் அதிக பொதுமக்கள் விழிப்புணர்வு என்வற்றினால் தேவையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

கொள்கை வகுப்பாளர்களின் அதிக கவனத்தினை வேண்டிநிற்கும் மற்றுமொரு பகுதி இயற்கை வள மேலாண்மையில் பங்கேற்பு ஆளுகையாகும். இலங்கை வன மேலாண்மையில் கலப்பு பெறுபேறுகளுடன் சனசமூக பங்கேற்புக்கு முயற்சித்துள்ளது. இந்நடைமுறைகளிலிருந்து பெறும் படிப்பினைகள் எதிர்கால கொள்கை தலையீடுகளை திட்டமிடுவதற்கு மிகவும் முக்கியமானது. வன மற்றும் நில மேலாண்மையுடன் தொடர்புடைய பிரச்சினைகளைத் தணிப்பதற்கு சந்தையை மையப்படுத்திய சாதனங்களுக்கும் உதவ முடியும்.

நாட்டில் நிலைபேறான நில மேலாண்மையை வசதிப்படுத்துவதற்காக நிலக்கொள்கைகளை வினைதிறன்மிக்க விதத்தில் அமுல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை இலங்கை மேற்கொள்ள வேண்டும். பொருத்தமான கொள்கைகள் மற்றும் சட்டங்களின் வினைதிறன்மிக்க அமுல்படுத்துகையை மேம்படுத்துவதற்கு நிறுவன ரீதியிலான இயற்றிறன் பலப்படுத்தப்பட வேண்டும். இது நிலங்களின் நிலைபேறான பயன்பாட்டினை வசதிப்படுத்துவதுடன் நிலத்தின் தரத்தைக் குன்றச்செய்யும் அழிவு நடவடிக்கைகளை அதைரியப்படுத்தும்.

மேம்படுத்துவதற்கான மற்றுமொரு பகுதி நிலம் மற்றும் வன மேலாண்மைக்காக தரவு மற்றும் தகவல் முறைகளை நிறுவுவதாகும். தற்போது இலங்கை நில தரவுத்தளமொன்றை உருவாக்கும் செயன்முறையிலுள்ளதுடன் அத்தரவுத்தளம் முன்னோடி மட்டத்தில் நில விபரங்களை உள்ளடக்கும். இலங்கை REDD+ நிகழ்ச்சித்திட்டம் தேசிய வன கண்காணிப்பு முறையினை தொடக்கி வைக்கப்பட்டுள்ளதுடன் அதனை குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக கருத்திற்கொள்ள முடியும்.

---

41 Stakeholder input from the VNR Validation Workshop

# 4.2

## பிற வலுவாதார இலக்குகள்

### 1 வறுமைக்கு முற்றுப்புள்ளி

### தற்போதைய நிலை மற்றும் போக்கு

வறுமை வீழ்ச்சியடைவது குறித்து நோக்கும்போது இலங்கை கடந்த சில தசாப்தங்களில் குறிப்பிடத்தக்களவு மேம்பாட்டை அடைந்துள்ளதுடன், தேசிய மற்றும் உப தேசிய மட்டங்களில் போன்று பல்வேறு இனக் குழுமங்களுக்கிடையிலும் வறுமை வீழ்ச்சியடைந்து சென்றுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

4.11 குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேசிய வறுமைக் கோட்டிற்குக் கீழ் வசிக்கின்ற சனத்தொகையின் அளவு 2006 - 2007 ஆம் ஆண்டுகளில் 15.2% வீதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டில் 4.1% வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இவ் வீழ்ச்சி பிரிவுகள் மற்றும் மாகாண மட்டங்களிலும் தென்படுகின்றது. நாட்டில் வறிய மக்களில் 80% வீதமானோர் கிராமியப் பிரிவுகளிலும் வறிய நிலை போக்கு, தேசிய வறிய நிலை போக்கினை எடுத்துக்காட்டுவதுடன் வரலாற்று ரீதியாக வறுமை அதிகரிப்பு நிகழ்வுகளைக் கொண்ட பிரிவான தோட்டத் துறையின் வறியோர் புள்ளிவிபரவியல் சுட்டியானது கடந்த தசாப்தத்தில் குறிப்பிடத்தக்களவில் 32% வீதத்திலிருந்து 8.8% வீதம் வரை குறைவடைந்துள்ளது. நகரப்புறங்களில் இது தேசிய பொதுவான மட்டங்களைவிட பெரும்பாலும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. (1.2 இலக்கு)

**4.11 உரு தேசிய வறுமைக்கோட்டின் கீழ் வறியோர் எண்ணிக்கைச் சுட்டி**




மூலம்: குடிசன மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் வீட்டு அலகுகளுக்கான வருமானம், செலவினம் தொடர்பான இறுதி அறிக்கை **2006/07, 2009/**
http://www.statistics.gov.lk/page.asp?page=Income%20and%20Expenditure மூலம் பெற்றுக்கொள்ள முடியும்

4.12 குறிப்பின் மூலம் வயதெல்லை மற்றும் ஆண் பெண் குழுக்களிடையே காணப்படுகின்ற வறுமை நிலை தொடர்பான பொழிப்பு வழங்கப்பட்டுள்ளது. சிறிய அளவிலேனும் பெண்களிடையே காணப்படுகின்ற வறுமை நிலை ஆண்களை விடக் குறைவாகக் காணப்படுகின்றமை அவதானம் செலுத்தப் பட வேண்டியதொரு விடயமாகும். அற்கு மேலதிகமாக முதியோருக்கு ஒப்பீடாக பிள்ளைகள் (18 வயதுக்கு குறைந்த) இடையே வறுமை அதிகரித்துச் செல்கின்ற பெறுமானம் காணப்படுகின்றது. உண்மையிலேயே சிறுவர் வறுமை புள்ளிவிபரச் சுட்டி தேசிய மட்டத்தை விஞ்சியுள்ளது. எவ்வாறாயிலும் 2012/2013 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது அனைத்து வயதினரும் ஆண் பெண் குழுக்களிடையேயும் வறுமை நிலை குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்துள்ளது. (1.2 இலக்கு)

**4.12 உரு தேசிய வறுமைக்கோட்டு மட்டத்தில் வயது, ஆண் பெண் குழுக்களிடையேயான வறுமை நிலை தொடர்பான பொழிப்பு 2012/13 மற்றும 2016**




மூலம்: இலங்கையில் வலுவாதார அபிவிருத்தி சுட்டிகளின் நிலை 2017 - குடிசன மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், கொழும்பு http://www.statistics.gov.lk/sdg/application/publications/book.pdf மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

சர்வதேச வறுமைக்கோடு (நாளொன்றுக்கு 1.90 அ டொ ஒன்றைவிடக் குறைவான) கீழுள்ள மக்களின் தொகை 2016 ஆண்டில் 1% வீதத்தைவிடக் குறைவாகக் காணப்பட்டதுடன் அது (பெண்கள் 0.70% வீதம்) மற்றும் ஆண்கள் (0.74%) இடையே போன்றே வயதுக் குழுக்களிடையே சில முரண்பாடுகளும் காணப்பட்டன.[42] (1.1 இலக்கு) பல் பரிமாண வறுமைச் சுட்டியும் தேசிய (வருமானம்) வறுமைக் கோட்டினை அடிப்படையாகக் கொண்ட மட்டங்களை விட குறைந்த வறுமைக்கோட்டு மட்டத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளது. பல் பரிமாண வறுமைக் கோட்டின் முழு மொத்த மட்டம் 2012/13 களில் 3.8% வீதமாக இருந்ததுடன்[43] (தேசிய வறுமைக் கோட்டினை அடிப்படையாகக் கொண்ட 6.7% வீதத்துடன் ஒப்பிடும் போது), அது ஆண்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக முறையே 3.9% வீதம் மற்றும் 3.7% வீதமாக இருந்தது[44] (1.2 இலக்கம்)

42 வீட்டு அலகுகளுக்கான வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான மீளாய்வு 2016 இனை அடிப்படையாகக் கொண்ட குடிசன மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மதிப்பீடு.

43 குடிசன மற்றுமு் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மூலம் பல்பரிமான வறுமை நிலை தொடர்பாக பெற்றுக்கொள்ளக்கூடிய புதிய தகவல்கள் 2012/2013 ஆம் ஆண்டுகள் தொடர்பாக ஏற்புடையதாகும்.

44 DCS (2017)இலங்கையின் வலுவாதார அபிவிருத்தி இலக்குச் சுட்டிகளின் நிலை 2017 குடிசன மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் கொழும்பு. http://www.statistics.gov.lk/sdg/application/publications/book.pdf மூலம் பெற்றுக்கொள்ள முடியும்

பயனுறுதி மிக்க சமூக பாதுகாப்பு முறைமையாது நாட்டினது சனத்தொகையில் வறுமை மற்றும் இடர் மட்டங்கள் வீழ்ச்சியடையச் செல்வதில் பிரதானமாக செல்வாக்குச் செலுத்துகின்றது. (1.3 இலக்கு) ஒட்டு மொத்தமாக நோக்கும்போது மறைமுக நலன்களைப் பெற்றுக்கொள்கின்ற வீட்டு அங்கத்தவர்கள் உட்பட, இலங்கையின் சனத் தொகையில் 34% வீதமானோர் சமூக உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து நலன்களைப் பெற்றுக்கொள்கின்றனர். முதியோர் சனத்தொகையில் (60 வயதுக்கு அதிகமான 45% வீதமானோர் சமூகப் பாதுகாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளமை அவதானிக்கத் தக்கதாகும். அதன்போது வயது முதிர்ந்த பெண்களின் உள்ளடக்கம் ஓரளவு அதிகரித்துள்ளது. (ஆண்கள் 41.9% வீதமாகவும் அதனுடன் ஒப்பிடும்போது அது 46.4% வீதமாகவும் காணப்படுகின்றது.)[45]

சுகாதாரம் மற்றும் கல்வி, மின்சாரம், குடிநீர் மற்றும் துப்பரவேற்பாடு போன்ற அடிப்படைச் சேவைகளுக்கான அணுகுமுறைகளை உறுதிப்படுத்துவதுடன் இலங்கை குறிப்பிடத்தக்களவு மேம்பாட்டினையும் அடைந்துள்ளது. (1.4 இலக்கு) 2016ஆம் ஆண்டில் மின்சார வசதியுள்ள வீட்டு அலகுகளின் தொகை 99.3% ஆக இருந்ததுடன்[46] பாதுகாப்பான குடிநீர் பெற்றுக்கொள்கின்ற வீட்டு அலகுகளின் தொகை 88.8% வீதமாகவும், துப்பரவு ஏற்பாட்டு வசதிகள் உள்ள வீட்டு அலகுகளின் தொகை 91.7% வீதமாகவும் காணப்பட்டன.[47] உலக வங்கியின் உலாகளாவிய நிதிச் சுட்டியின் தரவுகள்[48] மூலம் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு இலங்கையின் வயது முதிர்ந்தோர் 82.7% வீதத்தினருக்கு நிதி நிறுவனங்களுக்கான அணுகுமுறை (அல்லது வங்கிக் கணக்குகள் காணப்படுவது குறித்து) காணப்படுவதுடன், அதில் பெண்களில் 83% வீதமானோருக்கும், கடும் வறுமை நிலையிலுள்ள உள்ள 40% வீதத்திற்கு இடைப்பட்ட தொகையின் 80% வீதமானோர் நிதி நிறுவனங்களிடமிருந்து அனுகூலங்களைப் பெற்றுக்கொண்கின்றனர். தெற்காசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது நிதிசார் அனுகூலங்கள் இலங்கையில் குறிப்பிடத்தக்களவில் உயர் பெறுமானத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. 1940 களில் அறிமுகப்பட்ட இலங்கையின் அனைத்து குடிமக்களுக்கும் இலவசக் கல்வியை வழங்கும் கொள்கை மற்றும் இலவச சுகாதர வசதிகளை வழங்கும் கொள்கைகள் மூலம் நாட்டு மக்களுக்கும் விசேடமாக வறிய மற்றும் அவதானம் செலுத்தவேண்டிய மக்களுக்கும் கல்வி மற்றும் சுகாதார வசதிகள் கிடைக்கப்படுவதை உறுதிப்படுத்துவது தொடர்பான பிரதான பணிப் பொறுப்புக்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த 7 ஆண்டுகள் பூராகவும் பொருளாதார செயற்பாடுகளில் முன்னெடுக்கப்பட்ட தொடர்ந்தேச்சையான அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பின்மை 5% ஐ விட குறைவடைந்ததனால் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாக அரசினால் தொடர்ந்தேச்சையாக நிதி ஒதுக்கீடு, வறிய மக்களுக்கான வருமானத்தினை அதிகரித்தல் தொடர்பான பங்களிப்புகள் வழங்கப்பட்டு வந்துள்ளன.

## இடைவெளிகளும் போக்குகளும்

**கடந்த இரு தசாப்தங்கள் பூராகவும் வறுமை நிலை வீழ்ச்சியடைந்துள்ளமை சம்பந்தமாக இலங்கையின் செயலாற்றுகை அவதானம் செலுத்தப்பட வேண்டிய மட்டத்தில் பூகோள ரீதியான முரண்பாடுகளுக்கும் உட்பட்டுள்ளது. வறியோர் புள்ளிவிபரச் சுட்டி கொழும்பு மாவட்டத்தில் 0.9% வீதத்திலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் 18.2% வீதம் வரையில் மாவட்டங்கள் பூராகவும் வேறுபடுகின்றது.**

எவ்வாறாயினும் வறுமை அதிகரித்துக் காணப்படுகின்ற பெரும்பாலான மாவட்டங்களில் குறைவான சனத்தொகையினரே வாழ்ந்து வருகின்றனர். மேலும் வறுமை மட்டங்கள் வீழ்ச்சியடைந்துள்ள மாவட்டங்களில் கூட வறுமை நிலவுகின்ற தனிமைப்பட்ட பகுதிகளும் காணப்படுகின்றன. (1.2 இலக்கு)

வறிய மக்கள் சனத்தொகை 4.1% வீதமாக காணப்பட்ட போதிலும், இயற்கை அனர்த்தங்கள் போன்ற (உதாரணமாக வெள்ளம் வரட்சி மண்சரிவு) அவசர நிலலைமைகளில் முகங்கொடுக்க நேரிடுகின்ற பல்வேறு பாரிய நெருக்கடிகள் காரணமாக வறுமை நிலைக்குத் தள்ளப்படும் அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்து, அவர்கள் அவதானம் செலுத்தப்பட வேண்டியுள்ள மக்கள் தொகையில் வறுமைக் கோட்டிற்கு சற்று மேல் உள்ளனர். உயிர்கள் மற்றும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற, நாட்டில் அதிகரித்துச் செல்கின்ற காலநிலை மாற்றம் காரணமாக முகங்கொடுக்க நேரிடுகின்ற நிலைமைகளைக் கருத்திற்கொண்டு வறிய மற்றும் அவதானம் செலுத்தப்படவேண்டிய மக்களை துரிதமாக அவர்கள் முன்னர் வாழ்ந்த இயல்பு நிலைமைக்கு கொண்டுவரக்கூடியவாறு மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன. (1.5 இலக்கு)

சுகாதாரம் மற்றும் கல்வி மின்சாரம் குடிநீர் மற்றும் துப்பரவேற்பாடு போன்ற அடிப்படை சேவைகளுக்காக அணுகுமுறைகளை மேம்படுத்துவதன் ஊடாக இலங்கை பல்வேறு முன்னேற்றங்களை அடைந்துள்ள போதிலும் சில மாவட்டங்கள் மற்றும் பிரிவுகள் (விசேடமாக தோட்டப் பிரிவு) பின்னடைந்து காணப்படுகின்றமையினால் பிரதேச ரீதியான முரண்பாடுகள் நிலவுகின்றன. அப்பிரதேசங்களின் அடிப்படை சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குவதற்கான அணுகுமுறைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதனூடாக வறுமை ஒழிப்பு தொடர்பான வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள முடியும். (1.4 இலக்கு)

வறிய மக்கள், முதியோர், அங்கவீனர்கள், சிறுவர்கள் மற்றும் பெண்கள் போன்ற இலகுவாக ஆபத்துக்குள்ளாகக் கூடிய மக்கள் குழுமங்களை இலக்காகக் கொண்ட பெரும்பாலான சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ள போதிலும் தற்போதுள்ள சமூக பாதுகாப்பு முறைமையில் இடைவெளிகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளன. இலக்குகள் குறித்து நோக்கும் போது நிலவுகின்ற பிரச்சினைகள், பயன்கள் போதியளவு காணப்படாமை, அதிக கிரயத்தினை ஏற்கவேண்டியமை மற்றும் ஒரே பயனாளிகள் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களில் உள்ளடக்கப்படுதல், அந் நிகழ்ச்சித் திட்டங்களிடையே தொடர்பாடல்கள் காணப்படாமை என்பன குறித்தும் இலக்குகளைத் திட்டமிடப்படும் போது ஆராயப்படல் வேண்டும்.[49] (1.3 இலக்கு)

வறிய மக்கள் முதியோர் அங்கவீனர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்கள் போன்ற இலகுவாக ஆபத்துக்குள்ளாகக் கூடிய சனக் குழுமங்களை இலக்காகக் கொண்ட பெரும்பாலான சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளபோதிலும் தற்போதுள்ள சமூக பாதுகாப்பு முறைமையில் இடைவெளிகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இலக்காகக் கொள்ளும்போது நிலவுகின்ற பிரச்சினைகள் நலன

45 தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மதிப்பீடு. (2017)

46 இலங்கை மத்திய வங்கி (2018) மத்தியவங்கியின் வருடாந்த அறிக்கை 2017

47 தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம் 2018 'வீட்டுஅலகுகளது வருமானம் மற்றும் செலவு பற்றிய மீளாய்வு 2016 - இறுதி அறிக்கை' தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம், கொழும்பு http://www.statistics.gov.lk/HIES/HIES2016/HIES2016_FinalReport.pdf மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

48 உலக வங்கி (2015), Little Data Book on Financial Inclusion -15

49 கொள்கைசார் கற்கை நிறுவனம் 2016, 'பொருளாதார நிலை 2016', இலங்கை கொள்கைசார் கற்கை நிறுவனம், கொழும்பு

# முன்னோக்கிய பாதை ...

பாரிய பூகோள சவாலாக வறுமை விளங்குகின்றதெனவும், வறுமை ஒழிப்பா வலுவாதார அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு ஏதுவான நிபந்தனை என வலுவாதார அபிவிருத்தி தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகரமான முறையில் பூர்த்தி செய்வது மிகவும் முக்கியமானதாகும். உண்மையிலேயே வறுமை ஒழிப்பானது அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலில் முக்கியமாக காரணியாக கருதப்படுகின்றது. அரசினால் 2017 ஆம் ஆண்டு வறுமை ஒழிப்பு ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டது.

புறக்கணிக்கப்பட்ட ஒழுக்கள் மற்றும் வறுமையில் வாடும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களை உரியவாறு இனங்காணல், அவ்வாறான ஒவ்வொரு குழுக்கள் தொடர்பாகவும் உரிய வகையில் அவதானம் செலுத்தி பயனுறுதி மிக்க வகையில் மூலோபாயங்களைத் தயாரித்து, வறுமையொழிப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். அதன்போது பூகோள ரீதியாக வறிய மக்கள் பரம்பலை இனங்காண்பதற்கும் வசதிகளை வழங்குவதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் இலக்கினை மேம்படுத்துவதும், தகுந்த குழுக்கள் மற்றும் புறக்கணிக்கப்பட்ட குழுக்கள் இந் நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக போதியளவில் உள்ளடக்கப்படுவதை உறுதிப்படுத்துவதும் அத்தியவசியமாகின்றன. அதற்கு மேலதிகமாக இந் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நலன்களின் இயலுமை பற்றியும் மீண்டும் அவதானம் செலுத்தப்பட வேண்டும். அது தொடர்பான முக்கிய நடவடிக்கையாக சமூகப் பாதுகாப்பு முறைமை ஒன்றை வடிவமைப்பதற்கான பணிகள் ஒப்படைக்கப்பட்ட நலன்புரி பயன்களை வழங்கும் சபையொன்று 2016 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. தற்போது அச் சபையானது 4 பிரதான நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக (சமூர்த்தி, முதியோர் படி, அங்கவீனர்களுக்கான படி, சிறு நீரக நோயாளர்களுக்கான படி) இணைந்த தரவு முறைமை மற்றும் அந் நிகழ்ச்சித் திட்டங்களினால் தேர்ந்தெடுக்கப்படும் தகுவிதிகள் என்பவற்றைத் தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இனி வரும் காலங்களில் நாட்டில் அனைத்து சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களும் இவ் ஒருங்கிணைந்த முறைமையினுள் உள்ளடக்கப்படுவதுடன் அவற்றின் இலக்குகளை மேம்படுத்துவதற்கும் நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் ஒரே கூட்டத்தினர் மீண்டும் மீண்டும் உள்ளடக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கும் எதிர்பார்க்கப்டுகின்றது.

தற்போது காணப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் வினைத்திறனை மேம்படுத்துவது போன்றே வறுமை ஒழிப்பு தொடர்பாகவும் நிதியுதவியைப் பெற்றுக்கொள்வதற்கு தேசிய வளங்களை ஒன்றுதிரட்டி, புத்தாக்க முறைமைகளை ஆய்வு செய்வதன் ஊடாகவும், வறுமை ஒழிப்புக்கான செலவினங்களை மறுசீரமைத்து வினைத்திறன்மிக்க முறையில் மேற்கொள்ளும் வகையிலும் அரசினால் நடவடிகைகள் எடுக்கப்பட்டுள்ளன. (இலக்கு 1.அ)

# 2 பட்டினி ஒழிப்பு

## தற்போதைய நிலை போக்குகள்

மழைவீழ்ச்சி மற்றும் நீர்ப்பாசன விவசாயம் மூலம், உள்நாட்டு உணவுப் பயன்பாடுகளின் (மீன் தவிர) 83% வீதத்தையும், இலங்கை ஏற்றுமகளில் இருந்து 25% வீதத்தைவிட அதிகளவிலான பங்களிப்பு கிடைக்கின்றன. பிரதான ஏற்றுமதிப் பயிர்கள் (தேயிலை, இறப்பர், தேங்காய் மற்றும் மலிகைச் சாமான்கள்) விவசாய மொத்தத் தேசிய உற்பத்தியில் பாரிய பங்களிப்பினை (35%) வழங்குவதுடன் அதற்கடுத்ததாக நெல் மூலம் 29% வீத பங்களிபபு கிடைக்கின்றது. சனத்தொகையில் 25-30% விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

அதிகரிக்கப்பட் தேசிய உற்பத்தி காரணமாக இலங்கையில் தேசிய மட்டத்தில் உணவுப் பயன்பாடு அதிகரித்துக் காணப்படுகின்றது. தற்போது இலங்கையின் உணவுத் தேவைப்பாட்டின் 80% தேசிய ரீதியாக உற்பத்தி செய்யப்படுவதுடன் இறக்குமதி செய்யப்படுவது 20% இற்குக் குறைந்த அளவிலாகும். ஆரிசியில் தன்னிறைவு காணப்பட்டமையானது இலங்கையில் உணவுப் பயிர் துறையில் அடைந்த பெரும் வெற்றியாகும். பரந்துபட்ட வீதி வலையமைப்புக்கள் மற்றும் அதிகரித்துச் செல்லும் வீட்டு வருமானத்துடன் நீண்டகாலத்திற்கு ஒட்டுமொத்தமாக வறுமை மட்டம் வீழ்ச்சியடையும் போக்கு உணவு குறித்த பௌதீக மற்றும் பொருளாதார ரீதியாக மேம்படுத்தப்பட்ட அணுகுமுறைகளின் மூலம் தென்படுகின்றன.[50] 2014 ஆண்டில் 90 % உயர் பெறுமானத்தினை எட்டிய நாட்டின் உணவுப் பாதுகாப்புடன்கூடிய வீட்டு அலகுகளின் விகிதாசாரம் மூலம் இது புலனாவதுடன், அது 0 இலிருந்து (ஆகக்குறைந்த அளவிலான உணவுப் பாதுகாப்பின்மை) 24 (ஆக கூடியளவிலான உணவுப் பாதுகாப்பின்மை) வரையான வீச்செல்லையில் அமைந்துள்ள வீட்டு உணவுகளின் பாதுகாப்பின்மைக்கான அணுகுமுறைகள் 9.2 ஆன பெறுமானத்தினைப் பெற்றுள்ளமையின் அடிப்படையிலேயே இவ்வாறு காணப்படுகின்றது.[51]

விவசாய உற்பத்திச் சுட்டியானது ஒட்டு மொத்தமாக அதிகரித்துச் செல்லும் போக்கினைச் சுட்டிக்காட்டியுள்ளதுடன், அது 2017–10 அடிப்படையாக கொண்ட காலப்பகுதியில் 100 இலிருந்து 2016 ஆண்டில் 216.9 வரை அடைந்து கொண்டது.[52] நாட்டின் உணவு உற்பத்தித் துறையில் மேலே குறிப்பிட்ட சாதனைகளுடன், இது 2.3 இலக்கினை அடையும் போது நாட்டின் முன்னேற்றத்தினை அது சுட்டிக்காட்டும்.

(2030 ஆண்டளவில் விவசாய உற்பத்தித் திறன் மற்றும் சிறிய அளவிலான உணவு உற்பத்தியாளர்களின் வருமானம் இரு மடங்காக) உணவு பயன்பாட்டில் அதிகரிப்பு அவ்வாறு நிலவிய போதிலும், பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளும் செயலமர்வுகளின் போது பங்காளர்களினால் உணவுகளின் தரம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்கள் வலியுறுத்தப்பட்டன.[53]

எனினும் போசாக்கு பேணல் தொடர்பான நாட்டின் தற்போதைய நிலை வலுவாதார அபிவிருத்தி இல.2.2 அடைந்து கொள்வதற்குப் போதுமானதாக அமையவில்லை. அவ் இலக்கின் மூலம் 2030 ஆண்டளவில் அனைத்து விதமான மந்த போசாக்கினையும் ஒழிப்பது தொடர்பாக எதிர்பார்க்கப்படுகின்றது. சுகாதார கணிப்பீட்டுக்கு அமைய 2016 ஆண்டளவில் போசாக்கு நிலை 2006-2007 இலிருந்து 2016 வரை மாற்றங்கள் இடம்பெறவில்லை என்பது புலனாகின்றது. 2016 இல் 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளில் 17% வீதமானோர் அவர்களது வயதினைவிட குள்ளமாக உள்ளனர்; 15% வீதமானோர் அவர்களது வயதிற்கு ஏற்ப பருமன் காணப்படுவதில்லை; அவ்வாறே 21% வீதமானோர் நிறை குறைந்த பிள்ளைகளாகும். அதற்கு ஒப்பீடாக 2006-07 ஆம் ஆண்டுகளில், அப்பெறுமானங்கள் முறையே 17.3%, 14.7% மற்றும் 21.1% ஆக இருந்தன. 2016 ஆண்டளவில் விவாகமான பெண்களில் 7% வீதமானோர் 145 சென்றிமீட்டர் உயரத்தை விடக் குறைந்தவர்களாகவும் அது 2006-07 ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 11% பெறுமானத்துடன் ஒப்பிடும்போது அதிகரிப்பாகும்.

வயது 15-49 இடைப்பட்ட விவாகமான பெண்களின் உடற் திணிவுச் சுட்டி 24.8 ஆவதுடன் 2006-07 ஆண்டில் 23.1 ஆகக் காணப்பட்ட அப்பெறுமானம் அதே வகையில் அதிகரித்துள்ளது. உடற் திணிவுச் சுட்டிப் பரம்பலில் சாதாரண உடற் திணிவுச சுட்டி (18.5 மற்றும் 24.9 இடைப்பட்ட) காணப்படுவது விவாகமான பெண்களுள் 46% வீதத்தினரிடம் மாத்திரமேயாகும். விவாகமான பெண்களுள் 9%, 32% மற்றும் 13% வீதமானோர் முறையே (உடற் திணிவுச் சுட்டி 18.5), அதிக பருமன் (உடற்திணிவுச் சுட்டி 25.0 மற்றும் 27.9 இடைப்பட்ட) மற்றும் மெல்லியதாக (உடற் திணிவுச் சுட்டி 30 அல்லது அதற்கு அதிகமான) கருதப்படுகின்றது.

## இடைவெளிகளும் சவால்களும்

நீண்ட காலமாக படிப்படியான மாற்றங்களுக்கு மேலதிகமாக அதிக வரட்சி மற்றும் வெள்ளம் காரணமாக இலங்கையில் அடிக்கடி காலநிலை மாற்றங்கள் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. (இலக்கு 2.4) அவை விவசாய உற்பத்திகளில் அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகின்றன; விவசாயத்தின் அடிப்படையில் தங்கி வாழ்கின்ற மக்களை நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றன; அவ்வாறே உணவு மற்றும் போசாக்குப் தொடர்பான பாதுகாப்பினை கேள்விக்குறியாக்கியுள்ளது. எதிர்கால உணவு மற்றும் போசாக்கு பல்வேறு வகையான அறுவடையிலிருந்து பெறப்படும் இயலுமை தொடர்ந்தும் அதிகரிக்கப்படுவதில் தங்கியுள்ளது. அதற்கமைய உயிரரணு வளங்களின் பயன்பாட்டில் நலன்கள் நீதியான வகையில் பகுக்கப்படுவதுடன், முற்போக்கான முன்னேற்பாட்டுடன், விவசாயிகளுக்கு நலன் பயக்கின்ற மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய முறையொன்றின் மூலம் விதைகள், பயிரிடப்பட்ட தாவரங்கள், பண்ணை விலங்குகளின் உயிரணு பல்வகைமையை பேணல் மற்றும் அதனை அண்டிய மரபுரீதியான அறிவு இன்றியமையாததுடன் (2.5 இலக்கு) இது அவதானம் செய்யப்பட்ட துறையாயொன்றாக கருதப்படுகின்றது.

50 உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் (2017). 'National Strategic Review of Food Security and Nutrition Towards Zero Hunger'. Available at http://www.wfp.org/ sites/default/files/NSRFSNZH_FINAL.pdf மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

51 வீட்டு அலகுகளின் உணவுப் பாதுகாப்பு மீளாய்வு – 2014 தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம்

52 உற்பத்திச் சுட்டி, இலங்கை https://www.cbsl.gov.lk/en/statistics/statistical-tables/real-sector/production-indicators மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

53 தன்னார்வ தேசிய மீளாய்வு செல்லுபடியாக்க செயலமர்வின்போது பங்காளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்

காலநிலை மாற்றம் விசேடமாக மழை வீழ்ச்சி ஒட்டு மொத்த விவசாயத்துறைக்கும் செல்வாக்குச் செலுத்தும் பாரிய நெருக்கடியாக மாறி உள்ளது. விவாதத்திற்குரிய இரண்டாவது பாரிய நெருக்கடியாக விவசாயத்தில் ஈடுபடுவதற்கு கிராமிய இளைஞர்களின் விருப்பமின்மை அதிகரித்துச் செல்வதால் தொழிலாளர்கள் பற்றாக்குறை நிலவுகின்றமையைக் குறிப்பிடலாம். இப் புதிய இரு நெருக்கடிகளும் இணைந்து இலங்கையின் விவசாயத்தின் நீடுநிலைத்த தன்மைக்கு பெரும்ச சவாலாக அமைந்துள்ளது. தரையை துண்டங்களாக்குதல், அதனை அண்மித்த பிரச்சினைகள் மற்றும் அடிக்கடி நிகழ்கின்ற மண் அரிப்பு என்பன நீண்டகாலமாக அதிகரித்துக் காணப்படுகின்ற இன்னொரு அனர்த்தமாகும்.

தற்போது பயிரிடுவதற்கு உகந்த புதிய காணிகள் காணப்படாமை, பயிரிடப்பட்ட பிரதேசங்களை விரிவாக்குவதற்கு அதிகளவு தடைகள் ஏற்பட்டுள்ளன. தேசிய ரீதியில் பயிரிடப்படுகின்ற உணவுப் பயிர்களின் அறுவடையானது திருப்திகரமானதாக இல்லாமையினால் உற்பத்தித் திறன் மற்றும் வருமான அதிகரிப்பானது உண்மையிலேயே சவால்கள் நிறைந்ததாக காணப்படுகின்றது.

1948 ஆம் ஆண்டிலிருந்து சுதந்திரம் பெற்றது முதல் இலங்கையினால்க அதன் உணவு உற்பத்தியை அதிகரித்தது. கிரயமான உட்கட்டமைப்பு வசதிகள், நீர்ப்பாசன நடவடிக்கைகள், தொழில்நுட்ப அபிவிருத்தி ஆராய்ச்சிகள் மற்றும் விஸ்தரிப்பு அகியன தொடர்பாக போதிய முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. (இலக்கு 2அ) எவ்வாறாயினும் 1940 துவக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட பசுமைப் புரட்சி காலத்தில் வளர்ச்சிப் போக்கினைக் காட்டிய விவசாய ஆராய்ச்சிகள் மற்றும் விஸ்தரிப்பு தொடர்பான முதலீடுகள் 1977 ஆம் ஆண்டில் வீழ்ச்சி அடைய ஆரம்பித்ததுடன் அதன் பின்னும் தொழில்நுட்பம் மற்றும் உணவு தயாரிப்பு தொடர்பாக தனியார் துறையினால் செய்யப்படுகின்ற முதலீடுகளிடையே இடைவெளிகள் காணப்படுகின்றன.[54]

உணவு உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு இலங்கை அரசினால் ஏற்றுமதி ஊக்குவிப்புப்படி மற்றும் சில நிதி உபகரணங்களைக் கையாள்கின்றது. வரி மற்றும் பல்வேறு பிஸ்கால் நடவடிக்கைகள், தீர்வை வரித் திட்டம், ஏற்றுமதி பொதியிடல் திட்டம் தொடர்பான தற்கால இறக்குமதி, உற்பத்தி பிணைமுறி உத்தேசத் திட்டங்கள், ஏற்றுமதி அபிவிருத்தி உத்தேச நலத் திட்டம், இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரித்திட்டம் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி வங்கியொன்றினைத் தாபித்தல் என்பன அதில் உள்ளடங்குகின்றன.[55] எவ்வாறாயினும் இதன்போது வியாபாரத்தை பாதிக்கும் ஏற்றுமதிச் சலுகை அரசினால் வழங்கப்படுவதில்லை.

54 ஆசிய அபிவிருத்தி வங்கி (2017). 'The Sri Lankan Economy - Charting a New Course'. Available at https://www.adb.org/sites/default/files/publication/373316/sri-lankan-economy.pdf மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

55 மேற்படி

56 Weerasinghe, M., and S. Bandara (2015), "Health and Socio-economic Determinants of Malnutrition in the Plantation Sector of Sri Lanka: A Review", Working Paper Series No. 21, Institute of Policy Studies of Sri Lanka, Colombo

# முன்னோக்கிய பாதை...

பட்டினி, உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் மந்தப்போஷாக்குத் தேவைகள் என்பவற்றின் பல்பரிமாண பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு கொள்கை மற்றும் நடைமுறை ரீதியிலான சிபார்சுகளுடன் உறுதியான அமுல்படுத்தல் திட்டங்களைக்கொண்ட பல்அம்ச அணுகுமுறை தேவைப்படுகின்றது. இங்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் மேற்கொள்ளும் முதலீடுகள், விவசாய விரிவாக்கம், நீர்ப்பாசனக் கட்டமைப்பு, நவீன மொழிநுட்பங்கள், சந்தைப்படுத்தல் மற்றும் மதிப்புச் சங்கிலி அபிவிருத்தி, பொது தனியார் பங்குடைமை, இடர் தணிப்பு மற்றும் காலநிலை தகவமைப்பு, அதேபோன்று நிலம் மற்றும் விதை சந்தை சீர்திருத்தங்கள் என்பன உள்ளடங்குகின்றன.

தேசத்துக்கான உறுதிப்படுத்தப்பட்ட உணவுப் பாதுகாப்பு, மற்றும் சகலதையும் உள்ளடக்கிய நிலைபேறான பொருளாதார வளர்ச்சியினை எய்துவதற்கு புத்தாக்க தொழிநுட்பங்களை அறிமுகப்படுத்துவதில் கவனம்செலுத்தி புதியதொரு தேசிய விவசாய கொள்கை தயாரிக்கப்படுகின்றது (இலக்குகள் 2.1, 2.3 மற்றும் 2a). விவசாய திணைக்களத்தின் 2016 – 2018 க்கான தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டமானது அரசி மற்றும் ஏனைய உணவுப் பயிர்களின் உற்பத்தி மேம்பாடு, வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டம் (இலக்கு 2.1) என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. மேலும், அரசாங்கம் பால் தொழிற்துறையின் விருத்தி, நவீனமயப்படுத்தப்பட்ட மீன்பிடித்துறை, பாரிய விவசாய வலயங்கள் மற்றும் மதிப்பு தொடர்நிலையங்களின் விருத்தி, அரச-தனியார்-உற்பத்தியாளர் பங்கேற்பு மற்றும் நவீனமயப்படுத்தப்பட்ட நீர்ப்பாசனம் என்பவற்றுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது (இலக்குகள் 2.1 மற்றும் 2a). இலங்கைக்கான விவசாயத்துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின் அபிவிருத்தி குறிக்கோள்கள் விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல், சந்தை அணுகலை மேம்படுத்தல் மற்றும் சிறுநிலவுடைமை விவசாயிகள் மற்றும் வேளாண்மைத்துறையின் பெறுமதி சேர்க்கையை மேம்படுத்துதல் என்பனவாகும்.

இலக்கு 2.4 இல் விதந்துரைக்கப்பட்டவாறு விவசாயத்தில் மீண்டெழும் தன்மையை மேம்படுத்தவும், நிலைபேறான உணவு உற்பத்தி முறைகளை உறுதிப்படுத்துவதற்குமென காலநிலை இடர்களை தணிப்பதற்கு ஏலவே பல்வேறு அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு அமுல்படுத்தப்பட்ட நிகழ்சித்திட்டங்களாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 13 உடன் நெருங்கி தொடர்புடைய சிற்றருவி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், நுண் நீர்ப்பாசன நிகழ்ச்சித்திட்டங்கள், காலநிலையைத் தாங்கும் பல்வேறு அபிவிருத்திகள் மற்றும் குறிகாட்டியினை மையப்படுத்திய விவசாய காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை குறிப்பிடலாம். விதை மற்றும் நடுகை பொருட்களின் தரத்தினை பாதுகாக்கவும் அதனை ஒழுங்குபடுத்தவும், மேலும் விதைகளைப் பயன்படுத்துபவர்கள் மற்றும் நடுகைப் பொருட்களை கையாள்பவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும் ஒழுங்குபடுத்தவும், அத்துடன் சுதேச விதை மற்றும் நடுகைப் பொருட்களின் மரபணு வளங்களைப் பாதுகாக்கவுமென முன்மொழிந்துள்ள புதிய விதை சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் (இலக்கு 2.5). ஓரங்கட்டப்பட்ட மற்றும் இலகுவில் பாதிப்புறும் குழுக்களின் குறைந்த உற்பத்தித்திறன், குறைந்த வினைதிறன் மற்றும் சமத்துவக் கட்டுப்பாட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு கீழ் மதிப்பு விவசாயத்தினை உயர் மதிப்புமிக்கதாக மேம்படுத்துவதற்கு தற்போதிருக்கின்ற “சம்பந்தமற்ற நிலம் மற்றும் நீர்ப்பாசன கொள்கைகளை” சீர்திருத்த வேண்டும்.[57]

இலக்கு 2.2 உடன் தொடர்புடைய சவால்களுக்கு தீர்வுகாண்பதற்கு இலங்கை ஜனாதிபதியின் நேரடி அதிகாரத்தின் கீழ் பொருத்தமான அமைச்சுக்களின் போஷாக்குடன் தொடர்புடைய நடவடிக்கைகளை சிறந்த முறையில் ஒருங்கிணைக்க 2011 ஆம் ஆண்டில் தேசிய போஷாக்கு கவுன்சில் (NNC) ஸ்தாபிக்கப்பட்டதுடன், வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அக்கறைதாரர்கள் அமுல்படுத்தும் விதத்தில் குறிப்பான பணிப்பாணைகளுடன்கூடிய போஷாக்குக்கான பல்துறை செயல்திட்டம் (2013 – 2016) தயார்செய்யப்பட்டது. அதற்கு மேலதிகமாக, உற்பத்தியாளர்களுக்கு மத்தியில் நல்ல விவசாய நடைமுறைகள் (GAP) மற்றும் நல்ல உற்பத்தி நடைமுறைகளை (GMP) மேம்படுத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. SLGAP அடையாளச்சின்னம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதுடன் விவசாயிகளுக்கு மத்தியில் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கும் GAP/GMP தொடர்பான அறிவு மற்றும் தொழிநுட்ப செய்நுட்ப அறிவினை மேம்படுத்துவதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

54 தன்னார்வ தேசிய மீளாய்வு செல்லுபடியாக்க செயலமர்வின்போது பங்காளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்
57 தொலைநோக்கு 2016: இலங்கை, வளமான நாடு: போசாக்கு தொடர்பான பல்பிரிவு செயற்பாட்டுத்திட்டம். இலங்கை தேசிய போசாக்குச் செயலகம் (2013)

இருப்பினும், அதிகளவில் நீரில் தங்கியிருக்கும் விவசாயத்திலிருந்து குறைந்தளவு நீரில் தங்கியிருக்கின்ற விவசாயத்தை/ வறட்சியினைத் தாக்கிபிடிக்கும் பயிர்களை நோக்கி நகராவிட்டால் மற்றும் இயந்திரமயமாக்கலுடன் பல்வகைகளை சேர்த்துக்கொள்ளாவிட்டால் நடைமுறையாக்க சமகால உணவு உற்பத்தி இலக்குகள் அச்சுறுத்தல் நிலையிலேயே இருக்கும். அதே நேரத்தில், மிகவும் நீண்ட மதிப்புச் சங்கிலிகளுடன் தொடர்புபடுத்தப்பட்ட மக்களின்/ விவசாயிகளின் நிறுவனங்களை உருவாக்குவதனூடாக சிறுவுடைமை விவசாயிகளின் அளவுக் கட்டுப்பாட்டுக்கு தீர்வு காண வேண்டும். இதற்கான பிரதான சிபார்சுகளாக கீழே குறிப்பிடும் விடயங்களை அடையாளப்படுத்த முடியும்.

1. பருவகால மழைவீழ்ச்சியை சிறந்த முறையில் முன்னறிவிக்கவும், நவீன தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி மோசமான காலநிலைகள் தொடர்பாக முன்னெச்சரிக்கைகளை விடுக்கவும் இயற்றிறனை மேம்படுத்துவதோடு இத்தகைய முன்னெச்செரிக்கைகளுக்கு துரிதமாக துலங்கல் காட்டும் விதத்தில் நிறுவன ரீதியான ஏற்பாடுகளை விருத்திசெய்தல்.

2. வறட்சியினைத் தாங்கும் பயிர் வகைகள் மற்றும் குறைவான நீர், குறைவான வேலையாட்கள் மற்றும் வேளாண்மை மற்றும் குறைவான இரசாயனப்பதார்த்தங்களை நுகரும் பயிர்ச்செய்கை முறைகளை விருத்திசெய்வதோடு அவற்றை இணைத்துக்கொள்வதற்கு ஊக்குவித்தல்.

3. நீரைப் பாதுகாப்பதற்கான தேவை, பயிர்ச்செய்கைக்கு புதிய தொழிநுட்பம், பெறுமதி சேர்ப்பு மற்றும் சந்தைப்படுத்தல் என்பவற்றை பயன்படுத்துதல் தொடர்பாக விவசாயிகளை அறிவூட்டுதல். இதனால், நடுத்தர மற்றும் நீண்டகால விளைவுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

4. அளவுக் கட்டுப்பாட்டுப் பிரச்சினையை தீர்க்கும் விதத்தில் விவசாயிகளை இயலுமைப்படுத்தினால் மிகவும் குறைவான நீரினைப் பயன்டுத்தும் பயிர்களை உற்பத்தி செய்யவும் அவற்றை களஞ்சியப்படுத்தவும் முடியுமென்பதுடன், பெறுமதி சேர்க்கப்பட்ட மற்றும் சந்தைப்படுத்தல் இலாபத்தினையும் உழைக்க முடியும். இது வினைதிறன்மிக்க கடன் வழங்கலையும் உள்ளீட்டு வழங்கலையும் களஞ்சியப்படுத்தலையும் அவ்வாறே நிலைபேறான/ வர்த்தக ரீதியாக சாத்தியமான காப்பீட்டினையும் வசதிப்படுத்தும்.

5. சிறந்த போஷாக்கு மற்றும் பொருத்தமான உணவுப் பழக்க மாற்றங்கள் தொடர்பாக நுகர்வோரை அறிவூட்டுதல். மாப்பொருள் மற்றும் சீனியை குறைவாக நுகர்தல், பழங்கள் மற்றும் மரக்கறி வகைகளை அதிகமாக நுகர்தல் போன்ற உணவுப் பழக்க மாற்றங்களினூடாக விவசாயத்துக்கு அதிகளவில் நீரில் தங்கிநிற்கும் நிலையை ஓரளவு குறைக்கலாம்.

## 3 சிறந்த சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு

இலங்கையின் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின் கீழ் தாய் மரண விகிதாசாரத்தின் பூகோள இலக்கினை (3.1 இலக்கு) இரண்டு தசாப்தங்களுக்கு முன்னரே அடைந்துள்ளது. (குறிப்பு 4.13 இனைப் பார்வையிடவும்). 2015 ஆம் ஆண்டில் தாய் மரண விகிதாசாரம், நேரடி குழந்தை பிறப்புக்கள் 100,000 இற்கு 33.7 ஆக இருந்ததுடன் வலுவாதார அபிவிருத்தி இலக்கான நேரடி குழந்தை பிறப்பு அத்தொகையின் 70 ஆன பெறுமதியை விட அது பெரும்பாலும் குறைந்த பெறுமானமாகும். அதற்கு மேலதிகமாக ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின் இறப்பு விகிதாசாரம் மற்றும் புதிதாக பிறந்த பிள்ளைகளின் இறப்பு விகிதாசாரம் நேரடி குழந்தை பிறப்புக்களின் ஒரு 100,000 முறையே 10.58 ஆக இருந்தது.[58] இவ் மரண விகிதாசாரம் அந்தந்த குறித்த வலுவாதார அபிவிருத்தி இலக்குளில் நோக்கமாகக் கருதப்படுகின்ற பெறுமானத்தை விட குறைந்த பெறுமானத்தையே பெற்றது. (3.2 இலக்கு).

## தற்போதைய நிலை மற்றும் போக்குகள்

தாய் சேய் மரண விகிதாராசம் வீழ்ச்சியடைதல் மற்றும் ஆயுள் அதிகரித்தல் போன்றவற்றின் ஊடாக இலங்கை சுகாதார முறைமை பிரசித்திபெற்று விளங்குகின்றது. எவ்வாறாயினும் மக்களின் ஆயுள் வேகமாக அதிகரிப்பதும் நோய் வகைகள் வேறுபடுவதும் தொற்றா நோய்கள் அதிகரித்தும் காணப்படுகின்றன. இதன் காரணமாக மேலெழுகின்ற பிரச்சினைகள் நாட்டின் சுகாதாரப் பாதுகாப்புத் தேவைப்பாடுகளை மறுசீரமைப்பதற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

4.13: உரு: இலங்கையின் தாய் மரண வீதம் (1995-2015)




மூலம் : சுகாதார அமைச்சு (2017), வருடாந்த சுகாதார செய்தி விளம்பரம் 2015' சுகாதார அமைச்சு, கொழும்பு. http://www.health.gov.lk/moh_final/english/public/elfinder/files/publications/AHB/2017/AHB%202015.pdf மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

59 தொகைமதிப்பு மற்றும் புள்ளவிபரவியல் திணைக்களம் (2017)

மலேரியா மற்றும் காசநோய் போன்ற சில தொற்று நோய்கள் (3.3 இலக்கு) வீழ்ச்சியடைந்தமை சம்பந்தமாக இலங்கை குறிப்பிடத்தக்களவு செயலாற்றத்தை அடைந்துள்ளது. உதாரணமாக 2016 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பின் மூலம் இலங்கை, மலேரியா நோயினை முற்றிலும் இல்லாதொழித்த நாடொன்றாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.[60] 2015 ஆம் ஆண்டில் நாட்டில் காசநோயின் விகிதாசாரம் 100,000 மக்களுக்கு 65 ஆக காணப்பட்டது. அதன் மரண விகிதாசாரம் 100,000 மக்களுக்கு 5.6 ஆகக் காணப்பட்டதுடன் உலக சுகாதார அமைச்சின் தென் கிழக்காசியப் பிராந்தியத்தில் மொத்தமாக அம் மதிப்பீடு 100,000 மக்களுக்கு 37 மரணங்களெனக் காணப்பட்டது.[61] எவ்வாறாயினும் இங்கு டெங்கு போன்ற பிற தொற்றுநோய்கள் தொடர்பாக கூடிய அவதானம் செலுத்தப்படல் வேண்டும். 2015 ஆண்டில் 100,000 மக்களுக்கு 142 பேர் ஆக காணப்பட்ட டெங்கு நோய்க்கு உட்பட்டோரின் எண்ணிக்கை, 2016 ஆம் ஆண்டில் 100,000 மக்களுக்கு 260 ஆக அதிகரித்துக் காணப்பட்டது.[62] மேலும் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சுகாதார கணிப்பீடுகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டவாறு எச்ஐவி எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வு பெண்களில் 33% வீதமானோரிடமே காணப்பட்டது. இலங்கையில் எச்ஐவி நோயின் பரம்பல் ஒரு வீதமாக குறைவடைந்த போதிலும் அறிக்கையிடப்பட்ட எச்ஜவி நோயாளர்களின் எண்ணிக்கை 95 ஆகக் காணப்பட்டதுடன்[63] அது 2017 ஆம் ஆண்டில் 285 வரை அதிகரித்திருந்தது. உண்மையிலேயே அக் கணிப்பீடு 1987 ஆம் ஆண்டில் இலங்கையில் முதன் முதலாக எச்ஜவி நோயாளர் ஒருவர் இனங்காணப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து ஓராண்டினுள் அறியக்கிடைத்த அதி கூடிய மதிப்பீடாகும்.

வீதி விபத்துக்கள் காரணமாக ஏற்படுகின்ற காயங்கள், மரணங்களின் எண்ணிக்கை (3.6 இலக்கு) அதிகரித்துச் செல்கின்றது. வீதியில் நிகழும் மரணங்களின் எண்ணிக்கை பொதுவாக 2004 ஆம் ஆண்டில் 6.6 இலிருந்து 2017 ஆம் ஆண்டில் 7.5 ஆக அதிகரித்துள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது.[65] வீதி விபத்துக்களின் காரணமாக நிகழ்கின்ற மரண விகிதாசாரம் 2015 ஆம் ஆண்டில் 100,000 மக்களுக்கு 13.4 ஆக காணப்பட்டது.[66]

இலங்கையின் முழுமொத்த சனத்தொகை அதன் சுகாதார முறைமையின் மூலம் உள்ளடக்கப்படுகின்றது. (இலக்கு 3.8) எவ்வாறாயினும், நாட்டில் சுகாதாரத்திற்கென செலவிடப்படும் செலவின் அரைவாசிக்கு மேல் தனிப்பட்ட ரீதியான செலவுகள் ஆவதுடன், அதில் 83% வீதமானவை குடும்பங்களினால் செலவிடப்படுவனவாகும்.[67]

## இடைவெளிகள் மற்றும் சவால்கள்

தொற்றா நோய்கள் காரணமாக ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் இலங்கையில் பாரியதொரு சவாலாக உருவெடுத்துள்ளதுடன், (3.8 இலக்கு) அரச வைத்தியசாலைகளில் வருடாந்தம் நிகழ்கின்ற சகல மரணங்களிலும் 70% வீதமானவை நாற்பட்ட தொற்றா நோய்களின் காரணமாக நிகழ்கின்ற மரணங்களாகும்.[68] இதயகுழலிய நோய்கள், புற்றுநோய், நீரிழிவு, நாட்பட்ட சுவாசநோய்கள், நாட்டு மக்களுக்கு சுமையாக காணப்படுகின்ற பிரதான தொற்றா நோய்களாகும்; 2012 ஆம் ஆண்டில் இலங்கையில் அதிகமானோர் ischemic - இதயநோயினால் மரணமடைந்தனர்.[69] அதற்கு மேலதிகமாக, நாற்பட்ட சிறுநீரக நோய் நாட்டில் கவனம் செலுத்த வேண்டிய மட்டத்திலான பிரச்சினையாக மாறியுள்ளது.

இலங்கயைில் தாய், சேய் மரண விகிதாசாரம் தேசிய ரீதியாக பொதுவான மதிப்பீட்டில் குறைந்து காணப்பட்ட போதிலும், பிரதேச ரீதியாக கவனஞ் செலுத்த வேண்டிய மட்டத்திலுள்ள முரண்பாடுகள், எந்தவொரு நபரையும் புறக்கணிக்காதிருப்பதற்கு உத்தரவாதமளித்தல் ஆகியவற்றின் போது மேலும் வெற்றிகொள்ள வேண்டிய சவால்களை அவை உணர்த்தி நிற்கின்றன. (3.1, 3.2 மற்றும் 3.8 இலக்கு); குடும்பத்திட்டமிடலின் தமது தேவைப்பாட்டினை நவீன முறைகளின் மூலம் இனப்பெருக்க வயதிலுள்ள 55.9 வீதமானோரே திருப்தியுற்றனர்.[72] முழுமையான பாலியல் கல்விசார் விபரங்களை பாடசாலை பாடவிதானத்தில் இல்லாதிருத்தல் மற்றும் அந்த விடயம் தொடர்பாக முதியோருக்கு கல்வியறிவு வழங்கப்படாமை போன்ற பிரச்சினைகள் போன்றே, பாலியல் கல்வி சம்பந்தமான எண்ணக்கரு மேம்பாடு தொடர்பாகவும் கவனஞ் செலுத்துவது சிறந்ததாகும்.[73]

60 இலங்கை மத்திய வங்கி (2017), ‘ஆண்டறிக்கை 2016’ இலங்கை மத்திய வங்கி, கொழும்பு
61 ஊலக சுகாதார ஒன்றியம் (2017), (2017)இ ‘Bending the Curve, Ending TB: Annual Report 2017’. http://apps.who.int/iris/bitstream/handle/10665/254762/978929022584-eng.pdf?sequence=1&isAllowed=y மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.
62 இலங்கை மத்திய வங்கி (2017)
63 சுகாதார அமைச்சு (2015), ஆண்டறிக்கை 2015: பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு தேசிய நிகழ்ச்சித்திட்டம், சுகாதார அமைச்சு, கொழும்பு.
64 பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு தேசிய நிகழ்ச்சித்திட்டம் (2017),’இற்றைவரையாக்கப்பட்ட: 201 ஆம் காலாண்டு, சுகாதார அமைச்சு, கொழும்பு.
65 பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு தேசிய நிகழ்ச்சித்திட்டம் (2017),’இற்றைவரையாக்கப்பட்ட: 201 ஆம் காலாண்டு, சுகாதார அமைச்சு, கொழும்பு.
66 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் (2017)
67 உலக சுகாதார அமைப்பு (2015) உலக சுகாதார புள்ளிவிபரம் 2015’ உலக சுகாதார அமைப்பு, ஜெனீவா
68 சுகாதார அமைச்சு (2012), “வருடாந்த சுகாதார பத்திரினை அறிவித்தல் 2012’, சுகாதார அமைச்சு, கொழும்பு
69 உலக சுகாதார அமைப்பு (2017), ‘Sri Lanka: WHO Statistical Profile’. http://www.who.int/gho/countries/lka.pdf?ua=1 மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.
70 ஆரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017 - 2020
71 ஆரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017 - 2020
72 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் (2017)

தோற்றாநோய்கள் சம்பந்தமாக நோக்கும் போது (3.3 இலக்கு) தற்போது அச்சுறுத்தல்கள் இல்லாதபோதும் டெங்கு, நீர்ப்பீடனம், எச்ஐவி, தொழுநோய், காசநோய் ஆகியன மீண்டும் மேலெழாது இல்லாதொழித்தல், வீழ்ச்சியடையச் செய்தல் தொடர்பாக அவதானம் செலுத்தப்படல் வேண்டும். அதற்கு மேலதிகமாக விழிப்புணர்வு இன்மையும் பல்துறை தொடர்பாடல் இன்மையும் விசேடமாக டெங்கு நோய் சம்மந்தமாகவும் மேலெழுகின்ற பிரச்சினைகளாக இனங்காணப்பட்டுள்ளன. அவ்வாறே புதிய நோயாளர்களை இனங்கண்டு, அவர்களது நிலையை முன்னேற்றவேண்டிய தேவையும் உள்ளது.[75]

இலங்கையில் துரிதமாக அதிகரித்துச் செல்லும் சனத்தொகை நாற்பட்ட சிறுநீரக நோயின் பரம்பல் அதிகரித்தல், குடும்ப வருமானம் அதகரித்து ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்களுடன் மதுபானம், புகையிலை பயன்பாடுகள் அதிகரித்தல் (3.5 இலக்கு) ஆகியன தொற்றா நோய்கள் பரவுவதற்கு பங்களிப்புச் செய்கின்றதென எதிர்பார்க்கப்படும் காரணிகளாக கருதப்படுகின்றன. (இலக்கு 3.4)[76] மேலும் கிருமிநாசினிகள் காரணமாகவும் நாட்பட்ட நோய்கள் உருவாகக் கூடிய இயலுமை சுட்டிக் காட்டப்படுவதுடன் விவசாய நடவடிக்கைகள் அதிகமாக மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் நாட்பட்ட சிறுநீரக நோய் தொடர்பாக நோக்கும்போது[77] ஆபத்தான ஔடத இரசாயனப் பொருட்கள் மற்றும் மாசடைதல் காரணமாக ஏற்படுகின்ற மரணங்கள் மற்றும் நோய்களை வீழ்ச்சியடையச் செய்வது தொடர்பாக அவதானம் செலுத்தப்படல் வேண்டும் (3.9 இலக்கு). தொற்றா நோய்களுக்கு எதிராக போராடுவதற்கான பின்புலத்தினை வடிவமைப்பதற்காக இச் சவால்கள் வெற்றிகொள்ளப்படல் வேண்டும்.

## முன்னோக்கிய பாதை...

நாட்டில் சுகாதாரத் துறையினை தரம் மிக்கதாக மேம்படுத்தப்பட வேண்டியதுடன் மேலெழுகின்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காலத்திற்கேற்ற வகையில் தீர்மானங்கள் எடுக்கப்படல் வேண்டும். அடிப்படைச் சுகாதார சேவைகள் வழங்கல் வலுவூட்டப்பட வேண்டியதுடன் அதனூடாக சுகாதார சேவை தொடர்பாக தனிப்பட்ட ரீதியாக ஏற்கப்படும் செலவுகள் (மற்றும் பாக்கட் செலவுகள்) போன்றே இரண்டாம் மூன்றாம் நிலை சுகாதார வசதிகளை மக்களுக்கு வழங்குவது குறைக்கப்படல் வேண்டும். அதற்கு மேலதிகமாக அரச வைத்தியசாலைகளில் பயன்பாட்டு சேவைகளை மேம்படுத்துவதற்கும் உலச் சுகாதார சேவைகளுக்கான அணுகுமுறைகள் மற்றும் அது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவது இன்றியமையாததாகும். உயிரிழப்புக்கள் மற்றும் நோய்களுக்கு ஆளாகுதல் மாத்திரமன்றி வறுமை மற்றும் பொருளாதார விருத்தி தொடர்பாக தாக்கங்களை ஏற்படுத்தப்படுத்த வேண்டியுள்ளமை பற்றிக் கருத்திற்கொண்டு தொற்றாநோய்களின் பரம்பலை வீழ்ச்சியடையச் செய்வதும் அத்தியாவசியமாகும்.

உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல். அத்தியாவசிய ஔடதங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல், தற்போதைய சுகாதார முறைமையினை படிப்படையாக அபிவிருத்தி செய்வதை உறுதிப்படுத்தல் ஆகியன தொடர்பாக தொடர்ந்தேச்சையான அவதானம் அரசாங்கத்தினால் செலுத்தப்பட்டுவருகின்றது. புதிய சுகாதார கொள்கை (2016-2025) மற்றும் அடிப்படை சுகாதாரச் சேவையை அபிவிருத்தி செய்வதன் ஊடாக அரசாங்கம் அனைவருக்கும் சுகாதாரச் சேவைகளை உறுதிப்படுத்தும்போது மெலெழுகின்ற சவால்களை வெற்றிகொள்ளுமுகமாக பின்வரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1. குறித்தி அத்தியாவசிய சேவைகள் போன்று விசேட சிகிச்சைகளை வழங்குகின்ற வைத்தியசாலைகளில் நிலவுகின்ற நெருக்கடிகளை போக்குமுகமாக நிபுணத்துவ வைத்தியர்களை ஈடுபடுத்துவதற்கான உரிய செயல்முறை ஒன்றுடன் இலகுவாக பிரவேசிக்கக்கூடிய இயலுமை மற்றும் நோய்களை முன்னரேயே இணங்காண்பதை உறுதிப்படுத்தி அடிப்படை சுகாதார சேவை முறைமையை மறுசீரமைத்தல்.

73 முதலாவது தொனிப்பொருள் குறித்த செயலமர்வில் பங்காளர்களினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள்
74 அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017 - 2020
75 பங்காளர்களினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள்
76 அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017 - 2020
77 இலங்கை கொள்கைகள் கல்வி நிறுவகம் (2016),' பொருளாதார நிலை 2016' இலங்கை கொள்கைகள் கல்வி நிறுவகம், கொழும்பு
78 தன்னார்வ தேசிய மீளாய்வு செல்லுபடியாக செயலமர்வில் பங்காளர்களினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள்

2. சுகாதார சேவை அமைப்புக்களை வலுவூட்டல் மற்றும் பயனுறுதி மிக்கதும் செயற்திறன் மிக்கதுமான சேவைகளை வழங்குவது தொடர்பாக மாத்திரமன்றி நோயாளர்களின் திருப்தியையும் உறுதிப்படுத்துமுகமாக மக்களை மையமாகக் கொண்ட தரம்வாய்ந்த சேவையொன்றை வழங்குவது தொடர்பாகவும் சுகாதார சேவை வழங்கல் மற்றும் கண்காணித்தல்.

3. இனங்காணப்பட்ட மக்கள் தொகுதியினருக்கு அடிப்படை வைத்திய சேவை அலகுகளை தாபிப்பதன் மூலம் அனைத்து நோயாளர்களுக்கும் தொடர்ச்சியான வைத்திய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உறுதியளிப்பதுடன் விலை குறைந்த நீடு நிலைத்த மக்கள் மையப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த சுகாதார சேவையொன்றை விருத்தி செய்தல்.

4. முரண்பாடுகளை கலைந்து சுகாதார சேவை வழங்கலை தரம் வாய்ந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் மேம்படுத்தல்.

சிறந்த சுகாதார மற்றும் சிறந்த பழக்கவழக்கள் தொடர்பான வலுவாதார அபிவிருத்தி இலக்கு 3 இனை அடைந்து கொள்வதானது, பிற வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதுடன் பின்னிப் பிணைந்துள்ளது: சுகாதார சேவை தொடர்பாக அதிகமாக செலவிடுவதன் காரணமாக வறுமையை ஒழிக்கும் நிகழ்ச்சிகளின் தாக்கம் குறைவடையக்கூடும். (வலுவாதார அபிவிருத்தி இலக்கு 1 மற்றும் 10); போசாக்கு தொடர்பான பலவீனமான செயலாற்றம் (வலுவாதார அபிவிருத்தி இலக்கு 2 இனை நோக்கவும்) பிள்ளைகளின் உடல், உள சுகாதாரம் மற்றும் பழக்கவழக்கங்களில் நேர் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. (வலுவாதார அபிவிருத்தி இலக்கு 2); நோய் தடுப்பு தொடர்பான கல்வி மற்றும் விழிப்புணர்வு மக்களை வலுமிக்க வகையில் சுகதேசிகளாக இருப்பதற்கு துணைபுரின்றமை அவசியமாகும். (வலுவாதார அபிவிருத்தி இலக்கு 4); சுத்தமான நீர் மற்றும் துப்பரவேற்பாடு (வலுவாதார அபிவிருத்தி இலக்கு 6); மற்றும் தூய வலுசக்தி (வலுவாதார அபிவிருத்தி இலக்கு 7) வழங்கப்படுவதன் ஊடாக வலுவாதார பயன்பாடுகள் மற்றும் உற்பத்தியினை ஊக்குவிப்பதன் மூலம் (வலுவாதார அபிவிருத்தி இலக்கு 12), சுற்றாடல் மாசடைவதன் காரணமாக ஏற்படுகின்ற மரணங்கள் மற்றும் நோய்களுக்கு ஆளாகும் நிலைமைகளை குறைவடையச் செய்வது அவசியமாகும்; அரசின் சுகாதார சேவை செலவுகளின் சுமையைக் குறைக்கும் பொருட்டு தனியார் துறைக்கு வளப் பகிர்வு தொடர்பான புத்தாக்கங்கள் அவசியமாகின்றன. (வலுவாதார அபிவிருத்தி இலக்கு 8); சுகாதார சேவை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படல் வேண்டும். (வலுவாதார அபிவிருத்தி இலக்கு 9); நகர திட்டமிடலின் போது மிகவும் சுத்தமானதும் பாதுகாப்பானதும் ஆரோக்கியமானதுமாக வாழக்கூடிய வகையில் வீட்டு வசதிகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் பசுமை அவகாசமளிப்பு அணுகுமுறைகளில் அவதானம் செலுத்தப்படல் வேண்டும். (வலுவாதார இலக்கு 11); காலநிலை மற்றும் அதனுடன் தொடர்புடையதாக ஏற்படுகின்ற நெருக்கடிகள் மற்றும் அனர்த்தங்கள் காரணமாக சுகாதாரத்திற்கு ஏற்படுகின்ற ஆபத்துக்கள் குறித்து காப்புறுதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். (வலுவாதாரா அபிவிருத்தி இலக்கு 13); நீரின் கீழ் வாழ்வு (வலுவாதார அபிவிருத்தி இலக்கு 14) மற்றும் புவியின் மேல் வாழ்வு (வலுவாதார அபிவிருத்தி இலக்கு 15) நீடு நிலைத்த வகையில் முகாமைத்துவப்படுத்தல், உணவு விநியோகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார ரீதியாக உணவுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இயலுமையை உறுதிப்படுத்தும் பொருட்டு அவசியமாகின்றன; மோதல்கள் மற்றும் வன்முறையினூடாக உள மற்றும் உடல் ரீதியான ரீதியாக ஏற்படுத்தப்படுகின்ற தீய பாதிப்புக்களை இனங்காணல் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதும் அத்தியாவசியமாகும். (வலுவாதார அபிவிருத்தி இலக்கு 16); இறுதியாக வலுவாதார அபிவிருத்தி இலக்கு 17 இன் மூலம் மக்களுக்கு சுபீட்சமானதும், சுகதேகியாகவும் வாழ்வதற்கு இடமளிக்கும் நல்லாட்சியை அடிப்படையாகக் கொண்ட சமூகரீதியான கட்டமைப்புக்கள் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளின் ஊடாக அதற்கான பின்புலம் வழங்கப்படுகின்றது.79

79 Based on https://unsdglk.socialcops.com/ அடிப்படையாக கொண்டதாகும்.

# 4 தரமிக்க கல்வி

## தற்போதைய நிலை மற்றும் போக்குகள்

இக்கொள்கையானது நீண்டகால மோதலுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்கு தீர்வுகளை முன்வைத்தல், சமாதான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தைக் கட்டியெழுப்புதல், வகைகூறும் நிறுவனங்களை அமைத்தல் மற்றும் சுதந்திர மற்றும் நீதியான சமூகத்தை உறுதிப்படுத்தல் போன்ற அம்சங்களில் கவனம் செலுத்தும். இலங்கை அரசாங்கம் 2009 ஆம் ஆண்டிலிருந்து ''அபிவிருத்தியினூடாக சமாதானம்'' என்ற கொள்கையை நிறைவேற்றியது. மோதல் முடிவடைந்தவுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்பல் கொள்கை உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் கவனம் செலுத்தியதுடன் அது சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் புதிய போக்குகளை உருவாக்கியது.[158] அரசாங்கம் பாதிக்கப்பட்ட பகுதிகளை புனர்நிர்மாணம் செய்வதற்கு ''வடக்கின் வசந்தம்'' மற்றும் ''கிழக்கின் எழுச்சி'' ஆகிய இரு பாரிய கொள்கைகளை அறிமுகப்படுத்தியது.

அரசாங்கம் வடக்கிலும் கிழக்கிலும் பல்வேறு கருத்திட்டங்களில் முதலீடுகளை மேற்கொண்டது. இங்கு வடக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்பும் குடியமர்த்தலும், வீதி அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாசனம், கல்வி மற்றும் நிர்வாகம்[159] உள்ளடங்கலான புனர்நிர்மாண வேலைத்திட்டங்களும், கிழக்கில் செயற்படுத்தப்பட்ட உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தல், கன்னிவெடிகளை அகற்றுதல், புனர்வாழ்வு, மற்றும் புதிய வீதிகள், பாலங்கள், துறைமுகங்கள், மின்ஆலைகள், மின்சாரப் பகிர்வு இணைப்புக்கள், வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலைகளை நிர்மாணித்தல் போன்று வேலைத்திட்டங்களும் உள்ளடங்கும்.[160] அரசாங்கம் மோதலுக்கு பிந்திய அபிவிருத்தித் தேவைகளுக்காக 2009 ஆம் ஆண்டிலிருந்து 2,494 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் 65 பாரிய அபிவிருத்தித் திட்டங்களையும், பல்வேறு அமைச்சுகளினூடாக 2,659 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் 125 பாரிய அபிவிருத்தித் திட்டங்களையும் அமுல்படுத்தியது. அத்துடன், பல்வேறு நன்கொடை முகவர்கள் உள்நாட்டு அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் பங்காளி அமைப்புக்களினூடாக நேரடியாகவே அதிக எண்ணிக்கையிலான கருத்திட்டங்களை அமுல்படுத்தின. இது தொடர்பான (அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்துக்கு வெளியே) மொத்த முதலீடு கிட்டத்தட்ட 1,430 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

அரசாங்கம் அபிவிருத்தியினூடாக சமாதானத்தை ஊக்குவித்த அதேநேரத்தில் இலங்கை மக்கள் யாவரும் சமத்துவத்தை அனுபவிப்பதற்காக ஜனநாயகம் மற்றும் சிவில் பிரஜை என்ற அந்தஸ்த்தின் முழுமையான பயனை பெறும் விதத்தில் நிலையான சமாதானம் மற்றும் பாதுகாப்பைக் கட்டியெழுப்புவதற்கு கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தது. மோதல் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் ஆரம்பித்த கன்னிவெடி அகற்றல் நடவடிக்கை பல வருடங்களாக தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அரசாங்கம் தேசிய கன்னிவெடி அகற்றல் நிகழ்ச்சித்திட்டத்துக்கு தொடர்ந்து பாரியளவு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டதுடன் அதற்கு பங்காளர் நாடுகள் மற்றும் அமைப்புக்களின் ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்றது. இப்பங்காளர்கள் மற்றும் இலங்கை பாதுகாப்புப் படையின் முயற்சிகளின் விளைவாக இலங்கை கன்னிவெடி தடைகள் தொடர்பான ஒட்டாவா சமவாயத்தில் கைச்சாத்திட்டதுடன் 2020 இல் இலங்கையை கன்னிவெடிகள் அற்ற நாடாக உருவாக்குவதே அதன் இலக்காகும். இன்று, மனிதாபிமான கன்னிவெடி அகற்றல் முயற்சிகள் மீள்குடியமர்த்தல் செயற்பாடுகளை துரிதப்படுத்தியுள்ளதுடன், நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கை என்ற வகையில் அதன் வகிபாகம் நாட்டின் நல்லிணக்க முயற்சிகளில் முக்கியமானதொரு வகிபங்கினை ஆற்றுகின்றது.

## இடைவெளிகள் மற்றும் சவால்கள்

நீடித்த சமாதானத்தின் பேண்தகைமைக்கு அரசாங்கத்தின் முயற்சிகளிருந்தாலும் ஒரு சில சவால்கள் தொடர்ந்தும் இருந்த வண்ணமுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் அதிக பிரசன்னம், வறுமை, எழுத்தறிவின்மை, மற்றும் மோசடி போன்ற காரணங்களால் எதிர்ப்பு சம்பவங்கள் நிகழ்ந்தவண்ணமுள்ளன (16.1). ஆயுதப் போராட்டக் காலத்தில் இராணுவத்தினர் வடக்கில் மக்களுக்கு சொந்தமான காணிகளில் குடியேறினர். 2018 மார்ச் மாதமளவில், யுத்தக்காலத்தில் பாதுகாப்புப்படை வசமிருந்த தனியார் காணிகளுள் சுமார் 70% க்கும் அதிகமானவை அவற்றின் மூல மற்றும் உரித்துள்ள உரிமையாளர்களுக்கு கையளிப்பதற்கு விடுவிக்கப்பட்டன. 2018 ஜனவரி மாதம் ஜனாதிபதி செயலாளரின் தலைமையில் ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டதுடன் அக்குழு அக்கறைதாரர்களின் பங்கேற்புடன் காணி விடுவிப்பு செயன்முறை, இழப்பீடுகளை வழங்கல், மற்றும் அவற்றுடன் தொடர்பான விடயங்களை கண்காணிக்கவும் மேற்பார்வை செய்யவும் அடிக்கடி சந்திக்கும்.[162]

சமாதானத்தையும் நீதியையும் உறுதிப்படுத்துவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட பொறிமுறைகளும், சட்ட வரைவுத்திட்டங்களும் கொள்கைகளும் அமுலிலுள்ளன. என்றாலும், வலுவான நிறுவனங்கள் போதியளவு இல்லாமையால் அமுல்படுத்தலிலும் கண்காணித்தலிலும் இடைவெளிகளுள்ளன. (இலக்கு 16.6) உதாரணமாக, அரசாங்கம் தண்டனைச் சட்டக்கோவை, இலஞ்ச சட்டம் மற்றும் ஊழலையும் அச்சுறுத்தும் விதத்திலான ஊழல் முயற்சியினையும் குற்றமாக்கும் ஊழல் தடுப்புச் சட்டம் போன்ற இலஞ்சம் மற்றும் ஊழலுக்கெதிரான சட்டங்களின் அமுல்படுத்தலை பலப்படுத்தியிருந்தாலும் போதிய வளங்கள் மற்றும் தொழிநுட்ப நிபுணர்களின் பற்றாக்குறை காரணமாக அவற்றின் அமுல்படுத்தல் தடைப்பட்டுள்ளன. மேலும், பலமான அரசியல் பின்னணியுள்ளவர்கள் ஊழல் குற்றங்களிலிருந்து தண்டனை பெறாது தப்பித்துக்கொள்கின்றனர். [163]

பலவீனமான ஆட்சியும் பலவீனமான நிறுவன ரீதியான பொறிமுறைகளும் இலங்கையின் நீண்டகால வளர்ச்சி ஆற்றலை தொடர்ந்தும் வலிவற்றதாக்குகின்றன. ஏனைய காரணிகளுடன் சட்டவாட்சியிலுள்ள பலவீனங்கள், ஊழல் மற்றும் ஜனநாயக சுதந்திரத்தின் குறைபாடு போன்றன தொடர்ந்தும் ஆட்சி நியமங்கள் மீதான உலகளாவிய குறிகாட்டிகளில் இலங்கையின் ஸ்தானத்துக்கு எதிர்மறையான தாக்கத்தையே ஏற்படுத்துகின்றன. இவ்வாறான பலவீனங்கள் எதிர்பாராத வகையில் கொள்கையிலும். பலவீனமான பொது மக்கள் சேவை வழங்கலிலும், மேலும் முதலீடுகளைத் தடுக்கின்ற, பொதுமக்கள் நம்பிக்கையை குறைத்து மதிப்பிடுகின்ற நிர்வாக ரீதியான சிவப்பு நாடாவிலும் பிரதிபலிக்கின்றன.[164]

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி வறுமைச் சக்கரத்தை உடைப்பதுடன், ஓரங்கட்டப்படுவதையும் மற்றும் மோதல்கள் ஏற்படும் சம்பவங்களையும் குறைக்கின்றது. எனவே, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தின் பேண்தகைமைக்கு கிராமப்புற வருமானத்தையும் தொழில் வாய்ப்புக்களையும் மேம்படுத்தும் விதத்தில் ஓரங்கட்டப்பட்ட பிரதேசங்களில் அதிகமான முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும். நீடித்த சமாதானத்தையும் நீதியையும் உறுதிப்படுத்துவதற்கு அபிவிருத்தி பரிமானங்களுடனான ஜனநாயகத்தன்மையின் கூட்டிணைவில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். 16.7 ஆம் இலக்கினை எய்துவதற்கு சனசமூகங்கள் தமது சனசமூகத்தின் விருத்திக்கு அக்கறைதாரர்களாக பங்களிப்புச் செய்யும் விதத்தில் கிராமிய சனசமூகங்களை வலுப்படுத்த வேண்டியிருப்பதுடன், பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல்களுடன் கிராமிய கருத்திட்டங்களை இணைக்க வேண்டும். எனினும், அபிவிருத்தியிலும் ஆட்சியிலும் மக்களின் பங்கேற்பானது மேலும் மேம்படுத்தப்பட வேண்டிய பகுதிகளுள் ஒன்றாகும்.

கண்டறியப்படாத தரவுகளும் அறிக்கைப்படுத்தப்படாத விடயங்களும் மிக அதிகமாக இருப்பதன் காரணமாக 16 ஆம் இலக்கு தொடர்பில் தரவுகள் மற்றும் தகவல் இடைவெளி முக்கியமானதொரு பிரச்சினையாகும். உரிய அமைச்சுக்கள் தரவுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் தமது மறுசீரமைப்புக் கொள்கைகளை திட்டமிடுவதற்கு உத்தேசிப்பதனால் 16 ஆம் இலக்கினை அடைவதற்கு முன்னே செல்கையில் தகவல் சேகரிப்பும் அறிக்கைப்படுத்தலும் முக்கிய அம்சங்களாகும்.

# முன்னோக்கிய பாதை

அரசாங்கத்தின் தூரநோக்கு 2025 இல் முன்வைக்கப்பட்டுள்ளது போன்று, அரசாங்கம் சட்டவாட்சியையும் நல்லாட்சியையும் உறுதிப்படுத்தும்; அனைவரதும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும்; பலமான ஜனநாயகத்துக்குத் தேவைப்படுகின்ற சகலரையும் உள்ளடக்கிய சமத்துவமான வளர்ச்சியும் விருத்தியும் மேம்படுத்தப்படும். நாடு தற்போது புதியதொரு அரசியல்யாப்பினை வரையும் செயன்முறையிலுள்ளது. இது ஒவ்வொரு இன மற்றும் மதக் குழுக்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்வதற்கான தளமாக அமையும். நாட்டில் சமாதானத்தையும் நீதியையும் நிலைநாட்டுவதற்கு வலுவான சட்ட அமுலாக்கல் நிறுவனங்களும் சிறந்த கண்காணிப்பு பொறிமுறைகளும் முக்கியமானவை. புதிய அரசியல் யாப்பினூடாக வலுவான நிறுவனங்களுடன் மக்கள், உலகம், சுபீட்சம் மற்றும் பங்கான்மை ஆகிய அனைத்தையும் ஒன்றிணைக்க முடியும். விழுமியங்கள், குணநல பண்புகள், நடத்தை முறைகள் தொடர்பான கல்வியும் வாழ்க்கை முறையும் எவ்வகையான பிணக்குகளையும் சமாதானமாக, மனிதாபிமானத்துக்கு மதிப்பளித்து, சகிப்புத்தன்மையுடன் பாரபட்சமின்றி தீர்த்துக்கொள்ள வழிப்படுத்தும்.

2015 ஆம் ஆண்டில் புதிய அரசாங்கம் தெரிவுசெய்யப்பட்டதிலிருந்து அபிவிருத்திப் பரிமாணத்துடன் ஜனநாயகத்தன்மையை உள்ளடக்குவதற்காக அபிவிருத்தியினூடாக சமாதானம் என்ற எண்ணக்கரு மேலும் முன்னேற்றமடைந்துள்ளது. ஜனநாயக செயன்முறையானது வன்முறையற்ற, அச்சமற்ற சமுதாயத்துக்காக நீதியையும் வகைகூறலையும் நிறுவனமயப்படுத்துவதில் கவனம் செலுத்தும். (இலக்கு 16.1 மற்றும் 16.2). இக்குறிக்கோளை உண்மைப்படுத்துவதற்கு அரசாங்கம் பல கொள்கைகளை அமுல்படுத்தியிருக்கின்றது. சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேசிய கீதம் இசைப்பது ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலைப் பாடநூல்களில் ஒரு இனக்குழுவின் மற்றொரு குழுவினை விஞ்சிய வீரத்தினை ஒத்த செயல்களை பெரிதுபடுத்தியுள்ள விடயத்தில் இலங்கை உற்சாகப்படுத்தும் முன்னேற்றத்தை மேற்கொண்டுள்ளது. கலாச்சார பன்மைவாதத்தை மேம்படுத்துவதற்கும் பிரஜைகளின் சமூக உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிமை உடையவர்கள், கடமைப் பொறுப்புடையவர்கள் மற்றும் வகைகூறும் நிறுவனங்களை இனங்காணும் விதத்தில் மனித உரிமைகள் அணுகுமுறைக்கு முக்கியத்துவமளிப்பதற்கும் சமூக ஒருங்கிணைப்புக்கான தேசிய கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நல்லிணக்கத்துக்கான தேவையை வலியுறுத்துவதற்கு தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகத்தினால் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வுக்கான தேசிய கொள்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

---

163 ளுசை டியமெய யுவெை-உழசசரிவழைெ சுநிழசவஇ யுவெை-உழசசரிவழைெ ிழசவயடஇ புயுே ஐவெநபசவைல ாவவிள:.⁚.⁚.றறற.டிரளநைளள-யவெை-உழசசரிவழைெ.உழஅ.⁚.உழரவெசலிசழகடைநள.⁚.ளசை-டயமெய.⁚.

164 ஏளைழைெ 2025

165 ளுவயமநாழடனநச ளைரவ கசழஅ வாந எயடனையவழைெ றழசமளாழி

நாட்டில் ஜனநாயகத்தை பலப்படுத்தும் விதத்தில் இலங்கை அரசாங்கம் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமை சட்டம் மற்றும் 2017 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் சட்டம் ஆகிய இரு முக்கிய சட்டமூலங்களை நிறைவேற்றியது. தகவலுக்கான உரிமைச் சட்டமானது சகல பிரஜைகளுக்கும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையை வழங்குவதன் மூலம் பொது நிறுவனங்களில் வெளிப்படைத்தன்மை மற்றும் வகைகூறல் கலாச்சாரத்தை மேம்படுத்துகின்றது (இலக்கு 16.10). இது இலங்கையர்களுக்கு பொது வாழ்க்கையில் சிறந்த பங்கேற்புக்கும் ஊழல் எதிர்ப்புக்குமான சக்தியை வழங்குவதுடன் வகைகூறலையும் நல்லாட்சியையும் மேம்படுத்தும். காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் தொடர்பான சட்டம் நிலைமாறுகால நீதியை எட்டுவதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்குவதுடன் மூன்று தசாப்தகால ஆயுதப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடுகளையும் பெற்றுக்கொடுக்கின்றது. காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை செயற்படுத்துவதற்கு 2018 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ரூபா. 1.3 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சானது பாதுகாப்பு, அரவணைப்பு மற்றும் வழிகாட்டல்களை வழங்கவும், பால்நிலை அடிப்படையிலான வன்முறையுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைக்கவும், உணர்வு ரீதியான ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனைகளை வழங்கவும் பிரதேச செயலக மட்டங்களில் பெண்கள் மற்றும் சிறுவர் அலகினை நிறுவி பின்தங்கிய கிராமப் புறங்களில் பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் தொடர்பாக கருமமாற்றுவதற்காக உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது (இலக்குகள் 16.1 மற்றும் 16.2). அவர்கள் வைத்தியசாலைகள் மற்றும் சனசமூக அமைப்புக்கள் போன்ற ஏனைய அரச முகவர்களுடன் இணைந்து ஒத்துழைப்புடன் பணியாற்றுவதுடன் அரச பொறிமுறைக்கும் சனசமூகத்திக்கிடையிலான முக்கிய இணைப்பாக தொழிற்படுகின்றனர். ஆட்கடத்தலுக்கெதிரான தேசிய செயலணி ஆட்கடத்தலைக் கண்காணிக்கவும் அதனைத் தடுக்கவும் குறித்த இலக்குத் தலையீடுகளுக்கு அக்கறைதாரர்களின் இணைப்பினையும் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொள்ளும் விதத்தில் 2015 – 2018 காலத்துக்கு ஒரு மூலோபாயத் திட்டத்தை விருத்திசெய்துள்ளது.[166] இலங்கையில் UNHRC இன் தொழிற்படுகளுள் ஐ.நாவின் ஏனைய முகவர்களின் ஒத்துழைப்புடன் அரசாங்கத்தின் சமாதான நிகழ்ச்சிநிரல் மற்றும் 2016 ஆம் ஆண்டின் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டத்துக்கு உதவுதல்; மோதலின் காரணமான இடப்பெயர்வுக்கு நிலைத்து நிற்கக்கூடிய தீர்வுகளை வழங்கும் விதத்தில் தேசிய கொள்கையின் முழுமையான அமுல்படுத்தலுக்கு ஆதரவு வழங்குதல் (2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் சிறைச்சாலை மறுசீரமைப்புகள், புனர்வாழ்வு, மீள்குடியேற்றல் மற்றும் இந்து விவகார அமைச்சினால் நிர்வகிக்கப்படுகின்றது); மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சட்ட உதவி ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதனூடாக திரும்ப வருபவர்களுக்கு நீதி மற்றும் சட்டவாட்சி கிடைப்பதை பலப்படுத்துதல் என்பவை முக்கியமானவை.

இலங்கையில் பல்துறைசார் - அக்கறைதாரர் அணுகுமுறையினூடாக சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான கூட்டு முயற்சியின் மற்றுமொரு நல்ல உதாரணம் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டமாகும். அத்திட்டம் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் சிவில் சமூகத்தினதும் தன்னார்வ தொண்டர்களதும் வகிபாகத்தை பலப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கையின் அனைத்து மட்டங்களிலும் சமாதானம் மற்றும் பாதுகாப்பை தக்க வைப்பதுடன் தொடர்புடைய விடயங்களுக்கு துலங்கல் காட்டவும் ஆட்சி முறை மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல் பணிகளில் பெண்கள் மற்றும் இளவயதினரின் பங்கேற்பினை வலுவூட்டுவதற்கும் 2016 ஆம் ஆண்டிலிருந்து பிரதமர் செயலகம், நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் (SCRM), தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு மற்றும் தேசிய சகவாழ்வு, உரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு ஆகிய நிறுவனங்கள் ஐ.நா வின் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான நிதியின் ஒத்துழைப்புடன் UNHCR, ஐ.நா தொண்டர்கள் மற்றும் ஐ.நா வுமென் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து கருமமாற்றுகின்றன.

அத்துடன், அரசாங்கம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் மக்கள் பங்கேற்பின் இடைவெளிகளுக்கு தீர்வு காண்பதற்கு கிராம இராச்சியம் என்ற எண்ணக்கருவை அமுல்படுத்துவதற்கான முன்மொழிதல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வெண்ணக்கரு கிராம மக்களை தமது சனசமூகத்தின் அபிவிருத்தியில் ஆர்வமுள்ளவர்களாக உருவாக்குவதுடன் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சிநரல்களில் கிராம கருத்திட்டங்களையும் உள்வாங்கும். கிராம இராச்சியத்தின் பிரதான குறிக்கோள்கள் கிராமங்களின் சமூக பொருளாதார மற்றும் கலாச்சார அபிவிருத்தி, சமூக நலன்புரி, சமூகப் பொருளாதார பொருட்களின் பகிரப்பட்ட உடைமை மற்றும் கிராம அபிவிருத்தியை தேசிய அபிவிருத்தி இலக்குகளுடன் வரிசைப்படுத்தல் என்பனவாகும்.

166 Vision 2025
167 ibid

# 05

# அமுல்படுத்தற் முறை

வலுவாதார அபிவிருத்தி தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலின் இலக்குகள் தொடர்பான பங்குடமை குறித்து வலுவாதார அபிவிருத்தி இலக்கு 17 இன் ஊடானா அதனை நடைமுறைப்படுத்தும் வழிவகைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நிதி அளிப்பு ஊக்குவிப்புகள், தொழினுட்ப அபிவிருத்தி, இயலளவு விருத்தி, வணிக மற்றும் முதலீடுகள், பல்தரப்பு பங்குடைமை மற்றும் கண்காணிப்பு பொறுப்புக் கூறல் என்பவள்றின் ஊடாக வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டு ஒத்துழைப்பு வழங்குவது போன்றே கொள்கைகள் மற்றும் நிறுவன நடைமுறைகள் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு இலங்கையில் அமுல்படுத்துவதற்கான வழிவகைகள் வடிவமைக்கப்பட்டன. இப்பகுதியின் மூலம் இலங்கையில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்தும் வழிவகைகளின் செயலாளற்றுகையானது பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

ய) நிதியளிப்பு

தேவைக்கேற்ப புதிய அல்லது மேலதிக வழங்கலின் அளவினை நோக்கும் போது வலுவாதார அபிவித்தி இலக்குகளை செயற்படுத்தும் போதான பிரதான பிரச்சினையாக விளங்குவது நிதியளிப்பு ஆகும். உதாரணம்: தற்போதுள்ள அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் பௌதிக மனித வள மேம்பாட்டினை சுட்டிக்காட்ட முடியும். வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுக்கு உரியதான செயற்பாடுகள் உட்பட மாகாண மற்றும் உள்;ராட்சி நிறுவனங்களில் அனைத்து செயற்பாடுகளும் தொடர்பான நிதி ஒதுக்கீடு பற்றிய பொறுப்பு இலங்கையின் நிதி ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இலங்கை 2010 இல் குறைந்த மத்திய வருமானம் ஈட்டுகின்ற நாடு எனும் நிலைமைக்கு உயர்த்தப்பட்டதுடன் சலுகை அடிப்படையிலான நிதியளிப்புக்கள் தொடர்பான அணுகுதல்கள் ஒப்பீட்டளவில் குறைந்தளவில் காணப்படுகின்றன. உதாரணம்: மொத்தத் தேசிய உற்பத்தியின் பங்காக கிடைக்கப் பெறுகின்ற உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிகள் 2010 ஆம் ஆண்டில் 1.0 வீதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டில் 0.4 வீதமாக படிப்படியாக குறைவடைந்துள்ளது. (உரு 5.1) ஆதலால் உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்தில் நிதியளிப்பு மற்றும் இயலளவு விருத்தி மூலங்கள் தொடர்பாக ஆராயப்படல் வேண்டும்.




ஞழரசஉந: றுழசடன ஹுநளநடழிஅநவெ ஐனெiஉயவழசள 2017இ றுழசடன டீயமெ.

எமது நாட்டைப் பற்றி நோக்கும் போது வரி மற்றும் பிற வருமானங்களை சேகரிக்கும் பொருட்டு உள்நாட்டு இயலளவினை மேம்படுத்துவது தொடர்பாக இலங்கையின் வளங்களை.... முயற்சிகளை வலுவூட்டுவது அவசியமாகும். (உரு 17.1 இலக்கு). தற்போது மொத்த வருமானம் முழு வருமானம் மொத்தத் தேசிய உற்பத்தியின் 14 வீதமாவதுடன் அது அரசாங்கத்தின் மீண்டுவரும் செலவீனத்தை உள்ளடக்குகுவதற்குக் கூட போதியதாகக் காணப்படுவதில்லை. அதன் விளைவாக மொத்ததத் தேசிய உற்பத்தியின் 5 வீதமான பாரிய வரவு செலவுத் திட்டப் பற்றாக் குறை நிலவுகின்றது. வரி வருமானம் குறை மட்டத்தில் நிலவுவதும் பிரதான காரணமாக அமைந்துள்ளது என்னவெனில் வரி அடிப்படை கீழ் மட்டத்தில் காணப்படுவதுடன் அது வருமான மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் அதிகரிப்புக்கு அமைய விரிவாக்கப்படவில்லை. மேலும் வரி வருமானம் குறைந்ததன் காரணமாக பதிலீட்டு அரசுகளுக்கு காலத்துக்குக் காலம் அச் சந்தர்ப்பங்களில் மாத்திரம் வரையறுக்கப்படுகின்ற வரையில் வரி விதிக்கப்படுவதுடன் அதனூடாக வரி திட்டம் சிக்கலானதும் புரிந்து கொள்ள முடியாததுமான ஓர் அசௌகரியமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. வரி அடிப்படை விரிவாக்கப்படுவதுடன் வரிக் கட்டமைப்பினை இலகுபடுத்துவது தொடர்பாகவும் நடடிவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவதுடன் அதற்கு வரித் திட்டத்தினை இலகுபடுத்தல் விளக்கமளித்தல் மற்றும் இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்தும் வகையில் தற்போதுள்ள வரிச் சட்டங்களை மீண்டும் வரைவு செய்வதும் உள்ளடங்குகின்றது. அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய தேசிய வருமானச் சட்டத்தின் மூலம் இவ்வாண்டின் இறுதியில் சேகரிக்கப்பட்ட இறைவரி வருமானம் 30 பில்லியன் ரூபாவாக அதிகரித்தல் மற்றும் 2018 ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்திக்கான வரி இலக்காக 15 வீதத்தினை அடைந்துகொள்வது அரசின் எதிர்பார்ப்பாக உள்ளது.




ஞழரசஉந: றுழசடன ஹுநளநடழிஅநவெ ஐனெiஉயவழசள 2017இ றுழசடன டீயமெ.

குறைபாடுடைய வருமானச் செயலாற்றுகை காரணமாக வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைக்குரிய நிதியளிப்புகள் தொடர்பாக கடனடிப்படையில் அதிகமாக ஈட்டிக் கொள்வதற்கு அரசிற்கு நேர்ந்துள்ளது. அதன் விளைவாக அண்மைய ஆண்டுகளில் வருடாந்தக் கடன் விகிதம் ஆண்டுக்கு 6 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் தற்போது தேசிய உற்பத்தியில் 79.3 வீதமான பாரிய பெறுமானத்தை பெறுகின்றது. (14.4 இலக்கு).

2006 ஆம் ஆண்டில் 7 வீதமாக நிலவிய சலுகையற்ற வெளிக் கடன்களின் விகிதம் 2016 ஆம் ஆண்டளவில் 53 வீதம் வரை அதிகரித்துள்ளதுடன் அதற்கான பிரதான காரணம் 2010 இல் இலங்கையின் நடுத்தர வருமானம் பெறும் நாடு எனும் நிலையைப் பெற்றுக்கொண்டமை மற்றும் அதன் விளைவாக வெளிநாட்டு மானியங்கள் சலுகைகளான நிதியளிப்புக்கள் வரையறுக்கப்பட்டமையும் ஆகும

## டி) தொழிநுட்பம்

இலங்கையில் விஞ்ஞான மற்றும் தொழினுட்பத் துறைகள் பின்னடைந்து காணப்படுகின்றன. பாடசாலைகளில் விஞ்ஞானக் கற்கைகள் தொடர்பாக அணுகும் விகிதம் மற்றும் அதன் விளைவாக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பப் பாடங்களை கற்பதற்காக பல்கலைக்கழகங்களுக்கு செல்லுகின்ற அளவும் குறைவடைந்துள்ளமை இந் நிலைமை ஏற்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளது. 15 வயது மற்றும் அதற்கு அதிகமான மக்கள் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பப் பாடங்களுக்கு உரியதான மூன்றாம் நிலைக் கல்வியை பெற்றுள்ள மற்றும் அத்துறை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள அளவு 3.1 ஆவதுடன் அவ்வாறான தொழில்களில் 50 வீதத்திற்கும் அதிகமான தொகையினர் எவ்விதத் தகைமைகளையும் கொண்டிராத நபர்களாவர். மேலும் இலங்கையில் கணனி அறிவு வீதம் 2016 இல் 27.5 வீதமாகக் காணப்பட்டதுடன் அது திருப்திகரமான வீதமாக அமையாததுடன் இணையத்தள தொடர்பாடல் வீடுகளிடையே 15.1 வீத அளவிலேயே காணப்படுகின்றது. 2013 இல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பாக இலங்கையில் செலவிடப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியின் பகுதியாக 0.1 வீதமான குறைந்த பெறுமானத்தைக் காட்டியது. அவ்வாறே ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறையில் ஆராய்ச்சியாளர்களின் எண்ணிக்கை 1 மில்லியன் மக்களுக்கு 111 பேர் எனும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. தொழினுட்ப முன்னாயத்தங்களுக்குரிய உலக பொருளாதார வட்டத்தின் மூலம் வெளியிடப்பட்ட புதிய பூகோளப் போட்டி ரீதியிலான அறிக்கைக்கு அமைய இக் காரணிகளின் அடிப்படையில் இலங்கை 137 நாடுகளில் 106 ஆவது இடத்திற்குத் தரப்படுத்தப்பட்டுள்ளது. விஞ்ஞான ஆராய்ச்சி நிறுனங்கள் மற்றும் உயர் தொழினுட்ப உற்பத்திகள் அரச பெறுகை நிலைமைகளுக்கு உரியதாக பின்னடைந்துள்ள போதிலும் புத்தாக்கங்களுக்கு உரியதாக இலங்கை 54 தடவைகள் உயர் தரத்தினை அடைந்துள்ளது.

உற்பத்தித் துறை தொடர்பாக போதிய தொழினுட்பத்தினை அபிவிருத்தி செய்வதற்காக கொள்கைகள் மற்றும் மூலோபாயப் பற்றாக்குறை நிலவுவதாக 2025 அரசின் தொலைநோக்கு தொடர்பான கொள்கை ஆவணத்தின் மூலம் புலப்படுகின்றது. மருந்து வகைகள் இலத்திரனியல் மருத்துவ உபகரணங்கள் மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் தொடர்பாகப் போதிய ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறாததுடன் இப்பிரிவுகளில் ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான அவதானம் மற்றும் விழிப்புணர்வு கீழ் மட்டத்தில் காணப்படுகின்றது. ஆதலால் இத்துறைகளில் பிரவேசிப்பதற்கும் முதலீடு செய்வதற்கும் தனியார் துறையினரின் ஊக்கமும் குறைவாகவே காணப்படுகின்றது.

இலங்கை டிஜிட்டல் வணிக யுகத்தினை நோக்கிச் செல்லும் பயணத்தில் வசதியளிக்கும் பொருட்டு தற்போதுள்ள சட்டங்கள் சர்வதேச நடவடிக்கைகளின் போதான இலத்திரனியல் தொடர்பாடல் குறித்த ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கைக்கு (சர்வதேச இலத்திரனியல் தொடர்பாடல் குறித்து ஐக்கிய நாடுகளின் உடன்பாடு அல்லது ருஉைஊஊ என்றழைக்கப்படும்.) பூரணமாக ஏற்புடையதென உறுதிப்படுத்தும் முகமாக 2006 இலக்கம் 19 ஐக் கொண்ட இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை 2015 ஜூலை 17 ஆம் திகதி மேற்படி இலத்திரனியல் தொடர்பாடல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையை ஏற்ற தெற்காசியாவின் முதலாவது நாடு மற்றும் ஆசியப் பிராந்தியத்தின் இரண்டாவது நாடாக (சிங்கப்பூருக்குப் பின்னர்) விளங்கியது. தாம் இலத்திரனியல் வணிகம் நடமாடும் வணிகம் நு – நிருவாகம் தொடர்பான வசதியளிக்கும் பொருட்டு பிராந்தியத்தில் இற்றை வரையறையாக்கப்பட்ட சட்டங்கள் காணப்படுகின்ற நாடாகவும் இலங்கை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் டிஜிட்டல் தொழினுட்பம் தொடர்பான இலத்திரனியல் கையொப்பம் மற்றும் பிற சான்றுப்படுத்தும் தொழிநுட்பங்கள் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும்.

மேலும் மிக புதிய மிகப் புத்தாகக்க, அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தினை நோக்கிச் செல்ல வேண்டிய தேவையை இனங் கண்டு அரசினால் இலங்கையின் தொழினுட்பம் மற்றும் டிஜிட்டல் மயமான ஆகிய துறைகள் தொடர்பாக பல நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டுள்ளன. சிறப்பான ஆரம்பங்களிடையே இலங்கைக்கு உசிதமான வெளிநாட்டு தொழினுட்பங்களை பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவித்தல் டிஜிட்டல் தொழினுட்பத்தில் அரச, தனியார் முதலீடுகளை மேம்படுத்துவதற்கான ஊக்குவிப்பு பாடசாலை பாட விதானத்தில் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழினுட்பத்தினை இணைத்தல், அரச அலுவலகங்களில் டிஜிட்டல் மயத்தினை அதிகரித்தல் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட இடைக்கால வலுப்படுத்தல் பதிவு செய்வதற்குரிய பயன்பாடு கண்காணிப்பு மற்றும் தீர்ப்பனவுகள் ஆகியன பயனுறுதி மிக்க வகையில் முகாமைத்துவம் தொடர்பான இலங்கையின் தேசிய புலமைச் சொத்துக்கள் தொடர்பான அலுவலகத்தினை வலுப்படுத்தல் மற்றும் இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக சட்ட ரீதியான சட்டமொன்றைத் தயாரித்தல், இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் (திருத்தச்) சட்டம் அதனூடாக இலங்கையில் ஈ - வணிக சட்டரீதியான சட்டகம் சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, சீனா மற்றும் பிற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் சமமான நிலைமைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இலங்கையில் காணப்படுகின்ற வணிக ஒப்பந்தங்களின் பயன்பாடு மற்றும் அவற்றை தொழினுட்ப அடிப்படையில் அமைந்த அறிவு மிக்க நேரடி மற்றும் அறிவார்ந்த நேரடி வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான திட்டங்களாக கட்டியெழுப்புதல், மேலும் சுற்றாடலுக்கு நலன் பயக்கும் தொழினுட்பத்தினை விருத்தி செய்தல் (17.7 இலக்கு) அபிவிருத்தி செய்வதற்கு அவதானம் செலுத்தப்படல் வேண்டும்.

## உ) இயலளவு விருத்தி

வலுவான அபிவிருத்தி இலக்குகளை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்த பங்காளர்களின் அதே அளவு விருத்திக்கான சில முயற்சிகள் அனைத்தும் பங்காளர்களாகவும் சில முயற்சிகளை மேற்கொண்டனர. திட்டமிடப்பட்ட மற்றும் அல்லது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான வழிகாட்டி சட்டகம் ஒன்றை தயாரித்தல் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை கல்வி பல்கலைக்கழகங்கள் தொழில்சார் கற்கை சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் தனியார் துறையின் பயிற்றுவிப்பாளர்ளுக்கு பயிற்சி பயிற்சி அளித்தல் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்தல், சிரேஷ்ட அரச அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல் மாகாண மற்றும் உள்;ராட்சி அரசியல்வாதிகளுக்கு பயிற்சியளித்தல் மற்றும் தேசிய வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின் தொடர்பாடல் மற்றும் விழிப்புணர்வூட்டல் நடவடிக்கைகளும் இதில் உள்ளடங்குகின்றன. வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் ஏற்கனவே தேசிய மற்றும் மாகாண வலுவாதார அபிவிருத்தியுடன் ஒருங்கிணையக்கூடிய மேடையொன்றாக விளங்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் அதனூக மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண உள்;ராட்சி நிறுவனங்கள் சிவில் சமூகம், புத்திஜீவிகள், தனியார் துறை அபிவிருத்தி முகராண்மைகள் கூட்டிணைக்கப்படும். ஒரு தேசிய களம் மற்றும் மாகாண ரீதியான பல களங்கள் ஏற்கெனவே பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் இன்னும் மாகாண மட்டத்திலான மேடைகள் திட்டமிடப்பட்டு வருகின்றன. வலுவாதார வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின் கண்காணிப்புத் தொடர்பாக டிஜிட்டல் மேடையொன்றிற்கும் பங்காளிகளை இணைத்துக் கொள்வது தொடர்பான நிகழ்நிலை மேடையொன்றினையும் தயாரிப்பது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ் அனைத்து காரணிகளும் இருந்தபோதிலும் இயலளவு விருத்தியில் விசேடமாக தரவுகள் உருவாக்கம் மற்றும் பகுப்பாய்வு உள்ளடங்கலாக கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு போன்ற துறைகளில் முரண்பாடுகள் காணப்படுகின்றன இலங்கையில் சாட்சி களை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளை வடிவமைக்க மற்றும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அறிக்கையிடல் தொடர்பாக பயன்படுத்தக்கூடிய தரவு உருவாக்கம் திரட்டுதல் மற்றும் பயனுறுதிகள் மிக்க பகுப்பாய்வுடன் இயலளவுகளை வலுவூட்டுவதற்கான தேவையும் காணப்படுகின்றது.

வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடையும் பொருட்டு அனைத்து குடிமக்களும் ஒன்றிணைந்ததோர் முயற்சிக்கான தேவைக்கமைய விசேடமாக இளைஞர்களிடையே தன்னார்வ சேவைகளை ஈடுபடக்கூடிய கருதுகோள்களான இயலளவு விருத்தி தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியது அதன் இன்னும் ஒரு துறையாகும்.

## ன) வர்த்தகம் மற்றும் முதலீடு

சேமிப்பு முதலீடு தொடர்பான ஆடுகளை தீர்க்கும் பொருட்டு கையில் நிதி ஒருங்கிணைப்பு முயற்சிகளுடன் இறக்குமதி ஈர்த்தல்கள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரித்தல் என்பன மேற்கொள்ளப்படல் வேண்டும் (17.11 இலக்கு). இலங்கையின் இறக்குமதி உழைப்புகளில் மொத்த தேசிய உற்பத்தியில் 21 வீதமாவதுடன் அதனை அதிகரித்தல் மற்றும் நடுத்தர வருமானமேற்றும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் முறையே 31 வீதம் மற்றும் 24 வீதமான குறைந்த வருமானம் நிலவுகின்றது. 2009 ஆம் ஆண்டிலிருந்து நேரடி வெளிநாட்டு முதலீடுகள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்த பெறுமானத்தை காட்டியதுடன் மொத்தத் தேசிய உற்பத்தியின் 1.1 வீதமாக பொதுவாக காணப்பட்டதுடன் பிரதானமாக காணிகள் மற்றும் கலப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களின் மீது அவை தங்கியிருந்தன. திறந்த பொருளாதார உருவாக்கம் தொடர்பாக அண்மைக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளில் இறக்குமதி வருமானம் அதிகரித்தமை புலப்படுவதுடன் 2014 இல் 11.4 டொலர் பில்லியன் அதிகரிப்பு அறிக்கையிடப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டை விட 10 வீதம் அதிகரித்துள்ளது. இந் நிலை தொடர்ச்சியாக பேணப்படல் வேண்டும். ஐரோப்பா சங்கத்திற்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பான வரியைக் குறைக்கும் விதமக

நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் முக்கியத்துவத்தை இனங்கண்டு ஓராண்டுக்கு 5 அ. டொ. பி. வீதம் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை மேம்படுத்தும் பொருட்டு இலங்கை அரசினால் பொருளாதார, சந்தைவாய்ப்பு, நிறுவக மற்றும் மறுசீரமைப்பு என்பன முன்மொழியப்பட்டுள்ளன. அது விசேடமாக இலங்கையின் வியாபாரமய தரப்படுத்தல் 110 இலிருந்து 70 வரை அதிகரிப்பதற்கு மற்றும் புதிய வியாபார பதிவு தொடர்பாக பல அரச முகவராண்மைகள் ஒன்றிணைந்து அலுவலக நடைமுறைகளுக்கு ஏற்ற தனி கருமபீடமொன்று தாபிக்கப்பட்டது.

குபைரசந 5.3: நுஓிழசவள (மூ ழக புஹீ)




ளுழரசஉந: றுழசடன னுநஎநடழிஅநவெ ஐனெஉையவழசள 2017இ றுழசடன டீயமெ.

## இயலளவு விருத்தி

வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துவது தொடர்பாக அனைத்துப்பங்காளர்களினதும் இயலளவு விருத்தி தொடர்பாக பல முன்னாயதங்கள் மேற்கொள்ளப்பட்டன. திட்டமிடப்பட்ட மற்றும் ∴ அல்லது ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக வழிகாட்டுகை சட்டகம் தயாரித்தல்; ஆரம்பநிலை மற்றும் இரண்டாம்நிலை கல்வி, தொழிற்சார் கல்வி, சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் தனியார்துறையின் பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோருக்கு பயிற்சியளித்தல்; பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பயிற்சியளித்தல்; சிரேஷ்ட அரச அலுவலர்களுக்கு யிற்சியளித்தல்; மாகாண மற்றும் உள்ளூராட்சி அரசியல்வாதிகளுக்கு பயிற்சியளித்தல் மற்றும் தேசிய வலுவாதார அபிவிருத்தி இலக்குகளது தொடர்பாடல் மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகள் உள்ளடங்குகின்றன. வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் ஏற்கெனவே தேசிய மற்றும் மாகாண வலுவாதார அபிவிருத்தியுடன் தொடர்புபடுவதற்கான களம் எனும் நிகழ்ச்சிததிட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் அதனூடாக மத்திய அரசு மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள், சிவில் சமூகம், புத்திஜீவிகள், தனியார்துறை, அபிவிருத்தி முகவராண்மைகள் ஆகியவற்றின் பிரதிநிதித்தஜவம் ஒருங்கிணைப்படும்.[175] ஒரு தேசிய களம் மற்றும் பல மாகாண களங்கள் ஏற்கெனவே பர்த்தி செய்யப்பட்டஜள்ளதுடன் இன்னுமின்னும் தாகாண களங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின் கண்காணிப்பு தொடர்பாக டிஜிட்டல் கள மொன்று மற்றும் பங்காளர்களுடன் தொடர்பு கொள்ளும் பொருட்டு நிகழ்நி லை களம் வடிவ மைப்பது தொடர்பாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## இயலளவு விருத்தி

மூலோபாயங்களுக்கும் ஏற்ப வலுவாதார அபிவிருத்தி மூலோபாயங்கள் தயாரிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதலால் வலுவாதார அபிவிருத்தி தொடர்பான தேசிய பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியான பொறுப்புக்கள் குறித்தே வசதியளிக்கும் பொருட்டு பல்வேறு துறைசார் நிரல் முகாவராண்மைகள் மற்றும் சிவில் சமூகம் தனியார் துறைகள் உள்ளடங்கலாக ஏனைய செயற்பாட்டாளர்க;டாக 2030 நிகழ்ச்சி நிரலினை செயற்படுத்துவதற்கான சட்ட மற்றும் நிறுவ சட்டகமொன்றை தயாரிப்பது தொடர்பாக இச்சட்டத்தின் மூலம் அடிப்படையொன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் அதனூடாக வலுவாதார அபிவிருத்தித் தேசிய மற்றும் மூலோபாயங்கள் வழங்கப்படுவதுடன் 15 ஆண்டு காலம் தொடர்பாக அரசினால் அனைத்து விதாமான தீர்மானங்களை மேற்கொள்ளும் போதும் சுற்றடல் பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளுடன் ஒன்றிணைந்து அவை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அதற்கு மேலதிகமாக சனாதிபதியினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விஞ்ஞாபனத்துக்கு ஏற்ப அமைச்சு ரீதியான துணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. அமைச்சுக்களின் துணைக் குழு அமைச்சரவை அந்தஸ்துள்ள ஐந்து அமைச்சர்கள் மற்றும் மாகாண பிரதம அமைச்சர் ஒருவரும் உள்ளடங்குவதுடன் 2030 தொடர்பான வலுவாதார அபிவிருத்திகள் இலக்குகள் குறித்து தொலைநோக்குகள் தயாரிக்கும் பொருட்டு ஆலோசனைச் சபையொன்றும் நியமிப்பது தொடர்பாகவும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது. மேலும் சனாதிபதி செயலகத்தின் புதிய மூலோபாய அபிவிருத்தி மதிப்பாய்வு அலுவலகம் ஒன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக இலங்கையின் அபிவிருத்திச் செயலாற்றுகை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதுடன் இலங்கையின் வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான செயற்பாட்டின் அபிவிருத்தி மற்றும் அதன் எதிர்கால அபிலாசை'கள் தொடர்பாகவும் சனாதிபதி அவர்களுக்கு முக்கியமான தகவல்கள் வழங்கப்படும்.

வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் மூலோபாயத் திட்டமிடல் செயற்பாட்டின் முக்கிய ஆதாரமாகக் கொள்வதற்கு முதலில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் காணப்படுகின்ற தேசிய கொள்கைகள் மற்றும் முன்னுரைவுகளுக்கு அமைய ஒழுங்கமைவு செய்யப்படுகின்ற தேசிய ஏற்புடைமை சட்டகத்தினை அடிப்படையாகக் கொண்டு வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் சில இலக்குகளை வரையறுக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மேம்பாட்டு மீளாய்வு தொடர்பாக தேசிய சுட்டி ஒன்றும் இனங் காணப்பட்டுள்ளது. வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதும் அதற்கான முன்னுரிமை அளிப்பதற்குமேற்ப மூன்று கட்டங்களாக பூர்த்தி செய்யப்படவுள்ளது. முதலாவது கட்டம் 2017 - 2020 வரை (குறுகிய காலம்) இரண்டாவது கட்டம் 2020 – 2025 வரை (மத்திய காலம்) மூன்றாவது கட்டம் 2025 – 2030 வரை (நீண்ட காலம்) ஆகும். வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் மூலோபாயத் திட்டமில் செயற்பாட்டு முக்கிய ஆதாரமாகக் கொள்வதனூடாக வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுக்குப் பொறுப்பான சிரே'ட அலுவலர்கள் தேசிய மற்றும் உப தேசிய மட்டத்தில் நியமிக்கப்படல், மாணவர்களிடையே போட்டிகளை நடாத்துதல், ஊடக நிகழ்ச்சித் திட்டங்க;டாக மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் வலுவாதார அபிவிருத்திக் கிராமிய நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படும்.

ºººººººººººº

179 Ibid

## க) பல்தரப்பு பங்காளர்கள்

பயனுறுதிமிக்க அபிவிருத்தி ஒத்துழைப்புக்கள் மற்றும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பாக பயனுறுதிமிக்க பலதரப்பு பங்குடைமைகள் முக்கியத்துவம் பெறுகின்றதாக இலங்கை புரிந்துகொண்டுள்ளது. பல்வேறு வகையிலான இயலளவு விருத்தினை அதிகரித்தல் தொடர்பான கூட்டாண்மை மற்றும் நிகழ்ச்சித் திட்டங்க;டாக சர்வதேச அமைப்புக்கள் இலங்கை அரசாங்கத்தின் அமைச்சுக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டன. இலங்கையின் ஐக்கிய நாடுகளின் முகவராண்மை 13 நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் ஐக்கிய நாடுகளின் வலுவாதார அபிவிருத்தி சட்டகம் 2018 – 2022 ஊடாக வலுவாதார அபிவிருத்தி தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பாக இலங்கை அரசாங்கத்தினால் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உதாரணம்: சிறுவர் நலன்களுக்கான நீதிமன்றம் உருவாக்கல், சமுதாய இணக்க சபைகளை உருவாக்குதல், வலுவூட்டல் மற்றும் அனைவருக்கும் நீதி கிடைக்கக் கூடிய வரையில் ஊக்குவித்தல் என்பன தொடர்பான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (ருNனுP) ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (ருNஐஊநுகு) ஆசிய மன்றம், நீதிமன்றம் அமைச்சு என்பவற்றுடன் பணியாற்றுவதுடன் அரச அலுவலர்களுக்கு ஏற்ப இது விசேடமாக தொழிநுட்பம் மற்றும் இது நிதி முரண்பாடுகளை தீர்ப்பதற்கும் துணை புரிந்துள்ளது.

மேலும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளும் போது தனியார் துறை உற்பத்தி அமைப்புக்கள் தனிநபர்களுக்கு உரிய அரசினால் அண்மைக் காலமாக தனியாக மேற்கொள்ளப்பட்ட அணுகுமுறைகளும் இதில் உள்ளடக்கப்படுகின்றன. உதாரணம்: விவசாய வர்த்தக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் இலங்கையின் சனாதிபதி அலுவலகத்தின் கீழ் வலுவாதார அபிவிருத்திப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் இலங்கை அரசாங்கம் மற்றும் விவசாய அபிவிருத்தி தொடர்பான சர்வதேச நிதியம் (ஐகுயுனு) ஒன்றிணைந்து இது தொடர்பாக நிதியளிக்கப்படும். அரசின் பிரதான வலுவாதார அபிவிருத்தி இலக்கான முரண்பாடுகளை உரைத்தல் மற்றும் வறுமை ஒழிப்புகள் தொடர்பான தேசிய பொருளாதாரத்தினை வலுப்படுத்தும் நோக்குடன் சிறியளவு விவசாய உற்பத்திகளை இலக்காகக் கொண்டு பெறுமானச் சங்கிலியினை அபிவிருத்தி செய்தல் மற்றும் வர்த்தக தொடர்புகளின் கூட்டாண்மை வியாபாரங்களைப் பேணிச் செல்வது தொடர்பாக இந் நிகழ்ச்சித் திட்டங்கள் தனியார் துறையின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படும்.

எவ்வாறாயினும் புத்தாக்க அபிவிருத்தி இலக்குகளுக்குரிய நடவடிக்கை எடுக்கும் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு தனியார் துறை, புத்திஜீவிகள், பொது மக்கள் தன்னார்வ பணியார்களின் செயற்பாட்டு ரீதியான ஒத்துழைப்புக்கள் போதுமானதாக அமையாததுடன் அதற்கான பிரதான காரணம் இலக்குகள் மற்றும் ஸ்திர அவற்றின் குறித்தொதுக்கப்பட்ட இலக்குகள் தொடர்பான புரிந்துணர்வு போதாமை என்பது இனங்காணப்பட்டுள்ளது. தமது நியதிச் சட்ட சமூகப் பொறுப்புச் சட்டகங்களில் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை கையாள்வது தொடர்பாக தனியார் துறையினை ஊக்குவிப்பது தொடர்பாக குறித்த கூட்டுத்தாபன நிறுவனங்களுடன் நேரடியாக தொடர்புபடுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. தற்போது ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கி (ளுவயனெயசன ஊாயசவநன டீயமெ) என்.சீ. சீமெந்து மற்றும் டில்மாவினால் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை தமது நியதிச் சட்ட சமூக பொறுப்புச் சட்டகத்தினுள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மேலும் தன்னார்வ சேவையின் ஊடாக சமுதாயப் பங்களிப்புக்களை வலுவூட்டல் சமூகங்களுக்கிடையிலான இடைத் தொடர்புகளைப் பேணல் ஒருமைப்பாட்டினை அதிகரித்தல் மற்றும் அபிவிருத்தி பெறுபேறுகளின் உரித்துடைமைகளின் வலுப்படுத்தல் என்பனவற்றை மேற்கொள்வதற்கு கவனஞ் செலுத்தி அபிவிருத்தியானது வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் போது பொதுமக்கள் மற்றும் தன்னார்வ பணியாளர்களினால் பாரிய சேவைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது அறிக்கையிடல் மற்றும் பிரச்சார நடவடிக்கைகள் ஊடாக இப்பிரச்சினைக்கான தீர்வுகள் வழங்கப்படல் வேண்டும்.

## ப) தரவுகள் கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல்

வலுவாதார அபிவிருத்தி இலக்குகளின் மேம்பாட்டினை இனங்காண வேண்டிய புள்ளிவிபரவியல் தரவுகளைச் சேகரித்தல்இ தயாரித்தல், பகுப்பாய்வு மற்றும் விநியோகம் தொடர்பான பொறுப்புக்கள் இலங்கை தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்துக்குச் சொந்தமானதாகும். இலங்கையின் புள்ளிவிபரவியல் முறைமையை மிக நிலையாகவும்

06

# முடிவுரை

இலங்கை அரசினால் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை ஆதாரணமாக கொண்டு பல அணுகுமுறைகள் கையாளப்பட்டன. வலுவாதார அபிவிருத்தி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுவினை தாபித்தல், 2017 இல. 19 ஐக் கொண்ட வலுவாதார அபிவிருத்தி சட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தலின் போதான ஒருங்கி ணைப்பு மற்றும் அதனுடன் தொடர்பான வசதிகளை வழங்குகின்ற கேந்திரமையமாக வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்நதிய அபிவிருத்தி அமைச்சினைத் தாபிப்பது வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான இலங்கையின் அர்ப்பணிப்புக்களை வலியுறுத்துகின்ற பிரதான அணுகுமுறைகளிடையே காணப்படுகின்றன.மேலும் 2017 இல் இலங்கையினால் ஜூலை மாதம் நடாத்தப்பட்ட உயர்மட்ட அரசியல் கலந்துரையாடலின் போது முதலாவது தன்னார்வ தேசிய மீளாய்வினை சமர்ப்பிப்பதற்கான விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் கொள்கை சட்டகத்தின் மூலம் நாடு வலுவாதார அபிவிருத்தி கோட்பாடுகளை அங்கீகரித்துள்ளமை புலப்படுகின்றது. இந்நாட்டில் மூலோபாய சட்டகம் அதன் நீடுநிலைத்த அபிவிருத்தித் திட்டம், 2025 தொலைநோக்கு (வளமான நாடு, அதன் மத்தியகால அபிவிருத்தித் திட்டம், அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் ( 2017 - 2020" 2018 —நீலப் பசுமை— வரவு செலவுத்திட்டத்தின் மூலம் பரிசோதித்துப் பார்க்க முடியும். வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை பயனுறுதிமிக்க வகையில் அமுல்படுத்தும் பொருட்டு அவற்றை தேசிய கொள்கைகள் மற்றும் மூலோபாய சட்டகதங்களில் தங்கியுள்ளன. நோக்கங்கள் மற்றும் இலக்குகள் ஆகிய இரு மட்டங்களிலும் தேசியகொள்கைகள் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுக்கு ஏற்புடையதாக இருக்கின்றதா என கண்டுபிடிப்புக்களின் மூலம் தெரியவந்துள்ளது. எவ்வாறாயினும் விசேடமாக சுற்றாடல் மற்றும் பங்குடைமைக்குரியதான அரைவாசியளவி ஏற்புடையதான இலக்குகள் பல துறைகளைக் கொண்டனவாகும். இதற்கு மேலதிகமான, 2015 தொலைநோக்கு, 2017 – 2020 அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் 2018 வரவு செலவுத்திட்டத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கையின் தற்போதைய மூலோபாய அபிவிருத்தி சட்டகத்திற்கு பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் ஆகிய வலுவாதார அபிவிருத்தியின் 3 புறவுருக்களும் உள்ளடக்கப்படுகின்றன.

இலங்கையின் தன்னார்வ தேசிய மீளாய்வுச் செயற்பாடு என்பது ஆலோசக செயலமர்வுகள் ஊடாக பல் தரப்பினரையும் தொடர்புபடுத்தி அரச தனியார்துறை புத்திஜீவிகள் சிவில் சமூக அமைப்புகளுடனான பங்களிப்புக்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கிய செயற்பாடுகளாவதுடன் அதனூடாக 2015 - 2018 தன்னார்வ தேசிய மீளாய்வினைத் தாண்டி மேலும் தொடர்புபடுத்துவது தொடர்பான அடிப்படை ஒன்று தயாரிக்கப்பட்டது.

இலங்கை தன்னார்வ தேசிய மீளாய்வினூடாக 17 வலுவாதார அபிவிருத்தி இலக்குகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக 201 இல் நிலவிய உயர்மட்ட அரசியல் கலந்துரையாடல்களில் ஆழமாக மீளாய்வு செய்வது தொடர்பாக தெரிவு செய்யப்பட்ட இலக்குகள் பற்றிய பூரணமான பகுப்பாய்வுடன் தற்போதைய நிலை மற்றும் போக்குகள் இடைவெளிகள் மற்றும் சவால்கள் மற்றும் ஒவ்வொரு இலக்குகள் தொடர்பான முன்னோக்கிய பாதை என்பன பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டன. தீர்வொன்றினை பெற்றுக்கொடுப்பது தொடர்பாக வலய முரண்பாடுகள் காணப்பட்டபோதிலும் வலுவாதார அபிவிருத்தி இலக்கு 6 தொடர்பாக பாதுகாப்பான குடிநீர் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கை மேம்பாடுகளை தனதாக்கிக் கொண்டுள்ளது. மேலும் இதுதொடர்பாக காலநிலை மாற்றங்களின் மூலம் ஏற்படுகின்ற தாக்கங்களின் மூலம் சவால்கள் ஏற்பட்டன. வீடுகளிடையே பெரும்பாலானவை தொடர்பாக பெரும்பாலும் வீடுகளை அண்டிய துப்புரவேற்பாட்டு வசதிகள் காணப்பட்டபோதிலும் அந்த இடங்களில் துப்புரவேற்பாட்டு வசதிகளின் மூலம் ஏற்படக்கூடிய சுகாதார மற்றும் சுற்றாடல் தாக்கங்களை குறைப்பது தொடர்பாக மையப்படுத்தப்பட்ட மல வடிகாலமைப்பு முறைமையொன்றின் அவசியம் நிலவுகின்றது. 7 ஆவது வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக ஒருசில ......எரிபொருள்கள் அடிப்படையாக கொண்டிருப்பதுடன் உயரிய வலுசக்தித் துறைகளில் நிலவுகின்ற பிரபலமான சவாலாகும். மின்சாரம் வழங்குவதற்குரிய இந் நாட்டில் கவனம் செலுத்தக்கூடிய காரணிகள் இடைந்த கொள்ளப்படவில்லை. மீள் புதுப்பிக்கத்தக்க வலு சக்தி மூலங்கள் முக்கிய பணிகளை நிறைவேற்றுவதுடன் சூரிய வலுசக்தி உட்பட வலு சக்தி மூலங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றன.

நகரமயமாக்கல் காரணமாக போக்குவரத்து வீடமைப்பு மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளுக்குரிய இலங்கையின் சவால்களுக்கு முகம் கொடுத்துள்ள வலுவாதார அபிவிருத்தி இலக்கு 11. இப்பிரச்சினை தொடர்பாக தீர்வுகளை வழங்கும் பொருட்டு கொள்கை ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பிரச்சினைகள் தொடர்பாக இடர் அபாயத்தினை குறைப்பதற்குரிய தீர்வுகளை வழங்கும் பொருட்டு இதுவரை பல செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. 2018 - 2030 தேசிய இடர்முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்பட்டது. பொறுப்புடன் கூடிய பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி என்பது அண்மைக்காலமாக கொள்கைகளின் மூலம் வலியுறுத்தப்பட்ட ஒரு துறையாகும். (வலுவாதார அபவிருத்தி இலக்கு 12) பொறுப்புக்களை கொண்ட பயன்பாடு மற்றும் உற்பத்தி தொடர்பான கொள்கைகளைத் தயாரித்தல் பொறுப்புக்கள் உடனான பயன்பாடு மற்றும் உற்பத்தி தொடர்பான அறிவினை அதிகரித்தல் பசுமை பெறுகை மற்றும் பசுமை அறிக்கையிடல் முறைமை ஆகியன முக்கியமான அணுகுமுறைகளில் சிலவாகும். பொறுப்புடன் கூடிய பயன்பாடு மற்றும் உற்பத்தி துறைசார் கொள்கைகளை முக்கியமாகக் கொண்டு இது சம்பந்தமாக தனியார் துறையின் பங்களிப்புடன் மேம்படுத்தபடுவது முக்கியமாகும். 2016-2022 தேசிய உயிர்ப்பல்வகைமை மூலோபாய செயற்திட்டம் தயாரிக்கப்பட்டது இலங்கையின் உயிர் பல்வகைமை களில் அரிதாகி பூகோளில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக தீர்வினை வழங்கும் பொருட்டாகும் (15 ஆவது வலுவாதார அபவிருத்தி இலக்கு). உயிர்ப்பல்வகைமை இறக்கப்படுவதன் பிரதான காரணமாக அறிய வருவது அது மண்ணரிப்பு டன் தொடர்புபடுகின்றது. காடழிப்பு குறைப்பது தொடர்பாக குறித்த சட்டங்களை உரியவாறு வலுப்படுத்த வேண்டியது முக்கியமாகும். காட்டு வரையறைகளின் எல்லைகளை தெளிவாக வேறு பிரித்தல் மற்றும் வன முகாமைத்துவ முகவராண்மைகளின் இயலளவினை அதிகரித்தல் மற்றும் மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக இதற்காக ஒத்துழைப்பு வழங்க முடியும்.

இலங்கை விசேடமாக கல்வி சுகாதார மற்றும் வறுமை ஆகிய வலுவார அபிவிருத்தி இலக்குகளுக்குரிய பல துறைகளில் சிறந்து விளங்குகின்ற மேம்பாடுகளை தனதாக்கிக் கொண்டுள்ளன.

தாய் மற்றும் சேய் மரண வீதங்கள் குறைக்கப்பட்டமை மற்றும் உயிர் வாழ்வு எதிர்பார்ப்புகள் அதிகமான போன்ற பெறுபேறுகளை அடைந்து கொள்வது சம்பந்தமான இலங்கையின் சுகாதார முறைமை பிரசித்தி பெற்று விளங்குகின்றது. உண்மையிலேயே இரு தசாப்தங்களுக்கு முன்னர் வலுவாதார அபிவிருத்தி இலக்கு 13.3. இன் கீழ் இலங்கையில் தாய் மரண வீதத்தின் உலகலாவிய இலக்கை அடைந்துள்ளது. இதற்கு மேலதிகமாக கல்வித் துறையிலும் பல வெற்றி இலங்கை பெற்றுக்கொண்டுள்ளது. தெற்காசிய பிராந்தியத்தில் மாத்திரமன்றி மத்திய வருமானம் பெறுகின்ற மற்றும் உயர் வருமானம் பெறுகின்ற நாடுகளுக்கிடையேயும் அடிப்படை மற்றும் இரண்டாம் நிலை மட்டங்களிலும் கல்விசார் வெற்றிகளை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை கவனிக்கத்தக்க நிலமையினை அடைந்துள்ளது. வறுமையினை குறைத்தல் மற்றும் அதற்குரியதாக கடந்த பத்தாண்டுகளில் இலங்கை கவனிக்கத்தக்களவு முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன் 2016 இல் வறுமை சுட்டியின் 4.1 வீதத்தினை அடைந்துள்ளது. எவ்வாறாயினும் வறுமை மற்றும் அடிப்படைச் சேவைகளுக்கான அணுகுமுறைகள் பிராந்திய வேறுபாடுகள் காணப்படுகின்ற போதிலும் வருமான சமமின்மையை அவதானத்தில் கொள்ளக்கூடிய ஒரு பிரச்சினையாகும்.

வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை செயலுருப்படுத்துவது சம்பந்தமாக இலங்கை பல சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளது. விசேடமாக நிதியிடல் பொருளாதார அபிவிருத்தி இயலளவு விருத்தி வியாபாரம் மற்றும் முதலீடுகள் மாத்திரமன்றி கொள்கைகள் மற்றும் நிறுவன கலாசாரம் பல்தரப்பு பங்குகள் தரவு கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற படிப்படியான பிரச்சினைகளும் இதில் உள்ளடங்குகின்றன. நிதியிடல் சம்பந்தமாக நோக்கும்போது வரி மற்றும் பிற வருமானங்களை திரட்டுவது தொடர்பாக உள்நாட்டு இயலளவினை விருத்தி செய்யும் பொருட்டு இலங்கையினை வள முயற்சிகளை வலுப்படுத்த வேண்டியுள்ளதுடன் வருமான அடிப்படைகளை விஸ்தரித்து வரிக் கட்டமைப்புகளை இலகுபடுத்துவது தொடர்பாக தற்பொழுது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மிகவும் புத்தாக்க மிக்க அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமொன்றை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை அடையாளங்கண்டு அரசினால் இலங்கையின் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் மயப்பிரிவுகளை மேம்படுத்த தொடர்பாக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக விழிப்புணர்வினை மேம்படுத்துதல் மற்றும் திட்டமிடலினை அமுலாக்கல் மற்றும் கண்காணிப்பு சம்பந்தமாக பங்காளர்களின் இயலளவினை விருத்தி செய்வது தொடர்பாகவும் அரசினால் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.